வடக்குப் பொய்கைநல்லூர்

# கோரக்கச் சித்தர் ஆசிரம அருள் வரலாறு



வெளியீடு: கோரக்கச் சித்தர் ஆசிரமம்

வடக்குப் பொய்கைநல்லூர் - 611 106

2012

www.saivamonline.com





www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

GPay +91 94440 21113

UPI 9444021113@UPI

வடக்குப் பொய்கைநல்லூர்

# கோரக்கச் சித்தர்

## ஆசிரம அருள் வரலாறு

ஆசிரியர்
செந்தமிழ்வாரிதி, சிவஞானக்கலாநிதி,
சித்தர் இலக்கியச் செம்மல்,
கலைமாமணி
பேராசிரியர். முனைவர். **இரா. செல்வக்கணபதி**

வெளியீடு
**அருள்மிகு கோரக்கச் சித்தர் ஆசிரமம்**
வடக்குப் பொய்கை நல்லூர் - 611106
நாகப்பட்டினம் மாவட்டம்

www.saivamonline.com

# 1. தமிழ்நாட்டுச் சித்தர் கணம்

**அருஉ பரதி ரூபவொளி அண்ட பிண்ட**
**அகரவுயிர் பிரணவமா மோங்கா ரத்தாய்**
**கருணைபெறு கற்பகத்தேன் அமுத ஞானக்**
**கமலபரி பூரணிமுக் கமலத் தோங்கும்**
**பருவரைய மதலை குமரி பராப ரிநற்**
**பார்பதிபங் கசவேணி பரம நந்திக்**
**குருரவிமே கலையோதக் குமரி வாலைக்**
**குஞ்சரியென் தாய்சத்தி இருதாள் காப்பே**

## முன்னுரை

தமிழ்நாட்டு சமய, தத்துவ வரலாற்றில் சித்தர்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. இறையருள் பெற்ற இச்சித்தர்கள் மனித குல ஈடேற்றத்திற்காகவே உழைத்தனர். அளப்பரிய ஆற்றல் பெற்றிருந்த சித்தர்கள் எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். சாதி, மத பேதங்களைச் சாடினர். பொருளற்ற வெற்றுச் சடங்குகளைத் துணிவோடு கண்டித்தனர். பசித்தார்க்கு உணவும், நோயுற்றார்க்கு மருந்தும் வழங்கினர். ஆற்றல் மிக்க கவிதைத் திறன் பெற்றிருந்த தமிழ்நாட்டுச் சித்தர்கள் எளிய தமிழில் அரிய நூல்கள் பல படைத்து வழங்கினர். பொருளைத் துச்ச மெனக் கருதிய இவர்கள் பொல்லாங்கு கலவாத வாழ்வை மேற்கொண்டனர். தமிழ்நாட்டு எல்லைக்கு அப்பாலும் இவர்கள் தொடர்பு விரிந்து படர்ந்திருந்தமைக்குச் சான்றுகள் பல உண்டு. இத்தகு தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை வரலாற்றைக் கிடைத்திருக்கும் சான்றுகளின் துணையோடு ஆராய்ந்து நிறுவுவது முதற்கடமையாக அமைகிறது.

www.saivamonline.com

## சித்தர் என்ற சொல் வழக்கு

தமிழ் இலக்கியங்களுள் தொன்மையாகக் கருதத்தக்கன கடைச் சங்க இலக்கியங்கள். இவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனக் கூறுதல் வழக்கு. சங்க இலக்கியங்களிலோ, அவற்றிற்கும் முற்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலோ 'சித்தர்' அல்லது 'சித்து' என்ற சொற்கள் காணப்படவில்லை. என்றாலும், சித்தர் என்ற சொல்லால் பின்வந்தோர் குறித்த இயல்புகள் நிரம்பிய அருளாளர்களைப் பற்றிய குறிப்புகள் இவற்றில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் 'அறிவர்' என்ற சொல், பிற்காலத்தில் 'சித்தர்' என்ற சொல் குறித்த பொருளையே தாங்கி நின்றது என்பது அறிஞர் கொள்கை. யோகம் பயின்று, விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மை இயல்புகளையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்திருந்தார் 'அறிவர்' எனப்பட்டனர்.

## தொல்காப்பியத்தில் அறிவர்

தொல்காப்பியப் பொருளதிகாரம், தமிழ்க் கவிதைகளின் பாடு பொருள்களாகத் திகழ்ந்த அகப்புறப் பொருள்களின் இலக்கண வரையறைகளை முறைப்படுத்தி உரைப்பது. பொருளதிகாரத்தின் இரண்டாவது இயல் புறத்திணை இயல். புறத்திணை ஏழனுள் ஒன்றாகிய வாகைத் திணையின் சிறப்பிலக்கணம் கூறும் பகுதியில் 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' என்று தொடங்கும் நூற்பா இடம்பெற்றுள்ளது. இந்நூற்பாவுள்,

> **"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
> **நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்..."**

என்ற தொடர்'இடம் பெற்றுள்ளது. இத்தொடருள் தமிழ்நாட்டுச் சித்தர்களோடு ஒப்பு நோக்கத்தக்க 'அறிவர்' என்பார் சிறப்பு விரித்துரைக்கப் பட்டுள்ளது. இத்தொடருக்குத் தொல்காப்பிய உரையாசிரியர் பலவாறு உரை கண்டனர். இவர்தம் உரைகளான், அறிவரும் சித்தரும் ஒருவரே என்பது விளங்குகின்றது.

## உரையாசிரியர் தரும் விளக்கம்

தொல்காப்பிய உரையாசிரியருள் முதலாமவராகக் கருதத்தக்கவர் இளம்பூரணர். அவர் மேற்கண்ட தொடருக்கு,

'குற்றமற்ற செயலையுடைய மழையும், பனியும், வெயிலுமாகிய

www.saivamonline.com

மூவகைக் காலத்தினையும் நெறியினால் பொறுத்த அறிவன் பக்கமும்' என உரை வகுத்தனர். மேலும் அவர், 'அறிவன் என்றது கணிவனை' எனக் கூறி, 'பிரிவின்றி யாக்கைபோல்' என்று தொடங்கும் புறப்பொருள் வெண்பா மாலைப் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டியுள்ளார். இளம்பூரணர் நோக்கில் 'அறிவர்' என்ற சொல் வானநூல் வல்லாரைக் குறிப்பதாக அறிய முடிகிறது. ஆயின், தொல்காப்பிய உரைகாரருள் ஒருவராகிய நச்சினார்க்கினியரோ, 'அறிவர்' என்ற சொல்லைச் சித்தர் என்ற பொருள் நோக்கிலேயே விரித்துரைத்துள்ளார். மேற்கண்ட தொல்காப்பியத் தொடருக்கு,

'காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை, இறப்பும், நிகழ்வும் எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடை யோன் பக்கமும்...' என நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். இவர் உரையுள் அறிவர் என்பார் சித்தர்களே என்ற உண்மை புலப்படுகிறது. அறிவர் என்பார் இயல்பினை விளக்க, 'வாய்மை வாழ்நர்' என்றும், 'வாடப் போதி' என்றும் தொடங்கும் இரு அழகிய பாடல்களை மேற்கோள் காட்டும் நச்சினார்க்கினியர், 'கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவரென்று உணர்க' என்று கூறி முடிக்கிறார். பதினெண் சித்தருள் அகத்தியர் முதலாமவராகக் கருதப்படுகிறார். எனவே, நச்சினார்க்கினியர் நோக்கில் தொல்காப்பியம் சுட்டும் அறிவரும், பிற்கால இலக்கியங்கள் சுட்டும் சித்தரும் ஒருவரே என்பது நன்கு விளங்குகின்றது.

## சங்க இலக்கியத்தில் சித்தர்

சங்க இலக்கியங்களுள் புறநானூற்றுக்குத் தனி இடம் உண்டு. சங்க கால மக்களின் சமூகப் பொருளாதார, அறநெறிக் கோட்பாடுகளை உய்த்துணரப் புறநானூறு பெரிதும் துணை நிற்பது. இந்நூலுள், நலங்கிள்ளியின் தம்பியான மாவளத்தான் என்பவனைத் தாமப்பல் கண்ணனார் பாடிய நீண்ட பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. 'நிலமிசை வாழ்நர்' என்று தொடங்கும் அப்புறப்பாட்டுள் 'அவிர்சடைமுனிவர்' என்ற பெயரால் சித்தர்கள் சுட்டப்பட்டுள்ளதாகக் கருத இடம் அமைகிறது. 'நிலத்தில் வாழும் மக்களின் துயரங்கள் நீங்குதற்பொருட்டு, கதிரவனின் வெம்மையைத் தாம் தடுத்துத் தாங்கி, காற்றையே உணவாகக் கொண்டு, விண்ணில் இயங்கும் சுடர்களோடு இணைந்து வான்வழியில் செலவயரும் நெருங்கிய சடை முடியினை உடைய முனிவர்' என்ற கருத்தமைந்த,

www.saivamonline.com

**'நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்**
**தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்**
**கால் உணவாகச் சுடரொடு கொட்கும்**
**அவிர்சடை முனிவர்...'**

என்ற வரிகள் நினைந்து போற்றத்தக்கனவாக அமைகின்றன. அட்டமா சித்திகள் வல்ல சித்தர்கள் காற்றையே உணவாகக் கொண்டு பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்த வரலாறும், வான்வழியே செல்லும் அவர்தம் அளப்பரிய ஆற்றலும், புறநானூற்றுத் தொடருள் குறிக்கப் பெற்ற முனிவர்கள் சித்தர்களே என்று கருத இடம் தருகின்றன.

## சைவத் திருமுறைகளுள் சித்தர்

சித்தர் என்ற சொல் வழக்கு, சைவத் திருமுறைகளிலேயே முதன்முதலாக இடம்பெற்றுள்ளது. இவற்றுள் இறைவன் அடிதொழும் பக்தர்கள் வேறாகவும், சித்தர்கள் வேறாகவும் குறிக்கப் பெற்றுள்ளமை ஆராயத்தக்கது. 'கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்: கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என அறிஞர் விளக்கம் தந்து வேறுபாடு காட்டுகின்றனர். சித்தர் என்ற சொல்லைத் திருஞானசம்பந்தர்,

**'பத்தரொடு சித்தர்பயில்கின்ற பழுவூரே'**

என்றும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

**'பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன்**
**பழைய தூர்மேய**
**அத்தன் ஆலங்காடன்'**

என்றும்,

மாணிக்கவாசகர் திருப்படை எழுச்சி என்ற பகுதியுள்,

**'திண்டிறற் சித்தர்களே**
**கடைக் கூழை சென்மின்கள்'**

என்றும் குறித்துள்ளமை நினைவு கூரத்தக்கன. இவையன்றித் 'தேவராயும் சித்தராயும்' என்றும், 'அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி' என்றும் வரும் தேவாரத் தொடர்கள் பல.

www.saivamonline.com

## சித்தர் பற்றிய குறிப்புகள்

மூவர் தேவாரங்களுக்கு முற்பட்டது என்று ஒரு சாராரும், பிற்பட்டது என்று ஒரு சாராரும் கூறிவரும் நூல் திருமூலரின் திருமந்திரமாலை என்பது. திருமூலரே தமிழ்நாட்டுச் சித்தர்களுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர்.

பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் குறிக்கப் பெறும் இவரது வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்துள் விரித்துரைத்துள்ளார். சித்தர்: சித்தர் மரபுகள்: சித்தர் இயல்பு: சித்தாந்தம் முதலியனவற்றைத் திருமந்திர மாலை சிறப்பாக விளக்கி நிற்கிறது. திருமந்திரமாலைக்குப் பின் தோன்றிய தமிழ் நூல்களில் சித்தர்களின் வாழ்வு - இயல்புகள் - நூல்கள் முதலியன பற்றிய குறிப்புகள் நிறைவாகக் கிடைக்கின்றன. ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவராகிய 'கருவூரர்' சித்தராகத் திகழ்ந்தவர். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் புராணத்தில், 'எல்லாம்வல்ல சித்தரான படலம்' என ஒரு படலம் இடம் பெற்றுள்ளது. சிவபெருமானே சித்தராகத் தோன்றி நிகழ்த்திய சித்தாடல்கள் பலவற்றை இந்நூல் விரித்துரைக்கிறது.

## சைவ சித்தாந்தச் சாத்திர வளர்ச்சி

சைவ சமய வரலாற்றில் - சித்தாந்தச் சாத்திரங்களுக்கு முதன்மையான இடம் உண்டு. வழிபாட்டுச் சமயமாக விளங்கிய சைவம், கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டை ஒட்டிய காலப்பகுதியில் மெய்கண்ட தேவரால் தத்துவச் சமயமாக உருக்கொண்டது. சிவஞான போதத்திற்கு முன்னரே சைவசித்தாந்தக் கருத்துகள் நிலவியிருந்தன. மூவர் தேவாரத்துள்ளும், திருமந்திரத்திலும் இவற்றைக் காணலாம். ஞானாமிர்தம், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் முதலிய சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் சிலவும் இக்காலப் பகுதியில் எழுந்தன. மெய்கண்ட தேவரின் சிவஞானபோதமே சைவ சித்தாந்த மெய்ப்பொருள் கொள்கையைத் தருக்க அடிப்படையில் முதன் முதலில் முறையாக வரையறுத்து வழங்கியது. அதன் பின்னர் சைவ சித்தாந்தம் பெரு வளர்ச்சிப் பெற்றது.

## சித்தாந்தம்: சித்தர் நூல் வேறுபாடு

சைவ சித்தாந்தம் என்ற தொடரில் காணப்படும் சித்தாந்தம்' என்ற சொல்லைப் பகுப்பாய்வு செய்த சிலர் இந்நெறியும் சித்தர்நெறியே எனக் கூறிப் போந்தனர். இக்கருத்து முற்றாகப் பொருந்துவதன்று.

www.saivamonline.com

சைவ சித்தாந்த நூலாசிரியர் சிலர் வரலாற்றில், அருளற்புத நிகழ்ச்சிகள் சில காட்டப் பெற்றுள்ளன. இவை சித்தர் வாழ்வியல் அற்புதங்களோடு ஒத்திருத்தல் உண்மையே. சைவ சித்தாந்த நூலாசிரியருள் சிலர் பெயரோடு, சித்தர் என்ற சொல் சேர்த்து வழங்கப்படுதலும் உண்டு. சைவ சித்தாந்தம் என்ற தொடரில் வரும் சித்தாந்தம் என்ற சொல் 'அறிவின் எல்லை', 'அறிவாராய்ச்சியின் முடிந்த முடிபு' எனும் பொருள் தருவது. எனவே, சைவ சித்தாந்தமும் சித்தர் நெறியின் வெளிப்பாடே என்பது பொருந்து மாறில்லை. சைவ சித்தாந்தச் சாத்திர அமைப்பையும், சித்தர் நூல்களையும் ஒப்பவைத்து நோக்குவார்க்கு இவ்வுண்மை நன்கு புலனாகும்.

## 'சித்தர்' சொல் ஆய்வு

இனி, 'சித்தர்' என்ற சொல்லின் பொருளைச் சிறிது ஆராய்வது வேண்டத்தக்கது. இச்சொல் பற்றி அறிஞர்கள் பலவாறு ஆய்ந்து பொருள் கூறியுள்ளனர். சைவ சிந்தாந்தம் கூறும் உட்கருவிகள் நான்கு. மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன. நான்காவதாகிய சித்தத்திலிருந்தே தத்துவத் தோற்றங்களும் - ஒடுக்கங்களும் அமைகின்றன. எனவே, சித்தத்தை வென்ற வல்லமை மிக்காரே 'சித்தர்' ஆயினர் என்பது ஒன்று. 'சித்து' என்னும் சொல்லுக்கு ஒன்றை அடைதல், கைவரப் பெறுதல் என்பது பொருள். உலகியலிலும் இச்சொல் இவ்வாறு வழங்குவதுண்டு. எனவே, இறையருளைக் கைவரப் பெற்றவர் என்ற பொருளில் 'சித்தர்' எனக் கூறப்பெற்றனர் என்பது மற்றொன்று. பலவாறு ஆராயப்படினும், 'சித்தர் என்பார் இறையருள் பெற்று இறைமை நிலை எய்தப் பெற்றவர்' என்று பொருள் கொள்வதே நிறைவாக அமையும். சித்தர்க்குரிய நிலை 'சித்து' என்று குறிக்கப் பெற்றது. இவர்தம் நெறி 'சித்தர் நெறி' என வழங்கலாயிற்று.

## சித்தர் இயல்புகள்

சித்தர்களின் இலக்கணம் - இயல்பு - குணச்சிறப்புகள் முதலியனவற்றைத் தமிழ் இலக்கியங்களுள்ளும், சித்தர் பாடல்களுள்ளும் காண முடிகின்றன. 'சிந்தையிலே களங்கமற்றான் சித்தனாவான்.' என்றும், 'சிந்தை தெளிந்திருப்பவன் அவனே சித்தன்; செகமெல்லாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன்' என்றும் சித்தர் பாடல்கள் இவர் தம் இயல்புகளைக் குறிக்கின்றன. தாயுமான சுவாமிகள் சித்தர் கூட்டத்தாரின் சிறப்பினை விளக்கிச் 'சித்தர்கணம்' என்ற தலைப்பில் பத்துப்பாடல்கள் அருளியுள்ளார். இப்பகுதியில் உள்ள

www.saivamonline.com

பத்துப்பாடல்களும் 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற - வித்தகச் சித்தர்கணமே' என நிறைகின்றன. சித்தர்களின் அளப்பரிய சித்துகள் பல பாடல்களில் முறையாகக் கூறப்பட்டுள்ளன. சித்தர்கள் விண்வழிச் செல்ல வல்லவர்கள்; கடலைப் பருக வல்லவர்கள்: பிச்சை ஏற்றுண்போரை மாமன்னராக்கும் ஆற்றலுடையவர்கள்; மண் ஓட்டினை ஆயிரத்தெட்டு மாற்றுச் செம்பொன்னாக்க வல்லவர்கள்; ஊழிக்காலத்திலும் வண்டுருக் கொண்டு சிவயோகநிலை நிற்பவர்கள்; அட்டாங்க யோக நெறி வல்லவர்கள்; என்றைக்கும் அழியாத சிவராசயோகிகளாக வாழ்பவர்கள்; தவராச சிங்கங்களாக உலகோரால் புகழப்படுபவர்கள். இத்தகு வல்லமை மிக்க சித்தர் தம் திருக்காட்சி, தமக்குச் சித்திக்க வில்லையே எனத் தாயுமானார் ஏக்க முறுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

## அட்டமா சித்திகள்

தமிழ்நாட்டுச் சித்தர்கள் மேற்கொண்டு ஒழுகிய நெறி யோகநெறியேயாகும். எனவே, இவர்களை யோக மார்க்கிகள் என்பது தகும். எட்டு அங்கங்களை அடிப்படையாகக் கொண்ட யோக நெறி பற்றித் திருமந்திரம் விளக்கியுள்ளது. இதனை 'அட்டாங்கயோகம்' என்பர். அவை: அணிமா, மகிமா, லகிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பன.

அணுவைக் காட்டிலும் மிகச்சிறிய உருவில் உலவும் ஆற்றலுக்கு 'அணிமா' என்று பெயர். மலையினும் பெரிய உருவம் தாங்கி நிற்கும் ஆற்றலுக்கு 'மகிமா' என்று பெயர். உடலைப் பாரமில்லாமல் இலேசாகச் செய்து கொள்ளுதலும், நீர், சேறு முதலியவற்றில் அழுந்தாமல், காற்றுப் போல் விரைந்து செல்லும் வல்லமையைப் பெற்றிருத்தலும் 'லகிமா' என்று கூறப்படும். தாம் விரும்பியவனவற்றையும், நினைந்தனவற்றையும் உடன் அவ்வாறே அடையும் வல்லமைக்குப் 'பிரார்த்தி' என்று பெயர் கூறப்படும். தம் நினைவின் வல்லமையால் எல்லாவற்றையும் நினைந்தவாறே படைக்கும் ஆற்றல் 'பிராகாமியம்' எனப்படும். அனைவரும் தம்மை வணங்கும்படியான தெய்வத்தன்மையினை எய்துவது 'ஈசத்துவம்' என்பதாகும். உலகம் முழுவதையும் தம்வயப்படுத்தி நடத்தும் ஆற்றலைப் பெற்றிருத்தல் 'வசித்துவம்' ஆகும். ஐம்புலன்கள் நுகரும் இன்ப துன்பங்களைப் பற்றிக் கவலைப்படாமல், அவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கும் வல்லமை 'கரிமா' என்று கூறப்படும்.

www.saivamonline.com

இத்தகு அட்டாங்கயோக நெறி நின்றவர்களே தமிழ்நாட்டுச் சித்தர்கள். இதுவன்றித் தமிழ்நாட்டில் 'பரியங்கயோகம்', 'பிரசாதயோகம்' முதலிய வேறு யோக நெறிகளும் நிலவின. இந்நெறிகளை விளக்கும் நூல்களும் தமிழில் உள்ளன. சித்தர்களுள் சிலர் இந்நெறிகளையும் போற்றியுள்ளனர்.

## சித்தர் தொகை

தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களைப் பிற்காலத்தார் 'நவநாத சித்தர்கள்' எனவும், 'பதினெண் சித்தர்கள்' எனவும் தொகைப்படுத்தி உரைத்துள்ளனர். பதினெண் சித்தர்கள் என்ற தொகையைப் பலரும் பலவாறாகக் குறித்துள்ளனர். எனினும், இன்று வழக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட சித்தர்களின் பெயர்கள் நின்று நிலவுகின்றன. இவர்கள் பாடியனவாகப் பல நூல்களும், தனிப்பாடல்களும் அச்சிடப்பட்டுள்ளன. சில நூல்கள் இன்னும் ஏட்டளவிலேயே உள்ளன. சில ஏடு பெயர்த்து எழுதப் பெற்றும் அச்சேறாது உள்ளன. சித்தர்களின் வரலாறு, காலம், அவர்தம் நூல்கள் பற்றி முறையான ஆய்வுகள் இந்நாள் வரை அறிஞர்களால் மேற்கொள்ளப் பெறாமை பெருங்குறையே! தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய அறிஞர்கள் பலர், சித்தர் நூல்களுக்கென சில பக்கங்கள் கூட ஒதுக்காமை வியப்பேயாகும். தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் குறிக்கத்தக்க சித்தர்கள் சிலரது சுருக்கமான வரலாறுகளும் நூல்களும் பற்றிக் கீழே சில செய்திகள் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன.

## நவநாத சித்தர்கள்

'நவநாத சித்தர்கள்' என்ற பட்டியலில் ஒன்பது சித்தர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். 1. சத்துவநாதர், 2. சாலோகநாதர், 3. ஆதிநாதர், 4. அருளிதநாதர், 5. மதங்க நாதர், 6. மச்சேந்திரநாதர், 7. கடயந்திரநாதர், 8 கோரக்க நாதர், 9. குக்குட நாதர் என்போர் அவ்வொன்பதின்மர். இவ்வொன்பதின்மரும் உச்சாடனம், மோகனம், ஸ்தம்பனம், மாரணம், ஆக்ருஷ்ணம், வித்வேஷணம் ஆகிய ஆறு துறைகளில் நூல்கள் பல இயற்றினர் எனத் தெரிகிறது. இவற்றுள் உச்சாடனம் என்பது, பேய் முதலியனவற்றை ஓட்டும் மந்திரம். மோகனம் என்பது மயக்கும் தொழில் பற்றிய மந்திரம். ஸ்தம்பனம் என்பது அசைவற நிறுத்தும் மந்திரம். மாரணம் என்பது கொல்லும் மந்திரம். ஆக்ருஷ்ணம் என்பது சாபம். வித்து வேஷணம் என்பது விந்துவைக் கட்டும் நெறி. நவநாத சித்தர்களை இவ்வாறன்றி 1. கந்தளேந்திரர், 2. கோரக்கர், 3. கொங்கணர், 4. நாகார்ச்சுனர், 5. மச்சேந்திரர், 6. பீமநாதர், 7. அருணகிரிநாதர்,

www.saivamonline.com

8. புஜங்ககுருநாதர், 9. ஆதிநாதர் என வேறு வகையாகவும் பட்டியிலிட்டுக் காட்டுவதுண்டு.

## பதினெண் சித்தர்கள்

சித்த நூலோர் கொள்கைப்படி சிவபெருமானிடத்து நந்திதேவர், அகத்தியர் முதலியோர் மருத்துவ முறைகளைக் கேட்டுணர்ந்தனர் எனவும், அம்மருத்துவ முறைகளைத் திருமூலர் முதலிய பதினெண் சித்தர்கள் வளர்த்துப் பரவச் செய்தனர் எனவும் அறியப்படுகிறது. இவர்கள் நந்தி, அகத்தியர் ஆகியோரையும் அகப்படுத்திப் பதினெண் சித்தர்களின் பட்டியலைக் கூறியுள்ளனர். இவர்கள் கூற்றுப்படி 1. அகத்தியர், 2. புலத்தியர், 3. புசுண்டர், 4. நந்தி, 5. திருமூலர், 6. காலாங்கிநாதர், 7. போகர், 8. கொங்கணர், 9. உரோமமுனி, 10. சட்டை முனி, 11. மச்சமுனி, 12. கரூரர், 13. தன்வந்திரி, 14. தேரையர், 15. பிண்ணாக்கீசர், 16. கோரக்கர், 17. யூகிமுனி, 18. இடைக்காடர் ஆகியோர் பதினெண் சித்தர்களாகக் குறிக்கப்படுகின்றனர். இவ்வரையறை, சித்த மருத்துவ நூல் செய்த சித்தர்களின் தொகுப்பாகத் தோன்றுகின்றது. தமிழகத்துப் பண்டைச் சித்தர்களுள் தலையாயவர் அகத்தியரே. தமிழில் முதல் இலக்கணம் படைத்த அகத்தியருக்கும், மருத்துவ நூல் பல செய்த அகத்தியச் சித்தருக்கும் தொடர்புண்டா? இருவரும் ஒருவர்தாமா? வெவ்வேறானவர்களா? என்பனவற்றைத் தெளிவாக அறிய முடியவில்லை. அகத்தியரின் பெயரில் அமுதகலை ஞானம், நோயின்சாரம், வைத்தியக்கும்மி, வைத்திய சாரம், சங்குசுத்தி, செந்தூரமுறை, அவிழ்ந்த சாரம், பூரண சூத்திரம் முதலிய மருத்துவ நூல்களும், பஞ்சகாவிய நிகண்டு, ஐம்புள் நூல் முதலிய பிற வகை நூல்களும் வழங்குகின்றன.

## வேறு ஒரு பட்டியல்

பதினெண் சித்தர்கள் என்ற தொகுப்பில் திருமூலரை முதலாமவராக வைத்து ஞான நூல் அருளியோர் பலரை இணைத்து ஒரு பட்டியல் சிலரால் தரப்பெற்றுள்ளது. இவர்கள் கருத்தின் வண்ணம், 1. திருமூலர், 2. இராமதேவர், 3. கும்பமுனி, 4. இடைக்காடர், 5. தன்வந்திரி, 6. வான்மீகி, 7. கமலமுனி, 8. போகநாதர், 9. மச்சமுனி, 10. கொங்கணர், 11. பதஞ்சலி, 12. நந்திதேவர், 13. போதகுரு, 14. பாம்பாட்டிச் சித்தர், 15. சட்டைமுனி, 16. சுந்தரானந்த தேவர், 17. குதம்பைச்சித்தர், 18. கோரக்கர் முதலியோர் பதினெண் சித்தர்களாகக் குறிக்கப் பெற்றுள்ளனர். முதற்பட்டியலில் குறித்த அகத்தியர் இப்பட்டியலில்

www.saivamonline.com

கும்பமுனி எனக் குறிக்கப் பெற்றார். இவரைக் கும்பமுனி, குடமுனி என அழைக்கும் வழக்கம் உண்டு. முதற் பட்டியலில் இல்லாத ஒன்பதின்மர் பெயர்கள் இரண்டாவது பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

## பட்டியலில் இடம் பெறாதோர்

இவ்விருபட்டியல்களிலும் இடம் பெறாத நூற்றுக்கும் மேற்பட்ட சித்தர்கள் வரலாறு தமிழ்நாட்டில் வழங்கி வருகிறது. அவர்களுள் குறிக்கத்தக்கார் சிலர். திருவள்ளுவரையும் சித்தராகக் கருதுவோர் உளர். அவர் பெயரில் ஞான நூல்கள் சில வழங்கி வருகின்றன. இவரையன்றி, சிவவாக்கியார், ஔவையார், பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச் சித்தர், கடுவெளிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், பீர்முகமது, வாலை சாமி, உலோகாயதச் சித்தர், ஏனாதிச்சித்தர், காளைச் சித்தர், சுந்தரானந்ததேவர், இராமதேவர், சேஷயோகியார், கணபதிச் சித்தர், சுப்பிரமணியச் சித்தர், வான்மீகி, சூரியானந்தச் சித்தர், காரைச் சித்தர், தடங்கண்சித்தர், புஜண்டர், தட்சிணாமூர்த்தி முதலிய பல சித்தர்களின் பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பிற்காலத்தார் வியாசர், ஜமதக்கினி, சண்டேசர் முதலியோரையும், வடலூர் இராமலிங்க சுவாமிகளையும், தருமை ஆதீனக்குரு முதல்வர் குருஞான சம்பந்தரையும் சித்தரென்றே கருதியுள்ளனர். இவர்கள் பாடல்களை முறையாக ஆராய்ந்தால் இவர்களுள் பலர் சித்தர் அல்லர் என்பதும், பலர் ஞான நூல் ஆசிரியர் என்பதும் தெரிய வரும்.

## சித்தர் ஆய்வுக்குத் தடை

மேலே குறிக்கப் பெற்ற சித்தர்களுள் மிகச் சிலரது வரலாறுகளே ஓரளவு கால எல்லைகளோடு ஆராய்ந்து வெளியிடப் பெற்றுள்ளன. அவைகளும் அகச்சான்றுகளுடன் நிறுவப் பெறவில்லை. பெரும்பாலான, செவிவழிச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப் பெற்றுள்ளன. ஒரே பெயர் கொண்ட சித்தர்கள் பலர் உள்ளனர். இவர்களுள் பலர் வாழ்ந்திருந்ததாகக் குறிக்கப் பெறும் கால எல்லைகள் வரலாற்றுக்கு ஏற்புடையனவாக இல்லை. இவர்களில் ஒவருக்கே சமாதிகள் பல்வேறு இடங்களில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளன. மிகப்பலவான சமய இலக்கியங்கள் இவர்களுக்குச் சிறப்பிடம் தந்தில. இவர்கள் பெயரால் வழங்கப்படும் நூல்களும் ஒரு தன்மையுடையனவாக இல்லை. இவையும், இவை போன்ற வேறு சில காரணங்களும் சித்தர்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப் பெருந்தடைகளாக உள்ளன. மேற்கண்ட சித்தர்களில் சிலரது வரலாற்று நிகழ்வுகளும், படைப்புகளும் சுருக்கமாகக் கீழே தரப்பெற்றுள்ளன.

www.saivamonline.com

## 1. திருமூலர்

திருமூலரின் அருள் வரலாற்றைத் தெளிவாகக் கூறும் நூல் சேக்கிழாரின் பெரிய புராணமேயாகும். இருபத்தெட்டு பாடல்களால் இவர் வரலாறு விரித்துக் கூறப்பட்டுள்ளது. புலவர் புராணம் என்னும் நூலும் இவரது வரலாற்றைக் கூறுகின்றது. திருமூலர் திருக்கயிலையில் வாழ்ந்திருந்தவர். சிவபக்தர். நந்தியெம்பெருமானிடம் உபதேசம் பெற்றவர். நான்மறைச் சிவயோகியார். அகத்தியரைக் காணத் தென்னாடு போந்தார். வழியில் காவிரிக்கரையில் உள்ள சாத்தனூரை அடைந்தார். மாடு மேய்க்கும் மூலன் என்பான் இறந்துபோக, மாடுகள் கதறி அழுதன. அதனைக் கண்ட இவர் தம் உடலை விட்டு அவன் உடலில் புகுந்து ஆக்களின் துயர் தீர்த்தார். பழைய உடலைத் தேடினார். அது இறையருளால் மறைந்து போயிற்று. சிவன் தந்த ஆகமப் பொருளைத் தம் வாக்கினால் தமிழில் வகுப்பத் திருவுளம் கொண்டு, தம் உடலை மறைப்பித்தான் என்று துணிந்தார். திருவாவடுதுறை சார்ந்தார். திருக்கோயிலின் மேற்குப் பகுதியில் அரசமரத்தின் கீழ் யோகத்தில் அமர்ந்தார். சரியை முதலிய நால்நெறி உணர்த்தும் திருமந்திரமாலையினை ஆண்டுக்கு ஒரு பாடலாக அருளினார். 'ஒன்றவன் தானே' எனத் தொடங்கி மூவாயிரம் பாடல்கள் அருளிக் கயிலை சென்று இறையடி எய்தினார். இவர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டாகலாம் என்பது அறிஞர் கொள்கை.

பெரியபுராணம் விரித்துரைக்காத, திருமூலரின் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றைச் சித்தர் பாடல்கள் சில கூறுகின்றன. திருமூலர் புரட்டாசி மாதம், அவிட்ட விண்மீனில் பிறந்தார் எனப் போகர் சப்த காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. இவர் நந்தியிடம் உபதேசம் பெற்றதும், முத்திப் பேறெய்தியதும் மூல விண்மீனில் எனவும் இந்நூல் குறிக்கிறது. ஒரு சித்தர் நூல் இவரை வேளாளர் மரபினர் என்று கூறுகிறது. பிறிதொன்று கைக்கோளர் எனக் குறிக்கிறது. மன்னன் மகள் ஒருத்தியின் கணவன் இறந்த காரணத்தால், அரச சுற்றத்தார் அழ, திருமூலர் தம் உயிரை இறந்தவன் உடலில் புகுத்தி எழுந்தார் என வைத்திய ரத்தினச் சுருக்கம் என்னும் சித்தர் நூல் ஒரு கதை கூறுகின்றது. திருமூலரின் திருமந்திரம் சிறப்புப்பாயிரம், பொதுப்பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் என்னும் மூன்று பாயிரங்களையும், ஒன்பது தந்திரங்களையும் கொண்டுள்ளது. பாடல் தொகை மூவாயிரம் என்று சேக்கிழார் குறித்துள்ளார். எனினும், இராமலிங்க சுவாமிகள் திருமூலரின் திருமந்திரப் பாடல் தொகை எண்ணாயிரம் எனக் குறிக்கின்றார். வேறு சில சித்தர் நூல்களும் எண்ணாயிரம் எனக் குறிக்கின்றன.

www.saivamonline.com

திருமந்திரம் அல்லாது, வேறு சில நூல்களும் திருமூலர் இயற்றியனவாகக் குறிக்கப்படுகின்றன. அவையாவன: 1. திருமூலர் தத்துவக் கட்டளை, 2. திருமூலர் தியானக் குறிப்பு, 3. திருமூல தேவர் வாலை பஞ்சாட்சர விளக்கம், 4. திருமூலர் வைத்தியம், 5. திருமூலர் வைத்திய முறை வசனம், 6. திருமூலர் சொச்சச் சூத்திரம், 7. திருமூலர் தண்டகம், 8. திருமந்திரச் சூத்திரம் 200, 9. திருமூலர் வைத்தியம் 600, 12. திருமூலர் வாலை தீட்சை, 13. திருமூலர் எட்டு, 14. திருமூலர் கனவு நூல், 15. திருமூலர் குளிகை முறை 50, 16. திருமூலர் பூரணமாலை, 17. திருமூலர் சூத்திரத்திரட்டு, 18. திருமூலர் கற்பமுறை 500, 19. திருமூலநாயனார் வாத சூத்திரம் 300, 20. திருமூலநாயனார் நிகண்டு 300, 21. திருமூல்ர் குருமுறை, 22. திருமூலர் ஞானம், 23. திருமூலர் கருக்கிடைத் தொள்ளாயிரம், 24. திருமூலர் ஆயிரம், 25. திருமூலர் கருமானச் சுருக்கம் 84, இவை யாவும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள் சில திருமூலர் அருளியனவாகலாம். சில அவர் நெறி நின்று, அவர் பெயரில் பிற்காலத்தார் பாடியனவாகலாம்.

## 2. வான்மீகர்

வான்மீகரும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் குறிக்கப்படுகிறார். இவர் ஆதிகாலத்தில வடமொழியில் இராமாயணம் பாடியவரா? அன்றித் தமிழகத்தில் வாழ்ந்த வேறு ஒரு சித்தரா? என அறிய இயலவில்லை. தமிழ்ப்புலவர் வரிசையில் வான்மீகியார் என இவர் பெயர் காணப்படுகின்றது. இவர் பாடியனவாக புறநானூற்றில் 358 ஆவது பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. இராமகாதை பாடிய வான்மீகி, திருடராக இருந்துப் பின் திருந்தியவர் என்பர். முதற் சங்ககாலத்துப் புலவர்களுள் ஒருவரும் வான்மீகி என வழங்கப் பெற்றார். இவர் செய்த நூல் ஒன்றைத் தலையாய ஓத்து என நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். பாலவான்மீகி, விருத்த வான்மீகி என வேறு இருவர் வாழ்ந்திருந்ததாகவும் தெரிகிறது. சித்தர் வான்மீகர் இவர்களுள் யாவர் என அறிய இயலவில்லை. வான்மீகர் ஞானம் என்ற பதினாறு பாடல்களைக் கொண்ட நூல் ஒன்று கிடைத்து அச்சிடப்பட்டுள்ளது. அந்நூல் வேத, சாத்திர, புராணங்களைக் கண்டனம் செய்கிறது.

## 3. திருவள்ளுவர்

திருக்குறள் இயற்றிய திருவள்ளுவரின் பெயரில் சித்தர் ஒருவரும் குறிக்கப்படுகிறார். திருக்குறளின் பழைய பதிப்புகளில் திருவள்ளுவர் வரலாறாகப் பல கதைகள் குறிக்கப் பெற்றுள்ளன. பல செவி வழியாக

www.saivamonline.com

வழங்கி வருவன. சில பிற்காலத்தார் கற்பனை. இவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பர். இவர் துணைவியார் வாசுகி எனக் குறிக்கப் பெறுகிறார். திருவள்ளுவர் பாடியதாக ஞானவெட்டியான் என்னும் நூல் ஒன்று கிடைத்துள்ளது. திருக்குறளின் கருத்துகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அதிவீரராம பாண்டியனைப் பற்றிய குறிப்பு இந்நூலுள் காணப்படுவதால், இந்நூல் கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்ததாகவே கருதத்தகும். சித்தர் நூலாராய்ச்சியாளர் சிலர் திருக்குறள் ஆசிரியரும், ஞான வெட்டியான் நூல் ஆசிரியரும் ஒருவரே எனக் கூறுகின்றனர். மக்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என இந்நூல் வற்புறுத்துகின்றது. எளிய, இனிய நடையில் இந்நூல் அமைந்துள்ளது.

## 4. ஔவையார்

ஔவையார் என்ற பெயரில் வெவ்வேறு காலங்களில் பெண்பாற் புலவர்கள் மூவர் வாழ்ந்திருந்தனர் என்பது ஆராய்ச்சியால் தெளிவாகிறது. ஔவையார் பற்றி வழங்கும் கதைகள் பலப்பல. இவர் பெயரில் சங்கப் பாடல்களும், நீதி நூல்களும், ஞான நூல்களும் வழங்கி வருகின்றன. இடைக்கால ஔவையாரே சித்தர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர் எனத் தெரிகிறது. ஔவையார் ஞானக்குறள் என்ற நூல் சித்தர் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. மூன்று பால்களையும், முப்பத்தொரு அதிகாரங்களையும் கொண்ட குறள் யாப்பில் அமைந்த ஒரு ஞான நூல் இது. யோகம், ஞானம் பற்றியனவே அனைத்துப் பாக்களும்.

**'சிந்தையுள் நின்று சிவனருள் பெற்றக்கால்**
**பந்தமாம் பாசம் அறும்'**

இதைப் போன்ற பாடல்கள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

## 5. போகர்:

திருமூலரின் மாணாக்கர் எழுவர். அவர்களுள் ஒருவர் காலாங்கிநாதர். காலாங்கிநாதரின் மாணாக்கர் போகர். போகர் ஒரு பெரிய சித்தர் கணத்தின் தலைவராகக் கருதப் பெறுபவர். ஆதிகாலத்தில் சிவபெருமான் அருளிச் செய்த எழுநூறாயிரம் சூத்திரங்களைப் போகர் ஏழு காண்டத்துள் அடக்கித் தம் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தினார் என்பர். இவர் மாணாக்கருள் ஒருவர் புலிப்பாணி. போகரும், புலிப்பாணியும் பழநி மலையின் அடிவாரத்தில் வாழ்ந்திருந்தனர் எனவும், அவ்வூர் வைகாவூர் எனவும் கொங்கு மண்டலசதகம் குறிப்பிடுகிறது. பாண்டிய நாட்டில் உள்ள சதுரகிரி, சிவகிரி முதலிய இடங்களிலும் போகர் வாழ்ந்திருந்ததாகத்

www.saivamonline.com

தெரிகிறது. இவர் முருகவழிபாட்டு நெறியினர் என்பர். பழநி தண்டாயுதபாணி சுவாமி, போகரால் வடிவமைத்து வணங்கப் பெற்றவர் எனக் கூறப்படுகிறது. இவர் வரலாறு பற்றிச் சித்தர் நூல்களில் பல குறிப்புகள் உள்ளன. இவர் நூல்கள் போகர் ஏழாயிரம், யோகம் எழுநூறு, நிகண்டு பதினேழாயிரம், போகர் திருமந்திரம் முதலியன. சட்ட முனி, மச்சமுனி, கமலமுனி, நந்தீசர், கொங்கணர், கருவூர்த்தேவர் முதலியோர் இவர் தம் மாணாக்கர் என்பர்.

## 6. புலிப்பாணி

போகரின் முதன் மாணாக்கர் இவர். இவர் ஒரு புலியை நட்பாகக் கொண்டிருந்தவர். நீண்ட தூரம் புலி மேல் ஏறிச் சென்று நீர் கொண்டு வருவது இவர் வழக்கம். இதுபற்றி இவருக்குப் புலிப்பாணி எனப் பெயர் வந்தது. சாலவித்தை, மருத்துவம் முதலிய துறைகளில் வல்லவர். இவர் இயற்றிய நூல்கள் வைத்தியம் ஐந்நூறு, சாவாத்திரட்டு நூறு, சி தம்பரம் இருபத்தைந்து, பல திரட்டு நூறு முதலியன.

## 7. கொங்கணர்

கொங்கணரும் போகரின் மாணாக்கருள் ஒருவர். இவர் கொங்கு நாட்டிலுள்ள ஊதியூர் மலையில் வாழ்ந்திருந்தவர். இரசவாதத்தில் வல்லவர். ஏனைய சித்தர்களும் வியக்கத்தக்க அட்டமா சித்திகள் இவரிடம் அமைந்திருந்தன. இவர்தம் தவ வலிமையால் ஒரு கொக்கினைச் சாம்பலாகப் போகுமாறு எரித்தார். வள்ளுவரின் துணைவியாரிடம் இவர் செருக்கடங்கினார் என்பர். கால நோக்கில் இக்கதை பொருந்தி வருமாறில்லை. இவர் தம் வரலாற்றுச் செய்திகள் சில, கொங்கு மண்டல சதகத்தில் கூறப்பெற்றுள்ளன. பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசை ஆழ்வாரும் இவரும் நண்பர்கள் என்பர். இது உண்மையாயின் இவர் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்பது உறுதிப்படும். இவர் புளிஞர் என்னும் மலைவேடர் இனத்தவர் என்பர். தஞ்சாவூர் மேலை வீதியில் உள்ள, கொங்கணேசுவரர் திருக்கோயில் சிவலிங்கம், இவரால் எழுந்தருள்விக்கப் பெற்றது என்று கூறப்படுகிறது. இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் கொங்கணர் வாலைக்கும்மி, கொங்கண தேவர்கலை, கொங்கணர் தியானம், கொங்கணர் வாக்கியம், துருசுகுரு முப்பத்தொன்று, கொங்கணர் குளிகை, கொங்கணர் ஞானம் நூறு, கொங்கணர் திரிகாண்டம், கொங்கணர் கடைக்காண்டம், முப்பூதீட்சை, குணவாகடம் என்பன குறிக்கத்தக்கன.

www.saivamonline.com

## 8. மச்சமுனி

*மச்சமுனியும் போகரின் மாணாக்கருள் ஒருவரே. இவரைச் செம்படவர் மரபினர் என்பர். இவர் இயற்றிய நூல்கள் திவாகரம் 800, வைத்தியம் 800 முதலியன. சுந்தரானந்தர், நந்தீசர் முதலியோரும் போகரின் மாணாக்கர்களே என்பர்.*

## 9. யூகிமுனி

*யூகிமுனி என்பவர் தேரையர் மாணாக்கருள் ஒருவர். இவர் மருத்துவ நூல் வல்ல சித்தர். இவர் அகத்தியர் ஆச்சிரமத்திலிருந்த கருங்காக்கை ஒன்றைத் தாம் கண்டுபிடித்து வைத்திருந்த வீரசுண்ணத்தால் வெண்மையாக்கிக் காட்டினார். இதனைக்கண்ட அகத்தியர் மகிழ்ந்து, இவரை 'மதியூகி' எனப் பெயரிட்டு அழைத்தார். அதுபற்றியே இவர் யூகிமுனி என வழங்கப் பெற்றார். இவர் இயற்றிய நூல் வைத்திய சிந்தாமணி என்பது. வேறு சில நூல்களுள் இவர் இயற்றியதாகத் தெரிகிறது.*

## 10. தேரையர்

*பதினெண் சித்தர்களுள் சிறப்பிடம் பெறுபவருள் ஒருவர் தேரையர். இவர் தருமசௌமியரின் மாணாக்கர். இவரை அகத்தியர் மாணாக்கர் எனவும் கூறுவர். இவர் அகத்தியருடன் ஒருவரின் தலை நோயைத் தீர்க்கச் சென்றிருந்தார். அகத்தியர் கபாலத்தைத் திறந்து பார்க்க உள்ளே ஒரு தேரை இருந்தது. அகத்தியர் அதனை எடுக்க முனைந்தபோது, இவர் தடுத்துத் தட்டு ஒன்றில் நீரை ஏந்தினால் தேரை பாயும் எனக்கூறி அவ்வாறே ஏந்தினார். தேரையும் நீரிற் பாய்ந்தது. தேரையின் இயல்பறிந்து நோய் தீர்க்க உதவிய திறம் பற்றி இவர் தேரையர் என வழங்கப் பெற்றார். இவர் வாதத்தில் வல்லவர் என்றும், அதனால் உலகினைக் கெடுத்தனர் என்றும், அகத்தியர் இவரது உயிரைப் போகச் செய்தனர் என்றும் இவரே பின்னர் இராமதேவர் என்ற பெயரில் வாழ்ந்திருந்தார் என்றும் ஒரு கதை கூறப்படுகிறது. இவர் செய்த நூல்கள் பதார்த்த குண சிந்தாமணி, நீர்க்குறி நெய்க்குறி சாத்திரம், தயில வருக்கச் சுருக்கம், வைத்திய யமகவெண்பா, மணிவெண்பா, மருத்துப்பாரதம் முதலியன. இவர் இயற்றிய 'நோயணுகாவிதி' பலராலும் பின்பற்றத்தக்க எளிய பாது காவல்களைக் கூறுவது.*

www.saivamonline.com

## 11. தன்வந்திரி

வடநூல்களில் குறிக்கப்படும் தன்வந்திரி என்பார் ஒரு மருத்துவ நெறியினர். இவரோ தமிழ்நாட்டுச் சித்தர் நெறியினர். பிரமபுராணம் என்னும் நூல் இவரை அநு என்னும் அரசரின் குமாரர் எனக் குறிக்கிறது. இவர் பாரத்துவாசரிடம் ஆயுர் வேதங்கற்று, அதை எட்டுவகையாகப் பிரித்துத் தம் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தினார் என்றும் இந்நூல் கூறுகிறது. இவர் பாற்கடலில் பிறந்த தேவ வைத்தியர்; விஷ்ணுவின் அம்சம்; ஒரு கையில் கதை, ஒரு கையில் கமண்டலம் கொண்டவர் எனப் பாகவதம் கூறும். இவரே மீண்டும் தீர்க்கதமர் என்பாரின் குமாரராய்ப் பிறந்து மருத்துவ நூல் பல இயற்றினார் என்பர். இவரின் நூல்கள் தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி, சிமிட்டு ரத்தினச் சுருக்கம், கலை ஞானம் முதலியன. இவர் மாணாக்கர் சுசருதர் என்பர்.

## 12. அகப்பேய்ச்சித்தர்

மனத்தைப் பேய் என்று கூறி இவர் பல பாடல்கள் பாடியமையின், இவரை மக்கள் அகப்பேய்ச்சித்தர் என அழைக்கலாயினர்.

**'சமயம் ஆறுமடி - தன்னாலே வந்ததடி**
**அமைய நின்ற இடம் - அகப்பேய்**
**ஆராய்ந்து சொல்வாயோ!'**

என்பது போல்வன இவர் பாடல்களின் அமைப்பாகும். இவர் தொண்ணூறு கண்ணிகள் இவ்வாறு பாடியுள்ளார். இவர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கூறுகள் பல இடம் பெற்றுள்ளன. பல குழூஉக் குறிகளும் இடம் பெற்றுள்ளன.

## 13. குதம்பைச் சித்தர்

குதம்பை என்பது பெண்களின் காதணி வகைகளுள் ஒன்று. இவ்வகைக் குதம்பை அணிந்த பெண் ஒருத்தியை முன்னிலைப்படுத்தி, மகடூஉ முன்னிலையாக விளித்துக் 'குதம்பாய்' என இவர் பாடினமையின் இவரைக் குதம்பைச் சித்தர் என அழைத்துள்ளனர். இவர் பாடியனவாக 32 பாடல்கள் கிடைத்துள்ளன. 'மாங்காய்ப்பால் உண்டு' என்று தொடங்கும் இவர் பாடல் ஒன்று தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்டது.

**'வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்குப்**
**பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்**
**பட்டயம் ஏதுக்கடி'**

www.saivamonline.com

இவ்வாறு அரிய உட்பொருள்கள் பொதிந்தனவாக இவர் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்களின் அமைப்பு மற்றும் சில சொல்லாட்சிகளைக் கொண்டு நோக்கினால், இவரும் கி.பி.15-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப் பகுதியினராகவே தோன்றுகின்றார். இவர் வரலாறு பற்றி ஏதும் அறிய இயலவில்லை.

## 14. காளைச் சித்தர்

பிற்கால நாட்டுப்புற இலக்கியப் போக்கில் அமைந்த அச்சிடப் பெறாத எட்டுப் பாடல்களைப் பாடிய ஒருவரைக் காளைச் சித்தர் என்பர். ஏரில் காளைகளைப் பூட்டி, உழவுக் கோலைக் கையில் கொண்டு உழுது பயிர்த்தொழில் செய்வதாக ஞான உழவை உருவகித்துப் பாடுவனவாகவே இவர் பாடல்கள் அமைகின்றன.

**'எல்லாரும் கொல்லையுழ - என்தோழா**
**என்கணவன் பள்ள முழப்**
**பள்ளம் பழுத்தலவோ - என்தோழா**
**பார்த்துவரப் பிள்ளையீரே!'**

என இவ்வாறு இவர் பாடல்கள் அமைகின்றன. இவர் வரலாறு, காலம் பற்றியும் அறிய முடியவில்லை.

## 15. மச்சேந்திரர்

தமிழ்நாட்டுச் சித்தர்களை 'நவநாத சித்தர்கள்' என்றும் 'பதினெண் சித்தர்கள்' என்றும் தொகைப்படுத்திக் குறிப்பது வழக்கம் எனக் கண்டோம். நவநாத சித்தர் பட்டியலில் ஆறாவதாக மச்சேந்திரநாதர் என்ற பெயரில் மச்சேந்திரர் குறிக்கப்படுகிறார். இவரே பதினெண் சித்தர்கள் பட்டியலில் பதினோராமவராக மச்சமுனி என்று சுட்டப்படுகிறார்.

மச்சேந்திரர் சித்தர் தலைவராகிய போகரின் மாணாக்கருள் ஒருவர். செம்படவர் மரபினர். இவர் இயற்றியவனவாகத் தமிழில் திவாகரம் 800. வைத்தியம் எண்ணூறு எனும் இரு நூல்கள் கிடைத்துள்ளன. சித்தர் மரபில் வரும் சுந்தரானந்தர், நந்தீசர் முதலியோர் மச்சேந்திரரோடு ஒரு சாலை மாணாக்கர்களாகப் போகரிடம் பயின்றனர் என்று தெரிய வருகிறது.

சித்தம் போக்குச் சிவம் போக்கு என்பது தமிழ்நாட்டில் வழங்கி வரும் ஒரு பழமொழி. உமையையும் பிற தெய்வங்களையும் சித்தர்கள்

www.saivamonline.com

ஒரோ வழிப் பாடிப் பரவியுள்ளனர் என்றாலும், தமிழ்நாட்டுச் சித்தர்கள் சிவநெறி நின்று ஒழுகியவர்கள் என்பதே முன் குறித்த பழமொழியின் உண்மைப் பொருள்.

சிவனருள் பெற்றுப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் நிகழ்த்திய ஆற்றல் மிக்க சிவனடியார்களாக அன்னார் திகழ்ந்தனர். உருவ வழிபாட்டையும் சமயச்சடங்குகளையும் சித்தர்கள் பெரிதாகப் போற்றிலர். எனவே, இவர்கள் சமய அருளாளர்களிடமிருந்து வேறு பிரித்து எண்ணப்பட்டனர். சித்தர்கண்ட நெறி சிவநெறியே என்பது சித்தர் நூல்களால் அறிய வருகின்றது. மதுரையில் எல்லாம் வல்ல சித்தராகச் சிவன் எழுந்தருளி வந்து சித்தாடல் நிகழ்த்தியதைத் திருவிளையாடல் புராணம் விரித்துரைக்கிறது. ஒரு வகையில் 'சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிக்கும் தொகையடியார் குறிப்பு, சித்தமரபினரைத் தொகுத்துரைத்த ஒரு குறியீடாகவே அமைகிறது. ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள கருவூரரைச் சித்தராகப் போற்றும் மரபும் நிலவுகிறது.

தமிழ்நாட்டுச் சித்தர்கள் வரலாறுகள் குறித்த முறையான ஆய்வுகள் இதுகாறும் நிகழ்த்தப் பெறாமை பெருங்குறை. எல்லாம் செவி வழிச் செய்திகளின் பதிவாகவே நிற்கின்றன. சித்தர் பாடல்கள் பதிப்புகள் பலவும் குறைபாடு மிக்கனவாகவே அமைந்துள்ளன. 20-ஆம் நூற்றாண்டில் சித்தர் பாடல்களோடு பலர் தங்கள் சொந்த பாடல்களையும் எழுதி இணைத்த அவலங்களும் உண்டு. இக்கட்டுரை ஆசிரியரால் பெரிது முயன்று, தகவல்கள் திரட்டப்பட்டு ஒப்பாய்வு நிகழ்த்தி, கோரக்கர் மற்றும் காகபுஜண்டர் வரலாறுகள் வெளிக் கொணரப்பட்டன. மச்சேந்திரர் திருப்பரங்குன்றத்தில் ஜீவசமாதி அடைந்ததாகவும், இவர் ஆடித்திங்கள் 'உரோகிணி நாள்' முதல் பாதத்தில் அவதரித்தவர் என்றும் சித்தர் களஞ்சியம் என்ற தொகுப்பு நூலில் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஒருமுறை சிவபெருமான் ஒரு கடற்கரை அருகில் இருந்தவாறு உமையம்மைக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்தார். அக்காலை, கடல் மீன் ஒன்றின் வயிற்றில், முட்டைக்குள் இருந்த மீன் குஞ்சும் சிவன் உபதேசித்த தாரகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது. அம்மை சற்றே கண் அயர்ந்தார். கண்ட சிவன் தாரகத்தின் பெருமை அறியாதவள்போல் நீ உறங்கினை; அதன் பெருமையைப் பார் என்று உமையிடம் கூறிவிட்டுக் கரு உற்றிருந்த மீனைக் கருணையோடு நோக்கினார். மீன் வயிற்றிலிருந்து அழகிய ஆண் குழந்தை ஒன்று வெளிப்பட்டு அம்மை அப்பரை வணங்கி நின்றது. சிவன் அக்குழந்தைக்கு மச்சேந்திரன் என்று

www.saivamonline.com

பெயர் சூட்டினார். நாடெங்கும் சென்று நமது நெறிபரப்பிச் சித்தாடி மக்கள் துயர் தீர்த்து வருக என்று அருள்பாலித்தார். மச்சேந்திரர் தோன்றிய வரலாற்றை அபிதான சிந்தாமணி இவ்வாறு எடுத்துரைக்கிறது.

மீன் வயிற்றில் தோன்றிச் சிவபரம்பொருளின் பரம கருணையைப் பெற்று, மச்சேந்திரர் ஓயாது உணர்ந்த சிவஞானம் கை வரப் பெற்றார். அம்மை அப்பர் நினைவோடு நாடெங்கும் சுற்றித் திரிந்தார். மலை முகடுகளிலும் காடுகளிலும் கடுந்தவம் புரிந்தார். சிவனருளால் அழியாத திருமேனியும், இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதமும், மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவத் திறமும், அளவற்ற சித்துக்களும் கைவரப் பெற்றார். உலகத்தார் கண்களுக்குத்'தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாது தாம் இருக்குமிடம் தேடி வந்து எவரேனும் அன்னமிட்டால் உண்டு. சிவஞானியாகச் சிவயோகியாகச் சிவ சித்தராக மச்சேந்திரர் வாழ்ந்திருந்தார்.

ஒரு முறை மச்சேந்திரர் கொல்லி மலை விடுத்துப் பொதியமலைக்குப் புறப்பட்டார். வழியில் சம்பல் பட்டி என்ற சிற்றூரில் வாழ்ந்திருந்த சிவராம தீட்சிதர் என்பாரின் மனக் குறையை நீக்க அவர் துணைவிக்குத் திருநீறு அளித்து அவள் அதனைக் குப்பையில் வீசக் குப்பை மேட்டிலிருந்து ஒரு குழந்தையை வரவழைத்துச் சித்தாடல் நிகழ்த்தினார். மச்சேந்திரருடைய மாணாக்கருள் முதன்மையானவர் கோரக்கர். கோரக்கருக்கு உபதேசித்த பின் வடநாடு சென்று பல ஆண்டுகள் தங்கித் தவமியற்றிப் பின்னர் மலையாள நாடு திரும்பினார்.

மச்சேந்திரரின் சித்தாடல் கண்டு மயங்கிய மலை நாட்டு இளவரசி பிரேமளா என்பாள் அவரை விரும்பி மணம் பூண்டாள். அவர்கள் இல்லறத்தில் மீனநாதன் பிறந்தான். தம் ஞானாசிரியரை இல்லறக் கட்டுக்களிலிருந்து வெளிக் கொணரக் கோரக்கர் பலவாறு முயன்று இறுதியில் வெற்றி பெற்றார். மச்சேந்திரர் 300 ஆண்டுகளும் 62 நாள்களும் இப்பூவுலகில் வாழ்ந்திருந்தார் என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது.

ஆங்கிலத்தில் திரு குப்தா என்ற பஞ்சாப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரால் மச்சேந்திரர் கோரக்கர் உரையாடல் என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வேதாந்தத் தத்துவ ஆய்வாக நடையிடுகிறது. மச்சேந்திரரின் திவாகரம் எண்ணூறு பல்வேறு சித்தர் நெறிகளை விரித்துரைத்து நிறைகிறது. இவரது வைத்தியம் எண்ணூறு போகர் நெறிமுறையில் வந்த அரிய சித்த மருத்துவக் குறிப்புகளை வழங்குகின்றது. சித்தர் சிலர் இல்லற நெறியிலும் வாழ்ந்தனர் என்பது

www.saivamonline.com

மச்சேந்திரர் வரலாற்றால் உணர முடிகிறது. இனி வரும் ஆய்வுகளால் மச்சேந்திரர் வரலாறு மேலும் ஒளிபெறும் என்று நம்பலாம்.

## 16. காகபுஜண்டர்

இன்று தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் நாடி சோதிடம் என்ற கலையின் மூலவராகவும், முதல்வராகவும் திகழ்பவர் காகபுஜண்டர். நவநாதசித்தர்கள் பதினெண் சித்தர்கள் என்ற பட்டியல்களில் இவர் குறிப்பிடப்படவில்லை. இந்திய நாடு தழுவிய ஓர் அருளாளராக, வியப்பூட்டும் பல அனுபவங்களை அறிந்து அறிவிக்கவல்ல ஞான மூர்த்தியாகச் சித்தாடல்கள் வல்ல ஓர் இருடியாக, அற்புத ஞானம் நிறைந்த உபதேசங்களை வழங்கிய குருமூர்த்தியாகக் காகபுஜண்டர் திகழ்கிறார்.

வடபாரதத்தில் இவர் அறியப்பட்ட அளவு தென் தமிழ் நாட்டில் இவரை மக்கள் அறிந்திருக்கவில்லை. இந்தி மொழியில் இராமாயணம் எழுதிய துளசிதாசர், தம் இராமாயணத்தைப் படைக்கப் 'புசுண்ட இராமாயணம்' என்ற ஒரு நூலை முன் மாதிரியாகக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதனை இயற்றியவர் காகபுஜண்டரே ஆவார்.

## காகபுஜண்டர் பெருவாழ்வு

வடமொழியில் ஞானவசிட்டம் என்ற ஒரு நூல் உண்டு. அது வசிட்ட மாமுனிவரால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்ட ஓர் ஆத்மபோத நூல். அந்நூலுள் ஒரு கதையாகக் காகபுஜண்டர் வரலாறு இடம் பெற்றுள்ளது. மேற்குறித்த நூல் தமிழில் 'ஞானவாசிட்ட அமல இராமாயணம்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனுள் 29 ஆவது கதையாக இவர் வரலாறு 'பசுண்டன் கதை' என்ற தலைப்பில் 99 பாடல்களில் விரித்துரைக்கப் பட்டுள்ளது.

காகபுஜண்டர் பாடியனவாகத் தமிழில் காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற ஒரு நூலும், தனிப்பாடல்களாக 144 பாடல்களும் 16 குறள் வெண்பாக்களும் கிடைத்துள்ளன. மேலும் இவர் இயற்றியனவாக வைத்தியவாத யோகஞானம், வைத்திய வாதயோக சூத்திரம், மெய்ஞானவிளக்கம் என்னும் மூன்று நூல்களும் குறிக்கப்பட்டுள்ளன. நூல்களுள் இவர் காக வடிவனராகவும், பாம்பு (புஜண்டம்) வடிவினராகவும் குறிக்கப்பட்டுள்ளார். காகம் என்ற வடசொல் அவிட்ட விண்மீனைக் குறிக்கும். எனவே அந்நாளில் பிறந்த பாம்பின் பெயர் பூண்ட ஒரு சித்தராகவே இவர் இருத்தல் கூடும்.

www.saivamonline.com

## துளசி ராமாயணக் குறிப்புகள்

துளசி இராமாயணத்தில் தலையாய நான்கு உரையாடல்களும் அடங்கும். இதில் மூன்றாவது உரையாடல் சிவனுக்கும் காகபுஜண்டருக்கும் கருடனுக்கும் இடையேயும் நிகழ்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளது. துளசி இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தில் காகபுஜண்டர் வரலாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

சிவபிரான் முன்னிலையில் மதுவுண்டு அன்னங்கள் இரண்டு களித்திருந்தன. சிவன் அவற்றை உற்று நோக்க, அவற்றிடம் சிவகலை காக உருவத்துடன் பதிந்தது. பெண் அன்னம் இருபத்து ஒன்றாவதாகப் பொரித்த முட்டையிலிருந்து காகபுஜண்டர் தோன்றினார் என்று ஒரு குறிப்பு அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது. இவர் மனைவி பெயர் பகுளாதேவி. இவர் குமாரர் உரோமரிஷி என நாடி நூல்களில் குறிப்புகள் உள்ளன. பலகற்பகாலங்களையும் கடந்து பல யுகங்கள் மண்ணில் வாழ்ந்தவர் இவர்.

## அழகிய குறள் வெண்பாக்கள்

பல யுகங்கள் காகபுஜண்டர் உயிர் வாழ்ந்தமைக்குரிய மூல காரணங்களை அவரே குறிப்பிடுகிறார். சென்றதையோ, வரப்போவதையோ நான் ஒருக்காலும் நினைப்பது கிடையாது. நடப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பேன், என் மனம் நன்மையை அடையும்போது மகிழ்ச்சி அடைவதில்லை. தீமை ஏற்படும்போது துன்புறுவது இல்லை. எவன் உறவு? எவன் அந்நியன்? என்று நான் வேறு பிரித்துப் பார்ப்பதில்லை. ஆசை முதலான மனத்துன்பங்களுக்கு நான் இடம் கொடுப்பதில்லை.

''சித்தர் பதினெண்மர் செங்கையில் தோன்றாத அத்தனருள் புசுண்டன்யான்.'' ''நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாம் நிற்க ஆத்துமத்தில் ஆனந்தமாம்'' ''உலகமே மாயமென உன்மனதில் கண்டு நலமாக நாதனடி நம்பு.'' ''உலகியல் அறிந்தோர் ஒருநாளும் மாளார் பல நினைவை விட்டு நீ பார்.'' ''கண்டோரும் சொல்லார் கருத்தால் பெரியோரைத் தொண்டு செய்து பெற்ற சுகம்.''

## அறம் உரைத்த பண்பு

சித்தர் நூல்கள், கடவுள் பத்திமை குறித்த வழிகாட்டுதல்களில் அதிகம் ஈடுபாடு கொள்வதில்லை. அவற்றுள் அறம் உரைக்கும் பகுதிகள் பல உள்ளன. காகபுஜண்டர்,

www.saivamonline.com

**"தாம் என்ற உலகத்தில் மனிதரோடே**
**சஞ்சாரம் செய்யாதே தனித்து நில்லே**
**ஓமென்று ஊண்மிகுத்து உண்டிடாதே**
**ஓரமாய் வழக்கதனை உரைத்திடாதே**
**ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே**
**ஆயச மாகவுந்தான் திரிந்திடாதே**
**காமப்பேய் கொண்டவனோ டிணங்கிடாதே**
**காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே."**

என ஒரு பாடலில் நல்லறங்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளார்.

## பெருநூல் காவியம்

இவரது பெருநூல் காவியம் ஆயிரத்தில், கருவில் இருக்கும் குழந்தை ஆணா - பெண்ணா என்பதைக் கண்டறியும் முறை குறிக்கப்பட்டுள்ளது. கனாக்களின் தோற்றம் மற்றும் பயன் உரைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுச் சித்தர்கள் பலரின் பெயர்களும், அவர்களோடு இவருக்கு இருந்த தொடர்புகளும் இவர் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சித்தர்களுள் அகத்தியரை இவர் பெரிதாக மதிக்கிறார். மனத்தியல்பு நுட்பமாக விரித்துரைக்கப்பட்டுள்ளது. கருடன் இவரை நோக்கி எழுப்பிய வினாக்களும், இவர் தந்த விடைகளும் பெரும் சிறப்புக்குரியன.

## காகபுஜண்டர் ஆலயம்

காகபுஜண்டருக்கான ஆலயம் ஒன்று காரைக்காலை அடுத்த திருமலைராயன் பட்டினத்தில் நற்பவீயானந்த அம்பாஜீ என்ற காகபுஜண்டர் அருள் பெற்ற ஒருவரால் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் சிதம்பரத்தை அடுத்த ஆச்சாள்புரம் சிவாலயம் ஒன்றில் இவர் திருமேனி உள்ளது. நாடி சோதிடர் பலரும் காகபுஜண்டர் நாடியையே மூல நூலாகக் கொண்டு பலன் உரைத்து வருகின்றார்கள்.

*(காகபுஜண்டரின் விரிவான வரலாறு - கட்டுரை ஆசிரியரால் ஆராய்ந்து எழுதப்பட்டு 217 பக்கங்கள் கொண்ட நூலாக 2001 இல் வெளியிடப்பட்டுள்ளது.)*

## 17. பாம்பாட்டிச் சித்தர்

"நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே, நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே" என்று பாம்பை முன்னிலைப்படுத்தி

www.saivamonline.com

ஆடுமாறு வேண்டிப்பாடிய ஒரு சித்தர் பெருமகனாரைத் தமிழ்நாட்டு மக்கள் 'பாம்பாட்டிச் சித்தர்' என அழைத்தனர். பதினெண் சித்தர்கள் என்ற தொகுப்பில் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது. இவர் கார்த்திகைத் திங்கள் மிருக சீரிட விண்மீனில் பிறந்தார். இவர் பாண்டி நாட்டில் பிறந்து சட்டை முனியிடம் தீட்சை பெற்றவர். இவர் பிறந்த தலம் திருக்கோகரணம் என்பர். கொங்கு நாட்டிலுள்ள மருத மலையில் நெடுநாள் வாழ்ந்திருந்தார். அங்கே இவருக்கு நினைவிடங்கள் இன்றும் உள்ளன. சங்கரன் கோயிலில் அன்னை கோமதியை இவரே பிரதிஷ்டை செய்தார். சங்கரன் கோயிலில் கன்னி மூலையில் புளியங்குடி சாலையிலுள்ள புன்னை வனத்தில் இவர் நீருவிகர்ப்ப சமாதி கூடினார். இவர் இம்மண்ணுலகில் 123 ஆண்டு 4 நாள்கள் வாழ்ந்திருந்தார். பாம்பாட்டிச் சித்தர் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்.

## பாடல் அமைப்பு

பாம்பாட்டிச் சித்தரின் கொள்கைகளை அறிந்து கொள்ள அவர் பெயரில் வழங்கும் 129 தனிப்பாடல்களே துணையாக உள்ளன. ஞான சூத்திரம், பெரியஞானக் கோவை எனச் சிலர் அவர் பாடல்களை வகைமைப்படுத்தி உள்ளனர். அவர் பாடல்களைக் குரு வணக்கம், சித்தர் வல்லபம், பொருளாசை விலக்கம், பெண்ணாசை விலக்கம், உடலின் கணம், அகப்பற்று நீக்கல் என்றெல்லாம் உள்தலைப்பிட்டுச் சிலர் பதிப்பித்துள்ளனர்.

இப்பகுப்பு மேலெழுந்தவாரியாகச் செய்யப்பட்டுள்ளது. இவர் பாடல்களில் அறிவுநிலை, உடல் நிலை, ஒருமைப்பாடு, சாதி பேதங்களைக் கண்டித்தல், செல்வம் நிலையாமை, இழிந்த காமத்தை வெறுத்தல், பேரின்ப வழிகாட்டல் என்பன சிறப்பாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

## கொள்கைகள்

பாம்பாட்டிச் சித்தரின் கொள்கைகளில் குறிக்கத்தக்கன சில உள்ளன. சிவனே முழுமுதற்கடவுள். அவன் கூத்தனாகக் காட்சி தருகிறான். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவன். அவனை அடையும் ஒரே மார்க்கம் அன்பு மார்க்கமே. அன்பு இல்லாதாருக்கு வீடு பேறு இல்லை. கோயில் வழிபாடு, திருத்தல யாத்திரை முதலியவற்றால் இறைவனை அடைய முடியும் என்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை. வேதம்,

www.saivamonline.com

சாத்திரம், தந்திரம், புராணம், ஆகமம் என்பன வீணானவை. உலகப் பற்றும் ஆசையும் ஒழிக்கப்பட வேண்டுவன.

இவர் பாடல்கள் எளிய நடைகொண்டவை. சொல் நயம் மிக்கவை. எளிய உவமைகளால் அமைந்தவை. ஆழ்ந்த தத்துவச் செறிவு கொண்டவை. ஒவ்வொருவர் உடலின் உள்ளேயும் பாம்பு வடிவமாக மண்டலித்துள்ள குண்டலினி என்னும் சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்ம தரிசனத்தைக் காண வைப்பதே இவர் நோக்கம். ஆடு பாம்பே என இவர் எழுப்புவது குண்டலினி என்னும் மகாசக்தியையேயாகும்.

## சிவமும் - குருவும்

இறைவன் எல்லாப் பொருள்களிலும் இணைந்தே உடனாக நிற்கிறான் என்பதைப் பாம்பாட்டிச் சித்தர்

**''பொன்னில் ஒளிபோல எங்கும் பூரணமதாய்ப்**
**பூவின்மணம் போலத் தாங்கும் பொற்புடையதாய்**
**மன்னும்புல உயிர்களில் மன்னிப்பொருந்தும்**
**வள்ளல் அடி வணங்கிநின்று ஆடுபாம்பே''**

எனப் பாடுகின்றார். குருவின் துணை பெற்றே சிவன் தாள்மலரை அடைய முடியும் என்பது இவரது திடமான கொள்கை.

**''உள்ளங்கையில் கனிபோலஉள்ளபொருளை**
**உண்மையுடன் காட்டவல்ல உண்மை குரு''**

என்றும்,

**''போதப் பொருள் இன்னதென்று போதனை செய்யும்**
**பூரண சற்குருதாள் கண்டு ஆடுபாம்பே''**

என்றும் குரு வழி பெறலாகும் ஞானம் இவரால் விளக்கப்படுகிறது.

## சித்தாடல் பதிவுகள்

சித்தர்கள், சிவனருளும், குருவருளும் கைவரப் பெற்றுச் சித்தாடல் நிகழ்த்திய அற்புதமானவர்கள். ''எட்டு நாகம் தம்மைக் கையில் எடுத்தே ஆட்டுவோம்'', ''ஏழுமலைகளைப் பந்தாய் எடுத்து எறிகுவோம்'', ''செப்பரிய மூன்றுலகும் செம்பொன் ஆக்குவோம் : செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்'' என்பவை சில எடுத்துக்காட்டுகள். சித்தர்கள் நிகழ்த்தவல்ல சித்துக்கள் சிலவற்றை இவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

www.saivamonline.com

**"நடுவாக ஆதிசேடன் தன்னை நட்டும்**
**நான்கு திக்கும் மந்திரித்த நீறுதூவும்**
**கடுவிடம் கக்கலே அக்கட் செவிகளைக்**
**கையில் எடுத்து ஆடுங்கள் சித்தனாரே."**

*மனமே! உலகியல் பொருள்கள் கூடவருவதில்லை. சிவன்பதம் நாடும் பாக்கியத்தை மேற்கொள் என்று அறிவுறுத்துகின்றார். "நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம் வருவன்வரும் போது நாடிவருமோ?" என வினாத் தொடுத்து, "கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ? கூத்தன்பதம் குறித்து நின்று ஆடு பாம்பே" எனச் சிவன் திருவடிகளில் நாட்டத்தை விதைக்கிறார். பெண்ணாசை இறை நினைவை அழிக்கும் என்பதை, "நெக்கு நெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில் நினைப்பார் நிமலனை நினையார் என்று ஆடுபாம்பே" என்று அடையாளப்படுத்துகிறார்.*

## சீர்திருத்தவாதி

*உடல் என்பது யாது? மரணத்துக்குப் பின் இதனால் ஒரு சிறுபயனும் இல்லை என்கிறார் சித்தர்.*

**"ஊத்தைக்குழிதனிலே மண்ணை எடுத்தே**
**உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே**
**வாய்த்த குயவனார் அவர் பண்ணு பாண்டம்**
**வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே."**

*புளியம்பழமும் அதன் ஒடும் போலச் சுற்றத் தொடர்புகளில் இருந்து நீங்க வேண்டும். அன்பற்றவனுக்கு வீடு பேறு என்பது என்றும் இல்லை. கள்ளப் புலன்களைக் கட்டறுத்தால் கால காலனைக் காணலாம். மூடர்களைவிட்டு அஞ்ஞானம் என்றும் நீங்காது. நிறைவாக.*

**"சமயபேதம் பலவான சாதி பேதங்கள்**
**சகத்தோர்க்கே அல்லாது சற்சாதுக்களுக்கோ?**
**சமயத்தில் ஏறினபேர் சித்தம் மாறுமோ**
**சித்தர் சித்தாந்தம் தேர்ந்து ஆடுபாம்பே"**

*என்கிறார்.*

*பாம்பாட்டிச் சித்தர் சித்தர் சித்தாந்தம் தேடிக் காணப் பணிக்கிறார். ஒரு சீர்திருத்தவாதியாக நின்று,*

www.saivamonline.com

**"சாதிப் பிரிவிலே தீயை மூட்டுவோம்**
**சந்தை வெளியிலே கோலை நாட்டுவோம்"**

எனச் சாதியத்தைச் சாடி மனிதகுல ஒருமைக்கு அழைப்பு விடுக்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

## 18. பட்டினத்தடிகள்

சைவத் திருமுறைகளுள் ஒன்றாகிய பதினொராம் திருமுறை 12 அருளாளர்களால் பாடப் பெற்ற 40 சிற்றிலக்கியங்களின் தொகுப்பாகும். பூம்புகாரை அடுத்த திருவெண்காட்டு இறைவர் திருநாமம் தாங்கிய திருவெண்காட்டு அடிகள் என்பவர் 12 அருளாளர்களுள் ஒருவர். கடற்கரை நகரங்களைப் பட்டினம் என்பது வழக்கு. பிற்காலத்தில் இவரைப் பட்டினத்தார் என்றும் பட்டினத்துப் பிள்ளையார் என்றும் பட்டினத்து அடிகள் என்றும் குறித்தனர்.

பதினொராம் திருமுறையில் திருவெண்காட்டு அடிகள் அருளியனவாக ஐந்து சிற்றிலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது என்பன அவை. பிற்காலத்தில் இவர் பெயரால் யாரோ சிலர் பாடிய பாடல்கள் பட்டினத்தார் பாடல்கள் என்ற பெயரில் தனிப்பாடல் திரட்டில் இணைக்கப்பட்டுள்ளன. இவர் கி.பி.10ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருந்தவர். தனிப்பாடல் திரட்டில் வரும் ஏகரித்து, ஒப்பார், ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, வேட்டி, வேலை மினக்கிட்டு போன்ற பிற்காலச் சொற்களின் ஒன்றுகூட திருவெண்காடர் பாடல்களில் காணப்படவில்லை.

பிற்காலத்து இயற்றப்பட்ட பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் இவர் வரலாறு பின்வருமாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர். சிவபக்தர். பெரும்பொருள் ஈட்டி வாழ்ந்தவர். திருவிடைமருதூர் இறைவன் மருதவாணர் என்னும் பிராமணச் சிறுவராகி, தம் அன்பர் சிவசருமர் என்பவரைத் தம்மைப் பட்டினத்தாரிடம் விற்றுப் பொருள் பெறுமாறு பணித்தார்.

மருதவாணரை விலைக்கு வாங்கிய பட்டினத்தார் அவரைத்தம் காதல் மகனாகவே வளர்த்து வணிகத்தில் பழக்கினார். வணிகத்தில் சிறந்த மருதவாணர் வெளிநாடு சென்று பொருளீட்டி, திருக்கோயில்

www.saivamonline.com

பணிகளுக்கும், சிவனடியார்களுக்கும் வழங்கினார். எஞ்சிய பொருளுக்கு எரு மூட்டைகளை வாங்கிக் கொண்டு கப்பலில் தாயகம் திரும்பினார்.

கப்பல் கடலில் திசைமாறிய போது எரு மூட்டை வாங்கியமை பற்றி இகழ்ந்துரைத்த சக வணிகர்கள், சோறு சமைக்கப் பற்றுச்சீட்டு எழுதிக் கொடுத்து எரு மூட்டைகளைக் கடனாகப் பெற்றனர். பட்டினத்தார் ஓர் எரு மூட்டையை உடைக்க உள்ளே மாணிக்க மணிகள் இருந்தன. அடுப்பெரிக்கப் பயன்படுத்திய வணிகர்கள் அதைக் கண்டு மனம் வருந்தினர்.

பண ஆசைமிக்கவராய் எல்லா எரு மூட்டைகளையும் உடைத்த பட்டினத்தார், அவற்றுள் மாணிக்கக் கற்கள் இல்லாமையை கண்டு மருதவாணரைத் தண்டிக்கக் கருதித் தனி அறையில் பூட்டி வைத்தார். அன்புமிக்க, பட்டினத்தார் மனைவியார் அறையில் சென்று வளர்ப்பு மகனைக் காண முற்பட்டபோது மருதவாணர், உமை, முருகனோடு சோமாஸ்கந்தராய் அவ்வம்மைக்குக் காட்சி தந்தார். மருதவாணர் பெருமை உணர்ந்து பணிந்த பட்டினத்தாருக்கு உலகப் பற்று அறப் பல உபதேசங்களைச் செய்தார் மருதவாணர்.

காதற்ற ஊசியை, இழை பிரித்த நூலுடன் பட்டுத் துணியில் மூடி, ஒரு பெட்டியில் வைத்து உமது கணவருக்கு உரிய பொருள் இதுவாகும். கொடுப்பீர் எனக் கொடுத்து மறைந்தார். பட்டினத்தாருக்கு ஞானம் பிறந்தது. பற்றுகள் சிதறின.

**''பாரனைத்தும் பொய் எனவே**
**பட்டினத்துப் பிள்ளையைப் போல்**
**யாரும் துறத்தல் அரிது அரிது''**

என்கின்றார் தாயுமானவர்.

தமது மாளிகையைத் துறந்து ஊரம்பலம் சேர்ந்தார் பட்டினத்தார். நாடாளும் மன்னன் அவரைச் சந்தித்து, ''நீர் துறவடைந்து பெற்ற பயன் யாது?'' என வினவினான். நீ நிற்கிறாய். யான் அமர்ந்திருக்கிறேன். இதுவே பயன் என்றார் பட்டினத்தார். மன்னன் தாழ்ந்தான். பல இல்லங்களிலும் இவர் பிச்சை ஏற்று உண்பதைக் கண்டு அவமானமடைந்த உறவினர் அவர் தமக்கை வழி, நஞ்சு கலந்த அப்பத்தை அவருக்கு உண்ணக் கொடுத்தனர்.

''தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' எனக் கூறி, அவ்வப்பத்தை இறப்பிற் செருகினார். வீடு தீப்பற்றி எரிந்தது.

www.saivamonline.com

அன்னை இறந்த பொழுது சில பாடல்கள் பாடி அவர் சிதைக்குத் தீ மூட்டினார். தல யாத்திரை மேற்கொண்டு அருட் பனுவல்களைப் பாடிப் பரவினார். இவர் தலைமைக் கணக்கர் சேந்தனாரை மன்னன் சிறைப்பிடித்தபோது ''மத்தளைத் தயிருண்டானும்'' என்ற பாடலைப் பாடச் சிவ கணங்கள் அவரைச் சிறை மீட்டுப் பிள்ளையார் முன் நிறுத்தினர்.

தில்லையில் அன்னை சிவகாமி உணவளித்து அவர் பசி நீக்கி அருளினாள். திருவொற்றியூரில் சிறுவர்களுடன் ஒரு மணற்குன்றில் மறைந்து மற்றொன்றில் வெளிப்பட்டு வியப்பூட்டினார். நிறைவாகச் சிறுவர்களை அழைத்துத் தம்மை மணலால் மூடச் சொன்னார். பின் வெளிப்படவே இல்லை. மணலை அகற்றிப் பார்க்கச் சிவலிங்கமாகக் காட்சி தந்தார். பத்ரகிரியாரை இவர் நண்பர் என்று தொடர்புபடுத்திக் கதைகள் கூறப்படுகின்றன.

பேய்க்கரும்பு ஒன்று தித்திக்கும் இடமே நின்முத்தித்தலம் என்று சிவன் வழங்கியதாகவும் கதை உண்டு. பட்டினத்தாருக்கும் திருவண்ணாமலை தாசி ஒருவருக்கும் பிறந்தவரே அருணகிரி என்று கதை கட்டியவர்களும் உளர். இவர் பெயரால் பிற்காலத்தில் பாடப்பெற்ற தனிப்பாடல்கள் பொருட்சிறப்பு நிறைந்தனவாய் நிலையாமை கூறிச் சாதி பேதங்களைக் கடிந்து நிற்கின்றன. அவை தனியே ஆராயத்தக்க சிறப்பு மிக்கன.

''ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்ரகிரி பண்புரைப்ப தெந்நாளோ!''

- தாயுமானவர்.

## 19. பத்ரகிரியார்

தமிழ்நாட்டுச் சித்தர் வரலாற்றில் பத்ரகிரியாருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. பட்டினத்தாரையே ஞான குருவாகக் கொண்டு அவருக்கும் முன்னாகவே சிவனடி எய்தினார். பத்ரகிரியார் பாடிய மெய்ஞ்ஞானப் புலம்பல் தமிழில் பெரிதும் சிறப்புற்று விளங்குகின்றது. துளுவ நாட்டின் மாமன்னர் பத்ரகிரியார். உஞ்சேனை என்று குறிக்கப்படும் உஜ்ஜைனியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். சிறந்த சிவ பக்தர். இத்தலத்தில் அமைந்துள்ள சிவாலயம் மாகாளேஸ்வரம் எனப்படும். இத்தலம் பற்றிய விரிவான செய்திகள் துளசிராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன.

www.saivamonline.com

பட்டினத்தடிகள் தம் தாய் மறைந்த பிறகு அவருக்குச் செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளை இயற்றிவிட்டுப் பாரத நாடெங்கும் தல யாத்திரை மேற்கொண்டார். உஞ்சேனை வந்து மாகாளரை வணங்கிவிட்டு, ஊருக்கு வெளியே தனியிடத்தில் இருந்த காட்டுப் பிள்ளையார் கோயில் சந்நிதியில் நிட்டை கூடித் தியானத்தில் அமர்ந்திருந்தார்.

ஓரிரவு பத்ரகிரியார் அரண்மனையில் கொள்ளை அடித்துத் திரும்பும் கள்வர்களுள் ஒருவன், காணிக்கையாக ஒரு முத்துமாலையைக் காட்டுப்பிள்ளையார் மீது வீச, அது நிட்டையில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகள் கழுத்தில் வந்து வீழ்ந்தது. பட்டினத்தார் நிட்டையில் இருந்ததால் அதை உணர்ந்திலர். கள்வர்களைத் தேடிவந்த பத்ரிகிரி மன்னனின் சேவர்கள், அரசனுக்குச் சொந்தமான முத்து மாலையோடு அமர்ந்திருக்கும் பட்டினத்தடிகளைக் கள்வர் எனக்கருதிச் சிறைப் பிடித்து மன்னர் முன் கொண்டு போய் நிறுத்தினர். மன்னன் பட்டினத்தாரைக் கழுவிலேற்ற ஆணையிட்டான். கழுமரத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்கக் காவலர்கள் முயன்றபோது பட்டினத்தார் சிவனை நினைத்து,

**"என் செயல் ஆவது ஒன்றுமில்லை இனித் தெய்வமே**
**உன் செயலே என்று உணரப் பெற்றேன்."**

என்று பாடினார். கழுமரம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று. பத்ரகிரியார் இதைக் கண்டு வியந்து தவத்தின் பெருமை உணர்ந்து அரசபோகங்களை எல்லாம் துறந்தார். துறவு பூண்டு பட்டினத்தடிகளையே ஞானகுருவாகக் கொண்டு அவருடன் தல யாத்திரை மேற்கொண்டார்.

பட்டினத்தார், பத்ரகிரியாரைத் திருவிடைமருதூர் செல்லுமாறு பணித்தார். பத்ரகிரியார் திருவிடைமருதூர்ச் சேர்ந்து, சிவனை வழிபட்டு மேற்குக் கோபுர வாசலில் அமர்ந்து பிச்சை ஏற்றுத் தாமும் உண்டு, தம் குருநாதருக்கும் வழங்கி வாழ்ந்திருந்தார். ஒரு நாள் பத்ரகிரியார் பிச்சை ஏற்றுக் குருவுக்கு வழங்கித் தானும் உண்டிருந்தபோது, ஒரு பெட்டை நாய் அவர் அருகே வந்து நின்று வாலை ஆட்டியது. அவர் அதற்கு எஞ்சிய உணவை இட, அது அவரை ஒட்டிக் கொண்டு நன்றி பாராட்டித் தொடர்ந்தது.

சிவபெருமான் ஒரு நாள் முனிவர் வேடத்தில் திருவிடைமருதூர் ஆலயக் கிழக்கு வாசலில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகளிடம் சென்று "ஐயா என் பசிக்கு அன்னமிடுவீர்" என்று வேண்டி நின்றார். பட்டினத்தார்,

www.saivamonline.com

''நானோ கோவணம் கூட மிகை என்று கருதி வாழ்பவன். என்னிடம் சோறு ஏது? மேற்குக் கோபுர வாசலில் ஒரு சம்சாரி வாழ்கிறான். அவனிடம் சென்று கேளும்'' என்று நகையாடிக் கூறினார். (சோற்றுச் சட்டி என்ற ஒரு பொருளின் மேல் பற்றும் - நாய் மீது பாசமும் கொண்டிருந்த பத்ரகிரியாருக்குப் பூரணத் துறவு சித்திக்கவில்லை என்பதால் அவரைச் சம்சாரி என்றார்).

சிவமுனிவர் பத்ரகிரியாரிடம் கை நீட்ட, உண்மை உணர்ந்த அவர் தம் குருநாதரின் உள்ளக் கருத்தறிந்து சோற்றுச் சட்டியை நாய் மீது போட்டு உடைக்கச் சட்டியும் உடைந்தது. நாயும் மாண்டது. ஞானியர் எச்சில் உண்ட புண்ணியப் பேற்றால் அப்பெண் நாய் காசிராஜன் மகளாகப் பிறந்தது. பற்றுக்கள் யாவையும் துறந்த பத்ரகிரியார், ''மெய்ஞ்ஞானப் புலம்பல்'' முதலிய பாடல்களைப் பாடியும், நிட்டை கூடியும் வாழ்ந்திருந்தார்.

காசிராஜன் மகள் மணப்பருவம் எய்த மன்னன் திருமண ஏற்பாடு செய்தான். மறுத்த அப்பெண் ''நான் எவருக்கும் உரியவள் அல்லள். திருவிடைமருதூரில் இருக்கும் என் குருநாதரிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பியுங்கள்'' என்று உறுதிப்படக் கூறினாள். காசிராஜன் தன் மகளைப் பத்ரகிரியார் முன் கொண்டு சேர்த்தான். அவள் பத்ரகிரியாரைப் பார்த்த் தம் பழம்பிறப்பு உணர்த்தி, அடி நாய் மீண்டும் உங்களை நாடி வந்திருக்கிறேன் என்று கூறிப் பணிந்தாள். பத்ரகிரியார் அவளைப் பட்டினத்தாரிடம் கொண்டு சென்று ''குருவே - உம் எச்சில் உண்ட இந்நாய்க்குப் பிறவி நோய் எவ்வாறு வந்தது?'' என்று வினவிப் பணிந்தார்.

பட்டினத்தார் மருதீசர் திருவருளைச் சிந்தித்தார். உடனே ஒரு பெரும் ஜோதி தோன்றிற்று. அதில் அப்பெண்ணும், பத்ரகிரியாரும் புகுந்து மறைந்தனர். இருவரும் முத்தி பெற்றனர். பத்ரகிரியாரின் மெய்ஞானப் புலம்பல் காப்பு ஒன்றும், 232 கண்ணிகளும் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கண்ணியும் எக்காலம்? என்று நிறைவுறுவதால் இதனை எக்காலக் கண்ணி என்று கூறுதல் வழக்கு. சிவனருள் நாட்டம், உலக நிலையாமை, பற்று அற வேண்டுதல், துறவின் சிறப்பு, குருவின் பெருமை முதலியன இக்கண்ணிகளிலே நிறையப் பேசப்பட்டுள்ளன. முத்தி தரும் ஞான மொழியாம் புலம்பல் என்று உரைக்கும் காப்புக் கொண்டு இந்நூல் வீடு பேற்றின் வாயில் என்பதை உணர முடிகிறது. தாயுமானாரின் கண்ணிகளுக்குப் பத்ரகிரியார் முன்மாதிரியாகத் தெரிகிறார்.

www.saivamonline.com

**"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்**
**தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?"**

*அந்தக் கரணங்களுள் ஒன்றாகிய ஆங்காரத்தைக் கட்டுக்குள் வைத்து ஐம்புல ஆசைகளையும் எரித்தால் மோனம் சித்திக்கும் என்கிறது கண்ணி. நான் என்ற தன் முனைப்பை வாழும் காலத்தில் விட்டொழித்தால் மறுபிறவி இல்லை என்பதை,*

**"ஊன் நிறைந்த காயம் உயிர் இழந்து போகுமுன்னம்**
**நான் இறந்து போக இனி நாள் வருவது எக்காலம்?"**

*உள்ளத்தேடலில்தான் இறைக்காட்சி சித்திக்கும் என்பதை,*

**"உள்ளம் அறியாது ஒளித்திருந்த நாயகனைக்**
**கள்ள மனம் தெளிந்து காண்பதினி எக்காலம்?"**

*என்கிறார். உலகப் பற்றுக்களைத் தகர்க்க ஒரு வழிகாட்டுவார் போல,*

**"மனதை ஒரு வில்லாக்கி வான் பொறியை நாணாக்கி**
**எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?"**

*என நயம்படப் பேசுகிறார். நுட்பமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல். வாய்ப்பு அமையும் போது அதனை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தலாம். இந்நூல் சிவஞானக் கருவூலம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.*

## 20. சிவவாக்கியர்

*தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்புடைய ஒருவர் சிவவாக்கியர். அன்னை வயிற்றிலிருந்து உலகில் வந்துதித்த உடனேயே சிவ என்ற நாமத்தை உச்சரித்தவர் இவர். உலகம் அந்த மகாவாக்கியத்திற்குச் சொந்தக்காரர் என்ற பொருளில் இவரைச் சிவவாக்கியர் என்று அழைக்கலாயிற்று. இவர் அவ்வப்போது அருளிய ஞானக் கருவூலங்கள் திரட்டப்பட்டுச் சிவவாக்கியம் என்று பெயர் சூட்டப் பெற்றன.*

*இன்று சிவவாக்கியத் தொகுப்பில் 524 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எல்லாம் தேன் பிலிற்றும் தத்துவக் கவிதைகள். அழகுணர்ச்சி மிக்க சிவனருட் செல்வங்கள். பிரமிப்பூட்டும் பூடகப் புதிர்கள். சிவவாக்கியர் வேதியர் குலத்தவராகத் தெரிகிறார். எங்கே பிறந்தார்? பெற்றோர் யார்? காலம் யாதென்பன ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் தமிழ்நாட்டுக்காரர். தமிழர், தமிழ்ச்சித்தர், சிவநெறி நின்றவர் என்பதில் குழப்பம் ஏதுமில்லை.*

www.saivamonline.com

ஒருமுறை இவர் தமிழ்நாட்டிலிருந்து காசியாத்திரை மேற்கொண்டார். பிரம்மச்சாரி ஆயினும் இல்லற நாட்டம் இருந்தது. வழியில் சித்தர் ஒருவரைச் சந்தித்தார். அவரோ செருப்புத்தைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். வாய் பேசாத அச்சித்தர் பெருமான் சிவவாக்கியருக்குச் சில காசுகள் வழங்கி, ஓர் உண்ண உதவாத பேய்ச் சுரைக்காய் ஒன்றையும் வழங்கினார். இவை எதற்கு என்று சிவவாக்கியர் வினவினார். ''போ! போகும் வழியில் மணலைச் சோறாகச் சமைத்து இப்பேய்ச் சுரைக்காயைக் கைப்பின்றிச் சமைத்துப் பரிமாறும் பெண் ஒருத்தி எதிர்ப்படுவாள். அவள் நினக்கு மனைவியாவாள்'' என்றார் ஞானகுரு.

வழியில் இவர் கண்ட பெண்கள் எவரும் குருநாதர் குறித்த ஆற்றல்களைப் பெற்றிருக்கவில்லை. கடைசியாக ஒரு குறக்குலப் பெண் எதிர்ப்பட்டாள். சிவவாக்கியர் வாட்டம் கண்டு அவள் வினாத் தொடுத்தாள். சித்தர் தம் கவலை கூற, அக்குறவஞ்சி மணற்சோறாக்கிக் கைப்பின்றிப் பேய்ச்சுரைக்காயைக் கறியாக்கி அமுது படைத்தாள். குருப்பிரசாதம் என உணர்ந்து அக்குறமகளையே சிவவாக்கியர் மணந்து கொண்டு சிலகாலம் இல்லறத்தில் இருந்து இறுதியில் துறவு பூண்டார்.

இல்லறத்தில் வாழ்ந்திருந்து, மிக்க காமவேட்கை தீர்ந்த பின் துறப்பதே துறவு என்பது தொல்காப்பியம். இளமையிலேயே துறவு மேற்கொள்வதை வள்ளுவரும் ஏற்கவில்லை. இல்லறமே ஏற்காத ஒருவர் எதனைத் துறந்தார் என்று இவரைத் துறவி என்கிறீர்கள் என்று நிகழ்காலக் கவிஞர் ஒருவர் வினா எழுப்புகிறார். சித்தர்களில் ஒருவராகிய கொங்கணரோடு இவருக்கு நட்பு இருந்தது. இவர் உலகப்பற்று நீங்கக் கொங்கணரே துணை நின்றார் என்று தெரிகிறது.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசை ஆழ்வார் இவரே என்பர் சிலர். இதனை உறுதிப்படுத்த இயலவில்லை. எல்லாம் செவிவழிச் செய்திகள் தாம். வரலாற்றில் பொய்மையும் கற்பனையும் இருக்கலாம். ஆனால் சிவவாக்கியார் கவிதைகளில் சத்தியமும் ஞானமும் பூத்துக் குலுங்குகின்றன. சித்தம் போக்கு சிவம் போக்கு என்பது பழமொழி. சித்தர் பலரும் சிவநெறி நின்றவர்கள்தாம். அருளாளர்கள் சடங்காசாரங்களை ஏற்றுப் போற்றினர். ஆயினும் சித்தர்கள் சமய சீர்திருத்தவாதிகளாகச் சடங்குகள் இல்லாத சமயம் ஒன்றை முன் வைத்தனர்.

சமயச் சடங்குகளுக்கு எதிரான மிகப் பெரிய மௌனப் போராட்டம் சிவவாக்கியத்தில் ஓங்கி ஒலிக்கிறது. செய்தொழில் பற்றி வந்த சாதியக்

www.saivamonline.com

குறியீடுகள் தகர்க்கப்பட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவர் சிவவாக்கியர். சந்தம் கொழிக்கும் அற்புதமான கவிதைகள். புரட்சி கரமான எண்ணக் குவியல்கள். சிவனே பெருந்தெய்வம். ஒரே தெய்வமும்கூட. நமச்சிவாயம் என்பதே மகாமந்திரம்.

**''அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தம் ஆனதும்**
**ஆறிரண்டு நூறு தேவர் அன்றுரைத்த மந்திரம்''**

என்கிறார் அவர். திருமூலரை உள்வாங்கிக் கொண்டு புதிய கோணத்தில் வழிமொழிந்தவர் சிவவாக்கியார்.

**''ஆனஅஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்**
**ஆனஅஞ்செழுத்துளே ஆதியான மூவரும்**
**ஆனஅஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்**
**ஆனஅஞ் செழுத்துளே அடங்கலாவ துற்றதே''**

இதில் திருமந்திரம் நிழலாடுவது தெரிகிறது. உள்ளத்தின் உள்ளே ஒளிபூத்து நிற்கும் ஒளி வடிவானவன் சிவன். அவன் எங்கெங்கோ சென்று தேடித் திரியும் அறிவிலிகளை இவர் ஏளனம் செய்கிறார். அது குறித்த அழகிய சந்தக் கவிதை பின்வருமாறு.

**''ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே''**

தெள்ளத் தெளிந்தாருக்கு மட்டும்தான் சீவனே சிவலிங்கம் என்பது தெரியவரும்.

சிவநாமத்துக்கு இணையாக ராமநாமச் சிறப்பும் இவர் கவிதைகளிலே காணப்படுகின்றன.

**''அந்திமாலை உச்சிமூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்**
**சந்தி தர்ப்பணங்களும் தபங்களும் செபங்களும்**
**சிந்தைமேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்**
**எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.''**

ஓர் எல்லை உடைந்துவிட்ட நிலையில் பேதா பேதங்கள் நொறுங்கிப் போகும் என்பது புலனாகிறது. இத்தகு கவிதைகளில் ஆழ்வார் நிழலாட்டம் காணப்படுவதை உணர இயல்கிறது. சாதீயக் கட்டுடைப்பதிலே சிவவாக்கியர் தீவிரமான ஒரு போராட்டத்தை

www.saivamonline.com

நிகழ்த்தியிருக்கிறார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் மெல்ல உரைத்த சமத்துவத்தைச் சித்தர் உரக்க உரைத்து வியப்பூட்டுகிறார். உவமைகள் வினாக்களிலே கோபக்கனல் கொப்பளிக்கிறது.

**"பறைச்சியாவ தேதடா? பணத்தியாவ தேதடா?**
**இறைச்சிதோல் எலும்பினும் இலக்கமிட் டிருக்குதோ?"**

இவள் பறையர் குலப்பெண். இவள் பார்ப்பன மகள் என்று இறைச்சி, தோல், எலும்பு எங்காவது முத்திரை குத்தப்பட்டுள்ளதா? எனவினவுகிறார்.

**"பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ?"**

நன்கு யோசித்தால் இந்தப் பேதங்கள் யாவும் மாயை என்பது உன் உள்ளத்திற்கே தெரிய வருமே.

**"பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே!"**

சாதியக் கட்டுடைக்கும் சாட்டை அடிகளாக இவர் கவிதைகள் ஆத்திர வடிவம் பூண்டு தகிக்கின்றன.

உள்ளத்தில் தெய்வமிருப்பதால் உருவ வழிபாட்டை இவர் ஏற்கவில்லை. தலயாத்திரைகள் கூட வேண்டாமே என்கிறார். மதவாதத்தைக் கடுமையாகச் சாடுகிறார். வேத மந்திரம், சாதி ஆசாரம், என்பனவற்றை ஏற்க மறுக்கிறார். ஒன்றே குலம், ஒருவனே தேவன், உள்ளமே கோயில் என்று சாதிக்கிறார்.

**"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே**
**சுற்றிவந்து முணமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?**
**நட்டகல்லும் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்**
**சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"**

உருவ வழிபாடு கடந்த உள்ள வழிபாட்டுக்கு அறை கூவல் விடுக்கிறார் சிவவாக்கியர். சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ என்ற வினா ஆயிரம் அர்த்தங்கள் கொண்டது. விரிப்பின் பெருகும். நிறைவாகச் சிகாரத்தை முன்னும் பின்னும் வைத்துச் செபிக்கும். சிவாயவசி என்ற மந்திர ரகசியம் அறிந்து உய்யலாம்.

**"சிவாயவசி என்னவும் செபிக்க இச்சகமெலாம்**
**சிவாயவசி என்னவும் செபிப்பயாவும் சித்தியாம்**
**சிவாயவசி என்னவும் செபிக்கவானம் ஆளலாம்**
**சிவாயவசி என்பதே இருதலைத்து ஆகுமே."**

www.saivamonline.com

## 21. இடைக்காடர்

யானை மேய்ப்பாரைப் பாகர் என்றும், ஆடு, மாடுகளை மேய்ப்பாரை இடையர் என்றும் கூறுதல் தமிழ் மரபு. இடையர்களைக் கோனார் என்றல் கிராம வழக்கு. காட்டுப் பகுதிகளில் ஆடு, மாடுகளை மேய்க்கும் அன்னாரை முன்னிலைப்படுத்திக் கோனாரே என்று விளித்துப் பாடும் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் இடைக்காட்டுச் சித்தர். காடன், மாடன் எனப்பெயர் வைத்தல் பண்டைய மரபு. இவரும் இடையர் மரபில் வந்தவராகலாம். அது பற்றி இவர் இடைக்காடர் என வழங்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. இடைச்சேரி, இடையூர் என்பன போல இடைக்காடு என்னும் ஊரினராதல் பற்றியும் இப்பெயர் அமைந்திருத்தல் கூடும்.

இவர் கொங்கணச் சித்தரின் சீடர். கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரின் வேறாகக் கடைச்சங்க காலத்தில் ஓர் இடைக்காடர் வாழ்ந்திருந்தார். திருவிளையாடல் புராணத்தில் இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம் என்ற ஒன்றும் வருகிறது. தொண்டை மண்டலச் சதகம் இவர் வரலாறு குறித்துச் சில செய்திகளைத் தருகின்றது. அந்நூல் இவர் கொற்றலை ஊரில் வாழ்ந்திருந்தவர் என்றும் சிவன் அருள் பெற்ற சித்தர் என்றும் குறித்துள்ளது.

அபிதான சிந்தாமணி இவர் வரலாறு குறித்த சில செய்திகளை வழங்குகின்றது. இவர் தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டிலிருந்த இடையர். பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்திருக்கையில் நவ சித்தரில் ஒருவர் வந்து இவரிடம் பால் தருமாறு வேண்டினார். இவரும் ஆட்டுப்பால் வழங்கி உபசரிக்கச் சித்தர் இவருக்கு ஞானோபதேசம் செய்தார். அதனால் சித்தாடல் கைவரப் பெற்று இவர் இடைக்காட்டுச் சித்தராக உயர்ந்தார்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் மழை இன்றி நாடு பஞ்சத்தில் துன்புறப் போவதை இடைக்காட்டுச் சித்தர் தம் தொலை நோக்கால் உணர்ந்தார். தம் ஆடுகளுக்குப் பஞ்ச காலத்திலும் தழைத்திருக்கத் தகும் எருக்கின் இலைகளை உண்ணப் பழக்கினார். காடுகளில் கிடைக்கும் பல ஆண்டுகள் கெடாத குருவரகு என்னும் தானியத்தை மண்ணோடு கலந்து சேறாக்கிச் சுவர் வைத்துக் குடிசை ஒன்றை அமைத்தார். பஞ்ச காலம் வந்தது. ஆடுகள் எருக்கிலை தின்பதால் ஏற்பட்ட ஊறலால் தம் உடம்பைக் குடிசையின் சுவரில் உராய்ந்தன. அப்போது மண்ணோடு கலந்திருந்த குருவரகு தானிய மணிகள் சில

www.saivamonline.com

கீழே சிந்தின. அவற்றை மட்டும் உண்டு இவர் வாழ்ந்திருந்தார். இவரும் இவர் ஆடுகளும் பஞ்ச காலத்தில் உயிர் வாழ்ந்திருப்பது அறிந்து வியந்த நவ கோள்களும் இவரைக் காண வந்தனர்.

இடைக்காட்டுச் சித்தர் அவர்களை அன்புடன் வரவேற்றார். குருவரகைப் பாகஞ் செய்து ஆட்டுப் பாலுடன் கலந்து வழங்கி நவக்கிரக நாயகர்களை மகிழ்வித்தார். உண்ட மயக்கத்தில் அவர்கள் கண் மயங்கி உறங்கினர். அந்த நேரத்தைப் பயன் கொண்டு, ஒன்றுடன் ஒன்று மாறு கொண்டு உலகத்தை வருத்திய நவக் கிரகங்களை மழை பெய்வதற்கு ஏதுவாக இவர் இடமாற்றம் செயதார். மழை பொழிந்து நாடு மகிழ்ந்தது.

இவர் சாரீரம் என்னும் வைத்திய நூல் ஒன்றை இயற்றினார். இவரைப் போகர் மாணாக்கருள் ஒருவர் என்றும் மதுரைக்குக் கிழக்கேயுள்ள இடைக்காட்டினர் என்றும் விவேகசிந்தாமணி குறிப்புகள் வழங்குகின்றன. கர்ண பரம்பைரைச் செய்தி ஒன்று இவரை விஷ்ணு அம்சம் கொண்டவர் என்கிறது. ஒரு முறை இவரிடம்சித்தர் சிலர் வந்து விஷ்ணுவின் தசாவதாரத்தில் வணங்கத் தக்கவை எவை என வினவினார். இவர் நயமுற ஏழை இடையன் இளிச்சவாயன் எனக் கூறினார் என்பர். இடைக்காட்டுச் சித்தர் பாடியனவாகச் சித்தர் பாடல்கள் தொகுப்பில் இன்று 130 பாடல்களும் ஒரு காப்புச் செய்யுளும் காணப்படுகின்றன. வழக்குச் சொற்களும் வட்டாரச் சொற்களும் கலவாத நல்ல இலக்கிய நடையில் இவர் பாடல்கள் அமைந்துள்ளன. பதிப்பாசிரியர்கள் தங்களுக்குத் தோன்றியவாறு உள் தலைப்புகளிட்டுப் பிரித்து இவர் பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். காப்புச் செய்யுள் பொதுப்பட இறைமைக் குணம் பேசி அமைந்துள்ளது.

**''ஆதி அந்தம் இல்லாதவன் ஆதியைத்**
**தீது கூறும் பவம் தீப்படு பஞ்சு போல்**
**மோதுறும்படி முப்பொறி ஒத்துறக்**
**காதல் ஆகக் கருத்திற் கருதுவோம்''**

இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் நன்கு ஆராயப்பட வேண்டிய நுட்பங்கள் கொண்டவை. சைவ-வைணவப் பனுவல்கள் ஆராயப்பட்ட அளவிற்குச் சித்தர் பாடல்கள் அறிஞர்களால் ஆராயப்படாமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை. ஏதேனும் ஒரு பின்புலம் இல்லை என்றால் சிலவகை இலக்கியங்களுக்கு வாழ்வு இல்லை என்றே தோன்றுகிறது.

www.saivamonline.com

**''தாம் திமிதிமி தந்தக் கோனாரே**
**தீம்திமிதிமிதிந்தக் கோனாரே**
**ஆனந்தக் கோனாரே - அருள்**
**ஆனந்தக் கோனாரே!''**

நின்று ஆனந்தக் கூத்தாடும் தந்தங்களை உடைய நர்த்தன விநாயகரைக் கோன் தலைவனாகக் கண்டு, அவனிடம் நிறைந்திருக்கும் நிரந்தர மகிழ்ச்சியைத் தமக்கும் அருளுமாறு சித்தர் வேண்டித் தொடங்குவது புலனாகிறது. மகிழ்ச்சி தரும் தலைவன் என்ற பொருளில் ஆனந்தக் கோன் என்ற தொடர் அமைகிறது. விளிக்கும் போது ஆனந்தக் கோனாரே என நீண்டுள்ளது.

சித்தம் போக்குச்சிவன் போக்கு என்பார்கள். பாடல்கள் பலவும் சிவனாரை முன்னிலைப்படுத்தியே அமைந்துள்ளன. தில்லையில் நடனமிடும் ஆனந்தக் கூத்தனை இவர் தாண்டவக்கோன் எனக் குறிப்பிடுகிறார். வீடு பேற்றுக்குரிய எளிய வழிகளை இவர் பாடல்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. ஒன்றிரண்டைக் காணலாம்.

**''மனம் என்னும் மாடு அடங்கில் தாண்டவக் கோனே! முத்தி**
**வாய்த்தது என்று எண்ணேடா தாண்டவக் கோனே''**

மனத்தைப் பக்குவப்படுத்துவதே முத்திக்கு வாயில் என்கிறார் சித்தர். மனத்தை மாடு என உருவகம் செய்த இடைக்காடர் சினத்தைப் பாம்பு என்று நாட்டுகிறார்.

**''சினம் என்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே - யாவும்**
**சித்தி என்றே நினையேடா தாண்டவக் கோனே''**

இவை போல ஆசையை இவர் பசு என்கிறார்.

## 22. கடுவெளிச் சித்தர்

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் ஒருவராகத் திகழ்பவர் கடுவெளிச் சித்தர். பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள் என்ற பட்டியல்களில் கடுவெளிச் சித்தர் இடம் பெற்றிலர். மேற்குறித்த இரண்டு தொகைச் சுட்டுக்களும் உருவானதற்குப் பிற்பட்ட காலத்தவராக இவர் இருந்திருக்க வேண்டும்.

சித்தர் வரலாறு அறியாத தமிழ் மக்களில் பலரும்,

**''நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**

www.saivamonline.com

**கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்**

**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி''**

என்ற பாடலை அறிந்தேயுள்ளனர். யாதும் ஊரே யாவரும் கேளிர். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் முதலாகிய பல தொடர்களை அறிந்திருக்கும் தமிழர்கள் அவை முறையே கணியன் பூங்குன்றனாரும், திருமூல நாயனாரும் வழங்கிய கொடைகள் என்பதை அறியார். மேற்குறித்த நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்று தொடங்குவன முதலாய 34 கண்ணிகளாக அமைந்த ஆனந்தக் களிப்பை வழங்கிய சித்தர் பெருமான் கடுவெளிச் சித்தர் ஆவார்.

அகன்று - பரந்து விரிந்த வான்வெளியைப் பரவெளி என்று குறித்தல் சமய மரபு. மன, வாக்குகளுக்கு எட்டாதது பரவெளி. விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இன்னும் பரவெளியை முற்றாகக் கண்டு காட்டியதில்லை. சித்தர் வரலாற்றுத் தரவுகளை முதன் முதல் தேடித் தொகுத்துப் பதிவு செய்தவர் திரு.ஆ.சிங்காரவேலு முதலியார். இவர் தொகுத்து 1910இல் வெளியிட்ட தமிழ் உரைநடைக் கலைக்களஞ்சியம் அபிதான சிந்தாமணி. இதனுள் ஆசிரியர்,

''தன் ஆன்மானுபவத்தைப் பிறரும் அறிந்து அவ்வழி நடந்து சீர்பெறப் பிரபஞ்சத்தைச் சுத்த வெளியென்று கண்டு இப்பெயர் அடைந்தவர் என்று தெரிகிறது.''

என்று குறித்துள்ளார். கடுவெளிச் சித்தர் பாடல் தொகுப்பில் 22-ஆவது ஆனந்தக் களிப்பில்,

**''எட்டும் இரண்டையும் ஓர்ந்து மறை**

**எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து**

**வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த**

**வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து''**

என்று பாடுகின்றார். இதில் வெட்டவெளியினைச் சார்ந்து என்ற தொடர் ஒன்று காணப்படுகிறது. இதுவரை பரவெளி பற்றிய குறிப்பேதும் இவர் பாடல்களில் இல்லை. எனவே இது ஒன்று பற்றி மட்டும் இவர் இப்பெயர் பெற்றார் எனக் கருதக் கூட இயலவில்லை. வேறு பாடல்கள் கால வெள்ளத்தில் கரைந்து போயிருத்தல் கூடும்.

சிவநெறியில் இறைவன் பரம கருணையாளன். ஆணவ மலத்துடன் கட்டுண்டு கிடக்கும் உயிர்களின் ஈடேற்றத்திற்காக இறைவன் அவற்றுக்குத் தனு எனப்படும் உடலை வழங்குகிறான்.

www.saivamonline.com

ஆனால், பிறப்பெடுத்த உயிர்கள் உடலோம்பி வாழ்ந்து மல நீக்கம் பெற்று இறைவன் சேவடிகளில் சார இயலாது. உலக இன்பங்களில் சிக்குண்டு, உடல் கெடச் செத்து அழிகின்றன. நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்ற பாடல் வழி, கடுவெளிச் சித்தர் உரைக்கும் கருத்து இதுவேயாகும். சிவன் ஏவலில் உலகைப் படைக்கும் பிரம்மனைத் தட்டான் என்று திருமூலர் குறித்தார். சித்தர் குயவன் எனக் குறிக்கிறார். நாலாறு மாதம் என்பது கூட்டல். பத்து மாதம் என்பது கருத்து.

**''உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே'**

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்''**

என்றும் திருமூலர் குறித்தார். உடம்புக்கும் திருவோட்டுக்கும் சிலேடைப் பொருள்பட, தெய்வச் சேக்கிழார், திருநீலகண்டத்துக் குயவனார் வரலாற்றில், உடம்பு என்பது,

**''தன்னை ஒப்பரியது தலத்துத் தன்னுழை**

**துன்னிய யாவையும் தூய்மை செய்வது**

**பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது''**

என அறிவுறுத்திச் சென்றார். திருமூலர், சேக்கிழார் நெறியில் கடுவெளிச் சித்தரின் சிந்தனை உருப்பெற்றிருக்கலாம். ஒரு பல்லவியும், முப்பத்து நான்கு சரணங்களும் கொண்டன ஆனந்தக் களிப்பு என்னும் இச்சித்தர் கவிதை. பல்லவியைக் கடுவெளிச்சித்தர்,

**''பாபம் செய்யாதிரு மனமே - நாளைக்**

**கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்**

**பாபஞ் செய்யாதிரு மனமே''**

என்று அமைத்துப் பாடுகின்றார்.

அறஞ்செய்து - பாபம் தவிர்க்க வேண்டித் தொடங்கும் ஆனந்தக் களிப்பில் அற்புதமான பல கண்ணிகள் இடம் பெற்றுள்ளன. சூது, பொய், மோசம் செய்தால் - செய்தவன் சுற்றம் கெட்டழியும். உடம்பு என்பது நீர் மேல் குமிழ் போல் நிலை இல்லாதது. மண், பொன், பெண் எனும் மூவாசைகளை விட்டு ஒழி. பிறரிடம் சென்று பிச்சை கேட்டு இரவாதே. வேத, வேதாந்த நெறிகளிலே பயணம் செய். ஞான குழுவினைப் போற்றி அவர் சொல்வழி நில். உடல் என்பது ஐந்து பொறிகள் என்னும் காட்டு மரங்கள் சூழ்ந்த காடு. அன்பு எனும் நல்ல மலர் தூவிப் பரமானந்தம் என்ற தேவியின் தாளை அடை என்றெல்லாம் கடுவெளிச்சித்தர் மனித குலத்திற்கு நன்னெறி பல புகல்கின்றார்.

www.saivamonline.com

**"எட்டும் இரண்டையும் எல்லாம் ஓர்ந்து மறை**
**எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து**
**வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த**
**வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து"**

வாழ்வாங்கு வாழ்க என வழிகாட்டி அருளுகின்றார்.

கடுவெளிச் சித்தர் சிவநெறி நின்றவர். இறைநெறியினும் மேலாக அறநெறி போற்றி வாழ அறிவுறுத்தியவர். இம்மை வாழ்வில் சிறந்து வாழ்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியவர். அவர் கவிதைகளில் தாம் எத்தனை எத்தனை அரிய அழகிய தொடர்கள்.

**"நல்ல வழி தனை நாடு**
**வல்லவர் கூட்டத்தில் கூடு.**
**மெய்ஞ்ஞானப் பாதையில் ஏறு.**
**கூட வருவது ஒன்றில்லை.**
**பாரில் உயர்ந்தது பத்தி.**
**பொய்வேதம் தன்னைப் பாராதே.**
**வைதாரைக் கூட வையாதே.**
**சிவமன்றி வேறே வேண்டாதே.**
**போற்றும் சடங்கை நண்ணாதே.**
**கள்ள வேடம் புனையாதே"**

இத்தகு நல்லறிவு கொளுத்தும் பல அரிய தொடர்கள் கடுவெளிச் சித்தர் கவிதைகளிலே நிறைந்து காணப்படுகின்றன.

கஞ்சா என்ற ஒரு வகைச் செடியின் இலைகளைக் கொண்டு புகை பிடித்து மயங்கும் ஒரு சமூகம் சித்தர் காலத்தில் நிலவியிருந்திருக்க வேண்டும். மயக்கும் கள் குடிக்கும் கூட்டமும் வாழ்ந்திருந்த காலம் போலும்,

**"கஞ்சா புகைப் பிடியாதே - நெறி**
**காட்டி மயங்கிய கட்குடி யாதே"**

என எச்சரிக்கிறார். இறைவன் என்பவன் தண்ணளி மிக்கவன். அன்புடையார் இதயத்தில் குடிபுகுந்து வாழ்பவன். மிக்க அடிமைத்திறம் கொண்ட அடியார்களுக்குத் தானும் தொண்டு பூணும் எண்ணம் மிக்கவன். தன்னைப் போற்றி உரைப்பார்க்குச் சிவலோகம் முதலான உயர் பதவிகள் வழங்குவான்.

www.saivamonline.com

**"எங்கும் சுயம்பிரகாசன் - அன்பர்**
**இன்ப இருதயத் திருந்திடும் வாசன்**
**துங்க அடியவர்தாசன் - தன்னைத்**
**துதிக்கிற பதவி அருளுவான் ஈசன்"**

இவ்வாறு பாடல் நெறி, குறிப்பிடப்பட்டுள்ள சில செய்திகள், சில வகைத் தொடர்களை ஆளுதல் முதலியவற்றை ஒப்ப வைத்து ஆராய்ந்தால் இக்கடுவெளிச் சித்தர் 15-ஆம் நூற்றாண்டினராதல் கூடும் என அறிய முடிகிறது.

இவர் பாடியனவாக வேறு நூல்களோ பாடல்களோ கிடைத்தில. இவர் வரலாறு குறித்து ஒன்றும் தெரிந்திலது. அறநெறிக் கருத்துக்களைச் சைவ மரபுக் கருத்துக்களோடு இணைத்துச் சந்தக் கவிதை தந்தவர் இவர் என்றே தெரிய வருகிறது.

## 23. அழகணிச் சித்தர்

அழகும், அணிநயமும் நிரம்பிய இனிய கவிதைகளை வழங்கினார் ஒரு சித்தர். அவர் பெயர் தெரியவில்லை. எனவே, பின்வந்தோர் அவரை, அவர் கவிதை அழகைக் கருத்தில் கொண்டு அழகு அணிச் சித்தர் என அழைத்தனர். காலப்போக்கில் அப்பெயர் திரிந்து, அவரை அழுகுணிச் சித்தர், அழுகணிச் சித்தர் என்றெல்லாம் மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

இவர் பெயரும் நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை. பாரதியாருக்கு முன்னதாகப் பெண் ஒருத்தியைக் கண்ணம்மா என விளித்துப் பாடியவர் இவரே. இவர் இயற்றியனவாக 40 கலித்தாழிசைப் பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன. இவர் வரலாறு பற்றியோ, காலம் பற்றியோ ஏதும் தெரிந்தில.

நாம் இவரை அழகணிச் சித்தர் என்றே அழைக்கலாம். இவர் பாடல்களில் காணப்படும் சிலவகைச் சொல்லாட்சிகள் இவரை கி.பி.15-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக பஞ்சாயக்காரர் (2), ஆக்கினைக்குத்தான் பயந்து (2), தேனாமிர்தம் (4), கூடுதில்லை (7), கிட்டுவதில்லை (8), சாகவல்லோ(9), மச்சினியோ நானறியேன் (11), தோணாமல் (17), உண்ணாக்கு (20), சாயச்சரக் கெடுத்து (21), ராசாக்கள் (24), நிட்டூரன் (27), பரக்க விழிக்கிரண்டி (31), ஆத்தாடி (33-40) போன்ற சொல்லாட்சிகள் இவர் வாழ்ந்த காலத்தை ஓரளவு தீர்மானிக்க உதவுகின்றன.

www.saivamonline.com

முதல் 32 பாடல்களில் காணப்படும் கண்ணம்மா என்ற விளிகள் சிவசக்தியாகிய உமையைக் குறிப்பனவாகவே தெரிகின்றன.

**"கண்ணம்மா உன் பாதம் சேரேனோ?**

**கண்ணம்மா கண் குளிரக் காண்பேனோ?'**

அஞ்சாதே என்று சொல்லி என் கண்ணம்மா ஆண்டிருந்தால் ஆகாதோ?

**"கண்ணம்மா பொருள் எனக்குத் தாரோயோ?**

**கண்ணம்மா விழித்து வெளி காட்டாயோ?"**

என வரும் பதிவுகள் இதனை உறுதி செய்கின்றன. சித்தர் போக்குச் சிவம் போக்கு எனக் கூறப்பட்டாலும், சிவ சக்தியை, வாலை எனப் பெயரிட்டு வணங்கும் போக்கு, சித்தர் நூல்களிலே காணப்புடுகிறது. விழித்து வெளி காட்டாயோ என்ற பதிவால் சிவனையே சிவசக்தியாக உருவகித்துப் பாடியுள்ளார் என்றும் கருத இடம் உள்ளது.

நில்லாத உலகியல்பு கண்டு, நிலையா வாழ்க்கை இது என்று உணர்ந்து, துறவில் தலைப்பட்டு, வீடு பேற்றை வேண்டி நிற்கும் சித்தரின் உள்ளப் பாங்கைப் பாடல்கள் எங்கும் பரவலாகக் காண முடிகிறது. உடம்பை இவர் ஊற்றைச் சடலம் என்று குறிப்பிடுகிறார். சைவ சித்தாந்தம் பிற்காலத்தே விரித்த 96 தத்துவங்களை இவர், தொண்ணூற்றோடு ஆறதிலே என்று பதிவு செய்கிறார்.

மயக்கம் தரும் கஞ்சா என்ற போதைப் பொருளைக் கஞ்சா வெறியனடி எனத் தன் மேலிட்டுக் குறித்துக் காட்டுகிறார். சைவ சித்தாந்தம் பேசும் ஆறு ஆதாரங்கள் இவரால் சுட்டப்பட்டுள்ளன. மலர் தூவி வழிபடும் பூசை முறைகளை ஏற்கிறார். சிவனைத் தோற்றம் ஒடுக்கமில்லாத் தொல்பொருள் எனக் குறிக்கிறார். இவர் சிவநெறி நின்று வீடு பேற்றை விரும்பியவர் என்பதற்குச் சான்றுகள் வேறு பலவும் இவர் கவிதைகளிலே நிறைந்துள்ளன.

மலஞ்சோறும் ஒன்பது வாயில் குடிலை என உடலை மாணிக்கவாசகர் திருவாசகம் சிவபுராணத்துள் குறித்தார். உடலை வெறுத்துப் பேசும் சித்தர் மரபில் வந்த இவரும்,

**"ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி**

**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை"**

எனக்குறித்து, உடல் விட்டு, இன்பமயமான வீடுபேற்றை வழங்குமாறு யாசிக்கிறார். வைத்துக் கொண்டே, இலன் என்னும்

www.saivamonline.com

எவ்வம் உரைக்கும் கீழோரிடம் சென்று கையேந்தி நிற்கும் நிலை வாராது காத்தருளக் கண்ணம்மாவிடம் வேண்டுகோள் வைக்கிறார்.

**"புல்லரிடத்தில் போய்ப் பொருள் தனக்குக் கையேந்திப்**
**பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி**
**பல்லை மிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்**
**புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா**
**பொருள் எனக்குத் தாராயோ?"**

கண்ணம்மாவோடு, விநாயகப் பெருமானையும் சித்தர்,

**"ஐங்கரனைத் தெண்டனிட்டேன்**
**அருளடைய வேணுமென்று**
**தாங்காமல் வந்தொருவன் - ஆத்தாடி**
**தற்சொரூபம் காட்டி யென்னே?"**

என வினவி அருள் வேண்டி நிற்கிறார். சித்தர்கள் பாடல்களில் பரிபாஷைகளும், தத்துவக் குறியீடுகளும் நிறைந்திருக்கும். பலவற்றிற்கு உண்மைப் பொருள் கூறுவார் எவரும் இலர். அழகணிச் சித்தர் பாடல்களிலும் இவ்வாறான குறியீடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இத்தகைய மறைபொருள் உரையாடல்களால்தாம் சித்தர் இலக்கியம் மக்களைச் சென்றடையாமல் உள்ளது. சில எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

**"முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே**
**பத்தாம் இதழ் பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி**
**எட்டாப் புரவியடி ஈறாறு காலடியோ விட்டானும் பாரமடி**
**மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி**
**நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடு கட்டிச்**
**சாய்ச் சரக்கெடுத்தே சாதிலிங்கம் தான் சேர்த்து**
**மாயப் பொடிகலந்து வானுமுவை நெய்யூற்றிப்**
**பாதாள மூலியடி பாடாணம் தான் சேர்த்து**
**வேதாளம் கூட்டியல்லோ வெண்டாரை நெய்யூற்றி"**

இவ்வாறான பூடகப் பதிவுகளைச் சித்தர்கள் கையாண்டதற்கான காரணம் புலப்பட்டிலது. திருமந்திரம் போன்ற நூல்களில் பூடக உரையாடல்களைச் சூனிய சம்பாஷணை என ஒரு தலைப்பில் அடக்கி, எஞ்சிய பகுதிகளைப் புரியுமாறு படைத்த அருமைப் பாட்டைச் சித்தர்கள் ஏற்றுப் போற்றாமை ஏன் என்பது புலப்பட்டிலது.

www.saivamonline.com

நிறைவாகச் சித்தர் அமைத்துள்ள கண்ணிகளில் கிரியை வழிபாட்டு நெறி போற்றப்பட்டுள்ளது. மஞ்சன நீராட்டு, மலர் பறித்துத் தூவுதல். பாடிப் படித்துப் பன்மலர்கள் சாத்துதல் முதலியனவற்றைப் பேசும் சித்தர், சிவனைப் பலபடப் போற்றி நிறைவு செய்கிறார். திரிபுரம் எரித்த வரலாற்றை, சூதான கோட்டை எல்லாம் சுட்டான் துரிசறவே எனக் குறிக்கிறார். இறைவன் மாணிக்கத்து உள் ஒளி போல் உலகெங்கும் மருவி நிற்பவன் என்று அடையாளப்படுத்துகிறார். சிவனைப் பேசாப் பெருமையன் எனச் சிறப்பிக்கவும் செய்கிறார். பிறவா நெறிக்கு வழி அறியாதார்போல் இச்சித்தர் பாடியுள்ள ஒரு பாடல் யாவரும் அறிந்த ஒன்று.

**"ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்**
**ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மா உன் பாதம் சேரேனோ?"**

## 24. சட்டை முனி

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை பலவகைப்படும். திருமூல நாயனாரை முதல்வராகக் கொண்டு விரிந்த பரம்பரை குறிக்கத்தக்க ஒன்றாகும். திருமூலர் மரபு பற்றிய பல அரிய பதிவுகள் திருமந்திரத்திலேயே காணக் கிடக்கின்றன. கயிலை மாமலையில் திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்ற மாணாக்கர் எண்மர். அவர்களுள் ஒருவர் திருமூலர். இதனைத் திருமந்திரம்,

**"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்**
**என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"**

எனப் பதிவு செய்து நிற்கிறது.

திருநந்திதேவர் வழி ஒரு பரம்பரை சிறந்ததைப் போலத் திருமூலரை முதல்வராகக் கொண்டு ஒரு சீடர் பரம்பரை விரிந்தது. அவர்கள் எழுவராவர். 1. மாலாங்கன், 2. இந்திரன், 3. சோமன், 4. பிரமன், 5. ருத்திரன், 6. தறிபோன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி (காலாங்கி), 7. கஞ்சமலையன்.

இதனைத் திருமந்திரம்,

www.saivamonline.com

**''மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்**
**இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்**
**கந்துருக் காலாங்கி கஞ்சமலையனோடு**
**இந்த எழுவரும் என்வழியாமே''**

எனப் பதிவு செய்கிறது. இதனுள் ஆறாவதாகக் குறிக்கப்பட்டவர் காலாங்கிநாதர் என்பவர். இவரைக் காலாக்னி என்றும் குறிப்பர். திருமூலர் தரும் அடைமொழிகளால், நடப்பட்ட கட்டுத்தறி போல ஆடாது அசையாது யோக நிட்டையில் இந்தவர் காலாங்கிநாதர் என்பது தெரிய வருகிறது. காலாங்கி என்பது ஊழித்தீ என்ற பொருள் தருவது. காலாங்கி நாதரின் தலை மாணாக்கரே பழநியில் சமாதி ஆகியுள்ள போகர்.

போகர் ஒரு பெரிய சித்தர் கணத் தலைவராகக் கருதப்படுகிறார். ஆதிகாலத்தில் சிவபெருமான் அருளிச் செய்த எழுநூறாயிரம் சூத்திரங்களைப் போகர் ஏழு காண்டத்துள் அடக்கித் தம் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தினார். இவர் மாணாக்கருள் முதன்மை பெற்ற ஒருவர் புலிப்பாணி.

ஏனைய போகரின் மாணாக்கர் பலருள்ளும் குறிக்கத்தக்க ஒருவர் சட்டை முனி என்பார். பதினெண் சித்தர்களில் இவரும் ஒருவராகக் குறிக்கப்படுகிறார். பாம்பின் மேல் தோன்றும் ஒருவகைத் தோலைச் சட்டை எனக் குறிப்பர். ஆடவர்கள் அணியும் உடை வகைகளுள் ஒன்று சட்டை. சிலப்பதிகாரம் இதனை மெய்ப்புகுபை என்று குறிக்கிறது. சட்டை என்பது பிற்கால வழக்கு.

சட்டை முனி என்ற பெயர்க்காரணம் விளங்கவில்லை. சீர்காழி கட்டுமலை உச்சியில் அடியார் கோலத்தில் நிற்கும் இறைவனுக்குச் சட்டைநாதர் என்பது பெயர். யானைத் தோலை உரித்துப் போர்த்தியவர் என்ற கருத்தில் இப்பெயர் அமைந்தது.

சட்டை முனி வரலாறு குறித்து விரிவான செய்திகள் கிடைத்தில. ஒரு சிலர் இவர் அகத்தியர் காலத்திலேயே வாழ்ந்திருந்த மருத்துவர் என்கின்றனர். சித்தர் நூல்கள் பலவும் இவரைப் போகரின் மாணவராகவே குறிக்கின்றன. இவர் சேணியர் மரபினர் என்ற குறிப்பும் உள்ளது. இவர் உரோம முனிவரோடு மாறு கொண்டிருந்தார் என்பது அந்த வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

இவர் செய்த நூல்களாகச் சட்டை முனி ஞானம் 200, சட்டை முனி

www.saivamonline.com

1200, திரிகாண்டம், சரக்கு வைப்பு. நவரத்தின வைப்பு, சடாட்சரக் கோவை, கல்பம் நூறு, ஞானம்நூறு, வாத நிகண்டு என்பன அறிய வந்துள்ளன. இவை பலவும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

சட்டை முனி ஞானம் என்ற இவரது நூலில் 200 என்று குறிக்கப்பட்டிருந்தாலும், இன்று 12 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. எண்சீர் ஆசிரிய விருத்தங்களாகக் கொண்டால் 6 பாடல்களாக இவை அடங்கும். கிடைத்துள்ள இப்பாடல்கள் பூசை விதிகள் சிலவற்றைக் கூறுகின்றன.

பூசை செய்யும் முறைகள் பலவுண்டு. சிவலிங்கத்தையோ, தீபத்தையோ, முருகன் முதலிய திருமேனிகளையோ முன்வைத்துப் பூசிக்கும் முறை நாம் அறிந்தது. சட்டை முனி வேறு முன் வைத்துப் பூசிக்கப்படுவன சிலவற்றை முதலாகக் குறிக்கிறார். அடுத்து, சித்தர்கள் பூசை ஏற்கும் முறை இன்னது என்பதையும் முன் வைக்கிறார், பூசையில்,

1. சுவடிகளை வைத்துப் பூசித்தல், 2. தீபம் ஏற்றி வைத்துப் பூசித்தல், 3. பெண்களையே, வாலை என முன் அமர்வித்துப் பூசித்தல். 4. சக்கரங்கள் எழுதப் பெற்ற யந்திரங்களை முன் வைத்துப் பூசித்தல், 5. மகாமேருவை முன் வைத்துப் பூசித்தல்.

என்பன பலவகை. சித்தர்களோ மேரு போல நாற்பத்து முக்கோணம் அமைந்த மகாமேருவை முன் வைத்துப் பூசிக்கும் நெறியினர் என்கிறார் இவர். மேருவின் அமைப்பு. மேரு பூசையின் பயன், பூசிப்பார் தகுதி முதலியவற்றை விளக்கும் சட்டை முனி, மேரு பூசை செய்வார் பெறும் ஆற்றல் எவை என்பதையும் விளக்குகிறார்.

மேரு வான் வடிவத்தை நினைப்பிக்கும் ஒரு குறி. மேரு பூசை செய்து நிரம்பப் பெற்ற சித்தர்கள், சிவனருள் நினைந்து உபதேசித்தால் மாணாக்கர்களுக்கு, வாதசித்தி, கவனசித்தி என்பன ஒரு சேர அமையும்.

**"வரனென்ற மேருவைத்தான் பூசை செய்தோர்**
**வாய்திறந்தே உபதேசம் சொன்னா ராகில்**
**கோரென்ற வாத சித்தி கவனசித்தி**
**கொள்ளைமாட்டான் அவன் சீடன் கூறினானே"**

மேலும், இப்பாடல் பகுதியில் வாலைக்கு உரிய மூன்றெழுத்து, திரிபுரைக்கு உரிய எட்டெழுத்து, புவனைக்குரிய எழுத்து, யானைக்கு உரிய ஆறெழுத்து, ஐவகை தீட்சை, வாசியோகம் என்பன பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

www.saivamonline.com

மேற்குறித்த உமையம்மை குறித்த நாமமும் எழுத்தும், அறிந்து, தீட்சாகிரமத்தால் பூசனை செய்வார்க்கு

**"காயசித்தி விக்கினங்கள் இல்லை இல்லை"**

என்று சட்டை முனி உறுதி செய்கிறார்.

சட்டை முனியின் இந்த ஞானப் பகுதியில் வேறு சில குறிப்புகளும் காணப்படுகின்றன. தியங்கினால், கெர்ச்சித்து, மிலேச்சர், மாய்கை, எப்போ முதலான உலக வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன. இவை பலவும் கி.பி.15-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன. இத்தகு பாடல்கள், சித்தர் கருத்துக்குப் பின் வந்தோர் தந்த பாடல் வடிவங்களாகவே கொள்ளத்தக்கன. பழநிமலைக் கோயில், சேரமான் பெருமாள் நாயனாரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராக இவர் காலம் அமைதல் கூடும்.

## 25. உரோம முனி

உரோம முனி பதினெண் சித்தர்கள் வரிசையில் ஒன்பதாவதாகக் குறிக்கப்பட்டுள்ளார். இவரை உரோமரிஷி என்றும் சித்தர் நூலார் குறிக்கின்றனர். இவரைப் பெருநூல் காவியம் படைத்த காகபுஜண்டரின் குமாரர் எனக் குறித்துள்ளனர். இவர் செய்த நூல்களுள் ஒன்று தீட்சை என்பது. இவர் போகரிடம் மாணவராக இருந்து ஞானம் பெற்றவர். இவரின் ஒரு சாலை மாணாக்கர் சட்டைமுனி.

ஒருமுறை உரோமமுனிக்கும், சட்டை முனிக்கும் பிணக்குத் தோன்ற, சினத்தில் சட்டை முனி உரோமமுனி செய்த தீட்சை நூலைக் கிழித்தெறிய முயன்றார். அக்காலை, காகபுஜண்டர் குறுக்கிட்டு, தம்மகன் செய்த நூலைத் தம் சடைமுடியில் ஒளித்து வைத்தார். தீட்சை நூலை புஜண்டர் அகத்தியரிடம் ஒப்படைத்தார். பல ஆண்டுகள் கழித்து அந்நூலை அகத்தியர் உரோமரிஷியிடம் வழங்கினார். இவருக்கு உடம்பெல்லாம் உரோமம் மண்டியிருந்ததால் இவர் உரோமமுனி என அழைக்கப்பட்டார். உரோம நாட்டுக்கும் இவருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பார் கூற்று ஏற்புடையது அன்று.

## உரோமமுனி நூல்கள்

உரோமமுனி வரலாறு குறித்து வேறு செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை. அபிதான சிந்தாமணி என்ற நூல் இவர் உடலில்

www.saivamonline.com

உள்ள ஓர் உரோமம் ஒரு பிரமன் இறந்தால் உதிரும் என்றும், இவ்வாறு 3½ கோடி பிரம்மாக்கள் இறந்தால்தான் இவர் ஆயுள் முடியும் என்றும் குறித்துள்ளது. உரோமரிஷி இறந்தால் அட்டகோண ரிஷி என்ற சித்தரின் உடலில் உள்ள ஒரு கோணம் நிமிரும் என்றும் அந்நூல் குறிக்கிறது. இவற்றை ஏற்கவும் இயலவில்லை. தள்ளவும் கூடவில்லை.

சித்தர்கள் திருமூலரைப் போல் பல்லாண்டுகள் வாழ்ந்தவர்கள் என்பது மட்டும் உறுதி. உரோமரிஷி இயற்றினவாக உரோமமுனி நூறு, ஐந்நூறு, ஐம்புள் என்ற நூல்கள் அறிய வருகின்றன. உரோமமுனி ஞானம் என்ற சிறுநூல் ஒன்றும் இவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலுள் 26 கண்ணிகள் காணப்படுகின்றன. உலகம் முழுவதும் சித்தாடல்கள் பலவற்றைச் செய்யும் சித்தமூர்த்திகள் பலரின் பாதங்களை நம்பிக்கையோடு தொழுததனால் நான் உரோமன் என்று அழைக்கப்பட்டேன் என்று ஒரு பதிவு உள்ளது.

**''ஞாலவட்டம் சித்தாகும் பெரியோர்பாதம்**
**நம்பினதால் உரோமன் என்பேர் நாயன்தானே''**

என்ற தொடரில், பெயர்க்காரணம் புலப்பட்டுத் தோன்றவில்லை.

## உரோமமுனி ஞானம்: காப்பு

உரோமமுனி அருளிய ஞானம் அழகிய காப்புச் செய்யுள் ஒன்றுடன் தொடங்குகிறது. இதில் முதலில் ஞானகுருவின் பாதங்களே காக்கட்டும் என்று தொடங்குகின்றார். அடுத்துச் சிவனைக் காக்க வேண்டுகின்றார். சிவனை இவர்,

**''முக்திக்கு வித்தான முதல்,**
**பரப்பிரம்மம்,.**
**வேதாந்தம் கடந்து நின்ற மெய்''**

என்றெல்லாம் போற்றிக் காத்தருள விரும்பி வேண்டுகின்றார் சித்தர்களை. காலம் கடந்த பெரியோர்கள் என்றும், ஞானம் என்ற அமுதப்பாலுண்டு வாழ்பவர்கள் என்றும், வஞ்சனைகள் முற்றிலும் இல்லாத தூய மனத்தினர் என்றும் குறித்துள்ளார்.

**''காலவட்டம் தங்கம் மதி அமுதப் பாலைக்**
**கண்டு பசியாற்றி மனச் சுவடு நீக்கி...''**

என்பது சித்தரின் பதிவு. சிவநெறியே சித்தர் நெறி என்பது நூல் முழுவதும் விளங்கித் தோன்றுகின்றது. இவர் பாடல் பதிப்புக்களில்

www.saivamonline.com

ஏராளனமான பிழைகள் மலிந்துள்ளன. பிராணாயாமம் பற்றியும், இடகலை, பிங்கலை, சுழிமுனை முதலிய கூறுகள் பற்றியும் பலவற்றை இந்நூல் தாங்கி நடையாடுகிறது. பிற்காலச் சித்தர் பாடல்களில் காணப்படும் பேச்சு வழக்கு விளிகள் இவர் பாடல்களிலும் பாரையா, தேரையா, கூறய்யா, ஆரையா என்றெல்லாம் இடம் பெற்றுள்ளன. திருமூலரின் பாடல்களில் காணப்படும் பிராணயாமம் குறித்த கருத்துகள் பலவும் இவரது இந்நூலிலும் வழிமொழியப்பட்டுள்ளன.

## சித்தி - முத்தி வாயில்கள்

உரோமமுனி சித்தி பெறுவதற்கும், முத்தி பெறுவதற்கும் உரிய வழிமுறைகளை இந்நூலுள் முன் வைத்துப் பாடியுள்ளார். நால்வகை முத்தி மார்க்கங்களுள் ஒன்று யோகம் எனப்படுவது. யோகம் என்பது கூடுதல். மன ஒருமைப்பாடு. சொல் விட்டுச் சும்மா இருத்தல். உலக இன்பங்களைத் துய்க்கும் நிலையிலும் அவற்றுள் ஆழ்ந்துவிடாது அன்னியப்பட்டு நிற்றல். அந்த யோகத்தை விட்டவர்க்குச் சித்திகள் ஏதும் இல்லை. சிவ ஞான சித்திக்கு யோகமே வாயில் என்பதை உரோமமுனி.

**"ஒண்ணான மவுனமென்றே யோகம் விட்டால்**
**ஒரு போதும் சித்தியில்லை"**

என்கிறார்.

'ஒன்றான மவுனம் என்னும்', என்று பாடம் ஓதினால் கருத்துச் சிறக்கும். அடுத்து முத்திக்கு வாயில் எது என்று கூறவந்த சித்தர்,

**"பெண்ணார்தம் ஆசைகளை விட்டு வந்தால்**
**பேரின்ப முத்திவழி பேசுவேனே"**

என்று நிறைவிக்கிறார். பெண்ணாசை நீங்கினால் அவ்வாறு வீடுபேறு சித்திக்கும் என்பதை உறுதி செய்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் சேக்கிழார் அவர் பரவையோடு இன்பந்துய்த்த போதும், அவ்வின்பத்திலிருந்து அன்னியப்பட்டு யோக நெறி நின்ற திறம் பேசுவது இங்கே நினைவு கூரத்தக்கது.

## குரு - சீட பரம்பரை

சித்தர் நெறியில் உபதேச பரம்பரை நீள வளர்ந்தமைந்தது. திருமூலர் மரபு, போகர் மரபு, அகத்தியர் மரபு எனப் பல மரபுகள் நிலவுகின்றன. ஆசிரியர்-மாணவர் உறவு சித்தர் மரபில் மிக உன்னதமானது. சீடர்களைப்

www.saivamonline.com

பலகாலும் சோதித்து அவர் தகுதி அறிந்த பின்னரே மாணாக்கராக ஏற்பர். இதனை விளக்கும் நிகழ்வுகள் பல சித்தர் வரலாறுகளில் காணக்கிடக்கின்றன. சித்தர்கள் இருவகையர். ஒன்று தூய துறவு நெறி நின்றார். மற்றொன்று இல்லறத்தார். இல்லறத்தில் நின்றாலும் பந்தங்களிலிருந்து ஒருகால் விடுபட்டு வந்தாரே மாணாக்கராக இயலும். இவற்றை எல்லாம் உள்ளடக்கி உரோமமுனி.

**''அழைப்பதுவும் நல்லபிள்ளை ஆனால் நன்றே**
**ஆகாத சீடர்களைச் சேர்த்தல் தோடம்**
**பிழைப்பதற்கு வழி சொன்னால் பார்க்க மாட்டான்**
**பெண்டாட்டி மனங்குளிரப் பேசும் மாடு''**

என்று அழகிய பாடல் ஒன்றைப் பதிவு செய்கிறார். மனைவி பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாது தலையாட்டி நிற்பவன் என்ற பொருளில், பேசும் மாடு என்று பதிவு செய்ததில் எள்ளல் கலந்து வருவது புரிகிறது.

## மனித ஆயுள் - நூறு

மனித வாழ்வு ஒரு நூறு ஆண்டுகள் கொண்டது என்று கூறும் சித்தர். ஒரு நாளைக்கு ஒரு மனிதன் மூச்சுக் காற்றை உள்வாங்கி, வெளிவிடும் செயல் இருபத்தோராயிரத்து அறுநூறு என்று கணக்கிட்டும் உரைக்கிறார். இந்த எண்ணிக்கையைக் கடவாது மூச்சுப் பயிற்சிச் செய்வார் நூறாண்டு வாழ்வர். சுவாசம் கூடினாலும், குறைந்தாலும் ஆயுள் குறையும் என்கிறார்.

**''உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே**
**ஆமென்றே இருபத்தோ ராயிரத்தோடு**
**அறுநூறு சுவாசமல்லோ ஒரு நாளைக்கு''**

என்றும்,

**''போம் என்று போனதால் நாள் குறைந்து**
**போச்சுது; போகாவிட்டால் போவதில்லை**
**தாம் ஒன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று**
**தான் நினைந்த தன்மை அல்லோ விதிகள் தாமே''**

என்றும் வரும் அரிய தொடர்கள் மனிதர்கள் நினைவு கூரத்தக்கன.

## 24. கோரக்கச் சித்தர்

தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சித்தர்கள் பலராயினும் அவருள் சிலரைத் தொகுத்துப் பதினெண் சித்தர்கள் என்று குறிக்கும் வழக்கு நிலவி

www.saivamonline.com

வருகிறது. பதினெண் சித்தர்களுள் ஒருவர் கோரக்கச் சித்தர். கோரக்கநாதர் என்றும் இவர் அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது தென்மாநிலங்களிலும் வடநாட்டிலும் சீனா முதலிய கிழக்கு நாடுகளிலும் இவர் வரலாறு அறியப்பட்டுள்ளது. கோரக்கர், மச்சேந்திரர் என்ற சித்தரின் மாணாகக்கராக அறியப்படுகிறார்.

பிள்ளைப் பேறு வாய்க்காத பிராமணப் பெண் ஒருத்திக்கு ஒருமுறை மச்சேந்திரர் விபூதிப் பொட்டல் ஒன்றை வழங்கி, இதனைத் தண்ணீரில் கலந்து பருகினால் கருவாய்க்கும் என்று தெரிவித்து விடைபெறுகிறார். பிறர் சொற்கேட்டு நம்பிக்கை இழந்த அந்தப் பெண் விபூதியைக் குப்பை மேட்டில் வீசிவிடுகிறாள். பல ஆண்டுகள் கழித்து அவ்வழியே வந்த மச்சேந்திரர் பிராமணப் பெண்ணைச் சந்தித்து, உன் மகனை அழை, நான் ஆசீர்வதிக்கிறேன் என்று கூற அவள் கண்ணீர் சிந்தி நடந்ததை விவரிக்கிறாள்.

அவள் காட்டிய குப்பை மேட்டை ஒரு குச்சியில் கிளறிக் ''கோரக்கா வருக'' எனச் சித்தர் அழைக்கக் குப்பை மேட்டிலிருந்து கோரக்கர் வெளிப்பட்டு மச்சேந்திரரைத் தொடர்ந்து பயணித்து அவர் சீடராகிறார் ''கோரக்கர்'' என்ற சொல்லுக்குக் குப்பையில் உதித்தவர் என்பது பொருள். ஆசிரியரின் விருப்பத்தை நிறைவேற்றத் தம் கண்களில் ஒன்றைப் பெயர்த்துக் கொடுத்து ஒரு பெண்மணியிடம் வடை ஒன்றைப் பெற்றவர் இவர். நெறி கடந்த தம் ஞானாசிரியரை நெறிப்படுத்த அவர் குழந்தையைக் கல்மீது மோதிச் சுக்கு நூறாக்கிப் பின் உயிர் பெறச் செய்தார். கல்மலை ஒன்றைச் சிறுநீர் பெய்து பொன்மலையாக்கினார். உமையம்மை ஒரு பெண் வடிவில் காட்சியளித்து இவர் பசிப்பிணி தீர அன்னம் வழங்கினார். அல்லமதேவரோடு வாட்சண்டையிட்டுச் சிவன் அருள் பெற்றவர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர். இவர் ஜீவ சமாதி நாகப்பட்டினத்தை அடுத்த வடக்குப் பொய்கை நல்லூரில் அமைந்துள்ளது. ஐப்பசிப் பௌர்ணமி நாளில் பெருவிழா நடைபெற்று வருகிறது. இவர் ஜீவசமாதி கூடிய காலம் கி.பி.1233 என்று அறிய வருகிறது.

மருத்துவம், யோகம், ஞானம் பற்றிய நூல்கள் கோரக்கரால் அருளிச் செய்யப் பெற்றன. போகர் இவருக்கு நெருங்கிய நண்பர். கஞ்சாவைத் தம் மருத்துவ நெறிக்கு முதலாகக் கொண்டார். சீனநாடு சென்று 500 ஆண்டுகள் வாழ்ந்து பல சித்தாடல்களை நிகழ்த்தியவர். உமையை வாலைத் தெய்வமாகப் போற்றி நின்று அருள் பெற்றவர். சித்த

www.saivamonline.com

மருத்துவநெறி, மறை பொருளாகவன்றி வெளிப்பட விரித்துரைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்.

கோரக்கர் இயற்றியனவாக 40 நூல்கள் அறியப்படுகின்றன. இவர் இயற்றிய ஏழு நூல்களை கி.பி.1975-இல் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. ஏழு நூல் தொகுதி என்பது அதன் பெயர். சிவயோகி. மா.இரத்தினசபாபதி பிள்ளை என்பார் ஏடு பெயர்த்து எழுதியுள்ளார். ந.சேதுரகுநாதன் குறிப்புரை வரைந்துள்ள இதனுள் 1. சந்திரரேகை 200. 2. நமநாசத்திறவுகோல் 3. இரவி மேகலை 75. 4. முத்தாரம் 5. நாதபேதம் 25 ஆகிய ஐந்து நல்களும் போகர் இயற்றிய இரண்டு நூல்களும் இடம் பெற்றுள்ளன.

கோரக்கச் சித்தரின் நூல்களுள் தலையாயது சந்திரரேகை 200 என்பதாகும். 200 ஆசிரிய விருத்தங்களால் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. கதிரவன் ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரனைப் போல் சிவனருள் ஞான ஒளி வீசுவதால் இந்நூல் சந்திரரேகை எனப் பெயர் சூட்டப் பெற்றதாகத் தெரிகிறது. உமையை இந்நூல், பார்வதி, தாய், சாமளரூபி, வீரி, பாஸ்கரி, பஞ்சாட்சரதேவி, பரிபுரை, பங்கயவேணி, மாலி என்றெல்லாம் பலவாகக் குறித்துச் செல்கிறது.

சந்திரரேகையில் விந்திறங்காமல் போகம் செய்யும் முறை (பாடல் 57, 117, 142). நரைதிரை நீங்க யோகாசனம் செய்தல் (66), உடல் தளர்ந்திடாமைக்கு வழி (69), வயது மிக வளர்ந்தோங்கவும், ஆயுள் நீடிக்கவும் வழிமுறைகள் (69, 73) ஊழிவினை நீங்க (79), பிறப்பற (67, 81), காயகற்பவிளக்கம் (108), பேய், பில்லி, சூனியம், ஓட்ட (114, 115) பிறர் கண்களுக்குப் புலப்படாமல் மறைதல் (116), என்றும் இளமையோடு வாழ (128), கரணயோகம் (130), சிவனைக் காணும் மந்திரம் (143) முதலிய வியப்பூட்டும் தகவல்கள் யாவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

சித்தர்களின் நூல்களில் மறைபொருளாக உரைக்கப்பட்டுள்ள பகுதிகளை எளிதில் உணர்ந்து கொள்ளக் கோரக்கர் அருளியதோர் நூல் நமநாசத் திறவுகோல். இந்நூலில் 23, 24 ஆம் பாடல்களுள் கோரக்கர் உள்ளிட்ட 19 சித்தர்களின் கொள்கை முடிவுகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இந்நூல் 49, 50 ஆம் பாடல்களுள் எமனை வென்று நீண்ட நல்வாழ்வு வாழ உதவும் மிகுத்துவிஞ்சுக் குளிகை தயாரிக்கும் முறைமை விளக்கப்பட்டுள்ளது. கற்பம் மற்றும் சுண்ணம் செய்யும் முறைமைகள் இரவிமேகலை 75 இல் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

www.saivamonline.com

சித்த மருத்துவம் மறைபொருளாக நில்லாது குழப்பமின்றி விளங்கித் தோன்ற வேண்டும் என்ற கருத்துடையவர் கோரக்கர் என்பது இவரது நூல்களால் அறிய வருகிறது.

கோரக்கர் வழிபாடு இன்றும் நேபாள நாட்டில் அமைந்துள்ளது. காட்மண்டுவில் கோரக்கருக்குத் தனி ஆலயம் உள்ளது. கோரக்கருக்கு நேபாள அரசு விழா எடுத்துக் கொண்டாடுகிறது. அந்நாட்டுக் காகித நாணயங்களிலும், உலோக நாணயங்களிலும் கோரக்கர் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளது. கூர்காஸ் என்ற இனத்தவர் தம்மைக் கோரக்கர் வழி வந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். மராட்டிய மக்கள் கோரக்கரை வீரர் தலைவராகப் போற்றிவருகின்றனர். வட நாட்டில் இவர் பெயரில் கோரக்பூர் என்ற பெரு நகரம் ஒன்று அமைந்துள்ளது.

தமிழ்நாட்டுச் சித்தர் மரபில் தன்னிகரற்று விளங்கும் கோரக்கர் நூல்களை ஓதி உணர்ந்தால் சாகாக்கலை வசமாகும்.

## நிறைவுரை

இலக்கியங்களின் வாழ்க்கையும் கூட இன்று, நிறுவனங்களைச் சார்ந்தே நிற்கும் அவலத்தை உணர முடிகிறது. தலைவர்களைச் சாதி பிரித்துப் போற்றும் அவலத்தைப் போன்றதே இதுவும். தமிழில் தோன்றிய எல்லா இலக்கியங்களையும், ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயமே இவை எம் உரிமைக் கருவூலங்கள் என்று போற்றுதல் வேண்டும். திருக்குறள் ஒன்றைத் தவிர வேறு நூல்களுக்கு இங்கே தமிழர்களின் முழு அங்கீகாரம் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தை, எஞ்சியிருக்கும் சமண அமைப்புக்கள் உரிமை கொண்டாடுவதும், மணிமேகலை போற்றுவார் இன்றி ஒடுங்கி வருவதையும், சிவப்பிரகாசரைப் பதிப்பதையும், கொண்டாடுவதையும் வீர சைவர்கள் மட்டும் தமதாக்கிக் கொண்டதுவும், தமிழ் எழில் ஒழுகும் நாலாயிரத்தை வைணவர்களில் ஒரு கூட்டத்தாரிடம் ஒப்படைத்து நிற்பதுவும், திருமுறைகளுக்குச் சைவத் திருமடங்களே கதி என்பதும் எங்கே போய் முடியும் என்ற கவலையைத் தருகின்றன.

மேற்குறித்தனவும், இவை போன்றனுவுமாகிய குழுக்களால் வரிக்கப் பெறாத ஆயிரக்கணக்கான இலக்கியங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்டது. தமிழ்நாட்டுச் சித்தர் இலக்கியங்களின் கதியும் இதுதான். கண்டுகொள்ளப்படாத, உரிமை கோரப்படாத, கரிசனத்துடன் எடுத்து ஆய்வு செய்யப்படாத ஒரு துறையாகவே சித்தர் நூல்கள் ஒளியிழந்து கிடக்கின்றன. சைவர்கள் பன்னிரு திருமுறை என்று ஒரு

www.saivamonline.com

வரையறைக்குள் தம் நூல்களைக் கொண்டு வந்தனர். வைணவர்கள் நாலாயிரம் என எண்ணிக்கையிட்டுப் பாதுகாவல் செய்தனர். சித்தருலகம் சிந்துவாரின்றிக் கிடக்கிறது. பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள் என்ற குறியீடுகள் எல்லாம் உறுதி செய்யப்படாதவை.

சித்தம் போக்குச் சிவன் போக்கு என்பார்கள். காகபுஜண்டர் போன்ற ஓரிருவரைத் தவிர, ஏனைய, தமிழில் பாடிய சித்தர்கள் அனைவரும் சிவநெறி போற்றி நின்றவர்கள். வாலை என உமையைப் போற்றியவர்கள். மூலாதாரத் தத்துவமாக விநாயகனை ஏற்றுப் போற்றியவர்கள். முருக வணக்கமும் அவர்களிடம் இருந்திருக்கிறது. என்றாலும் மரபு வழிச் சைவர்கள் மற்றும் சைவத் திருமடங்களில் சித்தர்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லை. சித்தர் நெறி வந்த திருமூலருக்கே, சைவத் திருமுறைகளுள் பத்தாவது இடமே வழங்கப்பட்டது. அதுவும் நீண்ட தயக்கங்களுக்குப் பின்னரே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. காரணங்கள் பல உண்டு. ஒருவாறு யூகிக்க முடிகிறது.

மரபும் சடங்காசாரமும் சைவத்தில் நிறைந்து கிடக்கின்றன. சித்தர்கள் சடங்குகளை எதிர்த்தவர்கள். சிவம் ஒன்றே போதும் என மன வழிபாட்டில் நின்றவர்கள். போலியான ஆசாரங்களைக் கேலி செய்தவர்கள். சமய வாழ்க்கையில் சாதியத்திற்கு இடம் இல்லை என்று உரத்த குரல் எழுப்பியவர்கள். உயிர் ஈடேற்ற முயற்சியில் சிறுசிறு முத்தி பேதங்களை முன்னிறுத்திட வேண்டாமென்று கெஞ்சியவர்கள். வேதாந்த சித்தாந்த சமரச நிலைகண்ட வித்தகச் சித்தர்கணம் என்பது தாயுமானார் பதிவு. ஆலய வழிபாட்டுக்கும், விக்கிரக ஆராதனைக்கும் நேசக்கரம் நீட்ட மறுத்தவர்கள். இவை மரபு வழிச் சைவர்களுக்கு ஏற்புடையன அல்லவே. வள்ளலாரை அன்னார் இன்று வரை ஏற்றுப் போற்ற முன் வாராமையே சான்றாகிறது. திருமூலரைப் போல் வள்ளலாரையும், சைவம் ஏற்க வேண்டிய காலம் ஒன்று வந்தே தீரும்.

நல்லவேளையாக மரபு வழிச் சைவர்களின் கட்டு நெகிழ்ந்து வருகிறது. கடுஞ் சுத்த சைவம் எல்லாம் கதைக்கு உதவாது என்பது உணரப்பட்டு வருகிறது. சித்தர்களைச் சிவநெறியோடு இணைப்பதற்கு வாய்த்த தருணம் இது. சித்த நெறி போற்றுவாரும், சித்த நூல் ஆய்வாளர்களும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சித்தர் வரலாறுகள் ஆராய்ந்து நிறுவப்பட வேண்டும். நூல்கள் முறையாகத் தொகுக்கப்பட வேண்டும். சித்தர் நூல்களில் காணப்படும் மருத்துவக் கூறுகள் கண்டறிந்து மெய்ப்பிக்கப்பட வேண்டும். சித்தர் சமயம் இன்னது என்று உறுதி செய்யப்பட வேண்டும், சித்த மருத்துவத்திற்கும்

www.saivamonline.com

சித்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய கொடைகள் கண்டறியப்பட வேண்டும். யார் செய்யப் போகிறார்கள் என்பதுதான் புரியாது நிற்கிறது.

கோரக்கச் சித்தர் பற்றியும், காகபுஜண்டர் பற்றியும் ஆராய்ந்து, பெருமுயற்சியோடு இரண்டு நூல்களை நான் வெளிக் கொணர்ந்தேன். மறுபதிப்புச் செய்வாரைக் காணோம். தரவுகள் தேடித் தொகுத்து அடுத்த முயற்சியில் ஈடுபட நேசக்கரம் நீட்டுவாரை எத்திசையிலும் காண முடியவில்லை. பல்கலைக் கழகங்களில் உள்ள தத்துவத் துறைகள் இம்முயற்சியில் ஈடுபடலாம். முனைவர் பட்டத்திற்கு ஆய்வாளர்களைத் தயாரிப்பதும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நடத்துவதுமே தலையாய பணி என்று கருதுவோரால் இவற்றைச் சாதிக்க இயலாது. பல சித்தர்களை வரித்துக் கொண்டு, சித்தர் பீடங்கள் பல செயல்பட்டு வருகின்றன. அவைகளுள் குருபூஜை கொண்டாட்டங்களிலேயே கருத்தூன்றி நிற்கின்றன.

சித்தர்களிடம் நல்ல தமிழ் இருக்கிறது. சித்தர் பாடல்களே சந்தக் கவிதைகளின் மூல வடிவங்கள். யாப்பலங்காரங்களுக்குக் கட்டுப்படாத - ஆனால் அழகிய கவிதை நெறிகளை அவர்கள் படைத்தளித்துள்ளனர். பூடகச் சொற்கள் பல பொருள் காண மாட்டாது அங்கே உறங்கிக் கிடக்கின்றன. கரந்துறை உரையாடல்கள் கண்டு தெளியப்பட வேண்டியுள்ளன. சித்தர்களைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களுக்கு அவர்களையும், அவர்கள் தமிழையும் இனங்காட்ட சில சித்தர்களைப் பற்றி நான் எழுதினேன். அவற்றை முன்பு எழுதியவாறே மீண்டும் இங்கே பதிவு செய்துள்ளேன். சித்தர்களுக்கு வாழ்வு தர வேண்டும் என்ற எண்ணம் சிலருக்காவது அரும்புமானால் எல்லாருக்கம் அது மகிழ்ச்சியைத் தரும்.

www.saivamonline.com

# 2. கோரக்கச் சித்தர்

## முன்னுரை

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் கோரக்கச் சித்தருக்குச் சிறப்பான தனி இடம் உண்டு. நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள் பட்டியல்களில் எல்லாம் கோரக்கச் சித்தர் பெயர் தவறாது இடம் பெற்றுள்து. தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரையில் முன் வரிசையில் வைத்து எண்ணப்படும் அகத்தியர், திருமூலர், போகர் முதலியவர்களோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்க பெருமைமிக்கவர் கோரக்கச் சித்தர். கோரக்கர், கோரக்கச் சித்தர், கோரக்க நாதர், ஸ்ரீமத் கோரக்கநாதப் பெருமான் எனப் பல பெயர்களில் இவர் வழங்கப் பெறுகிறார். தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்திய நாட்டின் தென், வட மாநிலங்களிலும், சீன நாடு முதலிய கீழை நாடுகளிலும் கோரக்கர் வரலாறு அறியப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்திருக்கும் வரலாற்று ஆதாரங்களை முறைப்படுத்தி, ஆராய்ந்து ஒருவாறு கோரக்கர் அருள் வரலாறு இவ்வியலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

## வரலாற்று மூலங்கள்

கோரக்கர் அருள் வரலாற்றை ஆராய்வதற்குச் சில ஆதாரங்களே கிடைக்கின்றன. கி.பி.1899-ஆம் ஆண்டில் சென்னை, திரு.ஆ. சிங்காரவேலு முதலியார் எழுதி வெளியிட்ட அபிதான சிந்தாமணியில் கோரக்கர் வரலாறு பற்றியும், இவரது குருநாதராகக் கருதத்தக்க மச்சேந்திர நாதர் வரலாறு பற்றியும் சில குறிப்புகள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அவற்றுள் பல செய்திகள் கர்ண பரம்பரைச் செய்திகள் என நூலாசிரியராலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. சில செய்திகள் மட்டுமே ஒப்பு நோக்கி நிறுவத்தக்கனவாக அமைகின்றன. கற்பனைக் களஞ்சியம் எனப் பாராட்டப் பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

www.saivamonline.com

தாம் இயற்றிய 'பிரபுலிங்க லீலை' என்ற நூலுள் 'கோரக்கர் கதி' என ஒரு இயல் வகுத்துச் சில செய்திகளை வழங்கியுள்ளார். அடுத்து, அச்சிட்டு வழக்கில் நிலவும் சித்தர் பாடல்களில் கோரக்கர் வரலாறு பற்றிச் சில சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து பெறப்படும் செய்திகளும் ஒரே வகையாக அமையாமல், புதிய சிக்கல்களை வரலாறு காணும் முயற்சியில் தோற்றுவிக்கின்றன.

## வரலாற்றுப் புறக்கணிப்பு

கோரக்கச் சித்தரின் வரலாற்றை ஆராய்ந்து நிறுவுவதில் தமிழ் இலக்கியங்களோ, சமய இலக்கியங்களோ சிறிதும் உதவுவனவாக இல்லை. சித்தர்கள் போற்றிய நெறி சிவநெறியாக இருப்பினும், சைவ சமய இலக்கியங்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. இலக்கிய, இலக்கண உரைகளிலும் சித்தர் தம் வரலாற்றுக் குறிப்புகளோ, அன்றி இவர்கள் பாடிய ஞானப்பாடல்களோ இடம் பெறவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும் சித்தர்களை விரிவாக ஆராய முற்படவில்லை. முறையான - கட்டுக்கோப்பமைந்த இலக்கிய வடிவம், மற்றும் யாப்பமைதி சித்தர் பாடல்களில் இல்லாமை பற்றியோ, அன்றி, அவற்றில் காணப்படும் எளிமை பற்றியோ, சடங்குச் சமயத்தைச் சாடும் அவற்றின் உள்ளீடு பற்றியோ, மற்று யாது காரணம் பற்றியோ சித்தர் நூல்களில் பல இலக்கிய வரலாற்றில் இடம் பெறவில்லை. எனினும் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் சிலர் தம் நூல்களில் சித்தர்கள் பற்றியும் அவர் தம் நூல்கள் பற்றியும் குறிப்புகளைத் தந்துள்ளனர்.

## வரலற்று முன்னோடிகள்

கடந்த இருபது ஆண்டுகளில் அறிஞர் சிலர் எழுதிய நூல்கள் கோரக்கச் சித்தர் வரலாறு அறியச் சில குறிப்புகளைத் தந்து உதவுகின்றன. மேனாட்டார் எழுதிய ஆங்கில நூல் ஒன்றில் சில அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. மற்றும் கோரக்கர் பாடியனவாகக் கருதத் தக்க 'சந்திரரேகை' முதலிய நூல்களில் சில செய்திகள் உள்ளன. கோரக்கச் சித்தரின் பால் அன்பு பூண்ட ஒரு சில நண்பர்களும், இவர் ஜீவசமாதி கொண்ட வடக்குப் பொய்கை நல்லூர் மக்களும் சில வரலாற்றுத் துணுக்குகளை வழங்குகின்றனர். இவையன்றி 'திருநாகைக் காரோணத்தல புராணம்', 'சதுரகிரி மகாத்மியம்' முதலிய நூல்களில் சில செய்திகள் உள்ளன. இவற்றின் துணைக் கொண்டு கோரக்கச் சித்தர் வரலாறு ஒருவாறு இங்கு தெளிவுபடுத்தப் பெறுகிறது.

www.saivamonline.com

## அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை

எல்லாம்வல்ல பரமகருணையாளன் சிவ பரம்பொருள். அவன் உயிர்கள் பால் அளப்பரிய கருணை பூண்டு, அவற்றை வாழ்விக்கவும், அவற்றுக்கு அருள்பாலிக்கவும் மானுடச்சட்டை தாங்கி நிலவுலகிற்கு வருகின்றான். மானுடர்க்கு மட்டுமின்றிச் சிற்றுயிர்களிடமும் அவன் கருணை வெள்ளம் பாய்ந்து பரவுகின்றது. இறைவனது பரம கருணைக்கு உயிர்கள் என்ன கைம்மாறு செய்ய இயலும்? கரவற்ற, உண்மையான அன்பு ஒன்றை மட்டுமே இறைவுன் உயிர்களிடம் எதிர்பார்த்திருக்கிறான். அன்புக்காகக் கல்லடியை விரும்பி ஏற்கிறான். பிரம்படி பட்டுப் பெருமை கொள்கிறான். வில்லடியில் விருப்பம் காட்டுகின்றான். செருப்பால் உதைக்கினும் அன்பு கண்டு சிந்தை குளிர்கிறான். அன்பர்களுக்காகத் தூது நடக்கிறான். அவர் துயர் தீர்க்க இல்லங்கள்தோறும் சென்று பிச்சை ஏற்று அன்னம்பாலிக்கின்றான். ஆயின், அற்ப மானுடர்கள் அவனையும் அவன் கருணையினையும் இனங்கண்டு போற்ற இயலாதவர்களாகவே வாழ்ந்து மடிகின்றனர்.

## குருவே சிவம்

தமிழ்நாட்டில் வாழ்ந்து சிவனருள் பெற்ற அடியார்களைச் சிவனாகவே போற்றி வழிபடுதல் மரபு. உலகினை உய்விக்க வந்த இத்தகு அருளாளர்கள் இறைவனின் ஞானத் தூதுவர்களே! இவர்களைக் குருவாகக் கருதி, அவர் வழி நின்று உய்தி பெற வேண்டுமென்பதே சைவப் பெரு நெறி. ‘குருவே சிவமெனக் கூறினன் நந்தி’ என்பார் திருமூலர். பெரிய புராண அடியார்கள் போற்றிய நெறி குரு, லிங்க சங்கம நெறியே என ஆய்வாளர்கள் அறுதியிட்டு உரைக்கின்றனர். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான், ஒரு தாய் வயிற்றில் கருவாய்க்கிடந்து பிறந்ததாக வரலாறு இல்லை. இச்சா மாத்திரத்தில் அவன் விரும்பிய திருமேனி கொண்டு, விரும்பிய இடத்திற்கு எழுந்தருளும் இயல்பினன். தமிழ்நாட்டுச் சைவ அருளார்களும், சிவநெறி போற்றிய தமிழ் நாட்டுச் சித்தர்களும், சிவமாகவே போற்றி வழிபடத்தக்கவர்கள். இக்கருத்திற்கு அருள்மிகு கோரக்கச் சித்தர் பெருவாழ்வு நமக்கு மேலும் அரண் செய்யும் அற்புத வாழ்வாய் அமைகிறது.

## அம்மைக்கு உபதேசம்

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே ஒரு நாள் சிவபரம்பொருள் ஒரு கடற்கரையில் அமர்ந்திருக்கிறார். ஐயன் அளந்த இருநாழி நெல் கொண்டு

www.saivamonline.com

உயிர்கள் உய்ய முப்பத்திரண்டு நல்லறங்களையும் அன்று இயற்றியவளும், பசித்தழுத குழந்தைக்குத் திருமுலைப்பாலில் சிவஞானம் குழைத்து ஊட்டியவளும், அமாவாசை நாளில் தம் திருத் தோடுகளில் ஒன்றை விண்ணில் வீசித் தண்ணிலாவை வலம் வரச் செய்தவளும், தமிழ் பூண்ட மகிழ்வில் சிறுமியாக எழுந்தருளி மன்னன் மார்பிற்கிடந்த முத்தாரத்தை எடுத்துக் கவிஞனின் கழுத்தில் அணிவித்து மறைந்தவளும், உலகைப் படைத்தளிக்கும் பரம கருணை கொண்டவளுமாகிய உமையம்மையார் தம் துணைவர் எதிரில் அமர்ந்திருந்தார். சிவபெருமான் தாரக மந்திரத்தை நெடுநேரம் அம்மைக்கு உபதேசித்தார். சோர்வில் அம்மை சற்றே கண்ணயர்ந்தார்.

## மச்சேந்திரர் வருகை

தாம் உபதேசித்த தாரக மந்திரத்தைக் கடல் நீரிற் கிடந்த, கருவுற்ற மீன் ஒன்றும், அதன் வயிற்றில் கருவாய்க்கிடந்த அதன் குஞ்சு ஒன்றும் விரும்பிக் கேட்டிருப்பதைக்கண்ட சிவபரம்பொருள், அயர்ந்திருந்த உமையம்மையை எழுப்பி இதனைக் கூறலானார். அதுகேட்டு அம்மையும் வியப்பு எய்தினார். 'தாரக மந்திரத்தின் பெருமை உணராதாள்போல் நீ உறங்கினை! அதனைச் செவிமடுத்த மீன் குஞ்சு எய்திய பேற்றினை இப்போது நீ காண்பாயாக!' எனச் சிவபரம்பொருள் கூறி, கருவுற்ற மீனைக் கருணையோடு நோக்கினார். தாரகத்தால் வாசக தீட்சையும், பார்வையால் நயன தீட்சையும் பெற்ற மீனின் வயிற்றிலிருந்து அழகிய ஆண் குழந்தை ஒன்று வெளிப்போந்து அம்மையப்பரை வணங்கி நின்றது. இறைவன் அக்குழந்தைக்கு 'மச்சேந்திரன்' எனத் திருநாமஞ்சூட்டி, 'நாடெங்கும் சென்று நமது நெறி பரப்பி சித்தாடி மக்கள் துயர் தீர்த்து வருக' எனக் குழந்தைக்கு விடை கொடுத்து அம்மையோடு மறைந்தருளினார்.

## சிவ சித்தராதல்

மீன் வயிற்றில் தோன்றி, சிவபரம்பொருளின் பரம கருணையினைப் பெற்ற மச்சேந்திரர், ஓதாது உணர்ந்த சிவஞானம் கைவரப் பெற்றார். அம்மையைப்பர் நினைவோடு நாடெங்கும் சுற்றித் திரிந்தார். மலைகளிலும் காடுகளிலும் கடுந்தவம் புரிந்தார். இறையருளால் அரிதாய திருமேனியும், இரும்பைப் பொன்னாக்கும் ரசவாதமும், மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவத்திறமும், அளவற்ற சித்துக்களும் கைவரப் பெற்றார். உலகத்தார் கண்களுக்குத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாது, தாம் இருக்குமிடம் தேடிவந்து எவரேனும் அன்னமிட்டால் உண்டு,

www.saivamonline.com

*சிவஞானியாக - சிவயோகியாக - சிவசித்தராக மச்சேந்திரர் வாழ்ந்து வந்தார்.*

## மச்சேந்திரர் வழிநடை

*மச்சேந்திரர் நெடுநாள் கொல்லிமலையில் யோகத்தில் தலைநின்றார். ஓர் நாள் கொல்லிமலையை விட்டுப் புறப்பட்டுப் பொதிய மலைக்குச் செல்லும் விருப்போடு தென்திசை நோக்கிப் பயணம் மேற்கொண்டார். விண் வழிச் செல்லும் சித்து உடையவராயினும் மக்களைச் சந்திக்கவும், அவர்கள் துயர் தீர்க்கவும் வேண்டும் என்ற அவரது கருணை உள்ளம் நடந்து செல்லத் தூண்டியது. இடை வழியில் சம்பல்பட்டி என்ற சிற்றூர் வந்தடைந்த மச்சேந்திரர், தாகமேலீட்டால் நீர் பருகும் விருப்போடு ஓர் இல்லத்தின் வாயிலிற் சென்று நின்றார். அந்த இல்லத்துத் தலைவராகிய சிவராம தீட்சிதர் என்பார் அக்காலை இல்லத்தில் இல்லை. அவர்தம் துணைவியார் மட்டுமே இருந்தனர். அம்மையாரும் வாயிலில் நின்ற மச்சேந்திரரை இன்னார் என அறியார் எனினும், சிவஞானி என்பதை உணர்ந்தார். எனவே முகமன் கூறி வரவேற்று, அன்புடன் உணவளித்து, பசியும் தாகமும் தீர்த்துச் சித்தரைப் பணிந்து வணங்கினார்.*

## மகப்பேறளித்திடும் திருநீறு

*தாகம் தீர்த்ததோடு உணவும் படைத்தளித்த சிவராம தீட்சிதரின் மனைவியாரை வாழ்த்தி விடைபெற்ற மச்சேந்திரர், அம்மையார் முகத்தில் இழையோடும் சோகத்தைக் குறிப்பால் உணர்ந்தார். பன்னலமும் பல் வளமும் பெற்றிருந்த அம்மையாருக்கும் ஒரு கவலை உண்டு என்பதை அவர் முகம் காட்டியது. குறிப்பில் குறிப்புணரும் திறம் பெற்ற மச்சேந்திரர் அம்மையாரிடம் அதன் காரணத்தை வினவினார். அம்மையார் கண்ணீர் வடித்த வண்ணம் தனக்கு மங்கலமாகிய மனைமாட்சிகள் அமைந்தும், அதன் நன்கலமாகிய பிள்ளைப்பேறு வாய்க்காத பெருங்குறையை மெல்லிய சொற்களால் சித்தர் திருமுன்பு விண்ணப்பித்தார். நெஞ்சம் நெகிழ்ந்த மச்சேந்திரர் 'தாயே! உன் கவலை நீங்கும்! பரமஞானி ஒருவன் நினக்கு நன் மகனாக வந்து பிறப்பான்' எனக்கூறி, இடையில் இருந்த திருநீற்றை எடுத்துத் திருவைந்தெழுத்து ஓதி, சிவனடியைச் சிந்தித்து, ஓர் பச்சிலையுள் வைத்து வழங்கி 'அம்மையே! நீராடி விட்டு சிவத்தியானம் செய்து இக்கவசத் திருநீற்றினை நீயும் நின் கணவனும் அணிந்து மகிழுங்கள்; எஞ்சியதைத் தூய நீரில் இட்டுப் பருகுங்கள்; உங்கள் குறை நீங்கும்' எனக் கூறி ஆசீர்வதித்தார். பின்னர் மச்சேந்திரர் பொதிகை நோக்கிப் புறப்பட்டார்.*

www.saivamonline.com

## மகப்பேற்றை அழித்த ஐயம்

சமயவாழ்வு நம்பிக்கையையே அடித்தளமாகக் கொண்டது. அற்பமான வெற்று ஐயப்பாடுகளும், பயனற்ற வீண் ஆராய்ச்சிகளும், சமயத்துறையில் ஈடேற்றத்திற்குத் தடைக்கற்களே! 'நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு' என்பர் முன்னோர். 'பழிக்கே சுழன்று, பாவங்களே செய்து, பாழ்நரகக் குழிக்கே விழும் 'கயவர் கூற்றுகளும், கூட்டுறவுகளும் அகலும் போதே இறையருள் கிட்டும். சிவராம தீட்சிதரின் துணைவியார், மச்சேந்திரர் வழங்கிய திருநீற்றினைப் பூசை அறையில் வைத்துவிட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்களுடன் நீர் முகந்துவரச் சென்றனர். பேச்சுப்போக்கில் மச்சேந்திரர் வந்த செய்தியையும், அவர் திருநீறு வழங்கிய கருணையினையும், மகப்பேறு சித்திக்கும் என்று அவர் கூறிய உறுதிப்பாட்டையும் அம்மையார் உடன் வந்த பெண்களிடம் எடுத்துரைத்தார். இதைக்கேட்ட பெண் ஒருத்தி, 'கண்டவரிடம் எல்லாம் திருநீறு பெறலாமா? கயவர் சிலர் பெண்களை வசியப்படுத்தவும் இங்ஙனம் செய்வர்; எனவே, அதனை அணிய வேண்டாம்' என்று அவள் அறிவுக்கு எட்டியதைக் கூறினாள். உடனே அம்மையாரும் அவள் வார்த்தைகளை நம்பி, மச்சேந்திரர் அளித்த திருநீற்றை எரியும் அடுப்பில் போட்டு விட்டு வாளாயிருந்துவிட்டார். மச்சேந்திரரையும், அவர் கொடுத்த திருநீற்றையும் மறந்தே போய்விட்டார். பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டன.

## சித்தர் வினா: அம்மையார் விடை

பொதியமலை சென்று யோகம் புரிந்து சித்தி பல பெற்ற மச்சேந்திரர் மீண்டும் கொல்லிமலை நோக்கிப் பயணமானார். இடையில் சம்பல்பட்டி குறுக்கிட்டது. மச்சேந்திரருக்குச் சிவராம தீட்சிதரின் இல்லத்தில் உணவுண்டமை நினைவுக்கு வந்தது. அவர் இல்லம் நாடிச் சித்தர் சென்றனர். வாயிலில் நின்றிருந்த தீட்சிதரின் துணைவியாருக்குச் சித்தரை அடையாளம் தெரியவில்லை. சித்தர், பத்தாண்டுகளுக்கு முன் உணவிட்ட பாங்கினை நினைவு கூர்ந்து, 'அம்மா! உன் மகன் நலந்தானே! அவனை அழை! கண்டு ஆசீர்வதிக்கின்றேன்!' எனக் கூறினார். தீட்சிதர் துணைவியார் உளம் நடுங்கிக் கண்ணீர் சிந்தித் தேம்பி நின்றனர். 'சுவாமிகளே! அந்தப் பேறு இவ்வேழைக்கு இப்பிறப்பில் இல்லை' என வருந்திக் கூறித் திருநீற்றைப் பயன் கொள்ளாது, ஐயுற்ற தன் அறியாமைக்கும் நாணி வாட்டமுற்று வருந்தி நின்றார்.

www.saivamonline.com

## தனதுரை எனதுரை

மச்சேந்திரருக்கு உள்ளத்தே சினம் சிறிது தோன்றிற்று. எனினும், அதனை வெளிக்காட்டாது, ஞானத்தால் நிகழ்ந்தனவற்றை உணர்ந்தார். 'திருவருள் வலிது' என்பதையும், 'திருநீறு அருமருந்து' என்பதையும், 'தம் வாக்கு இறைவன் உள்நின்று உணர்த்த உரைத்த வாக்கு ஆதலால் பொய்யாகாது' என்பதனையும் நினைந்தார். தீட்சிதரின் துணைவியாரை நோக்கி 'விபூதியை அடுப்பில் இட்டதாகக் கூறினீர்களே! அந்த அடுப்புச் சாம்பலை எங்கே கொட்டினீர்கள்' என வினவினார். அம்மையார் கொல்லையில் இருந்த குப்பைக் குழியில் கொட்டியதாகக் கூறினார். உடன் மச்சேந்திரர், என்னை அழைத்துப் போய் அவ்விடத்தைக் காட்டுக' எனப் பணித்தார். அம்மையாரும் அழைத்துப் போய்க் குப்பைக் குழியைக் காட்டினர். இதற்குள் ஊரவர் அனைவரும் விரைந்து வந்து அங்கே குழுமினர்.

## குப்பையில் உதித்த கோரக்கர்

குப்பைக் குழியைக் கண்ட மச்சேந்திரர், இறையருளை நினைத்து தன் வாக்கு பொய்யாது என்ற உறுதியோடு, 'கோரக்கா' என உரக்கக் கூவி அழைத்தார். ஏன்? என ஒரு குரல் குப்பைக் குழியின் உள்ளேயிருந்து வெளிப்பட்டது. கேட்டோர் எல்லாரும் திகைப்பில் ஆழ்ந்தனர்! சிலர் கைவிதிர்த்தனர்! சிலர் நெஞ்சம் நடுங்கினர்! சிவராம தீட்சிதரின் துணைவியார் கண்ணீர் சொரிந்தனர். மச்சேந்திரரோ இறைவன் திருவருளை வியந்தவண்ணம் ஒரு கோல் கொண்டு குப்பைகளை அகற்றினார்; என்ன வியப்பு! நெற்றியில் திருநீறு துலங்க, அள்ளி முடித்துக் கட்டிய சிறு குஞ்சி அசைய, இடையில் சிற்றாடை உடுத்திய சிறுவன் ஒருவன் மலர்ந்த முகத்தோடு கை கூப்பியவாறு குப்பைக் குழியிலிருந்து வெளிப்பட்டான். வெளிப்பட்ட சிறுவன் நேரே சென்று மச்சேந்திரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். மச்சேந்திரர் அவனை வாரி எடுத்து, உச்சிமோந்து ஆசீர்வதித்தனர். பின்னர் தீட்சிதர் மனைவியாரை நோக்கி 'அம்மா! இதோ உங்கள் அன்பு மகன்! இப்போது ஒன்பதாண்டுக் குழந்தையாக வளர்ந்துள்ளான்! இனி உங்கள் கவலை தீரும்' என்ற மச்சேந்திரர், கோரக்கரை நோக்கி 'உன் தாயை வணங்குக' என்று பணித்தனர்.

## கோரக்கரின் குருபக்தி

ஆசாரியன் கட்டளைப்படி அம்மையாரைக் கோரக்கர் வணங்கி எழுந்தார். மச்சேந்திரர் அம்மையாரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

www.saivamonline.com

உடன் கோரக்கரும் தாயாரிடமிருந்து விடுபட்டு மச்சேந்திரரைப் பின் தொடரலானார். தாய் தடுக்க முனைந்தபோது 'அம்மா! எனக்குத் தாயும் தந்தையும் எம் குருநாதரே அன்றி வேறொருவர் இல்லை! என்னைத் தடுக்க வேண்டாம்' எனக்கூறி அனைவரும் வியக்க அவரைப் பின் தொடர்ந்தார். தம் சீடரின் பரிபக்குவம் உணர்ந்த மச்சேந்திரர் கோரக்கரைத் தம் தலை மாணாக்கனாகக் கருதி ஞான நூல் பலவும் கற்பித்து, அருளுபதேசம் செய்து தம்மோடு உடனுறையுமாறு பணித்தனர். ஆசிரியரே எல்லாம் எனக் கொண்ட பண்பால் ஞானங்கள் யாவும் கோரக்கர்பால் நிரம்பின. அளவற்ற ஆற்றல்கள் பல அவர்பால் நிறைந்தன. குருவருளும் திருவருளும் கூடும்போது எல்லாப்பேறுகளும் வந்து இணைவதில் வியப்புக்கு இடமேது?

## ஞானச் சீடர்கள்

உத்தம சீடர்களுக்குரிய இலக்கணங்களோடு மச்சேந்திரரிடம் கோரக்கர் குருகுலவாசம் செய்து வந்தார். ஞானநெறி நிற்பார்க்கு உலகியல் நாட்டம் இருப்பதில்லை. உணவு - உடை - உறையுள் பற்றிய கவலைகள் அவர்களை ஒரு நாளும் அணுகா! சீடர்கள் தம் ஞானாசிரியரின் பக்குவமறிந்து அவர்தம் தேவைகளை உரியவாறு நிறைவு செய்வது தம் கடமை எனக் கருதி வாழ்ந்தனர். அதனை நிறைவேற்றுவதில் உள்ளார்ந்த மகிழ்வும் நிறைவும் கொண்டனர். ஆசாரியரின் நலத்திற்காகத் தம் உடல், பொருள், ஆவியையும் அர்ப்பணிக்கத் துணிந்தனர். 'அன்றே என்றன் ஆவியும், உடலும், உடைமை எல்லாமும் குன்றேயனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ' என்ற தெளிவில் அவர்கள் வாழ்ந்தனர், 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உறுதியில் தலை நின்றனர்.

## கோரக்கர் பிச்சை ஏற்றல்

தம் சீடர் கோரக்கரின் பரிபக்குவ நிலையை நன்கு உணர்ந்த மச்சேந்திரர், அதனை ஏனைய மாணாக்கர்களுக்கும் உணர்த்த விரும்பினர். அதற்குத் தக்க தருணம் ஒன்று வாய்த்தது. ஒரு நாள் கோரக்கர், தம் ஆசிரியரின் பசிப்பிணியை நீக்க வேண்டி, அருகில் இருந்த ஒரு சிற்றூரில் பிச்சை ஏற்கப் புறப்பட்டார். தம் சித்து வன்மையால் வேண்டியவற்றை, வேண்டியவாறே பெறும் வல்லமை கோரக்கருக்கு உண்டு. எனினும், சிவஞானிகளுக்கு உணவிட்ட புண்ணியப் பேறு மக்களுக்கும் வாய்க்க வேண்டும் என்ற கருணை உள்ளத்தால் அவர் பிச்சை ஏற்றுவர ஊருக்குள் சென்றார். அவ்வூர் அந்தணர் தெருவிற்குள்

www.saivamonline.com

புகுந்து ஒரு பார்ப்பனர் இல்லத்தின் முன் பிச்சையிட வேண்டி நின்றார். அன்று அப்பார்ப்பனர் இல்லத்தில் நீத்தார் நினைவுநாள். ஆதலால், பார்ப்பனி உணவுகளோடு ஒரு வடையையும் கோரக்கருக்கு வழங்கினார். ஆசிரமம் திரும்பிய கோரக்கர் உணவோடு வடையையும் மச்சேந்திரருக்குப் படைத்தார்.

## துறவியின் பற்று

கோரக்கர் படைத்த உணவினையும் வடையினையும் உண்ட மச்சேந்திரர், மறுநாள் மாணவர் பிச்சை ஏற்று வந்து உணவு படைத்தபோது கோரக்கரை நோக்கி, நாச்சுவைக்கு அடிமைப்பட்டவர் போல், 'நேற்று பிச்சை ஏற்று வந்து கொடுத்த வடையின் சுவை நாவில் நிற்கிறது. இன்னும் வடை உண்ண விருப்பமாக உள்ளது' என்றனர். ஆசாரியர் விருப்பம் உணர்ந்த கோரக்கர் முன்தினம் உணவிட்ட பார்ப்பனியிடம் சென்றார். தம் குருநாதர் விருப்பம் உரைத்து 'இன்றும் வடை ஒன்று தருக' என்று வேண்டினர். நகைத்த பார்ப்பனி, 'நேற்று எம் இல்லத்தில் நீத்தார் நினைவுநாள். வடை சுட்டோம்! நாடோறும் வடை சுடுவாருண்டோ? துறவிகளுக்கு நாவடக்கம் வேண்டாமோ? ஆசிரியரே விரும்பினாலும், இவ்வாசை பொருந்தாது என நீர் எடுத்துரைத்தலாகாதோ' எனக் கோரக்கரிடம் ஏளனமாகக் கூறினாள்.

## பார்ப்பனியின் பரிகாசம்

மெய்ஞ்ஞானிகளை, உலக வாழ்வில் சிக்குண்டு சுழலும் மக்களாகிய அஞ்ஞானிகள் உண்மையாக அறிதல் இல்லை. எனவே, பார்ப்பனி சொல் கேட்டுக் கோரக்கர் வருந்தவில்லை! மாறாக, 'அம்மா! ஆசாரியன் விருப்பதை நிறைவேற்றுவதை விட மேலான கடமை மாணாக்கருக்கு உண்டோ? மறுக்காது, எங்ஙனமாவது வடை சுட்டு உடன் வழங்கி உதவுங்கள்' எனப் பணிவுடன் வேண்டினர். பார்ப்பனி கோபமுற்று கோரக்கரை நோக்கி, 'குருவின் விருப்பம் என்று கூறுகின்றீர்களே; குருவின் பொருத்தமற்ற ஆசைகளுக்கும் உடன் படுவீர்களோ?' என வினாவினள். மேலும் 'உம்குரு ஒருநாள், உன் கண்களைத் தா' என்று கேட்டால் கொடுப்பீரோ?' என்று கேலியாகக் கேட்டாள். அங்ஙனம் தருவீராயின் நானும் வடை தருவேன் என்றாள். பார்ப்பனியின் பேச்சு கோரக்கர் உள்ளத்தில் மேலும் மேலும் உறுதியைத் தோற்றுவித்தது.

## கண்ணே வேண்டினும் ஈயக் கடவேன்

கோரக்கர் உடலும் உள்ளமும் சிலிர்த்தார். என் அடிமைத்திறத்தை

www.saivamonline.com

என்னென்று நினைத்து இவள் இகழ்ந்தாள்? ஆசாரியனுக்காக கண் என்ன? உயிரையும் ஈயும் உறுதியுடையேன் நான்! என நெஞ்சில் உரம் கொண்டார். அடுத்த நொடியே தம் இடையில் வைத்திருந்த கூரிய கத்தி ஒன்றை எடுத்துத் தம் வலக்கண்ணினைப் பெயர்த்தார். அதனை இலை ஒன்றில் வைத்துப் பார்ப்பனி முன் நீட்டி, 'அம்மா! இதனைப் பெற்றுக் கொண்டு என் ஆசாரியார் விருப்பத்தை நிறைவேற்ற வடை ஒன்றை விரைவில் சுட்டுத்தாருங்கள்' என வேண்டி நின்றார். கோரக்கர் செயல் கண்ட பார்ப்பனி நடுங்கினாள். அவர் திருவடிகளில் வீழ்ந்து எழுந்தாள். விம்மிதமுற்ற அவள் விரைந்து சென்று நெய்யில் வடை சுட்டு, 'இதனை உம் ஆசிரியருக்கு வழங்குக' என்று கூறி அளித்தனள். கோரக்கர் மகிழ்வோடு மச்சேந்திரர் திருமுன்பு சென்று வடையினைப் படைத்தனர். உண்டு மகிழ்ந்த மச்சேந்திரர் நிமிர்ந்து கோரக்கரை நோக்கினார். அவர் முகத்தில் வலக்கண் இல்லாதது கண்டு திகைத்துக் காரணம் வினவினார். நடந்தனவற்றைக் கேரக்கர் எடுத்துரைத்தார். மகிழ்ந்த மச்சேந்திரர் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாது இறையருளைச் சிந்தித்து இழந்த கண்ணை மீண்டும் அவருக்கு வழங்கியருளினார்.

## கோரக்கர் உயர்வு

கோரக்கரின் உள்ள உறுதி கண்டு ஒரு சாலை மாணாக்கர் பலரும் வியந்து நின்றனர். உலகினர் அவரது ஆசாரிய அன்பினையும், பரிபக்குவ நிலையினையும் உணர்ந்து போற்றினர். இறையருளோடு குருவருளும் இணையப் பெற்ற கோரக்கர், சித்துக்கள் பலவும் கைவரப் பெற்றார். மாணாக்கரின் தகுதி உணர்ந்த மச்சேந்திரர் கோரக்கர் தனித்துத் தவமியற்றி மேலும் பல வல்லமைகள் பெற்றிட ஆசீர்வதித்தார். தாம் இந்திய நாடெங்கும் பயணம் மேற்கொள்வதாகக் கூறி, கோரக்கரிடம் விடைபெற்றார். ஆசாரியரைப் பிரிய மனமில்லையாயினும், அவரது ஆணை வழி நிற்பது கடமை எனக்கருதிய கோரக்கர் அவரை அரிதிற் பிரிந்து யோகநெறி தலைப்பட்டார். வடபுலம் சென்ற மச்சேந்திரர் பல ஆண்டுகளுக்குப் பிறகு மலையாள நாட்டுக்குத் திரும்பி, சித்துக்கள் பல புரிந்து வாழ்ந்திருந்தார்.

## காட்டாக்கால் காண்பார் யார்?

'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்பார்கள்! சித்தர் நெறி சிவநெறியே அன்றி வேறு பவ நெறி அன்று என்பதே இதற்குப்பொருள். சித்தர்கள், - சிவஞானிகள் முதலியோர் செயல்களில் பல, உலகியல் தொடர்புடைய நம்மவர்க்குப் புதிராகவும், புதுமையாகவும் தோன்றும். அவர்களின்

www.saivamonline.com

சீரிய நோக்கம் நமக்குப் புலனாவதில்லை; செயல்களே விளங்கித் தோன்றுகின்றன! இறைவனின் திருவிளையாடல்கள் பல புதிராக அமைவனபோல், இறையருள் பெற்ற சித்தர்களின் செயல்களும் புதிராகவே அமைகின்றன. மனிதர்கள் தத்தம் அறிவால் அவைகளின் காரணம் காண முற்படுகின்றனர். கண்டுவிட்டதுபோல் பேசுகின்றனர்! காரணங்களைத் தாமே கற்பித்து மகிழ்கின்றனர்; உண்மைக் காரணத்தை இறைவன் அறிவான்! அடியவர் உணர்வர்! உலகினோர் உணர்வது என்பது மிகவும் அரிது.

## ஆசைக்கு ஆட்பட்ட ஞானம்

மலையாள நாட்டில் தங்கிச் சித்துக்கள் செய்து மச்சேந்திரர் வாழ்ந்து வரும்நாளில், அந்நாட்டு இளவரசி பிரேமளா என்பவள் இவரைக் கண்டு மையல் கொள்கிறாள். மச்சேந்திரர் மறுத்துரைக்கவும் கேளாது இளவரசி இவரைத் தன்வயப்படுத்துகிறாள். இறைவன் சித்தம் இதுபோலும் என்று மச்சேந்திரரும் பிரேமளாவின் விருப்பத்துக்கு இசைகிறார். இல்லறம் இனிதே தொடங்குகின்றது. இல்லறப்பயனாய் ஓர் ஆண்மகன் பிறக்கிறான். அவனுக்கு 'மீனநாதன்' எனப் பெயரிட்டுப் பிரேமளா வளர்த்து வருகிறாள். ஆண்டுகள் சில சென்ற பின் மச்சேந்திரர் தம் மாணாக்கர் கோரக்கரைப் பற்றித் தம் துணைவிக்கு எடுத்துரைத்து, தன்னைத் தேடி அவன் வரக்கூடும் என்றும், அவன் வந்து அழைத்தால் தான் பிரிவேன் என்றும் கூறுகிறார். பிரேமளா இது கேட்டுப் பெரிதும் வருந்துகின்றாள்.

## காமத்திற் பிறந்த கட்டளை

மச்சேந்திரர் மேல் கொண்ட அளவற்ற காதலாலும், அரசியல் காரணங்களாலும் பிரேமளா அமைச்சர்களை அழைத்து, கோரக்கர் என்பார் நாட்டிற்குள் வராத வண்ணம் எல்லையில் காவல் அமைக்கக் கட்டளையிடுகிறாள். அவரை அடையாளம் தெரியாது என அமைச்சர்கள் கூறவே, துறவுக்கோலம் உடையவர் கோரக்கர். எனவே, துறவியர் எவரும் நாட்டு எல்லைக்குள் வாராது கண்காணியுங்கள். மீறி வந்தால் அவர்களைக் கொலை செய்துவிடுங்கள் என்று கட்டளை இடுகிறாள். அமைச்சர்களும் அவ்வாறே காவல் அமைக்கின்றனர். ஆண்டுகள் பல கடந்தும் மச்சேந்திரர் திரும்பாமையைக் கண்ட கோரக்கர் தம் ஞானத்தால் அவர் இருப்பிடமும் இருக்கும் நிலையும் அறிந்து, அவரை அழைத்துவர மலையாள நாடு செல்கிறார். வான் வழி வந்த அவரைக் காவலர்கள் காணவில்லை.

www.saivamonline.com

## கோரக்கர் துயரம்

மச்சேந்திரரை அழைத்து வர மலையாளம் சென்ற கோரக்கர், பிச்சை ஏற்க ஓர் இல்லத்தின் வாயில் சேர்கிறார். துறவுக்கோலத்தில் துலங்கும் கோரக்கரின் இளமை அழகினைக் கண்ட அவ்வில்லத்தரசி, 'அரசியின் கட்டளையை இவர் அறியார் போலும்' என இரங்குகின்றாள். தமது இல்லத்துள்ளே கோரக்கரை அழைத்து அரசியின் கட்டளையை எடுத்துரைக்கிறாள். அஞ்சிய கோரக்கர் மச்சேந்திரரைச் சந்திக்க அமையம் பார்த்துக் காவலர் கண்களில் புலப்படாது ஒரு மரநிழலில் வாழ்ந்து வருகின்றார். ஆசாரியரின் உலகப்பற்றும், அரசியின் காம நாட்டமும், அமைச்சர்களின் முறைகேடும் கோரக்கர் நெஞ்சில் துயர் விளைக்கின்றன. இந்நிலையில் மச்சேந்திரரைக் காணும் வாய்ப்பு ஒரு நாள் எதிர்பாராதவாறு அமைகிறது.

## கோரக்கர் மத்தளம் வாசிக்க உடன்படுதல்

கோரக்கர் தங்கி இருந்த மரநிழலில் ஒரு நாள் கூத்து இயற்றும் கூட்டத்தார்சிலர்வந்து தங்கினர். அவர்கள்தங்களுக்குள்உரையாடுகையில் கூத்தர் தலைவன் வருத்தம் கோரக்கருக்குப் புலப்படுகிறது. கோரக்கர் அவனிடம் காரணம் வினவுகின்றார். அவன், அரசியார் திருமுன்பு கூத்தியற்ற அழைக்கப்பட்டதாகவும், கூத்திற்கு மத்தளம் வாசிப்பான் உடல்நலக் குறைவால் வாராது போயினன் எனவும், இனி வேறு ஒருவனைத் தேடி அழைத்துச் செல்ல நேரம் இல்லை என்றும், உரிய நேரத்தில் கூத்தியற்றச் செல்லா விட்டால் அரசியாரின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்றும் கூறி வருந்தினன். கோரக்கர் அவனுக்கு ஆறுதல் கூறி, தாம் மத்தளம் வாசிப்பதில் வல்லவர் என்றும், கூத்துக்குத் தாமே வந்து மத்தளம் வாசிப்பதாகவும் கூறி அவனோடு அரசவை சேர்கிறார்.

## கோரக்கர் மச்சேந்திரர் சந்திப்பு

அரசவையில் கூத்துத் தொடங்குகின்றது. மச்சேந்திரர் பிரேமளா மற்றும் மீனநாதனுடன் அமர்ந்து கூத்தை ரசிக்கிறார். மத்தளக்காரன் வடிவில் உள்ள கோரக்கரை அடையாளமும் காணமுடியவில்லை. ஆனால் கோரக்கர் தம்மை அறிவிக்கும் நோக்கில் மத்தளத்தில் புதிய ஒலிப்பினை உண்டாக்குகின்றார். இத்திறம் கோரக்கருக்கு மட்டுமே உண்டு; இவன் கோரக்கனே என உணர்ந்த மச்சேந்திரர் அஞ்சி, பிரேமளாவிடம் வந்திருப்பவன் கோரக்கனே எனத் தெரிவிக்கிறார். அவளும் கோரக்கருக்கு ஊறுவிளைக்க அஞ்சி அரண்மனையில் கோரக்கர்

www.saivamonline.com

தங்கியிருக்க அனுமதிக்கிறாள். கோரக்கர் தம் குருநாதரைச் சந்தித்து, 'இப்பற்றுக்களைத் துறந்து தமிழ்நாட்டுக்கு வாருங்கள்' என்று வற்புறுத்தி வேண்டுகிறார். பிரேமளாவையும் மீனநாதனையும் பிரிய மனமில்லாத மச்சேநதிரர் யாதும் உரையாது வாளாவிருந்தனர். ஆசாரியருக்கு உரிய பணிவிடைகள் செய்து கொண்டு கோரக்கரும் அரண்மனையில் தங்கியிருந்தார்.

## வியப்பூட்டும் நிகழ்ச்சி

ஒருநாள் பிரேமளா மற்றும் மீனநாதனுடன் மச்சேந்திரர் படுத்து உறங்குகையில், குழந்தை மீனநாதன் படுக்கையில் மலம் கழித்துவிட்டான். மச்சேந்திரர் மாணாக்கர் கோரக்கரை அழைத்துத் தம் குழந்தையை அவர் கையில் கொடுத்துக் குழந்தையைத் தூய்மை செய்து வரப் பணித்தனர். கோரக்கர் மகிழ்வோடு குழந்தையை எடுத்துப்போய் அரண்மனை அருகில் ஓடிய நதி ஒன்றில் தூய்மை செய்யும் நோக்குடன் குழந்தையின் கால்கள் இரண்டையும் பற்றித் துணி வைக்கும் கல்லில் மோதி அடித்து, நீரில் நனைத்து வெய்யிலில் உலர வைத்துத் திரும்பினார். மீனநாதன் எங்கே? என்று மச்சேந்திரர் வினவ, தாம் கல்லில் துவைத்து அவனை உலர வைத்திருப்பதாகக் கோரக்கர் கூறினார். இது கேட்டுத் துடித்த மச்சேந்திரரும் பிரேமளாவும், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுது புலம்பினர். இருவரும் கோரக்கரோடு மீனநாதன் உடல் சிதறிக் கிடக்கும் இடம் சென்று கண்டு மயக்கமுற்றனர்.

## கோரக்கர் சித்தாடல்

மயக்கம் தெளிந்த எழுந்த மச்சேந்திரர், கோரக்கர் மீது கடுஞ்சினம் கொண்டார். என் மகன் மீனநாதனைக் கொன்ற பாவி நீ! என்று வெகுண்டுரைத்தார். என் மகனை உயிரோடு மீட்டுத்தா என வற்புறுத்தினார். ஆசாரியரே! கவலை வேண்டாம்! இதோ! அவன் வருவான் எனக் கூறி, 'மீனநாதா! வா!' எனக் கோரக்கர் அழைத்தனர். அடுத்த நொடியில் சிதறிக் கிடந்த குழந்தையின் ஒவ்வோர் சிறு பகுதியும் ஒவ்வோர் குழந்தையாக மாறி, நூற்றெட்டு மீனநாதர்கள் ஒருங்கே எதிர் வந்தனர். கண்டு வியப்பெய்திய பிரேமளா இவர்களில் தன் மகன் மீனநாதன் யார் எனத் தெரியாது திகைத்து அரற்றினாள். கோரக்கர் நூற்றெட்டுக் குழந்தைகளையும் தம் இருகைகளால் பற்றி ஒன்றாக்கினார். குழந்தைகள் ஒன்றாகி மீனநாதனாக வடிவெடுத்தது. மீனநாதனைக் கோரக்கர் தாயிடம் ஒப்படைத்துப் புன்னகை பூத்து நின்றார்.

www.saivamonline.com

## மடியில் கனம்: வழியில் பயம்

மச்சேந்திரர், உலகியலில் பற்றுவிட்டவராய், கோரக்கர்பால் அச்சங்கொண்டு, பிரேமளாவிடம் விடைபெற்றுத் தமிழ் நாடு புறப்பட ஆயத்தமானார். பிரேமளாவும் மச்சேந்திரரைப் பிரிய ஒருவாறு ஒருப்பட்டனள். தம் காதலர், வழியில் செலவுகளுக்குத் துயருராதிருக்கப் பொற்பாளம் ஒன்றைப் பையில் இட்டு, கோரக்கர் அறியாது எடுத்துச் செல்லுமாறு மச்சேந்திரரிடம் வழங்கினாள். கோரக்கரும், மச்சேந்திரரும் பிரேமளாவிடம் விடைபெற்று வழிநடையாகத் தமிழ்நாடு நோக்கிப் பயணம் தொடங்கினர். வழியில் ஓர் இடத்தில் மச்சேந்திரர் கோரக்கரைப் பிரிந்து ஒரு குளக்கரையை அடைந்தார். அங்குள்ளவர்களிடம் இங்கே கள்வர் பயம் உண்டோ என வினவினர். இல்லை என அங்கிருந்தோர் உரைத்தனர். பொற் பாளம் இருந்த பையை அக்குளக்கரையில் வைத்துவிட்டு மச்சேந்திரர் கடன் கழிக்க அப்பால் சென்றார்.

## ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குதல்

அவ்விடம் சென்ற கோரக்கர், அங்கு நின்றவர்களிடம் மச்சேந்திரர் வினவியனவற்றைக் கேட்டறிந்தார். மச்சேந்திரர் அறியாது அவர் பையைத் திறந்து பார்த்தார். பொற்பாளம் இருப்பதைக் கண்டு, அதனை எடுத்துக் குளத்தில் வீசிவிட்டு, ஓட்டுப்பாளம் ஒன்றைப் பையில் வைத்துவிட்டுத் தம் இருப்பிடம் சேர்ந்தார். இருவரும் மீண்டும் பயணம் தொடர்ந்தனர். வழியில் மீண்டும் மச்சேந்திரர் எதிர்வந்தாரைக் கண்டு, 'இப்பக்கம் கள்வர் பயம் உண்டோ' என வினவினார். கோரக்கர் நகைத்தவாறே 'இனித்தங்களுக்கு இப்பயம் தேவை இல்லையே' என்றார். திடுக்கிட்ட மச்சேந்திரர் தம் பையைத் திறந்து பார்த்தார். அதில் பொற்பாளம் காணப்படாது ஓட்டுப்பாளம் காணப்படுவதைக் கண்டு கடுங்கோபங் கொண்டார்.

## கல்மலை பொன்மலையாதல்

மச்சேந்திரர் கோரக்கரை நோக்கி, 'அன்று என் மகன் உடலைச் சிதைத்தாய்! இன்று என் பொன்னைக் கொள்ளை கொண்டாய்! நீ என் மாணாக்கன் இல்லை. நானும் இனி உன் குருநாதன் இல்லை! என்னை விட்டு நீங்குக' என வெகுண்டுரைத்தார். கோரக்கர் ஆசாரியரை வணங்கி, 'என்னை மன்னிக்க வேண்டும்! தங்களுக்குப் பொன்தாமே வேண்டும்! இதோ தருகிறேன்' எனக் கூறி, வேகமாக நடந்து சென்று, அருகில் நின்றிருந்த குன்று ஒன்றின் மேல் ஏறி, அம்மலை மேல் சிறுநீர் பெய்தார்!

www.saivamonline.com

என்னே வியப்பு! அடுத்தகணம் கருங்கல் மலை செம்பொன் மலையாக உருமாறி ஒளி வீசியது! மீண்டு வந்த கோரக்கர் ஆசாரியரை நோக்கி, வேண்டிய பொன்னை இனித்தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறிப் பணிந்தார். மச்சேந்திரர் நெஞ்சில் இருந்த பொருட்பற்று அக்கணமே அற்றது; மாயை அகன்றது. தம் சீடரைப் புகழ்ந்து, அவரோடு இணங்கித் தமிழ்நாடு சேர்ந்து, மீண்டும் தம் மாணாக்கர்களுக்கு உபதேசித்து இனிது வாழ்ந்து வரலானார்.

## மீனாய் ஒளித்த திறம்

தம் குருநாதர் மச்சேந்திரர் சித்தி பெற்று இறையடிகளில் கலந்த பின்னர் கோரக்கர், சித்தர் தலைவராய்த் திகழ்ந்து பல மாணாக்கர்களுக்கு உபதேசித்திருந்தனர். ஒருமுறை கோரக்கர் யோகத்தில் தலை நின்றனர். பசி, உறக்கம், தாகம் மறந்து யோகத்தில் அமர்ந்திருந்த இவரது களைப்பை நீக்கக் கருதிய உமையம்மையார், இவர் திருமுன்பு தோன்றி, அன்னத்தைப் பொன் தட்டு ஒன்றில் வைத்து மறைந்தார். நீராடிவிட்டு வந்த கோரக்கர், அம்மை அளித்த உணவினை உண்ணத் தலைப்பட்டபோது, வேறு ஓர் இடத்தில் யோகத்தில் அமர்ந்திருந்த தத்தாத்திரியர் என்பார் உமையம்மை கோரக்கருக்கு வழங்கிய உணவைப் பறித்துத் தாம் உண்ணத் தலைப்பட்டார். கோரக்கர் தத்தாத்திரியரொடு மாறுபட்டுப் பலவுருக் கொண்டு சண்டையிட்டார். தத்தாத்திரியர் இறுதியில் மீன்கொத்தி வடிவம் எடுத்துவர, கோரக்கர் தாம் செம்மீன் வடிவம் கொண்டு, பழனிக்கு அருகில் உள்ள குளம் ஒன்றில் ஒளிந்தனர். இக்குளம் இன்றும் மச்சதீர்த்தம் என்ற பெயரால் வழங்கி வருகிறது.

## ஞானம் விளைத்த செருக்கு

அளப்பரிய சித்துக்கள் கைவரப்பெற்ற கோரக்கர் சித்தர் தலைவராய், உடலழியாப்பேறு பெற்றார். திருப்பருப்பதம் சென்று, அம்மலையில் நிலையாகச் சிலகாலம் தங்கியிருக்கின்றார். அளப்பரிய கல்வி, செல்வம், கலை ஞானம், ஆற்றல்கள் கைவரப் பெற்ற காலையும் செருக்கடையாத சிந்தையுடையவராய் வாழ்தல் அரிது. ‘வியவற்க எஞ்ஞான்றும் தன்னை’, என்றும் ‘வியந்தான் விரைந்து கெடும்’ என்றும் அறநூலாசிரியர் எச்சரிக்கை செய்கின்றனர். கோரக்கர் உள்ளத்தில் சற்றே இவ்வெண்ணம் தலை எடுக்கிறது. பிரபுலிங்கலீலையில் சிவப்பிரகாசர் இதனை விரித்துரைக்கிறார்.

www.saivamonline.com

**'தனியுடல் சித்திபெற்றுத்**
**தருக்குமக் கோரக் கன்தான்**
**நனியுளம் மகிழ்ந்தி ருக்கும்**
**நல்லிடம் தனைய டைந்தான்'**

*சிவபெருமான் அல்லமதேவராக நிலவுலகில் வந்த காலை, தம் அடியவன் நெஞ்சில் சிறிது செருக்கு இருப்பதை அறிந்து, அதனை அகற்றி, மீண்டும் ஞானத்தில் தலைப்படச் செய்யத் திருவுளம் கொண்டு திருப்பருப்பதம் சேர்கிறார்.*

## ஆணவத்தில் உரைத்த சூளுரை

*திருப்பருப்பதத்தில், தம்மை நாடி வந்த அல்லமதேவரைச் சிவபரம்பொருள் என்று உணராது, அவரும் தம்மை ஒத்த ஒரு சித்தரே என்று கோரக்கர் கருதி அவரை முறையாக வரவேற்று உரையாடுகிறார். அழியாச் சித்தி பெற்ற உடலைப் பெரிதென்று கருதியிருக்கும் கோரக்கருக்கு அல்லமர், அழியும் உடல்பற்றை விடுத்து நிலைபேறுடைய வீடுபேற்றை விழைக என அறிவுரை கூறுகிறார். அதனை உடன்படாத கோரக்கர் என் உடல் அழியாதது! அதனை உனக்கு மெய்ப்பித்துக் காட்டுகின்றேன் எனக் கூறுகின்றார்.*

**'ஏது சொல்லினும் என்னுடல்**
**அழிவுறா தென்றும்**
**வாது செய்வதென் காட்சியால்**
**உணர்த்துவன் வலியின்று**
**ஆதி நாத னருளினால்**
**என்றுகோ ரக்கன்**
**தீதிலா வருள் வாரியோ**
**டுரைத்திது செய்யும்'**

*தம் கருத்தை நிரூபிக்க வேண்டிக் கோரக்கர், அல்லமரிடம் வாள் ஒன்றைக் கொடுத்துத் தம் உடல் வன்மையை ஆராயுமாறு கூறினார். மேலும், அல்லமரை நோக்கி 'நீவிர் என் உடலை வெட்டும் போது, ஈச்சிறகன்ன தோல் என் உடம்பில் அறுபட்டாலும் நான் சித்தன் அல்லன்' என உறுதிபட மொழிந்தார்.*

## இருள் அகன்றது! ஒளி பிறந்தது

*கோரக்கர் வேண்டியவாறு, அல்லமர் வாளை அவர் உடல் மேல்*

www.saivamonline.com

பாய்ச்சுகின்றார். பேரொலி ஒன்று எழுகிறது. அவ்வொலி கேட்டு உமையம்மையும், உலகினரும் நடுங்குகின்றனர். கோரக்கர் உடலில் சிறிதும் ஊறு இன்றி நின்றார். இந்நிகழ்ச்சி கோரக்கர் நெஞ்சில் தன் முனைப்பைத் தோற்றுவிக்கின்றது. அதனை அகற்றக் கருதிய அல்லமர், வாள் ஒன்றைக் கோரக்கர் கையில் கொடுத்துத் தம்மை வெட்டுமாறு கூறினார். கோரக்கரும் அங்ஙனமே வாள்வீச, வாள் காற்றையும், சூரிய ஒளியையும் வெட்டிச் செல்வதுபோல் அல்லமர் உடல் புகுந்து வெளிப்பட்டதேயன்றி அவருக்கு ஊறு ஏதும் விளைத்திலது. இது கண்ட கோரக்கர், வந்திருப்பவர் சிவபரம்பொருளே! நம் செருக்கினை அகற்றவே இவர் வந்தனர் என உண்மை உணர்ந்து அல்லமரைப் பணிந்தார்.

**'வாளெறிந்து கையிளைத்த கோரக்க**
**நாதன்மிக மனம்வி யந்து**
**நானிறைஞ்சும் பரஞ்சுடரே இவனென்று**
**மெய்விதிர்ப்ப நடுந டுங்கித்**
**தானடைந்த செருக்கொழிந்து தலையன்பின்**
**நெறி நடப்பத் தலைப்பட் டெங்கோன்**
**தேனடைந்த செழுங்கமலத் திருவடியில்**
**வீழ்ந்தெழுந்து செப்பு கின்றான்'**

எனச் சிவப்பிரகாசர் கோரக்கர் மனமாற்றத்தைக் குறித்துள்ளார். சிவனருள் பெற்ற கோரக்கர்,

**'வானவரும் அறிவரிய பெரும்புகழ்கோ**
**ரக்கனவண் மன்னி னானால்'**

நிலைத்த புகழோடு திருப்பருப்பதத்தில் சிலகாலம் தங்கியிருந்தனர்.

## இல்லறமா? துறவறமா?

கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்பது சித்தர்களுக்குக் கைவந்த கலை. சித்தர் தலைவராகத் திகழ்ந்த திருமூலர் மாடு மேய்க்கும் இடைக்குலத்தான் உடலில் புகுந்து சித்தாடிய செய்தி பெரிய புராணத்துள் காணப்படுகிறது. இது பற்றி முன்னரே கூறப்பட்டது. கோரக்கர் தூய துறவு நெறி நின்றவரா அன்றி இல்லறத்தில் வாழ்ந்தவரா என்பதைத் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற இயலவில்லை. சில சான்றுகள் உண்டு. அவை ஏற்கத்தக்கனவாக இல்லை. இறைவனை எய்த இல்லறம், துறவறம் இரண்டும் ஏற்ற நெறிகளே. இவற்றிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது

www.saivamonline.com

சைவ நெறிக்கு முரணானது. மேற்கொண்ட நெறி எதுவாயினும், அவ்வந்நெறிக்குகந்த ஒழுக்கநெறி நிற்றலே வேண்டத்தக்கது. திருமூலர் வரலாற்றில் காணப்படுவது போல், கோரக்கர் வாழ்விலும் கூடுவிட்டுக் கூடுபாய்ந்த செய்தி ஒன்று அகஸ்தியர் வைத்திய ரத்னச் சுருக்கம் 360 என்னும் நூலுள் குறிக்கப்பட்டுள்ளது.

## கூடுவிட்டுக் கூடு பாய்ந்தமை

கோரக்கர் என்பார் ஆதியில் விப்பிரராக வாழ்ந்தார். பின்னர், சேணியர் குடிப்பிறந்து வாழ்ந்தார். அழியாத உடல் பெற்றுச் சித்தராகிக் குகையில் வாழ்ந்திருந்தார். ஒருநாள் நந்தன் என்ற மாடு மேய்க்கும் இடையன் அங்கு வந்தான். அவனைப் பாம்பு ஒன்று தீண்டியதால் அவன் இறந்தான். அதனைக்கண்ட நந்தனின் நண்பர்கள் நந்தன் இறந்த செய்தியை அவன் மனைவிக்கு விரைந்து சென்று தெரிவித்தனர். அவள் அலறிப்புடைத்து விதியை நொந்து ஓடிவரக்கண்ட கோரக்கர், மலையின் ஒரு பக்கத்தே தம் உடலைப் பாதுகாவல் செய்து, அருள் உள்ளத்தோடு நந்தன் உடலில் தம் உயிரைப் புகுத்தினார். நந்தன் எழுந்தான். மனையாள் மகிழ்ந்தாள்! நந்தனாக இடைக்குலப் பெண்ணோடு வாழ்ந்திருந்த கோரக்கர், தம் உடலைத் தேடிச் சென்றார். வேட்டைக்கு வந்த மன்னன் தனித்துக் கிடந்த கோரக்கர் உடலைப் பிணம் என்று கருதிச் சுட்டு எரித்து விட்டான். தன் உடல் வைத்த இடத்தில் இல்லாமை கண்ட கோரக்கர், தம் இரு மாணாக்கருடன் குளிகை செய்து இடைத் திருமேனியைச் சித்தி செய்து அழியாத சடலமாக்கினார். அகஸ்தியர் வைத்திய ரத்னச் சுருக்கம் 360 குறிக்கும் இவ்வரலாற்றைப் பற்றி வேறு சித்தர் நூல்களில் குறிப்புக்கள் இல்லை. திருமூலர் வரலாற்றை ஒட்டி எழுதிவைக்கப் பெற்ற ஒரு கற்பனையாகவே இவ்வரலாறு தோன்றுகின்றது.

## வரலாற்று உருவாக்கம்

கோரக்கர் அருள் வரலாற்றில் வேறு சில அருளற்புதங்களும் நிகழ்ந்துள்ளன. கோரக்கச் சித்தர் ஆலயம் அமைந்துள்ள வடக்குப் பொய்கைநல்லூர் அன்பர் ஒருவர் பல நாள் முயன்று திரட்டிய கைப்பிரதி ஒன்றில் சில செய்திகள் குறிக்கப் பெற்றுள்ளன. செவிவழிச் செய்திகளும், கோரக்கர் ஆலய வழிபாட்டுக்கு வரும் அன்பர்கள் தெரிவித்த கருத்துக்களும் இத்திரட்டில் காணப்படுகினற்ன. அதிற்காணப்படும் செய்திகளுள் பல, மேற்குறித்த வரலாற்றுச் செய்திகளோடு தொடர்புடையன. ஒரு சில மாற்றங்களும் இவற்றிடையே காணப்படுகின்றன. வரலாறுகள் பலவும், கிடைக்கும் சிறு சிறு

www.saivamonline.com

தகவல்களையும் திரட்டி ஒழுங்கு செய்தே அமைக்க வேண்டியுள்ளன. கோரக்கர் அருள் வரலாறு எழுதுவதில் இது முதல் முயற்சியாதலின் கிடைக்கும் தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்ய வேண்டுவது இன்றியமையாததாகிறது.

## பொதியமலைச் சித்தர்கள்

பொதிய மலையில் மச்சேந்திரர் தமது 120 சீடர்களோடு சித்தர் தலைவராய் வீற்றிருந்தார். முதன்மைச் சீடராகத் திகழ்ந்தவர் கோரக்கர். மச்சேந்திரர் கோரக்கருக்கு 64 வகையிலான யோகசாதனக் கலைகளையும், சித்த மருத்துவக் கலையையும் முறையாக உபதேசித்திருந்தார். ஏனைய சீடர்களைவிட மச்சேந்திரருடைய உளக்குறிப்பை உணர்வால் அறிந்து செயற்பட்ட கோரக்கர், ஆசிரியரின் அன்புக்குரியவராக வாழ்ந்திருந்தார். கோரக்கரோடு பொதியமலையில் வசிட்டர், துர்வாசர், காலாங்கிநாதர், இடைக்காடர், தன்வந்திரி, கருவூரர், கமலமுனி, சட்டைமுனி முதலியோரும் தனித்தனியே யோகநெறி பயின்று சித்தர்களாக விளங்கியிருந்தனர்.


## அகத்தியர் நிகழ்த்திய வேள்வி

இதே காலத்தில் இமயமலையில் அகத்தியர், திருமூலர், விசுவாமித்திரர், போகர், புலிப்பாணி, குதம்பைச்சித்தர் முதலியோர் வாழ்ந்திருந்தனர். அக்காலத்தில் அகத்தியர், நடத பர்வதத்தில், மரகதமலை அடிவாரத்தில், கங்கை நதிக்கரையில் உள்ள சந்திரபுஷ்கரணி என்ற தீர்த்தக் கரையில் அன்னை இராஜராஜேஸ்வரியை நோக்கிப் பெருவேள்வி ஒன்றை நடத்தத் திட்டமிட்டார். இவ்வேள்வியைப் பொதியமலையில் 96 சீடர்களோடு வாழ்ந்து வந்த காலாங்கிநாதரை முன்வைத்து நடத்த வேண்டுமென்று அகத்தியர் விரும்பினார். அகத்தியர் விரும்பியவாறு காலாங்கிநாதர் தம் உடலைப் பாதுகாக்குமாறு மாணாக்கர்களுக்குக் கூறி, 45 நாட்களில் திரும்பி வருவதாக எடுத்துரைத்துவிட்டு, வல்லூறு வடிவத்தில் இமயமலைக்குப் புறப்பட்டார். அகத்தியரையும் ஏனைய சித்தர்களையும் கண்டு மகிழ்ந்தார் காலாங்கிநாதர்! பின் அகத்தியர் விரும்பியவாறு ஒரு பௌர்ணமி நாளில் முன்னின்று வேள்வியை நிகழ்த்த, வேண்டும் வரம் பெற்று அகத்தியரோடு, காலாங்கிநாதர் இமயமலை மீண்டார்.

## உடல் காத்த உத்தமர்

காலாங்கி நாதர் குறித்த 45 நாட்கள் கடந்த பின்னரும், அவர் பொதிய

www.saivamonline.com



பழநி தண்டாயுதபாணியை வடிவமைத்த போகரும் கோரக்கரும்



ஆசிரமச் சுவர் ஓவியம் - அன்னக்காவடி தருமம்

www.saivamonline.com

மலை திரும்பாமையால், அவரது 96 சீடர்களும் தம் குருநாதர் மறைந்துவிட்டார்; இனித் திரும்பப் போவது இல்லை என்று கருதி, அவர் உடலைச் சிதையில் அடுக்கி எரியூட்ட முயன்றனர். இதனை அறிந்த கோரக்கர் தம் நிறை ஞானத்தால் காலாங்கிநாதர் உயிர் வாழ்வதை எடுத்துரைத்து, உடலை எரியூட்ட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர். மாணாக்கர்கள் கோரக்கர் கூறியனவற்றை நம்ப மறுத்து, காலாங்கிநாதர் உடலை எரிக்க முயன்றனர். கோரக்கர் கடுஞ்சினம் கொண்டு, தம் சொற்கேளாத 96 சீடர்களையும் நையப்புடைத்துவிட்டு, காலாங்கிநாதர் உடலை எடுத்துப் போய் ஒரு குகையில் பாதுகாவல் செய்து வைத்துவிட்டு, இராஜாளிப் பறவை வடிவில் இமயமலை சென்று, காலாங்கிநாதரைக் கண்டு, நடந்தன கூறினார். காலாங்கிநாதரின் மாணக்கருள் ஒருவர் போகர். இவர் கோரக்கர் கூறியன கேட்டு மகிழ்ந்து, 'எம் குருநாதர் உடலைப் பாதுகாத்த நீவிர் எமக்கு உற்ற தோழர், இனி என்றும் உமக்கு உறுதுணையாக நிற்பேன்' எனக் கூறி அவரைத் தழுவிக் கொண்டார். மூவரும் பொதியமலை மீண்டனர்.

## போகரும் கோரக்கரும்

காலாங்கிநாதரிடம் போகரும், மச்சேந்திரரிடம் கோரக்கரும் விடைபெற்று, பிற அண்டங்களுக்கும், புவனங்களுக்கும் சென்று சித்தாடி மகிழ்ந்தனர். விண்வழியே இவ்விருவரும் மண்ணுலகம் நோக்கித் திரும்பும்போது, திருநாகைக்காரோணத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள, கடம்பர் வனத்தின் தென்புறம் உள்ள, சப்த கன்னியர் ஆசிரமம் என்று வழங்கப் பெறும் பத்தினி அம்மன் திருக்கோயில் இருக்குமிடத்தில் போகரின் குளிகை விழுந்துவிட்டது. அதனை எடுக்க போகரும், கோரக்கரும் கீழே இறங்கினர். குளிகையை, எடுக்க முயன்றனர். குளிகையை எடுக்க இயலவில்லை. இருவரும் அன்னை இராஜராஜேஸ்வரியை நெஞ்சில் நினைந்து தியானித்தனர். அக்காலை அம்மையின் அசரீரி ஒன்று ஒலித்தது.

## சித்தருக்கு அருள்தந்த நல்லூர்நாதன்

'அன்பர்களே! இக்கடம்பர் வனத்தின் கிழக்கே இரண்டு கல் தூரத்தில், பன்னெடுங் காலமாக எண்ணிலாத சித்தர்கள் வந்து வழிபடுவதாகிய சித்தாச்சிரமம் ஒன்று உள்ளது. தென்காரோணம் என்ற பெயர் பெற்ற வடக்குப் பொய்கைநல்லூரில் இவ்வாச்சிரமம் அமைந்துள்ளது. இவ்வாச்சிரமத்தை அடுத்துள்ள திருத்தலத்தில் அருள்மிகு பால்மொழி அம்மை உடனாய் நல்லூர் நாதனார் கோயில் கொண்டு அன்பர்களுக்கு

www.saivamonline.com

அருள்பாலித்து வருகிறார். எனவே, நீவிர் இருவரும் அங்கே சென்று அம்மையப்பரை வழிபட்டால் இக்குளிகையை எடுத்துச் செல்லும் வரம் பெறலாம்.' அசரீரி ஒலித்த இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சித்தர் இருவரும் மெய்சிலிர்த்தனர். வடக்குப் பொய்கைநல்லூருக்குப் போகரும், கோரக்கரும் இணைந்து வந்து, அருள்மிகு பால்மொழி அம்மை உடனாய நல்லூர்நாதர் திருவடிகளைக் கசிந்துருகி வழிபட்டனர். இறைவன், குளிகையை எடுத்துச் செல்ல அருள்பாலித்தனன். இருவரும் குளிகை கைவரப் பெற்றுப் பொதிய மலை சார்ந்தனர்.

## காசி விசுவேசன் தரிசனம்

இதன் பிறகு போகர், கோரக்கரிடம் விடைபெற்றுச் சீன நாட்டிற்குச் சென்றார். அங்கு 500 ஆண்டுகள் வாழ்ந்தார். கோரக்கர் பொதியமலையில் 300 ஆண்டுகளும் கொல்லிமலையில் 200 ஆண்டுகளும் தவமிருந்தார். பின்னர் போகரைக் காணும் விருப்பத்தால், போகரின் மாணாக்கர் புலிப்பாணியையும் உடன் அழைத்துக் கொண்டு கோரக்கர் சீனநாடு சென்று பல சித்துக்கள் செய்து போகரைக் கண்டு மகிழ்ந்தார். மூவரும் சீன நாட்டிலிருந்து புறப்பட்டு விண்வழியே இமயமலை சென்றனர். புலிப்பாணியை அங்கேயே தங்கச் செய்து விட்டுப் போகரும், கோரக்கரும் காசிநகர் அடைந்தனர். கங்கையில் நீராடி அருள்மிகு விசாலாட்சி அம்மை உடனாய விசுவநாதரைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

## நவபாஷாணத் திருமேனி

பின்னர், போகரும் கோரக்கரும் விண்வழியே காஞ்சி மாநகர் சேர்ந்தனர். அருள்மி காமாட்சி அம்மையையும், ஏகாம்பர நாதரையும் ஏத்தி மகிழ்ந்தனர். அடுத்து, சைவர்களுக்குக் கோயில் என்று கருதப்படும் தில்லைச் சிதம்பரம் வந்து சேர்ந்தனர். சிவகாம சுந்தரியையும், ஆனந்த நடராசப் பெருமானையும் கண்குளிரத் தரிசித்துப் போற்றினர். தற்காலத்தில் சிதம்பர ரகசியம் என்று போற்றப் பெறும் எந்திரத்தை நாற்பத்தி மூன்று கோணத்தில் 51 எழுத்துகளை இட்டு நிரப்பி உருவாக்கி, நடராசப் பெருமானின் வலப்பாகத்தே நிறுவினர். பின்னர் திருவாவினன்குடி சென்று நவபாஷாணங்களால் அருள்மிகு தண்டாயுதபாணிப் பெருமானின் திருமேனியை உருவாக்கி எழுந்தருளச் செய்தனர். போகர் பழனியிலேயே தங்கிவிட்டார்.

## ஸ்ரீ கௌரி ராஜயோகம்

கோரக்கர் போகரிடம் விடைபெற்று வன்மீனநாதபுரம் என்ற

www.saivamonline.com

பழம்பெயர் பெற்ற திருவாரூருக்கு வந்தனர். அருள்மிகு அல்லியம் கோதை அம்மை உடனாய புற்றிடங்கொண்ட புனிதரை கோரக்கர் வணங்கி மகிழ்ந்தார். அருள்மிகு தியாகராஜப் பெருமானை நெஞ்சில் வைத்துப் போற்றிய முசுகுந்தச்சக்ரவர்த்தியைக் கோரக்கர் சந்தித்தார். சித்தாச்சிரமமாக விளங்கும் வடக்குப் பொய்கை நல்லூரில், மூன்று பௌர்ணமி காலம் ஸ்ரீ கௌரிராஜ யோகம் இயற்றவும், பெருவேள்விகள் செய்யவும் வேண்டிய உதவிகளைச் செய்து தருமாறு சக்ரவர்த்தியைக் கேட்டுக் கொண்டார். முசுகுந்தச்சக்ரவர்த்தியும் வேள்விக்கு வேண்டுவன அனைத்தையும் மகிழ்வோடு வழங்கியருளினார்.

## வேள்விக்கு ஏற்பட்ட தடை

கோரக்கர் மிகுந்த மகிழ்வோடு நந்திநல்லூர் என்ற பழம் பெயர் கொண்ட வடக்குப் பொய்கை நல்லூருக்கு எழுந்தருளினார். அருள்மிகு சௌந்தரநாயகி உடனாய நந்தி நாதேசுவரரையும், அருள்மிகு பால்மொழி அம்மை உடனாய நல்லூர்நாதரையும் உளமுருக வணங்கி வழிபட்டார். அங்குள்ள சந்தன விருட்சத்தின் கீழ் ஸ்ரீ கௌரி ராஜயோகத்தையும், பெருவேள்வியையும் ஒரு பௌர்ணமி நாளில் இயற்றத் தொடங்கினார். இரண்டு பௌர்ணமி காலம் வரை முறையாக நடைபெற்ற வேள்வி, இடையில் தடைப்பட்டது. எனவே கோரக்கர் முசுகுந்தச் சக்ரவர்த்தியோடு, அருள்மிகு பால்மொழி அம்மை உடனாய நல்லூர் நாதரை வழிபட்டு வேள்வி சிறக்க அருள்பாலிக்க வேண்டினர். இறையருளால் ஓர் அசரீரி 'இந்த சித்தாச்சிரமத்திற்கு உரியவராகிய புஜண்டர் என்ற மகானைத் தரிசித்து, அவர் நல்லாசி பெற்றால் வேள்வி இனிது நிறைவுறும்' என்று ஒலித்தது. இது கேட்ட கோரக்கர் புஜண்டர் இருப்பிடம் நாடிச் சென்றார். அவரை அங்கே காண இயலவில்லை. உடனே கோரக்கர் பத்மாசனத்தில் அமர்ந்து புஜண்டரை நினைந்து தியானித்தார். கோரக்கர் கண்விழித்தபோது புஜண்டர் தம் அருகில் அமர்ந்திருக்கக் கண்டார். அவரை வணங்கி, வேள்வியை அருகிருந்து நிறைவேற்றித் தரவேண்டினார்.

## புஜண்டர் உரைத்த நெறி

புஜண்டர் முகம் மலர்ந்து நல்லாசிகள் கூறினார். பின்னர்க் கோரக்கரையும், முசுகுந்தச் சக்ரவர்த்தியையும் நோக்கி அருள்மிகு நல்லூர்நாதர் ஆலயத்திற்குத் தென்கிழக்கில், சூரிய புஷ்கரணி என்ற புண்ணிய தீர்த்தம் ஒன்று உள்ளது. அதில் நீவிர் நீராடி, அருள்மிகு வாலாம்பிகையை முன்னிறுத்தி, ஒன்பது நாள் மூலமந்திர காய்த்திரி

www.saivamonline.com

ஜபம் செய்தால் வேள்வி தடையின்றி நிறைவேறும்! வேள்வி முடிவில், வேள்வித் தீ நடுவே அருள்மிகு வாலாம்பிகை அன்னை திருக்காட்சி வழங்குவாள்! வேண்டியவரம் தருவாள்! எனக்கூறி தமது இருப்பிடமாகிய ஏமகூடபர்வதத்திற்கு எழுந்தருளினார். கோரக்கரும், புஜண்டர் அருளியவாறு வேள்வி இயற்றி, அம்மையின் திருக்காட்சி காணும்பேறு பெற்று, அவள் அருளிய வரபலத்தோடு பொதியைக்கு எழுந்தருளினார்.

## சந்திரரேகை கூறும் வரலாற்றுச் செய்திகள்

கோரக்கர் அருளிய நூல்கள் நாற்பது என்பது அவரது நூல்களால் தெரியவருகிறது. அவற்றின் திறம் தனியே ஓர் இயலில் பின்னே ஆராய்ந்து சுட்டப்படவுள்ளது. கோரக்கர் இயற்றிய நூல்களுள்ளும், பிற சித்தர்களின் நூல்களுள்ளும் காணப்படும் சில செய்திகள் கோரக்கரின் அருள் வரலாற்றைத் தெளிவுபடுத்தத் துணை புரிகின்றன. கோரக்கர் நூல்களுள் சிறப்பாகக் கருதத் தக்கது சந்திரரேகை என்பது. இந்நூல் 200 பாடல்களைக் கொண்டது. கோரக்கர் காயகல்யம் செய்து வாழ்ந்து வரும் காலத்து இளைத்து எலும்பும் தோலுமாகக் காணப்பட்டார். பொதிய மலையில் வாழ்ந்திருந்த சித்தரெல்லாம் இவரை வேடிக்கையாகப் பார்க்கலாயினர். சிவயோகம் முற்றிச் சித்தி பெற்ற போகர் மட்டும் இவர் தம் உண்மை நிலை உணர்ந்து கண்டு மகிழ்ந்தார். அம்பிகை அருளால் எல்லா நலமும் பெற்று இன்புற்றிருந்த கோரக்கரைப் போகர் சித்தாடி மகிழ்ந்து வர அழைத்தார். இருவரும் இணைந்து காசி, சிதம்பரம், பழனி ஆகிய இடங்களுக்குச் சென்று சித்துக்கள் பல செய்து மகிழ்ந்திருந்தனர். பின் இருவரும் சீன நாட்டில் 500 ஆண்டுகளும், பொதியையில் 400 ஆண்டு களும் வாழ்ந்திருந்தனர். இறுதியில் இருவரும் பழனி வந்து முருகன் அருள் பெற்றனர்.

## கோரக்கர் ஜீவசமாதி

பழனியில் வாழ்ந்திருந்த சித்தர்கள் பலரும் இவ்விருவரையும் அகப்படுத்த முயன்றனர். போகர் செனனசாகரம் என்ற தம் வரலாற்று நூலை எழுதினார். பின்னர்ப் போகர் கோரக்கரை நாகப்பட்டினம் செல்லப் பணித்தார். போகரைப் பழனியில் அடக்கம் செய்துவிட்டுக் கோரக்கர் நாகப்பட்டினம் அடைந்தார். போகர் ஏனைய சித்தர்கள் அறியாவண்ணம் சமாதிவிட்டுப் புறப்பட்டு நாகப்பட்டினம் வந்து சேர்ந்தார். வந்தவர் கோரக்கரை அழைத்துக் கொண்டு பொய்கைநல்லூர் அடைந்தார். பொய்கைநல்லூரில் கோரக்கரை அடக்கம் செய்துவிட்டுப்

www.saivamonline.com

போகர் கடல் கடந்து வேறு நாடு சென்று சேர்ந்தார். மேற்கண்ட வரலாற்றுச் செய்திகள் சந்திர ரேகையில் காணப்படுகின்றன.

## சித்தர்களை மயக்கிய சித்தர்

சித்தர்கள் பொருள் விளங்காத குறியீட்டுச் சொற்களால் பாடிய நூல்களை எல்லாம் பொருள் விளங்கும் வண்ணம் தெளிவுறுத்தியவர் கோரக்கர். இவ்வாறு அவர் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை பதினாறாகும். இந்நூல்கள் வெளிப்போந்தால் தமக்கும் தமது நூல்களுக்கும் பெருமை குறையுமென்று கருதிய இடைக்காடர், அகப்பை முனி, நந்திதேவர், மச்சமுனி, சட்டைநாதர், பிரமமுனி, அழுகண்ணர் ஆகிய ஏழு சித்தர்களும் கோரக்கரிடம் வந்து அவர் இயற்றிய நூல்கள் பதினாறினையும் தம்மிடம் ஒப்புவிக்கும்படி வற்புறுத்தி வேண்டினர். கோரக்கரும், மறுக்க இயலாது தருவதாக அவர்களுக்கு வாக்குக் கொடுத்தார். பின்னர்த் தாம் பயிர் செய்து வைத்திருந்த கஞ்சா இலைகளை அரிசியோடு சேர்த்து அரைத்து வந்திருந்த சித்தர்களுக்கு அடை சுட்டு வழங்கச் செய்தார். அதை உண்ட ஏழு சித்தர்களும் மயங்கினர். இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தாம் முன் இயற்றிய பதினாறு நூல்களிலும் கூறப்பட்டிருந்த செய்திகளை எல்லாம் தொகுத்து 'சந்திரரேகை' என்ற, 200 பாடல்களாலாகிய நூலைக் கோரக்கர் இயற்றி முடித்தார். சித்தர்களும் மயக்கம் நீங்கி எழுந்தனர். கோரக்கர் அவர்களிடம் தாம் வாக்களித்தபடி பதினாறு நூல்களையும் ஒப்படைத்தார். அவர்கள் அவற்றைப் பெற்றுச் சென்று அழித்தனர். இவ்வரலாறும் சந்திரரேகையில் இடம் பெற்றுள்ளது.

## அகத்தியருக்குச் சாபம் இட்டது

நமனாசத்திறவுகோல் என்பது கோரக்கர் இயற்றிய பிறிதோர் நூல். 100 பாடல்களைக் கொண்டது. இந்நூலுள் சில வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. நமனாசத் திறவுகோல் என்பது, நமனாகிய கூற்றுவனை அழிக்க, முனிவர்கள் கபாடமிட்டு வைத்த ஞான நூல்களைத் திறக்கும் திறவுகோல் என்பது பொருள். இந்நூல் ஒரு முதன்மையாகிய குருநூல். பல்வேறு மறைபொருள்களை எல்லாம் வெளிப்படுத்திய அரிய நூல். பதினெண் சித்தர்கள் சதுரகிரியில் சங்கம்கூடி 4500 நூல்கள் இயற்றி வழங்கினர். கோரக்கர் உள்ளிட்ட பதினெண்மர் 4500 நூல்களின் உட்பொருள்களைத் தொகுத்து 'பதினெண்மர் பூரண பொக்கிஷம்' என்ற நூல் தொகுதியை வெளிட்டனர். இந்நூலை வெளியிடலாகாது என அகத்தியர் கூறி பொதிகையில் இதனை மறைத்து வைத்தார். மறைத்த

www.saivamonline.com

அகத்தியருக்குக் கோரக்கர் உள்ளிட்ட சித்தர்கள் சாபமிட்டனர். இவ்வரலாறு நமனாசத்திறவுகோலில் கூறப்பட்டுள்ளது. மேலும், அகத்தியரால் ஒளிக்கப் பெற்ற நூல் இருக்கும் இடமும், அதனைப் பெற்றுப் படித்தறியும் வழியும் இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளன.

## பரூர்ப்பட்டியில் சமாதி கூடியமை

கோரக்கர் அருளிய வேறோர் நூல் 'தனிநூல் தொகுப்பு' என்பது. இந்நூல் ஒன்பது எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களான் இயன்றது. இந்நூலிலும் கோரக்கர் வரலாறு குறித்த அகச்சான்றுகள் சில காணப்படுகின்றன. சந்திரரேகையில் குறித்த சித்தர்கள் கோரக்கரிடம் வந்து, இவர் இயற்றிய 22 நூல்களின் பெயர்களும் பாடல் தொகையும் இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளன. அந்நூல்களை இயற்றி வழங்கிய பிறகு சோழ நாட்டில் கொள்ளிட நதிக்கு அப்பால் ஓடும் மணி முத்தாற்றின் கரையில் அமைந்துள்ள பரூப்பட்டி என்ற சிற்றூரில் இவர் சமாதி கூடினர். பிறகு, இங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று, முன்னர்ப் போகரால் சமாதி கூட்டப்பெற்ற வடக்குப் பொய்கை நல்லூரை வந்தடைந்தார். அவ்வூரில் வாழ்ந்திருந்த சடையப்ப கவுண்டர் என்பார் கோரக்கரை வரவேற்று ஆதரித்தார்.

## கோரக்கர் காலம்

உலகில் வாழ்வில் சித்தாடி மகிழ்ந்த கோரக்கர் நிறைவாகத் தாம் சமாதி கூடிய இடம் வடக்குப் பொய்கைநல்லூர் என்கிறார். இவர் சமாதி கூடிய காலம் பற்றி இவரே, தனிநூல் தொகுப்பில்,

**'அந்தமுடன் பரிவிருத்தி நானூற் றெட்டு**
**ஐப்பசிநேர் தசமிதிதி பரணி திங்கள்**
**சிந்தையுற சமாதிநிலை யான டைந்து**
**சிதறாமல் சீருலகில் வாழ்ந்து...'**

எனக் குறிக்கின்றார். கோரக்கர் குறிக்கும் பரிவிருத்தி என்ற ஆண்டுத்தொடர், கொல்லம் ஆண்டாகலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். அங்ஙனமாயின், கோரக்கர் இறுதியாக வடக்குப் பொய்கை நல்லூரில் சமாதி கூடிய காலம் கி.பி. 1233-ஆம் ஆண்டாக அமைகிறது. இதற்கு முன்னர் இவரே குறித்தவாறு சீன நாட்டில் 500 ஆண்டுகளும், பொதியமலையில் 400 ஆண்டுகளுமாக 900 ஆண்டுகள் வாழ்ந்துள்ளமை தெரிய வருகிறது. பிரபு லிங்கலீலையில் வரும் அல்லமதேவர் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டாகலாம். அவர்

www.saivamonline.com

காலத்திலும் கோரக்கர் வாழ்ந்துள்ளார். பட்டினத்தார் அருளிய 'வெட்டாத சக்கரம்' என்ற அரிய பாடலுக்கு இவர் தம் நூலில் நுண்பொருள் கூறியுள்ளமையின், இவர் பட்டினத்தாரின் காலத்துக்குப் பின்னும் வாழ்ந்திருந்தனர் என்றும் தெரியவருகிறது. எனவே இவர் கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ ஓர் ஆயிரம் ஆண்டுகள், காயகல்பஞ் செய்து கொண்டு, சித்தாடி வாழ்ந்திருந்தனர் எனக் கொள்ளலாம். சித்தர்கள் காலத்தைத் துல்லியமாக வரையறை செய்தல் என்பது இயலாததொன்று என்பதை அறிஞர் உலகம் அறியும்.

## வரலாற்றுச் சிதறல்கள்

சித்தர் நூல்களிலும், சித்தர் பாடல் தொகுதிகளிலும் கோரக்கர் வரலாறு பற்றிச் சிற்சில குறிப்புகள் காணப்படுகின்றன. அகத்தியரின் வைத்திய ரத்னச் சுருக்கம் 360 என்ற நூல் கோரக்கரை 'ஆதிவிப்பிரர்' என்றும், 'சேணியர்' என்றும் குறிக்கிறது. ஆயின், போகர் 7000 என்ற நூல் இவரை 'மராட்டியர்' என்று குறிப்பிடுகின்றது. அதே நூல், கோரக்கர் கார்த்திகைத் திங்கள் ஆயில்ய நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் என்று கூறுவதைக் காணலாம். முன்னர்க் குறித்த கோரக்கரின் காலச் செய்திகளுக்கு முரணாகப் 'போகர் 7000' என்ற நூல் கோரக்கர் வயது 80 என்று குறிக்கிறது. 'அகத்தியர் சௌமியசாகரம் 1200' என்னும் நூலுள் கோரக்கர் அகத்தியரின் பதினெட்டு மாணவர்களுள் ஒருவர் என்றும், இவர் எமநாட்டுச் சித்தர் என்பாரிடம் உபதேசம் பெற்றவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. கோரக்கரின் நூல்களிலேயே போகருடன் இவர் சீன நாடு சென்றபோது உலக நலம் கருதிப் பல பெண்களோடு கூடியதாக ஒரு செய்தி குறிக்கப்பட்டுள்ளது. சித்தர்களின் குடும்பம் பற்றிக் கூறவந்த கோரக்கரின் முத்தாரம் 91 என்ற நூல், கோரக்கருக்கு மனைவியர் ஐவர், குழந்தைகள் அறுபதின்மர் எனக் குறிக்கின்றது. மிகக் கோரமான நோய்களைத் தீர்க்க மருத்துவம் கண்டதால் 'கோரக்கர்' என இவர்க்குப் பெயர் அமைந்ததாக ஒரு குறிப்பும் காணப்படுகிறது. வசிட்ட மாமுனிவருக்கும் ஒரு குறவர்குலப் பெண்ணுக்கும் பிறந்தவர் கோரக்கர் எனப் போகரின் சப்த காண்டம் குறிக்கின்றது.

## சமாதி கூடிய இடங்கள்

கோரக்கரின் ஜீவசமாதிகள் இந்திய நாடெங்கும் எட்டு இடங்களில் காணப்படுகின்றன. அவை 1. பொதிய மலை, 2. ஆனைமலை, 3. கோரக்நாத்திடல் (பாண்டிய நாடு) 4. வடக்குப் பொய்கை நல்லூர், 5. பரூர்ப்பட்டி, (தென்னார்க்காடு மாவட்டம்), 6. கொல்லிமலை

www.saivamonline.com

(சதுரகிரி), 7. பத்மாசுரன் மலை (கர்நாடக மாநிலம்), 8. கோரக்பூர் (வடநாடு). இவற்றுள் வடக்குப் பொய்கை நல்லூர் மற்றும் பரூர்ப்பட்டி ஜீவசமாதிகளைப் பற்றிக் கோரக்கரே தம் நூல்களில் குறித்துள்ளார். பொதிய மலை, ஆனை மலை சமாதிகள் பற்றி இன்று அறிய இயலவில்லை. கோரக்நாத் திடல் என்பது மானாமதுரை உத்தமனூர் வழித்தடத்தில், மானாமதுரையிலிருந்து ஒரு கல் தொலைவில் இன்று கன்னாரத்தெரு என வழங்கும் இடத்தில் உள்ளது. இன்றும் சித்திரை பௌர்ணமி நாளில் நாட்டுக்கோட்டை நகரத்தார் இத்திடலில் அமைந்துள்ள கோரக்கர் சமாதிக்குப் பொங்கலிட்டுப் படையல் செய்து வழிபட்டு வருகின்றனர். போகர் 555 என்ற நூலில் கோரக்கர் கொல்லிமலையில் கோயில் கொண்டுள்ளமை குறிக்கப் பெற்றுள்ளது. போகரின் ஜனனசாகரம் கோரக்கர் கொல்லிமலையில் தம்மைந்தருடன் இன்றும் உயிர் வாழ்வதாகக் குறித்துள்ளது. மைசூருக்கு அருகில் உள்ள சாமுண்டி மலையில் கோரக்கர் ஒரு குகையில் வாழ்ந்திருந்ததாகப் போகர் 555-இல் குறிக்கப்பட்டுள்ளது. மகாராட்டிர மாநிலம் கோரக்பூரில் முழுவதும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கோரக்நாத் மந்திர் என்ற சமாதிக்கோயில் அமைந்துள்ளது.

## நிட்டை கூடிய இடங்கள்

ஒருவரே எட்டு இடங்களில் சமாதி கூடுவது என்பது அறிவாராய்ச்சிக்குப் பொருந்துவதன்று. சித்தர் தலைவராக விளங்கிய கோரக்கர் மேற்குறித்த இடங்களில் குகை அல்லது நிலவறை அமைத்து, அதனுள் புகுந்து, வாயிலை மூடச் செய்து யோக நிட்டை கூடியிருப்பார். யோக நிட்டை கலைந்ததும் தம் உருவத்தை அட்டாங்க யோகத்தால் மாற்றிக் கொண்டு உலகவர் அறியாது வெளிப்பட்டிருப்பார். மக்கள் தத்தம் பகுதியில் கோரக்கர் யோகம் செய்த இடங்களையே சமாதியாகக் கருதிப் போற்றி வழிபட்டு வருகின்றனர். வடக்குப் பொய்கை நல்லூரே அவர் இறுதியாகச் சமாதி கூடிய இடம் என்பதும், ஏனைய இடங்கள் அவர் ஜீவசமாதி கொண்டு யோக நிட்டை கூடிய இடங்களேயாகும் என்பதும் தெளிவாக அறிய வருகின்றன. தமிழ்நாட்டில் பல அருளாளர்களுடைய வாழ்வியல் வரலாறுகளும் மேற்குறித்த கருத்துக்கு அரணாக அமைகின்றன.

## சித்தர்கள் போற்றிய சித்தர்

கோரக்கர், தம்மை ஒத்த சித்தர்களாலேயே பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்றவர் என்பதைச் சித்தர் நூல்கள் எடுத்துரைக்கின்றன.

www.saivamonline.com

அகத்தியர் தாம் இயற்றிய சித்ராரூடம் என்ற நூலின் காப்புச் செய்யுளில்,

**'குருபரன்! சித்தர்! இந்திரர்! கோரக்கன் கயிலையாளி**

**செருவினை வராகி சூலி சித்ராரூடம் காப்பாம்'**

எனக் கூறுகின்றார். பாம்பு இயல் பற்றிக் கூறும் இந்நூலைக் காப்பதற்குக் கோரக்கரை வேண்டுவதிலிருந்தே கோரக்கரின் பெருமை நன்கு விளங்குகின்றது. அகத்தியர் 1200 என்ற நூல், கோரக்கர் உரைத்த மூலிகை மருத்துவத்தால் மக்கள் நெடுங்காலம் நோயின்றி வாழ்ந்தார்கள் எனக் குறிக்கிறது. கோரக்கர் மிகுந்த நேர்மையாளர் என்றும், அவர் பெருமையை அகத்தியராகிய தாமும், சித்தர்களும், சிவயோகிகளும் அறிவார்களேயன்றி மனிதர்கள் அறியமாட்டார்கள் என்றும் அகத்தியரே குறித்துள்ளார்.

## கோரக்கர் பெற்ற கலைஞானங்கள்

மச்சமுனி 800 என்ற நூலில், மச்சேந்திரர் தாமே கோரக்கருக்குச் சித்த வைத்தியம் கற்பித்ததாகக் குறிப்பிடுகின்றார்.

**'வேரிந்த காண்டமொன்றில் சரக்குவைப்பு**
**மேலான வாதமுதல் கற்பந்தானும்**
**கூறிந்த குளிகை வைத்தியங்க ளெல்லாம்**
**கூறுகின்றேன் கோரக்கா குறிப்பாய்க்கேளே'**

என்ற பாடல் வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. சட்டைமுனி தம் கற்பவிதி என்ற நூலுள் சித்தர் நூல்களின் சிறப்பையெல்லாம் கோரக்கரே தொகுத்து வழங்கினார் எனக் குறிக்கிறார். சட்டைமுனி வாத சூத்திரத்திரட்டு என்ற நூல்,

**'திரட்டினார் எனதுசூத் திரத்தைப் பார்த்துச்**
**செய்ததொரு சித்தரது பெயரைக் கேளு**
**திரட்டினார் மச்சமுனி அஞ்சுகாண்டம்**
**செகமறிய கோரக்கர் அஞ்சுகாண்டம்'**

எனக் கோரக்கர் சட்டைமுனி நூல்களை ஆராய்ந்து இரசவாத நூல் செய்தமையைக் குறித்துக் காட்டுகின்றது. நந்தீசர் ஞானம் 100 என்ற நூல் கோரக்கர் வகாரவித்தையாகிய வாசியோகம் செய்து வாழ்ந்ததைத் தெரிவிக்கிறது.

www.saivamonline.com

## அருமையை எளிமைப்படுத்திய அன்பு

கோரக்கர், தம் காலத்தும், தமக்குமுன்னும் வாழ்ந்த சித்தர்கள் பாடிய ஞான நூல்களும், மருத்துவ நூல்களும் பல்வேறு சங்கேதக் குறியீடுகளால் பாடப் பெற்றிருப்பதைக் கண்டு மனம் நொந்தார். மக்கள் இந்நூல்களின் உண்மையான பயனைப் பெற யாவற்றையும் மறைத்துப்பாடும் நெறி தடையாயிருப்பதை உணர்ந்து, அவற்றின் உண்மைப் பொருள் விளங்குமாறு அந்நூற்கருத்துக்களை எளிய தமிழில் பாடிவைத்தார். தமது மருத்துவ நெறிக்குக் கஞ்சாவை முதன்மைப் பொருளாகக் கொண்டார். ஆதலின் கஞ்சாவிற்குக் 'கோரக்கர் மூலிகை' என்றே ஒரு பெயர் உள்ளது. தமிழ்நாட்டுச் சித்த மருத்துவம் 'முப்பு' என்ற கலவையை முதன்மையாகக் கொண்டது. அதன் உண்மையைக் கோரக்கர் பட்டாங்கு விளக்கினார்.

## கோரக்கர் புகழ் ஒளி

கோரக்கர் வழிபாடு இன்று நேபாளத்தில் சிறந்துள்ளது. காட்மண்டுவில் கோரக்கர் ஆலயம் உள்ளது. கோரக்கருக்கு நேபாள அரசு விழா எடுக்கிறது. அந்நாட்டுப் பண நோட்டுகளிலும், நாணயங்களிலும் கோரக்கர் திருவுருவம் பதிக்கப் பெற்றுள்ளன. கூர்காஸ் என்ற இனத்தினர் தம்மைக் கோரக்கர் வழிவந்தவர்களாகவே கூறிக் கொள்கின்றனர். கோரக்கருக்கு இவர்கள் பெருவிழா எடுக்கின்றனர். மகாராட்டிர மக்கள் கோரக்கரை வீரர் தலைவராகப் போற்றி வருகின்றனர். புகழ்பெற்ற மராட்டியவீரர் சிவாஜி கோரக்கரைத் தமது மானசீகக் குருவாகப் போற்றியதாகக் கூறப்படுகிறது. கோராகும்பர் என்ற கர்நாடக அருளாளர் கோரக்கரை வழிபட்டு உயர்ந்தவர் என்கின்றனர். இஸ்லாமியப் பெருமக்களாலும் கோரக்கர் போற்றி வணங்கப் பெறுகிறார் எனக் கூறப்படுகிறது.

## வரலாற்று ஆராய்ச்சி

பலவாறாகக் கூறப்படினும் கோரக்கர் பற்றிய உண்மையான வரலாற்றை உணரக் கூடவில்லை. மேற்கூறப்பட்ட செய்திகளை நன்கு நடுநிலை நின்று ஆராய்ந்தால் சில உண்மைகள் புலப்படுகின்றன.


## ஆய்வு முடிவுகள்

கோரக்கர் தமிழ்நாட்டுச சித்தர் பரம்பரையில் குறிக்கத்தக்க பெருஞ் சிறப்புடையவர். இவரது ஞானாசிரியர் மச்சேந்திரர். போகர் இவரின்


www.saivamonline.com

நெருங்கிய நண்பர். மருத்துவம், யோகம், ஞானம் பற்றிய நூல்கள் இவரால் எழுதப்பெற்றன. இவர் கஞ்சாவைத் தமது மருத்துவ நெறிக்கு முதலாகக் கொண்டவர். சித்த மருத்துவம் குழப்பமில்லாது வெளிப்பட வேண்டும் என்று விரும்பினார். காயகல்பம் செய்து அதனால் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர். வான்வழிச் செல்லும் நெறி அறிந்தவர். இந்திய நாட்டின் பல பாகங்களுக்கும், சீன தேயத்திற்கும் சென்று சித்துக்கள் பல நிகழ்த்தியவர். சிவ நெறியினர். உமையம்மையை வாலைத் தெய்வமாகப் போற்றி வரம் பல பெற்றவர். உயர்ந்த பண்பு நலங்களும், பெருமித வாழ்வும் வாழ்ந்தவர் சமகாலத்துச் சித்தர்களால் நன்கு மதித்துப் போற்றப் பெற்றவர். நிறைவாக நாகையை அடுத்த சித்தாச்சிரமம் என்ற பழம்பெயர் கொண்ட வடக்குப் பொய்கைநல்லூரில் ஓர் ஐப்பசிப் (பரணி) பௌர்ணமி நாளில் சமாதி கூடியவர். வழிபடுவோர்க்கு இன்றும் வரம் பல நல்கும் பேரருளாளர். மேலும் மேலும் முயன்று கோரக்கர் வரலாறு ஆராயப்படும் போது இன்னும் பல வரலாற்று உண்மைகள் புலப்படக்கூடும்.

www.saivamonline.com



அருள்மிகு கோரக்கச்சித்தர் கருவறை
எழிலார்ந்த கலைவேலைப்பாடு அமைந்த தோரணவாயில்



சித்தர் கருவறை வாயிலில் அன்பர்கள்
விபூதிப் பிரசாதம் பெற்று மகிழ்தல்

www.saivamonline.com

# 3. கோரக்கச் சித்தர் நூல்கள்

## முன்னுரை

கோரக்கச் சித்தர் இயற்றிய நூல்கள் முப்பத்தெட்டு. இந்நூல்களின் பெயர்களும், பாடல் தொகைகளும், இவர் இயற்றிய இரு நூல்களுள் குறிக்கப் பெற்றுள்ளன. இந்நூல்களில் குறிக்கப் பெறாத வேறு இரண்டு நூல்கள் இவர் பெயரால் நிலவுகின்றன. இவற்றையும் சேர்த்தால் இவர் இயற்றிய நூல்களின் தொகை நாற்பதாகிறது. இவற்றுள் பதினாறு நூல்களை இவர் காலத்து வாழ்ந்திருந்த சித்தர் சிலர், இவரை மறித்து வாதமிட்டுக் கவர்ந்து சென்று அழித்தனர் என்பது முன்னரே கூறப்பட்டது. எஞ்சிய இருபத்து நான்கு நூல்களுள் அச்சு வடிவம் பெற்றன சில! காலவெள்ளத்தில் மறைந்தன பல! ஏடு பெயர்த்து எழுதப்பெற்றும் அச்சிடப்படாமல் உள்ளன சில உள! இவர் இயற்றியனவாகக் கருதப்படும் நூல்களின் பட்டியலும் அந்நூல்களின் பாடல் தொகையும் இவ்வியலில் குறிக்கப்பட்டுள்ளன. அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்கள் இவண் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

## சித்தர் இலக்கிய நெறி

சித்தர் பாடல்களுள் பல முறையான யாப்பமைதி கொண்டன. சில இசையமைதி கொண்டன. வேறு சில நாடோடி இலக்கியச் சாயல் கொண்டு விளங்குவன. மிகப் பல யாப்பமைதி இல்லாது காணப்படுவன. தனிப்பாடல்களையும் சிற்றிலக்கிய வகைகளையும் சித்தர்கள் கையாண்டுள்ளனர். சித்தர் பாடல்களில் மக்களிடையே வழங்கும் வழக்குச் சொற்களையும், சொற்றொடர்களையும் காணமுடிகிறது. சில குறிப்பிட்ட துறைகளில் வழக்காற்றுச் சொற்களைப் பொருள் விளங்கா வண்ணம் குறியீட்டுச் சொற்களாகவே வழங்கியுள்ளனர். ஞானம், யோகம் முதலிய துறைகளில் புதிய குறியீடுகளையும் படைத்துக்

www.saivamonline.com

கொண்டுள்ளனர். மருத்துவத் துறையில் சொற்பொருள் வேறாகவும், உட்பொருள் வேறாகவும் அமையும் வகையில் பரிபாஷைச் சொற்களாலேயே குறித்துள்ளனர். தனித்தனியே குறிக்கத்தக்கச் சிறப்புக் கூறுகள் சிலவும் சித்தர் பாடல்களிலே நிறைந்துள்ளன.

## குறியீட்டுச் சொற்கள் விளைத்த குழப்பங்கள்

சித்தர்கள் கண்ட மருத்துவம், யோகம், ஞானம் முதலியன முறையான வளர்ச்சி பெற்று, மக்களிடையே பரவாமைக்கு இவற்றில் காணக்கிடக்கும் குறியீட்டுச் சொற்களே தடைக்கற்களாக அமைகின்றன. மிகமுயன்று, அரிதின் முயல்வார்க்கன்றி ஏனையோர்க்கு இக்கலை ஞானங்கள் எளிதில் புரிய வேண்டியதில்லை என்பது சித்தர்களின் உட்கோளாகலாம். இவற்றின் உண்மைப் பொருள் அறிந்தசிலரும், இவற்றைப் பிறர் அறிதல் தம் பெருமைக்குத் தீங்காகும் எனக்கருதிப் பிறர்க்கு உரையாது மறைத்தனர். சித்தர் நூல்களில் காணப்படும் பல சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள் கூற வல்லார் எவரும் இல்லையென்றே கூறிவிடலாம். அகராதிகளும் இவற்றின் உண்மைப் பொருள்களை விளக்கும் வன்மை பெற்றிருக்கவில்லை. நூல்கள் காக்கப்பட்டனவே யன்றி, அவை உரைக்கும் நுண் பொருள்கள் அறியப்படாமலேயே இருண்டன. முற்றும் விளங்காத சங்கேதக் குறியீடுகளால் எழுதப் பெற்றதால் சித்தர் நூல்களுக்கு மக்களிடையே பரவலாக எதிர்ப்பும் தோன்றியது. சிலர் கண்டிக்கவும் செய்தனர். இவ்வகையில் முதல் கண்டனக் குரல் எழுப்பியவர் ஒரு சித்தரே! அவர்தான் கோரக்கர்!

## கோரக்கர் கண்டனம்

கோரக்கர் தமது சந்திரரேகையில் சித்தர் பாடல்களில் காணப்படும் பொருள் விளங்கா நிலையைக் கண்டிக்கிறார். தாம் நூல் பல இயற்றியதற்குக் காரணமே சித்தர்களின் இத்தகு சூழ்ச்சிகளை முறியடிப்பதற்காகவே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**‘ஆச்சென்ற மூவியதால் அனேக சூட்சம்**
**ஆடிடவே அறிவித்தேன் மக்காள்! மக்காள்!**
**சூட்சியதாய்ச் சித்தர்கள்தாம் செய்து வைத்த**
**சூதான நூல்களுக்கு எல்லாம் முன்னே**
**காட்சிபெறத் தெளிவாகக் களங்க மின்றி...’**

மக்களுக்கு விளக்கவே தாம் ‘காளமேகம்’ முதலிய பதினாறு நூல்களை இயற்றியதாகக் கோரக்கர் தமது சந்திரரேகையில் குறித்துள்ளார்.

www.saivamonline.com

சித்தர்களின் இச்செயல்களை வெறும் புரட்டு என்று கண்டிக்கவும் செய்கிறார்.

**'நாட்டினிலே சித்தர்களின் புரட்டை எல்லாம்**
**நானுணர்ந்து விவரமுடன் செப்பி னேனே'**

இவ்வாறு சித்தர் நூல்களில் உள்ள பொருள் மறைப்பைக் கோரக்கர் தமது பதினாறு நூல்களால் வெளிப்படுத்த முயன்றபோது, சித்தர் பலர் கூடி இம்முயற்சியை எதிர்த்துள்ளனர்.

**'மேதினியில் தெரிந்துற்ற தாலே சித்தர்**
**தப்பிதங்கள் இல்லாது தெளிவாய்ச் சூட்சம்**
**தாக்கினீர் மாந்தர்நமை மதியார் என்றார்'**

தம் நூல்களின் உண்மைப் பொருள் விளங்கி விடுமானால் மக்கள் தம்மை உயர்வாக மதித்திடமாட்டார் என்ற அச்சம் சித்தர்களிடம் தங்கியிருந்தமை புலப்படுகிறது. தமது பதினாறு நூல்களையும் சித்தர்கள் வெளிவாராது தடுத்தபோது, அவற்றின் உண்மைகளை எல்லாம் சந்திரரேகை என்ற நூல் வழியே வெளியிட்டேன் என்றும் கோரக்கர் கூறுகிறார்.

**'பாங்குடனே பதித்துவைத்தேன் பாபம் நீங்கப்**
**பழிகாரச் சித்தர்களின் பகடி எல்லாம்;**
**தாங்குமுயர் வஸ்துவினைத் தானே காணத்**
**தாக்கிவைத்தேன் உமைபரனின் பாதத் தாணை'**

மருத்துவ நூல் மறைப்புக்களை மட்டுமின்றி, இறைவன் திருவடிப் பேற்றுக்கு வாயில்களாக அமைந்த ஞான நூல் மறைப்புக்களையும் அகற்றினேன் என்கிறார் கோரக்கர்.

## கோரக்கரின் மறைக்கப்பட்ட நூல்கள்

கோரக்கரை மறித்து வாதமிட்டுச் சித்தர்கள் கொண்டு போன நூல்கள் பதினாறு. அவையாவன: 1. காளமேகம் 1000, 2. கபாடப்பூட்டு 800, 3. கமலாஞ்சனி 400, 4. பிரமபோதம் 80, 5. திலதரவி 500. 6. சுரபிவிந்து 300, 7. லலாடப்பூட்டு 680, 8. பஞ்சவர்த்தம் 58, 9. மறலிவாதம் 80, 10. சென்மசித்து 100, 11. ஆன்மசித்து 208, 12. லகாரகந்தம் 805, 13. ஞான சோதி 1000, 14. சோடரசம் 507, 15. கல்பபோதம் 507, 16. நிலையொடுக்கம் 507 என்பன. இந்நூல்களைப் பற்றியோ, இவை இன்ன இன்ன துறைகளை விளக்க எழுந்தன என்பன பற்றியோ யாதும் இன்று அறியக் கூடவில்லை. நூற்பெயர்களும், பாடல் தொகைகளும் மட்டுமே சந்திர ரேகையில்

www.saivamonline.com

குறிக்கப் பெற்றுள்ளன. மேற்கண்ட நூல்களில் சிலவற்றின் பெயர்களைக் கொண்டு அவை இன்ன துறையின என ஒருவாறு உய்த்துணரலாம்.

## மறைக்கப்பட்ட நூல்களின் உட்கோள்

'காளம்' என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவுரி, நஞ்சு, பாம்பு, எட்டி முதலியன காளம் என்ற சொற்பொருளாகக் குறிக்கப்பட்டுள்ளன. மேகம் என்பதை மறைப்பு' என்று உருவகப் பொருள் கொண்டால், காளமேகம் 1000 என்பது பல்வேறு விஷ நீக்கங்களுக்கு விதிகூறும் நூலாகலாம். கபாடம் என்பது கதவு. கபாடப்பூட்டு என்பது சித்தர்களால் மறைத்துக் கூறப்பெற்ற எண்ணூறு செய்திகளை விளக்குவதாக இருந்திருக்கலாம். இவ்வாறே மறலிவாதம் என்பது மரணத்துக்குக் காரணமான கொடிய வாத நோய்களின் இயல்புகளையும், அவற்றை அகற்றத்தக்க மருத்துவ முறைகளையும் கூறியதாகலாம். சென்மசித்து என்பது உடல்நலம் பேணும் முறை பற்றியும், ஆன்மசித்து என்பது உயிர் பெறும் ஈடேற்றத்திற்கு வழி கூறுவதாகவும் அமைந்திருத்தல் கூடும். எங்ஙனமாயினும், இவை அனைத்தும் சித்தர்கள் மக்கள் எளிதில் உணராவண்ணம் செய்த மறைப்புக்களை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்தனவேயாகும்.

## கோரக்கரின் இருபத்திரண்டு நூல்கள்

கோரக்கர் பாடிய தனித்தொகுப்பு என்னும் ஒன்பதே பாடல்களைக் கொண்ட நூலுள், இவர் இயற்றியனவாக இருபத்திரண்டு நூல்களின் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவை: 1. சந்திரரேகை 200, 2. ரவி மேகலை 75, 3. நமனாசத்திறவுகோல் 100, 4. நாதபேதம், 25, 5. கனகபிந்து 85, 6. கரிசல் 201, 7. ஞானம் 1101, 8. சீவரத்தினம் 95, 9. மூலிமர்மம் 800, 10. முச்சோதி நாதம் 86, 11. வாதகாண்டம் 200, 12. கன்மகாண்டம் 300, 13. முத்தாரம் 91, 14. முப்புக்காண்ட நிகண்டு 300, 15. சித்தர்வாதம் 66, 16. அம்சதீபம் 67, 17. மெய்ஞ்ஞானம் 1100, 18. சித்தர் மறைப்புண்மை 100, 19. சித்தர் சம்வாதம் 100, 20. கூடுவிட்டுக் கூடுபாய்தல் 200, 21. மறைப்புச் சூட்சம் 55, 22. மந்திரலீலை 305 என்பன. இவை இருபத்திரண்டுமன்றிக் கோரக்கர் மலைவாகடம், கோரக்கர் மாந்திரீகம் 105 என இருநூல்கள் வழங்குகின்றன. ஆயின், இவ்விரு நூல்களின் பெயர்கள் கோரக்கர் நூல்களுள் குறிக்கப் பெறவில்லை. அபிதான சிந்தாமணி ஆசிரியர் கோரக்கர் வைப்பு என்று ஒரு நூல் கோரக்கரால் பாடப் பெற்றதாகக் குறிக்கின்றார். கா. சுப்பிரமணியபிள்ளை இதனை உடன்படுகிறார்.

www.saivamonline.com

## பாடல் தொகை குறிக்கும் முறை

மேற்குறித்த கோரக்கரின் நூல்களில், நூற்பெயர்களுக்குப் பின்னே தொடரும் எண்கள், நூல்களில் உள்ள பாடல் தொகைகளைக் குறிப்பன. நூலாசிரியரே தம் நூற்பெயரொடு பாடிய பாடல் தொகையையும் இணைத்துக் கூறுவது புதுமரபாகும். புறம் நானூறு, அகம் நானூறு, நற்றிணை நானூறு முதலிய சங்க நூற்பெயர்களுள் தொகை குறிக்கப் பெற்றுள்ளன. எனினும் அவை தொகுத்த பாடல்களின் எண்களைச் சுட்டுவன. சித்தர் பாடல்களில் குறிக்கப்படும் தொகை நூலாசிரியரே தாம் பாடிய பாடல்கள் இவ்வளவு என்று கூறுவதாகும். இம்முறை, நூற்பாடல்கள் ஒன்றிரண்டு குறைந்தாலும் தேடிக்காணும் முயற்சிக்குத் துணை செய்வதோடு, இடைச்செருகல் இல்லாமலும் காக்கவல்லதாகும். பெரும்பாலான சித்தர் நூல்களுள் இம்முறை காணப்படுகின்றது.

## கோரக்கர் நூல்கள்: பொது அமைப்பு

கோரக்கர் நூல்களாகக் குறிக்கப் பெற்றனவற்றை உற்றுநோக்கினால் அவை, மருத்துவம், ஞானம், ரசவாதம், கூடுவிட்டுக் கூடுபாய்தல், சித்து, மந்திரம் முதலிய பல துறைகளைச் சார்ந்தன என்பது தெரியவரும். கிடைக்கப் பெற்று அச்சிட்ட நூல்களை ஆராயும்போது கோரக்கர் நிறைந்த தமிழ்ப் புலமையும், இலக்கணத் திறமும், உலகியல் அறிவும் நிறையப் பெற்றவர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. பெரும்பாலான பாடல்கள் எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்துள்ளன. மந்திரப்பகுதிகள் அவற்றின் தமிழ் வடிவில் யாப்புக்கட்டு இன்றி வரிவரியாகத் தரப்பெற்றுள்ளன. கலித்தாழிசை, கலி விருத்த யாப்புக்களும் சில இடம் பெற்றுள்ளன. பல பாடல்களுள் ஏடு பெயர்த்து எழுதுவோர் செய்த பிழைகள் காணப்படுகின்றன. தளை தடுமாற்றம், இடையில், ஓர் அசைச்சீர் வருதல் போல்வன பின் வந்தோர் செய்த பிழைகளே என்பது தெளிவு. கோரக்கர் நூல்களில் சில அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

## ஏழு நூற்றொகுதி

கோரக்கர் மற்றும் போகர் அருளியனவாகக் கருதத்தக்க ஏழு நூல்களைப் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினர் கி.பி.1975ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். சிவயோகி மா.இரத்தினசபாபதிப் பிள்ளை ஏடு பெயர்த்து எழுதி வைத்திருந்த கைப்பிரதிகளைக் கொண்டு ஏழு

www.saivamonline.com

நூற்றொகுதி என்ற பெயரில் இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. ந.சேதுரகுநாதன் அவர்களின் குறிப்புரையுடன் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந்நூலுள் கோரக்கர் அருளிய ஆறு நூல்களும், போகநாதர் அருளிச் செய்த கற்பசூத்திரம் 18-ம் தொகுக்கப் பெற்றுள்ளன. இத்தொகுப்பில் கோரக்கரின் 1. சந்திரரேகை 200, 2. நமனாசத் திறவுகோல் 100, 3. இரவிமேகலை 75, 4. முத்தாரம் 91, 5. நாதபேதம் 25 ஆகிய ஐந்து நூல்களும், கோரக்கர் தம் நூல்களுள் குறிக்காத தனித்தொகுப்பு 9 என்ற நூலும், ஆகிய ஆறு நூல்கள் இடம் பெற்றுள்ளன. பதிப்பாசிரியரின் பொருளடக்கப் பகுப்பும், மருத்துவப் பாடல்களுக்கு மட்டும் எழுதியுள்ள குறிப்புகளும் இந்நூற் பொருட்களைக் கண்டறியத் துணை செய்வனவாகும்.

## சந்திரரேகை 200

கோரக்கச் சித்தரின் நூல்களுள் தலையாயது சந்திர ரேகையே! இந்நூல் இருநூறு எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. கோரக்கரின் அளப்பரிய பெருமைகளை யெல்லாம் நிலைக்கச் செய்யும் நிகரற்ற நூல் என இதனைக் கூறலாம். அந்தாதித் தொடையில் அமைந்திருப்பதால் இடைச் செருகல்களுக்கோ, பாடல்கள் இடம் மாறி இருப்பதற்கோ இடம் இல்லை. என்றாலும், எடுத்துக்கொண்ட செய்திகள் முறையாக இடம் பெறாமல் அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம் பெற்றுள்ளன. இன்ன துறைக்குரியது என்று திட்டவட்டமாகக் கூற இயலாத வகையில் பல்வேறு துறைக்கருத்துக்களும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. ஏனைய சித்தர்களால் வாங்கிச் சென்று அழிக்கப் பெற்ற கோரக்கரின் பதினாறு நூல்களின் சாரமே 'சந்திரரேகை' எனலாம்.

## பெயர்க்காரணம்

சந்திரரேகை என்ற பெயர், கோரக்கராலேயே இந்நூலுக்குச் சூட்டப் பெற்றது. சூரியனின் பல்வேறு நிறக் கதிர்களை எல்லாம் ஏற்றுத் தம்முள் பதிய வைத்துக் கொண்டு தண்ணொளி வீசும் திங்களைப் போல், இறைவன் அருளிய கலைஞானங்கள் பலவற்றையும் பதிவு செய்து வைத்திருப்பது என்ற அடிப்படையில், இந்நூலுக்குச் 'சந்திரரேகை' என்ற பெயர் சூட்டப் பெற்றிருக்கலாம். இந்நூலின் முதல் இரு பாடல்கள் தற்சிறப்புப் பாயிராமாக அமைந்து தெய்வ வணக்கமும், செயப்படு பொருளும் கூறி நிறைகின்றன.

www.saivamonline.com

## உமையம்மை காப்பு:

'சித்தர் நெறி சிவநெறியே' என்ற உண்மைக்கு ஏற்பச் சிவபரம்பொருளின் அருட்சக்தியாகிய உமையம்மைக்கே ஆசிரியர் காப்புக் கூறி வேண்டுகின்றார். உமையம்மையைப் பார்வதி, தாய், சாமளரூபி, சூலி, வீரி, பாஸ்கரி, பஞ்சாட்சரதேவி, பரிபுரை, பங்கயவேணி, மாலி என்பன போன்ற திருநாமங்களால் விளித்து 'நின் நாமங்கள் தோத்திரமே' என்ற கருத்தில் அஞ்சலி செய்கிறார்.

**'கதாகிரண கசானனி நற்சந்திர ரேகை**
**கருத்துடனே கழறவுமை அருட்டாள் காப்பே'**

எனக் காப்புரைக்கிறார். நூல் எழுந்த நோக்கமும், நூல் கூறும் கருத்தும்,

**'காப்பதற்குக் காருண்யத் தாயே யல்லால்**
**காசினியில் எவருண்டு கவலை தீர்க்க**
**மூப்புபிணி சாக்காடு துன்பம் நீங்க**
**முறையுடனே ஞானசித்து யோக மார்க்கம்**
**ஏய்ப்பின்றிக் காயகற்பம் இகத்து ளோர்க்கு**
**எடுத்துரைப்பேன் நீடுழி காலம் ஓங்க**
**வாய்ப்புடனே வாசிபரி அமுத சூட்சம்**
**வண்மையுடன் விந்துநிலை வளமே சந்திரன்'**

என்ற இரண்டாம் பாடலால் நன்கு விளக்கப்படுகின்றன. ஞானம், சித்து, யோகமார்க்கம், காயகல்பமுறை இவற்றை விளக்குவதே இந்நூலின் நோக்கம் என்பது தெளிவாகிறது.

## வரலாற்று அகச்சான்றுகள்

சந்திரரேகையில் கோரக்கர் தம் வாழ்வியல் செய்திகள் பலவற்றையும், தாம் பெற்ற அருளனுபவங்களையும் பல பாடல்களில் பதிவு செய்துள்ளார். கோரக்கர் பெற்ற தீட்சை (16) அவரது உடல் அமைப்பு (18) போகரொடு கூடிப் பலதலங்கட்கும் சென்றமை (19) இருவரும் சீன நாடு சென்றுப் பின்னர் பொதிகை மீண்டமை (20-21) கோரக்கர், போகரைப் பழநியில் அடக்கம் செய்தமை (22) போகர், கோரக்கரை வடக்குப் பொய்கைநல்லூரில் அடக்கம் செய்தமை (23) கோரக்கர் அருளிச் செய்த பதினாறு நூல்களின் பெயர்கள் (151-152) ஏழு சித்தர்கள் கோரக்கரை நூல் கேட்டமை (153) சந்திரரேகை தோன்றிய சூழல் (154)

www.saivamonline.com

சித்தர்கள் கோரக்கரின் நூல்களை வாங்கிச் சென்றமை (155) முதலிய பல அரிய செய்திகளைச் சந்திரரேகை வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் சித்தர், மற்றும் சித்தர் நூல் ஆய்வுகளுக்குச் சந்திரரேகை பெரிதும் துணை நிற்கிறது எனலாம்.

## கோரக்கர் குறிக்கும் சித்தர்கள்

சந்திரரேகையில், கோரக்கர் காலத்து வாழ்ந்த பல சித்தர்களின் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. போகர் (19, 20, 21, 22, 23, 141, 189, 199), இடைக்காடர், அகப்பை முனி, நந்திதேவர், மச்சமுனி, சட்டை நாதர், பிரமமுனி, அழுகண்ணர் (153). கலைக்கோட்டார் (189) முதலியோர் பெயர்கள், செயல்கள், நூல்கள் முதலியன இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளன. சித்தர்கள் உலகியல் நோக்கும், சமூக வளர்ச்சி நாட்டமும் உடையவர்கள் என்பதைச் சந்திரரேகை நன்கு விளக்குகின்றது. அரசுநிலை, கெடு குறிகள், கலிகாலத்தின் கோலம் முதலியனவும் கோரக்கரால் இந்நூலுள் சுட்டப்பட்டுள்ளன. இந்நூலில் 75 முதல 81 வரையுள்ள ஏழு பாடல்கள் இவர்தம் சோதிட நூற் புலமைக்குச் சான்று பகர்வனவாகும்.

## சந்திரரேகை கூறும் மருந்து வகைகள்

சந்திரரேகையில் நிறைவாகக் காணப்படுவன சித்த மருத்துவக் குறிப்புக்களே எனலாம். குருமூலி, முதார் சிங்கிச்சுண்ணம், தாமிரச் சுண்ணம், சீனச் சுண்ணம், வெங்காரச் சுண்ணம், இலிங்கமெழுகு, துருசுப்பற்பம், கெந்தகச் சுண்ணம், இரசகெந்திச் சுண்ணம், திகைபற்பம், இரசமணி, விரோசனத்துக்கு மூலிவேர், செயராசபூபதி, கௌரிராசசிந்தாமணி, கருவங்கச் செந்தூரம், அரிதாரச் செந்தூரம், வெடியுப்புச் செந்தூரம், சீனக்காரச் செந்தூரம், நவச்சாரச் செந்தூரம், முப்பூவின் உண்மை, தாளகச் சுண்ணம் முதலிய மருந்து வகைகளும், இவற்றைச் செய்யும் முறைகளும், தேவையான மூலப் பொருள்களும், இம்மருந்துகள் விளைக்கும் நலங்களும் மறைப்பின்றி வெளிப்படையாக இந்நூலுள் கூறப்பெற்றுள்ளன.

## வியப்பூட்டும் வேறு செய்திகள்

மேற்கண்ட மருத்துவக் குறிப்புக்களோடு விந்திறங்காமல் போகர் செய்யும் முறை (57, 117, 142), நரை திரை நீங்க யோகபானம் செய்தல் (66), உடல் தளர்ந்திடாமைக்கு வழி (69), வயது மிக வளர்ந்தோங்க வழி (73), ஆயுள் ஓங்க வாயில் (77), ஊழ்வினை நீங்க வழி (79),

www.saivamonline.com

பிறப்பறவாயில் (80-81), காய கற்பம் இன்னது எனல் (108), பேய், பில்லி, சூனியம் ஓட்ட வழி (114-115), பிறர் கண்ணுக்குத் தோன்றாமல் தான் மறைய வழி (116), மோடி வைப்பவனை எதிர்த்துத் தோல்வியுறச் செய்யும் வகை(121), என்றும் பதினாறு வயதோடு வாழ நெறி(143) போன்ற வியப்பூட்டும் அரிய செயல்களுக்குரிய மந்திரம், செயல் முறை, வழிபாடு முதலியன சந்திர ரேகையில் காணக் கிடைக்கின்றன.

## சந்திரரேகையின் சிறப்பு

சந்திர ரேகை என்ற இந்நூலின் சிறப்பினைக் கோரக்கரே எடுத்துரைப்பதையும் இங்குக் காணலாம்.

**'ஏழுநூற்றாம் ஐந்ததுவே நிலையொடுக்கம்**
**நிகழ்த்தியதன் உண்மையெல்லாம் குறுக்கி நன்றாய்**
**வாழுதற்காய்ச் சந்திர ரேகையிரு நூறு**
**ஆமிக்க வையகமும் தழைத்து ஓங்கத்**
**தாழுதலும் இல்லாமல் இந்நூல் மார்க்கம்**
**தானறிந்து நடத்திடிலோ பேதம் போகும்**
**சூழுலக நிலையறிவான் ஞானி ஞானி**
**சொல்லிவிட்டேன் சாபமில்லை இந்நூற் காமே'**

சந்திரரேகையை அதன் உண்மைப் பொருள் உணர்ந்து கற்றால் உலகபேதம் நீங்கும்; உலகியல் அறிவு சிறக்கும்; கற்பார் சிறந்தஞானியாகத் திகழ்வர். இந்நூல் அரிய செய்திகளையெல்லாம் தன்னுள் திரட்டி வைத்திருக்கும் கருத்துக் கருவூலம் எனலாம்.

## நமனாசத் திறவுகோல் 100

கோரக்கர் இயற்றிய பிறிதோர் நூல் நமனாசத் திறவுகோல் என்பதாகும். இந்நூலுள் நூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. நூல் இறுதியில் யாப்புச் சிதைந்த நிலையில் சித்தர்கள் துதி ஒன்று அமைந்துள்ளது. இந்நூலில் 19, 22, 65, 69, 99 எண்பெறும் ஐந்து பாடல்களின் சில வரிகள் ஏடுகளில் காணப்படவில்லை. இந்நூலின் 23-24 ஆம் பாடல்களுக்கிடையே பத்தொன்பது பாடல்களில் கோரக்கர் உட்படப் பத்தொன்பது சித்தர்களின் கொள்கை முடிபுகள் தனித்தனியே எடுத்துரைக்கப் பட்டுள்ளன. 48-ஆவது பாடல் சக்தி சிவக்கிணறு பற்றிய 18 பாடல்களின் தொகுப்பாக நீண்டு செல்கிறது. 49-ஆம் பாடலுக்கும் 50-ஆவது பாடலுக்கும் இடையே வேறு 43 பாடல்களும், பத்து மந்திரங்களும் இடம் பெற்றுள்ளன. இதே

www.saivamonline.com

போல் 84-85 ஆம் பாடல்களுக்கிடையே வேறு சில பாடல்களும், மந்திரங்களும் துதிகளும் காணப்படுகின்றன. சந்திரரேகையில் காணப்பட்ட நூல் ஒழுங்கு இந்நூலுள் காணப்படவில்லை.

## நூற்சிறப்பு

நமனாசத் திறவுகோல் என்ற இந்நூலின் சிறப்புப் பற்றிக் கோரக்கரே இந்நூலின் இறுதிப் பாடலில் குறித்துள்ளார்.

**'முறையாமென் திறவுகோல் சொல்மார்க்க முன்னி**
**முக்காலும் எக்காலும் துதித்துப் போற்றில்**
**இறைவனின் அருளுண்டு அழிவோ யில்லை**
**இறப்பிறப்பு நீங்கியுயிர் எந்நாளு மோங்கும்**
**மறைப்பாகச் சித்தர்கள்செய் பலநூற் கெல்லாம்**
**மாநிலத்துக் கோரக்கன் திறவுகோல் கொண்டே**
**உரைபெருகச் செப்பிவைத்தேன் உமையா ளின்தாள்**
**உண்மையுடன் சித்தர்கள்தாள் துதித்தேன் முற்றே'**

சித்தர் நூல்களின் மறைப்புக்களை எல்லாம் திறக்கவல்ல திறவுகோலாய்த் திகழும் இந்நூலை ஓதினால், சிவனருள் பெற்றுப் பிறப்பு இறப்பின்றி நிலைத்து வாழலாம்.

## மருத்துவக் குறிப்புக்கள்

நமனாசத்திறவு கோலாகிய இந்நூலுள் மறைப்பின் வெளியுண்மை, பதினெண் சித்தர்களின் மருத்துவக் கொள்கை முடிவுகள், சிவஉப்பு, சத்திஉப்பு, பேரண்டச் சுண்ணம், சங்குச்சுண்ணம், பிரமகற்பம், செய நீர் கலக்கும் முறை, ஆயுள் வளர்ச்சிக் குளிகை, ஐங்கோலத் தயிலம், கௌரிச் சுண்ணம், நவபாஷாணச் சுண்ணம், வகார குருச்சுண்ணம், கெந்தகச் செம்பு, தங்கபஸ்பம், பஞ்சபூத வகாரக்குருச் சுண்ணம், சகல சரக்கும் நிற்கச் செயநீர், பஞ்சபூதக்குருச் செந்தூரம், சிவப்புக்கல் செந்தூரம், நவதசாமிர்த மெழுகு ஆகிய மருந்துவகைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இந்நூலுள் கூறப் பெற்றுள்ள குறிப்புக்கள், அனைத்து வகை மருத்துவத்திற்கும், செம்பொன் செய்யவும், சாவாமூவா வாழ்வு பெறவும் துணை புரிய வல்லன.

## பதினெண் சித்தர் கொள்கை முடிவு

கோரக்கர் இந்நூலுள், சித்தர்களின் குடும்ப வாழ்வு பற்றியும்,

www.saivamonline.com

அவரொடு சேரும் வகைமை பற்றியும் பல செய்திகள் கூறியுள்ளார். பதினெண் சித்தர் கொள்கை முடிபு கூறும் பகுதியில் அகத்தியர், நந்தீசுவரர், மச்ச முனிநாதர், அகப்பைநாதர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச்சித்தர், தன்வந்திரிச் சித்தர், வான்மீகிச்சித்தர், இராமதேவர் என்ற யாக்கோபுச்சித்தர், கொங்கணச் சித்தர், கருவூர்ச்சித்தர், சுந்தரானந்தச் சித்தர், திருமூலச்சித்தர், போக சித்தர் ஆகியோர் கொள்கைகளை விரித்துரைத்துள்ளார். இவற்றுள் மூன்று மற்றும் பத்தாம் பாடல்களால் குறிக்கப்படும் சித்தர்கள் இன்னார் என அறிய இயலவில்லை. இங்ஙனம் இந்நூலின் இடையிடையே காணப்படும் பாடல்களும், அவை கூறும் செய்திகளும் இந்நூல் உரைக்கும் செய்திகளோடு தொடர்புடையனவாக அமைகின்றன.

## ஓர் எடுத்துக்காட்டு

கோரக்கர் தமது நமனாசத் திறவுகோலில் பல்வேறு குளிகைகள் செய்யும் முறைகளையும் நன்கு விளக்கியுள்ளார். சான்றாக 'மிருத்யூவிஞ்சுக் குளிகை' செய்யும் முறையும், இக்குளிகையின் இயல்புகள் பற்றியும் இங்குக் காண்போம். இந்நூலில் 49-50 ஆவது பாடல்களுக்கிடையே, 'கிடக்கிது போகட்டும் காணே' என்று தொடங்கும் பாடல் முதல் 12 பாடல்களில் இக்குளிகையின் திறம் விரித்துரைக்கப் பட்டுள்ளது. உயிர் உடலில் தங்கித் தன்மணம் வீசி என்றும் வாழ ஆயுள் வளர்ச்சிக்குளிகை (மிருத்யுவிஞ்சுக் குளிகை) பற்றிக் கூறுகின்றேன் என்ற முன்னுரையுடன், இக்குளிகையைச் செய்யும் முறையைக் கோரக்கச் சித்தர் கூறுகின்றார்.

## ஆயுள் வளர்ச்சிக் குளிகை

சிப்பியை எடுத்து வந்து, உடைத்து உள்ளேயிருக்கும் தசையினைத் திரட்டிக் கொண்டு, அதன் அளவுக்குப் பாதியளவு வெங்காரத்தைத் தூளாக்கிப் போட்டுப் பிசைந்து ஒரு நாள் வைத்திருக்க, நீர் வடியும். பின் அதனை ஒரு பழகிய பாண்டத்தில் இட்டுக் குடநீரும், சிறு நீரும் சம அளவாகக் கலந்து, சிறுதீயாக எரித்துக் காய்ச்ச வேண்டும். சுண்டக் காய்ந்து மெழுகான பின், மெழுகளவில் எட்டில் ஒரு பங்கு, பிறந்த குழந்தைமேல் பூத்திருக்கும் மாவினைச் சேர்த்துக் கொண்டு வந்து கலந்து, கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், திருநீற்று வேர், வேளைவேர், மேனிவேர், பேய்க்குறிஞ்சாவேர், கொடிவேலிவேர், சத்திச்சாரணை வேர், நாகதாளிவேர் ஆகிய ஏழு வேர்ப் பொடிகளையும், வகைக்கு அரைப்பலமாகச் சேர்த்துச் சிறுநீர்

www.saivamonline.com

விட்டரைத்துப் பின்பு, திருநீற்றுச்சாறு விட்டரைத்து மென்மையாக ஆக்க வேண்டும். பின்னர்க் கருக்குட நீர் விட்டுக் கல்வத்திலாட்டி மயனமாகச் செய்ய வேண்டும்.

## செய்முறை

இனி, முன்னர்க் கூறிய மதலை மாச் சேர்ந்த மெழுகுடன் இதனைச் சம அளவு சேர்க்க வேண்டும். இவ்வாறு சேர்த்தால் ஏழு பலமாகும். அத்துடன், அண்டச் சுண்ணம், வீரச் சுண்ணம், சத்தியுப்புச் சுண்ணம், சிவ உப்புச் சுண்ணம், விந்துச்சுண்ணம், வங்கச் சுண்ணம், சிங்கி, தாளகம், கௌரி, கெந்தி, வெள்ளை, வெங்காரம், வெடியுப்பு, சீனம், துருசு, சூடன் ஆகிய இவற்றின் சுண்ணங்களும் சேர்த்துச் சுண்ணங்கள் பதினாறாகும். இச்சுண்ணங்களில் வகைக்குக் காற்பலம் எடுத்து, முற்கூறப்பட்ட மெழுகுடன் சேர்த்துத் திருநீற்றுச் சாறு சம எடை கலந்து, இரண்டு யாமம் அரைத்து, மெழுகுபோல் எடுத்துக் குன்றியளவாக உருட்டி நிழலில் உலர்த்த வேண்டும். இதுவே ஆயுள் வளர்ச்சிக் குளிகையாகும்.

## இறந்தாரை எழுப்பலாம்

ஆயுள் வளர்ச்சிக் குளிகையை, ஆயுள் வளர்ச்சி மந்திரம் ஓதிப் பூசை செய்து, அம்பிகையைத் தியானம் செய்து கொண்டு, ஆவின் வெண்ணெய்க்குள் வைத்து, நாள் ஒன்றுக்கு இருவேளை, 40 நாள் உண்ண வேண்டும். புளி இல்லாப் பத்தியம் மேற்கொண்டு, போகத்தை நீக்க வேண்டும். இக்குளிகையை உண்டால் உடலும், உயிரும் வலுக்கும். சாவு இல்லை. உயிர் பிரிந்த உடலின் மேல் சிறு நீரில் ஆயுள் விருத்திக் குளிகையை உரைத்துப் பூசினால், சூதின்றி இறந்தவர் எழுந்து பேசுவர். ஆயுள் வளர்ச்சி மந்திரம் 108 முறை ஓதிக் குளிகையைக் கொடுக்க வேண்டும். உயிர் பெற்று எழுந்தவனுக்கு, மூன்றே முக்கால் நாழிகைக்குள் மேலும் மருந்து வழங்கி உயிரை நிலை பெறச் செய்ய வேண்டும். இறந்தோரைப் பிழைத்தெழச் செய்யும் குளிகை இது. இப்பகுதியில் குறிக்கப் பெற்ற பதினாறு வகைச் சுண்ணங்களும், அவற்றின் செய்முறைகளும் கோரக்கர் நூல்களிலேயே முறைப்படுத்திக் கூறப்பெற்றுள்ளன. தகுதிமிக்க மருத்துவ நூல் அறிஞர்கள் துணையோடு இத்தகு குளிகைகளை முறையாகச் செய்து மனித குலத்தை நீடு வாழ வைக்கச் சித்த மருத்துவர்கள் முன்வர வேண்டும்.

www.saivamonline.com

## இரவிமேகலை - 75

கோரக்கரின் இரவிமேகலை என்ற நூல் 75 பாடல்களால் இயன்றுள்ளது. அறுபத்தெட்டாவது பாடலின் இறுதியில் நான்கு சீர்கள் காணப்பெறவில்லை. இந்நூலின் 41-42ஆம் பாடல்களுக்கிடையே ஈடுவசிய மருந்து பயன் நல்குவதற்குத் துணையான 'ஓம், ஆம், ஊம்...' என்று தொடங்கும் ஐந்து வரிகளினாலான மந்திர ஜெபம் ஒன்று காணப்படுகிறது. 52-53ஆம் பாடல்களுக்கிடையே மறைவு மைக்குரிய மந்திர ஜெபம் ஒன்று குறிக்கப் பெற்றுள்ளது. 66-67-ஆம் பாடல்களுக்கிடையே சித்தர் மந்திர எந்திர ஜெபம் காணப்பெடுகிறது. இந்நூற் பாடல்கள் யாவும் மந்திர, தந்திர, மருத்துவக் குறிப்புக்களையே வழங்குகின்றன. நமநாசத் திறவுகோல் 13 ஆவது பாடலில், இரவிமேகலையில் தாம் கூறியுள்ள சித்தர் மந்திரத்தினை ஓதுபவர்களுக்குச் சித்தர்கள் எதிரில் தோன்றி அகத்தியர் மறைத்த நூல்களைக் காட்டுவார் என்ற குறிப்பு உள்ளது.

## இரவிமேகலை உள்வீடு

இரவிமேகலையின் முதற்பாடலில் உடையவள் காப்புக் காணப்படுகிறது. இரண்டாவது பாடலில்,

**'வாழ்நலங்கள் பெருகிடவும் வாத யோகம்**
**வழுத்திடுவேன் வைத்தியமும் ஞான சூட்சம்**
**பாழ்போகா ரவிமேகலை எழுபத் தைந்தில்**
**பலம்பெற்ற சித்தர்களின் மறைப்பைத் தானே'**

எனக் கோரக்கர் குறித்துள்ளார். இந்நூலும் சித்தர் மறைப்புண்மை கூறுவதேயாகும்.

**'ஊனென்ற உடலாகி உகந்துற் றுய்ய**
**உண்மையுடன் கற்பவகை சுண்ண முந்தான்**
**பானென்ற மாதவமாங் கருவின் சூட்சம்**
**மகிழ்ச்சியுடன் ஓதிவைத்தேன் மனுக்கள் வாழ'**

என்ற குறிப்பால், கற்ப வகைகளும், சுண்ண வகைகளும் மக்கள் ஈடேற்றத்திற்காகக் கோரக்கரால் இந்நூலுள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளமை தெரிய வருகிறது. அடுத்துச் சித்தர்கள் தம் நூல்களில் மறைத்துக் கூறிய சில பொருள்களையும், அவை பல பெயர்களால் கூறப் பெற்றுள்ளமையையும் இரு பாடல்களில் விளக்கியுள்ளார்.

www.saivamonline.com

## இரவிமேகலை கூறும் மருந்து வகை

இரவிமேகலை, ஐங்கோலக் கருவின் மார்க்கம், ஐங்கோலப்பூ செய்முறை, சரக்குகள் கட்டும் முறை, வெங்காரச் சுண்ணம், செபதேவிச் சுண்ணம், துருசுச்சுண்ணம், கற்பூரச் சுண்ணம், கருவங்கச் சுண்ணம், முப்புச்சுண்ணம், தாம்பூரச் சுண்ணம், கோரக்கர் குருமெழுகு, ஈடுவசிய மருந்து, வெடியுப்புச் சுண்ணம், பதினொரு சரக்குக் கட்டுத் திராவகம், வீரமுப்பு, மறைவுமை, அப்பிரேகச் சுண்ணம், வெடியுப்பு மெழுகு, கண்பூவிற்கு மருந்து, அட்டகுன்மத்திற்கு மருந்து, இளைப்பு - இருமல் காசத்திற்கு மருந்து, கோடசச் செயநீர் முதலியவனவற்றை மிக விரிவாக எடுத்துரைத்து நிறைகிறது. மக்கள் பிணி, மூப்புச் சாக்காடு நீங்கி வாழத் தம் நூலைத் தவிர வேறு நூல் துணையாதல் இல்லை எனக் கோரக்கர்த் திடம்பட எடுத்துரைக்கிறார்.

**'இல்லைஎன்னாது சொன்னேன் உலகத் தோர்க்கே**
**இகபரத்தில் இருந்துதினம் வாழ்வ தற்குத்**
**தொல்லையில்லா ரவிமேகலை எழுபத் தைந்தில்**
**தொகுத்திட்டேன் பின்னமற பேத மேக...'**

தொல்லையில்லா வாழ்விற்கு வழிகாட்டும் இந்நூல், சித்தமருத்துவத் துறையில் சிறப்பிடம் பெற்றிலங்குகின்றது.

## மருந்தும், பலனும்

இரவி மேகலையில் கூறப்பட்ட மருந்துகள் போக்கும் நோய்களின் பெயர்களும் கோரக்கரால் இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளது. செபதேவிச் சுண்ணம், குட்டம், குறைநோய், வாதம் நீக்கும். துருசுச்சுண்ணம், பலகோடி நோய்களுக்கும் ஐயமின்றி நலந்தரும், கருவங்கச்சுண்ணம் இருபத்தொருவகை மேகம் போக்கும். தாம்பூரச்சுண்ணம் பெருநோய் அகற்றும். குட்டம், குறை நோய், எண்பது வாதம், குன்மம் முதலியனவும் இதனால் நீங்கும். கோரக்கர் கரு மெழுகு, மேகம், சன்னி, சுரம், புற்று, காமாலை, ஏறுகின்ற விரைவாதம், குட்டம், குன்மம் ஆகிய நோய்களை அகற்றும். வீரமுப்பு பொல்லாத மாநோய்களை எல்லாம் குணமாக்கும். அப்பிரேகச் சுண்ணம் நீரிழிவு நோய், காசம், ஈளை, சுரம், மாந்தம் முதலிய நோய்களை நீக்கும். இவ்வாறான பல நோய் நீக்கும் ஆற்றலுடைய மருந்துகளைச் செய்யும் முறைகளும் இந்நூலுள் முறையாகத் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன.

www.saivamonline.com

## வெடியுப்பு மெழுகு

எளிதாக எல்லாரும் செய்து பயன்பெறத்தக்க மருத்துவக் குறிப்புகள் பல இரவிமேகலையில் கூறப்பெற்றுள்ளன. வெடியுப்பு மெழுகு என்பது வயிற்றுக்கட்டி, நீராம்பல், மகோதரம் எனப்படும் பெருவயிறு ஆகிய நோய்களுக்குச் சிறந்த மருந்து. இம்மெழுகினைச் செய்யும் முறை இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளது. வெடியுப்பு, துவரையுமி, ஓமஅரிசி, பனைவெல்லம், இவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஓம அரிசியையும், துவரை உமியையும் தனித்தனியாக அரைத்துத் தூளாக்கிப் பின்னர் வெடியுப்பும் சேர்த்து அரைத்து, இறுதியில் பனை வெல்லத்தையும் சேர்த்து அரைத்தெடுக்க வெடியுப்பு மெழுகு உருவாகும். இம்மெழுகை நோய் நீங்கும் வரை சுண்டைக்காய் அளவு வழங்கி வரவேண்டும். கோவைச் சாற்றை இருபத்தொரு நாள் தலையில் தேய்த்து முழுகக் 'கண்பூ' நோய் குணமாகும். இவை போன்ற எளிய மருத்துவக் குறிப்புகள் அனைவரும் பின்பற்றத் தக்கனவே!

## முத்தாரம் 91

கோரக்கரின், 91 பாடல்களான் இயலும் பிறிதோர் நூல் முத்தாரம் என்பது. முற்கூறப்பெற்ற மூன்று நூல்களைப் போன்ற உள்ளீடு கொண்டதே இந்நூலும். இந்நூலில் இடையிடையே சில மருந்துகள் செய்யும் முறைகள் கூறப்பட்டுள்ளன. கோரக்கர் இந்நூலுள் தமக்குக் குருவாக நந்தியைக் குறித்துள்ளார். இந்நூல் எட்டாம் பாடலுள், நமனாசத் திறவுகோல் என்பது நவநாதத் திறவுகோல் என்று குறிக்கப் பெற்றுள்ளது. நூல் முடிவில் ஐந்து பாடல்களில் சித்தர்களின் குடும்ப வாழ்க்கைப் பற்றிக் கோரக்கர் விரிவாகப் பல செய்திகளைக் கூறியுள்ளார். இறுதிப் பாடலில் 'அரனுமைவேல் இருதாள் சரணம்' எனக் கூறி முடித்துள்ளார். 'அரனுமைவேள்' என்று பாடம் கொண்டால் சிவன், சக்தி, முருகன் ஆகிய மூவரையும் போற்றுவதாகக் கொள்ளலாம். இறுதிப் பாடல் நூற் செய்திகளின் தொகுப்பைக் கூறுகின்றது.

## முத்தாரம் கூறும் மருத்துவக் கூறுகள்

முத்தாரம் என்ற இந்நூலுள், பூச்செயநீர், செயநீரின் வகை, செயநீரின் முறை, முப்புக்குரு முடிப்பு, புகையும் சரக்குகள், செந்தூரம், வெள்ளீய நாகவறுப்ப, தாம்பரச்சுண்ணம், துரிசுச்சுண்ணம், மேக சஞ்சீவி மெழுகு, நாகச்சுண்ண பற்பம், இரசமணியும் பற்பமும், அரிதாரக்

www.saivamonline.com

கட்டும் சுண்ணமும், அமிர்த சஞ்சீவிக் குழம்பு, செம்பு சுத்தி, சகல நோய்களுக்கும் எண்ணெய், முப்பூரம், உப்புச் செந்தூரம், தாமிரச் சுண்ணம், தங்கச் சுண்ணம், துரிசுச்சுண்ணம், இரசச்சுண்ணம், அமிர்த சஞ்சீவிச் செந்தூரம் முதலிய பல அரிய மருந்துகளும், அவற்றின் செய்முறைகளும், அவை விளைக்கும் நலன்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பல மருத்துவ முறைகளுக்கு மனிதர் மற்றும் விலங்குகளின் சிறுநீர் இன்றியமையாதது என்பதைக் கோரக்கர் இந்நூலுள் குறித்துள்ளார்.

## சகல நோய் தீர்க்கும் ஓர் எண்ணெய்

எண்பத்து நாலு வகை வாதம், பதினெட்டு வகைச் சூலை போன்ற சகல நோய்களுக்கும் ஓர் எண்ணெய் இந்நூலுள் கூறப்பட்டுள்ளது. ஒரு பெட்டைக் கோழியை அறுத்துக் குடல், மயிர், தலை நீக்கி, சுக்கு, பெருங்காயம், பூண்டு, பரங்கிப்பட்டை இவற்றை வகைக்கு ஒரு பலமாகக் கோழியுடன் சேர்த்து இடித்துப் பானை ஒன்றில் இவற்றை இட்டுப் பத்துப்படி தண்ணீர் ஊற்றிச் சிறு தீயாய் எரித்து, முக்காற்படியாக வற்றியவுடன் பிசைந்து இருத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் வேம்பு, எள், ஆமணக்கு, கடுகு, புன்கு, புன்னை, இலுப்பை ஆகிய ஏழுவகை எண்ணெய்களை வகைக்கு அரைப்படிச் சேர்க்க எல்லாம் சேர்ந்து நாலரைப்படியாகும். அதனுள், வீரம், பூரம், வெங்காரம் ஆகியன வகைக்கு அரைப்பலம் கல்வத்திலிட்டு அரைத்துக் கலந்து கொள்ள வேண்டும். பின்னர், வசம்பு, மிளகு, வெள்ளைப்பூண்டு, சதகுப்பை, சுக்கு, ஓமம், அரிசித் திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, கிராம்பு, வாய்விளங்கம், கடுகுரோகணி, கருங்காக்கணத்தின் வேர் இவற்றை வகைக்கு அரைப்பலம் செயநீர் விட்டு அரைத்து, எண்ணெய்க் கியாழம் விட்டுக் குழப்பி, அடுப்பேற்றி எரித்துக் கடுகு பதம் கண்டு, வடித்து உரிய திரவத்தில் கலந்து வழங்க மேற்கூறப்பெற்ற நோய்கள் அகலும். இதுபோன்ற எளிய மருத்துவக் குறிப்புகள் பல முத்தாரத்தில் காணப்படுகின்றன.

## நாதபேதம் 25

கோரக்கர் அருளிய நாதபேதம் 25 இல் தற்போது 20 பாடல்களே கிடைத்துள்ளன. பதினொராம் பாடலின் நாலாம் வரியில் எண்சீர்களும் காணப்படவில்லை. 'ஓம் நமசிவாய' என்ற ஐந்தெழுத்தோதுவதாலாகும் பயன்களையும், பூசையால் வரும் முத்தி நிலையையும், வால் மிளகுக்கற்பம், சாதிக்காய்க் கற்பம், சாதிக்காய்க் குளிகை, ஓதாண்டுக்

www.saivamonline.com

கற்பம், இரசமணிக்கோவை போன்ற மருந்துப் பொருள்களையும் நாததேபம் விரித்துரைக்கிறது.

**'பக்தியுடன் ஓம்நமசி வாய வென்றே**
**பார்மகனே உருவேற்றப் பலிக்குஞ் சித்தி**
**சுத்தமுடன் தேகம்வச்சிர காய மாகும்...'**

எனத் திருவைந்தெழுத்தின் சிறப்பினைக் கோரக்கர் போற்றியுரைக்கிறார்.

**'கலையாத மனதாகப் பூசை செய்தால்**
**கருவான தேகமது முத்தி யாகும்**
**சிலையான தேகமது முத்தி யானால்**
**சிவசிவா சிவயோகம் இதுதான் பாரு...'**

எனச் சிவபூசைச் சிறப்புச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

## தனிநூல் தொகுப்பு 9

கோரக்கரின் தனிநூல் தொகுப்பில் ஒன்பது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முற்கூறப்பட்டவாறு இந்நூலின் முதன் மூன்று பாடல்களில் கோரக்கர்ப் பிற்காலத்துப் பாடிவைத்த 22 நூற்பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. நான்கு ஐந்தாவது பாடல்களில் கோரக்கர் ஜீவசமாதி கொண்ட காலம், இடங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. ஆறாம் பாடலில் பரிவிருத்தி 1120-இல் சித்தர் வெளிப்பட்டு வந்து உலகினை ஆள்வர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. எஞ்சிய மூன்று பாடல்கள், இவர் சித்தர்கள் ஒளிப்பை வெளிப்படுத்திச் சித்தர்கள் மறித்து வாதமிட்ட காலை, குளிகை பூண்டு வான்சென்று மதியோடு கலந்து மதியாக நின்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. கோரக்கர் வரலாறு காண இந்நூல் பெரிதும் துணை செய்யவல்லது. இந்நூற் பாடல்களிடையேயும் அந்தாதித் தொடை அமைந்துள்ளது.

## முடிவுரை

கோரக்கச் சித்தரின் அருள் வரலாற்றை ஆராயும் நோக்கில், அவரது மருத்துவ நூல்கள் சிலவற்றின் ஆய்வு மட்டுமே இவ்வியலில் மேற்கொள்ளப்பட்டது. தனிப்பட்ட நிலையில் கோரக்கரின் நூல்கள் ஆராயப்படும்போது அவர்தம் பல துறை ஆற்றல்கள் மேலும் புலனாதல் கூடும். சித்தர் நெறியில், செந்தமிழில், யாப்புக் கட்டுக் கோப்பில் நின்று பாட வல்லவர் கோரக்கர் என்பது மேற்கொண்ட நூலாராய்ச்சியால்

www.saivamonline.com

அறிய வருகிறது. அந்தாதித் தொடையில் எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் நூல் செய்யும் விருப்புடையவர் இவர் என்பதும் விளங்கித் தோன்றுகின்றது. ஒரே செய்தி பல இடங்களுள் குறிக்கப்பட்டுள்ளன. சில பாடல்களில் யாப்பமைதி சிதைந்து காணப்படுவது ஏடு பெயர்த்து எழுதியோரால் ஏற்பட்ட குறையாகலாம். சித்தர் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை இவர் விருப்புடன் பதிவு செய்யும் இயல்பினர் என்பதும், சித்த மருத்துவம் குழப்பமின்றி விளக்கம் பெற்று ஓங்க வேண்டும் என்ற பெருவிருப்பினர் இவர் என்பதும் நன்கு புலனாகின்றன.

www.saivamonline.com

# 4. கோரக்கர் ஆசிரமம்


## வடக்குப் பொய்கைநல்லூர்

கோரக்கச் சித்தர் ஜீவசமாதி கூடிய ஆசிரமம் வடக்குப் பொய்கைநல்லூரில் அமைந்துள்ளது. இவ்வடக்குப் பொய்கைநல்லூர், தமிழ்நாட்டில், நாகை மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்தில் கீழைக் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளது, நாகப்பட்டினத்திலிருந்து கடற்கரையை ஒட்டித் தெற்கு நோக்கி வேளாங்கண்ணிச் செல்லும் சாலை வழியே ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்தால் வடக்குப் பொய்கைநல்லூரை அடையலாம். மற்றும், நாகப்பட்டினம் - திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில், நாகப்பட்டினத்திலிருந்து தெற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கருவேலங்கடை என்ற சிற்றூரில் இறங்கி, கிழக்கே செல்லும் சிறுசாலை வழியே ஒரு கிலோ மீட்டர் பயணம் செய்தால் வடக்குப் பொய்கைநல்லூர் எதிர்ப்படும். இவ்விரு வழித்தடங்களிலும், நாகப்பட்டினத்திலிருந்து நகரப் பேருந்துகள் இவ்வூருக்குச் சென்று வருகினற்ன. இவ்வூருக்குத் தெற்கே அமைந்துள்ள சிற்றூர், தெற்குப் பொய்கைநல்லூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு அருகில் பரவை என்ற சந்தை உள்ளது. இந்த இடம் காய்கறி நாட்சந்தை கூடும் சிறப்புடையது.

## தேவாரத்தில் பொய்கைநல்லூர்

வடக்குப் பொய்கைநல்லூர், நெய்தல் வளமும், மருத வளமும் சிறந்திலங்கும் வளமான சிற்றூர். இவ்வூரில், தேவார ஆசிரியர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர் காலத்திற்கும் முற்பட்ட சிவாலயம் ஒன்று உள்ளது. இறைவன் திருநாமம் நல்லூர்நாதர். அம்மை திருநாமம் பால்மொழி அம்மை. இப்பொய்கைநல்லூர் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்றாகும். திருநாவுக்கரசர், தமது க்ஷேத்திரக் கோவைத்

www.saivamonline.com



வடக்கு பொய்கைநல்லூர்
அருள்மிகு கோரக்கச்சித்தர் ஆசிரமத்தின் எழில்மிக்க முகப்புத் தோற்றம்

www.saivamonline.com

திருத்தாண்டகத்தில் 'புலிவலம் புத்தூர்' என்று தொடங்கும் பாடலில் இவ்வூரைப் 'பொய்கை நல்லூர்' என்று குறித்துள்ளார். இவ்வூர்ச் சிவாலயத்தை 'நிலவு பெருங்கோயில்' என்றும் குறித்துள்ளார். அத்திருத்தாண்டகம் வருமாறு:

**'புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்**
**புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்**
**வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்**
**வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி**
**நிலமலி நெய்த்தானத் தோடெத்தா னத்தும்**
**நிலவுபெரும் கோயில்பல கண்டால் தொண்டீர்**
**கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற**
**கயிலாய நாதனையே காண லாமே'**

திருநாவுக்கரசர் குறித்த இத்திருக்கோயில் தற்காலத்தில் வடக்குப் பொய்கைநல்லூரின் தென்பால் அமைந்துள்ளது.

## நாகப்பட்டினம்

வடக்குப் பொய்கை நல்லூரை அடுத்து விளங்கும் பாடல் பெற்ற சிவத்தலம் நாகப்பட்டினம். தமிழ்நாட்டின் கீழைக் கடல் துறை முகப்பட்டினங்களுள் நாகப்பட்டினமும் ஒன்று. தேவாரம், இவ்வூரைக் 'கடல் நாகை' என்றும், இவ்வூர்ச் சிவாலயத்தைக் 'காரோணம்' என்றும் குறிக்கும். இறைவன் காயாரோகணர். இறைவி கருந்தடங்கண் அம்மை. நீலாயதாட்சி என வழங்குவதே பெருவழக்கு. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாகிய இத்தலத்தில் தியாகராசர், அழகிய விடங்கராக எழுந்தருளியுள்ளார். பெரியபுராணத் தனி அடியார்களுள் ஒருவராகிய அதிபத்தநாயனார் வாழ்ந்திருந்த தலம் இது. தமிழ் நாட்டுச சித்தர்களுள் ஒருவராகிய அழுகணிச் சித்தரின் சமாதிக் கோயில் ஒன்றும் இத்தலத்தில் காயாரோகணர் ஆலயத்தின் எதிர்ப்புறம் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகப்பட்டினத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் பௌத்த விகாரம் ஒன்று கட்டப் பெற்றது என்றும், அதற்குப் பிற்காலச் சோழ மன்னர்கள் நிதி உதவினர் என்றும் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. நாகர்கள் வரலாற்றோடு தொடர்புடைய இத்தலத்தில் புலவர் பலர் வாழ்ந்திருந்தனர்.

www.saivamonline.com

## காரோணத் தலபுராணம்

பல்வேறு சிறப்புக்கள் நிறைந்த, நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள காரோணம் என்ற சிவாலயத்தைச் சிறப்பித்து மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தல புராணம் ஒன்றை இயற்றியுள்ளார். இந்நூல், திருநாகைக் காரோணப் புராணம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. தல புராணங்களிலெல்லாம் முதன்மையானது இந்நூல் என அறிஞர் மதிப்பிட்டுரைத்துள்ளனர். அறுபத்தொரு படலங்களையும், 2506 திருவிருத்தங்களையும் கொண்டிருக்கும் இப்புராணத்தின் 26 மற்றும் 27-ஆவது படலங்கள், கோரக்கர் ஆலயம் அமைந்துள்ள இவ்வடக்குப் பொய்கை நல்லூரைப் பலபடப் பாராட்டிச் சிறப்பிக்கின்றன. இருபத்தாறாவதாக அமைந்துள்ள நந்திநாதப் படலத்தின் 68 பாடல்களும், இருபத்தேழாவதாக அமைந்துள்ள சித்தாச்சிரமப் படலத்தின் 47 பாடல்களும், வடக்குப் பொய்கை நல்லூரின் மூர்த்தி, தலம் மற்றும் தீர்த்தச் சிறப்புக்களை விரிவாக எடுத்துரைக்கின்றன.

## சித்தாச்சிரமம்

நந்திநாதப்படலம், வடக்குப் பொய்கை நல்லூரின் பழம் பெயர் சித்தாச்சிரமம் என்று குறிக்கிறது. இவ்வூர் நாகப்பட்டினத்திற்குத் தென் கீழ்த் திசையில் ஒரு குரோசத் தூரத்தில் அமைந்துள்ளதாகவும் குறித்துள்ளது. குரோசம் என்பது 2¼ மைல் என்பர். இச்செய்திகளை இப்படலத்தின் 21-ஆவது பாடலில் காணலாம். அப்பாடல்,

**'மேய காரோணத் தென்கீழ்**
**வியன்திசை அமரர் போற்ற**
**ஆயதாம் ஒருகு ரோசத்**
**தலங்குமாச் சிரம மொன்று**
**தூயவான் சித்தர் பல்லோர்**
**துதைதலாற் பன்னூற் கேள்வி**
**ஏயயா வோருஞ் சித்தாச்**
**சிரமமென் றிசையா நிற்பர்'**

என அமைந்துள்ளது. தேவர்களால் போற்றப் பெற்ற ஆச்சிரமம் ஒன்று இவ்வூரில் இருந்தமையும், இவ்வாச்சிரமத்தில் சித்தர் பலர் வாழ்ந்திருந்தமையும் இப்பாடலால் தெளிவாகிறது.

www.saivamonline.com

## நந்திநாதேசுவரர் ஆலயம்

வடக்குப் பொய்கை நல்லூரில், கோரக்கர் ஆலயத்தின் நேர் வடக்கில் தான் அருள்மிகு நந்திநாதேசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு நேர் எதிரில் கிழக்குத் திசையில், நாகை, வேளாங்கண்ணிச் சாலைக்கு அப்பால், வருணவிநாயகர் ஆலயத்தை அடுத்து நந்தி தீர்த்தம் என்ற தீர்த்தக்குளம் அமைந்துள்ளது. இக்குளம் தற்காலத்தில் கற்குளம் என்று வழங்கப்படுகிறது. நந்திநாதேசுவரர் ஆலயமும், நந்தி தீர்த்தமும் சித்தாசிரமம் என்ற பழம் பெயர் கொண்ட வடக்குப் பொய்கை நல்லூரில் அமைந்தமை பற்றிய வரலாறு ஒன்று நந்திநாதப் படலத்துள் சுவைபடக் கூறப்பட்டுள்ளது.

## திருக்கயிலாயத்தில் ஒரு நாள்

ஒரு நாள் நைமிசாரணியத்தில் வாழ்ந்திருந்த முனிவர்கள், வியாச முனிவருடைய மாணவராகிய சூதமுனிவரை வணங்கி, வடக்குப் பொய்கை நல்லூரில் கோயில் கொண்டு அருள் வழங்கும் நந்திநாதரின் பெருமைகளைத் தமக்கு எடுத்துரைக்குமாறு வேண்டினர். அவர் அவ்வரலாற்றை விரித்துரைத்தார். சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கயிலாய மலையின் முன் வாயிலைக் காத்துவந்தவர் நந்தி மாகாளர் என்பவர். விநாயகரும், பிருங்கி முனிவரும் தென்திசை வாயில் காத்து வந்தனர். இடபதேவரும், முனிவர்களும் மேலைவாயில் காவல் பூண்டிருந்தனர். கொற்றவையும், வீரசண்டன் என்பானும் வடக்கு வாயில் காத்து நின்றனர். ஒரு சமயம் கயிலை மலைக்கு வந்த துருவாச முனிவர், மேற்கூறப்பெற்ற வாயில் காவல் பூண்டு நிற்போரைப் பொருட்படுத்தாது உள்ளே புகுந்தார். இறைவன் அக்காலை, அந்தப்புரத்தில் உமையோடு இருந்தார். இறைவன் திருவோலக்கத்தில் எழுந்தருள்வதற்குள் துருவாச முனிவர் அந்தப்புரத்துள்ளேயே புகுந்து இறைவனை வணங்கி, வரம்பலப் பெற்று மீண்டார்.

## நந்திமாகாளர் பெற்ற சாபம்

துருவாச முனிவரை அந்தப்புரத்தில் நுழைய விடுத்த நந்திமாகாளர் முதலியோரைச் சிவபெருமான் அழைத்தார். காவல் பிழைத்தமைப் பற்றி அவர்களைச் சினந்து, நிலவுலகில் சென்று பிறக்கக்கடவீர் எனச் சாபமிட்டனர். நந்திமாகாளர் முதலியோர் தம் பிழைக்குப் பெரிதும் வருந்திச் சாப விமோசனம் வேண்டி இறைஞ்சினர். சிவபெருமான், 'மண்ணுலகில் நாகப்பட்டினத்தில் சென்று பிறந்து, நமது திருவடிகளை

www.saivamonline.com

அன்போடு அருச்சித்து சாப விமோசனம் பெறக்கடவீர்' என அருளி மறைந்தான். நந்தி மாகாளரும், ஏனைய வாயில் காவலரும் நாகையிற் பிறந்து, தேவதீர்த்தத்தில் நீராடி, காரோண நாதரையும் கருந்தடங்கண்ணியையும் வணங்கி, நாகையைச் சுற்றி அமைந்துள்ள தலங்களை எல்லாம் சென்று ஏத்தி, சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து பூசிக்கத்தக்க இடத்தை ஆராய்ந்தனர்.

## சித்தாச்சிரமத்தில் ஓர் ஆலமரம்

அக்காலை, நாகைக் காரோணத்தின் தென்கீழ்த் திசையில் அமைந்துள்ளதும், பழங்காவிரிநதி கடலிற் கலக்கும் இடத்தில் நிலவுவதும், அமரர் போற்றுவதும், சித்தர் பலர் வாழ்ந்திருப்பதும், இறைவியின் சொரூபமாக விளங்கும் பசிய நிற மரங்கள் நிறைந்ததுமாகிய இச்சித்தாச்சிரமத்தை வந்தடைந்தனர். இங்கிருந்த காட்டில் பல நூறு ஆண்டுகள் நிறைந்த ஆலமரம் ஒன்று நிலவியிருந்தது. அப்பெரிய ஆலமரத்தின் நிழலில் தேவர்கள் பலரும் வந்து இளைப்பாறினர். பிரமன் படைத்த பறவைக் கூட்டங்கள் செறிந்து வாழ்ந்திருந்தன. இதனால் அந்த இடம் ஆலங்காடு என்றே போற்றப் பெற்றது. சாய்க்காடு, வெண்காடு, செங்காடு, மாமறைக்காடு என்னும் காடுகளுக்கெல்லாம் மேம்பட்டு இவ்வாலங்காடு விளங்கியிருந்தது.

## நந்திநாதர் பிரதிட்டை

சித்தாச்சிரமத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இவ்வாலங்காட்டின் நடுவில் நின்றிருந்த தொன்மையான ஆலமரத்தடியில் நந்தி மாகாளர், ஏனைய வாயிற் காவலர்களுடன் சிவலிங்கத் திருமேனி ஒன்றை எழுந்தருளச் செய்து, எதிரில் புகழ்மிக்க தீர்த்தம் ஒன்றையும் உண்டாக்கி, அத்தீர்த்த நீரால் சிவலிங்கத்தை நீராட்டி, மலர்களால் அலங்கரித்து, உரிய படையலிட்டு அன்புடன் பூசித்து வரலானார். முறையாகப் பல்வேறு தோத்திரங்கள் பாடிப் போற்றினார்.

**"அடியவர் புரிந்தகுற்றம் அனைத்தையும் பொறுப்பாய் போற்றி!**
**நெடியவன் முதலோர்வேண்ட நீலநஞ் சயின்றாய் போற்றி!**
**கடியவா ளரக்கன் ஏத்தக் கருணையின் அளித்தாய் போற்றி!**
**படியவாம் புகழ்சால் சித்தாச் சிரமத்துப் பரம போற்றி!"**

எனப் போற்றிய அளவில், சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டுக் காட்சி தந்து, நந்தி மாகாளரை நோக்கி 'நீ வேண்டும் வரங்களைக் கேள்' எனக் கூறி அருளினார்.

www.saivamonline.com

## நந்திமாகாளர் கேட்ட வரங்கள்

நந்தி மாகாளர் சிவபெருமானை நோக்கி, 'நான் சித்தாச்சிரமமாகிய இத்தலத்தில், ஆலமரத்தின் அடியில் எழுந்தருள்வித்து வழிபாடியற்றிய இச் சிவலிங்கத் திருமேனியில் சிவபரம்பொருளே! எக்காலத்திலும் மகிழ்வோடு தங்கியிருந்து அருள் செய்ய வேண்டும்; நான் உண்டாக்கிய இந்த நந்தி தீர்த்தத்தில், உலகில் உள்ள எல்லாப் புனித தீர்த்தங்களும் வந்து கலந்து உரிய பலன்கள் நல்க வேண்டும்; இத்தலத்தில் 'நந்திநாதன்' என்ற பெயர் பூண்டு நின்று எம்மை வாழ்த்த வேண்டும்; எக்காலத்திலும் உன் திருவடிக்குத் தொண்டு செய்யும் வரத்தை எமக்கு அருள வேண்டும்' எனப் பலவாறாக வேண்டிப் பணிந்தார். இறைவன் மகிழ்ந்து அவ்வாறே வரம் நல்கி,

**'நந்திநன் கமைத்த இந்த**<br>
**நந்தி தீர்த்தத்தின் மூழ்கி**<br>
**முந்தியிந் நந்திநாதன்**<br>
**முளரியஞ் சரணம் தாழ்வோர்**<br>
**பந்திசெய் கொடிய மாபா**<br>
**தகமெலாம் மாறி மாயச்**<br>
**சிந்திநம் உலகஞ் சார்ந்து**<br>
**செழித்து வாழ்ந்திடுவர் உண்மை'**

என்றுரைத்து மேலும் பல வரங்களை வழங்கினார்.

## சிவபெருமான் வழங்கிய வரங்கள்

மேலும் சிவபெருமான் 'இந்த நந்தி தீர்த்தக் கரையில் எவரேனும் அன்னதானம் செய்தால், ஒவ்வொரு கவளத்திற்கும், சிவலோகத்தில் ஓர் ஆயிரம் வருடம் போகந்துய்த்து வாழும் சிறப்பினைப் பெறுவர்! இத்தலத்தில் பங்குனி மாதத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்துத் தாகம் தீர்ப்பவர், திருமாலாலும் பெற முடியாத பெருவளங்களையும் நிலவுலகில் பெற்று வாழ்வர். நந்திநாதர் திருக்கோயிலின் மேல் திசையில் விருத்த காவேரியின் பக்கத்தில் நின்று நீத்தார் கடன் செய்வோர்க்கு, 'கயை' என்ற தலத்தில் கடன் செய்வோர் பெறும் புண்ணியத்தைக் காட்டிலும் நூறு மடங்கு புண்ணியம் கிடைக்கும்' எனக் கூறி வேறு பல வரங்களும் அருளி ஏகினார். நந்தி மாகாளர், நந்திநாதருக்கு இவ்வூரில் அழகிய ஆலயம் ஒன்றை அமைத்து, சௌந்தரநாயகி மற்றும் பரிவார தெய்வங்களையும் எழுந்தருளச் செய்து வழிபட்டு வரலானார். கொடிமதில், விமானம், செம்பொன் கோபுரம், மண்டபங்கள்

www.saivamonline.com

முதலியனவற்றோடு, திருக்கோயில் அமைத்து, திருவீதிகளையும் முறைப்படுத்தி, இவ்வூரில் கவலையற்று வாழும் வண்ணம் பல குடிமக்களைக் குடியேறச் செய்து, முறையான பூசனைகளையும் செய்தார்.

## நந்திநாதேசுவரர் திருக்கோயில் பெருவிழா

நந்திநாதருக்கு நாள் வழிபாட்டோடு, ஆண்டுதோறும் பத்து நாள் பெருவிழா எடுக்கவும் நந்திமாகாளர் ஏற்பாடு செய்தார். ஆண்டுதோறும் மாசிமாதம் வளர்பிறையில் துவாதசி அன்று இடபக்கொடி ஏற்றப்பட்டுத் திருவிழாத் தொடங்கிற்று. ஏழாம் நாள் தேர்த்திருவிழாவும், எட்டாம் நாள் நடராசப் பெருமானுக்குத் திருச்சாந்து புனைதலும் நடத்தப்பட்டன. விருத்த காவிரியில், பத்தாம் திருநாளன்று, சஷ்டித்திதியில், அஸ்திரதேவரை நீராட்டித் தீர்த்தவாரி விழா நிகழ்த்தப் பெற்றது. இவற்றை நடத்தி முடித்த பிறகு நந்தி மாகாளரும், பிறரும் கயிலை சேர்ந்து தத்தம் தொழிலில் தலைநின்றனர். இவ்வாறு நந்திநாதப் படலத்துள் சிறப்புமிக்க இத்தல வரலாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும், நாகப்பட்டினம் அருள்மிகு காயாரோகண சுவாமி திருக்கோயில் ஏழூர்ப்பெருவிழாவில் ஆனிமாத பூத அஷ்டமியன்று ஏழூர்த்தேர், முதலாவதாக வடக்குப் பொய்கைநல்லூர் வந்து மக்களுக்கு அருள் வழங்கிச் செல்வது பற்றியும் இப்புராண பஞ்ச குரோச மான்மியப் பட்லத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.

## சித்தாச்சிரமப் படலம்

சித்தாச்சிரமப் படலத்துள், ஒன்பது கோடிச் சித்தர்கள் நான்முகன் அருளால் சித்தி பெற்றும், அதில் விருப்பமிலராய் வீடு பேற்றினை விரும்பி, அதனைப் பெற வழி கூறியருளுமாறு பிரமதேவனை வேண்டினர். பிரமதேவன், நீவீர் விரும்பும் வீடு பேற்றை அடையத் தூய்மையான ஒரு தலத்திற்குச் சென்று சிவபிரானை அருச்சனை முதலியவற்றால் போற்றித் துதித்தல்வேண்டும்; நந்தி மாகாளர் முதலியோர் போற்றிப் பேறுபெற்றதும், நந்திநாதர் என்ற திருநாமத்தோடு இறைவன் ஆலமரத்தடியில் எழுந்தருளியிருப்பதுமாகிய தூய தலம் ஒன்று நாகப்பட்டினத்திற்குத் தென்கிழக்கே அமைந்துள்ளது. அங்கே சென்று நந்தி தீர்த்தத்தில் நீராடி, நந்திநாதரை வழிபட்டால் வீடு பேறு சித்திக்கும் எனக் கூறி விடுத்தார். சித்தர்கள் அத்தலத்தை அடைய வழிகாட்டியருள்க என வேண்டினர். நான்முகன் தம் மாணாக்கன் ஒருவனை அனுப்ப, அவன் விண் வழியே சித்தரை அழைத்து வந்து வடக்குப் பொய்கை நல்லூரை அடையாளம் காட்டி மீண்டான்.

www.saivamonline.com

## சித்தர்கள் முத்தி பெற்றமை

ஒன்பது கோடிச் சித்தர்களும், முறையாகக் கடல் முதலிய தீர்த்தமாடி, நந்திநாதரை வழிபட்டுத் துதித்தனர். சிலாத முனிவர் புத்திரராகிய திருநந்திதேவர் சித்தர்கள் முன் தோன்றி, பரமசிவன் உபதேசித்த சைவ சித்தாந்த முத்தி நெறியை விளக்கியருளினார். அதனை முறைப்படக் கேட்டு, சித்தாந்தச் செந்நெறி நின்று சித்தரெலாம் முத்தி பெற்றனர். சித்தர்கள் வழிபட்டு முத்தி பெற்ற இத்தலம் சித்தாச்சிரமமாயிற்று. அன்று முதல் சித்தாச்சிரமம் என்ற பெயர் பெற்று இச்சிற்றூர் சிவராஜ தானியாய் விளக்கமுற்றது. சித்தாச்சிரமப் படலம் கூறும் செய்திகளின் சாரம் இவையேயாகும். புஜண்டவனம் என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு என்பது முன்னரே குறிக்கப் பெற்றது.

## 'பொய்கை நல்லூர்'ப் பெயர்க் காரணம்

சித்தாச்சிரமமாக விளங்கிய இவ்வூரில் நந்திமாகாளர் குடியமர்த்திய மக்கள், வேளாண்மை தொழில் பூண்டு, 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்ற பழமொழிக்கு ஏற்ப, தம் இல்லம் நாடி வருவோர்க்கு முகமலர்ச்சியோடு விருந்தளித்து நிறைந்த பெருவாழ்வு வாழ்ந்து வந்தனர். நல்லூர் நாதரையும், நந்தி நாதேசுவரரையும் உள்ளன்போடு வழிபட்டுப் பக்தியும், பண்பாடும் இணைய நல்லொழுக்கத்தில் தலைநின்றனர். நன் மக்கள் நிறைந்து வாழ்ந்தமையால் மக்கள் இவ்வூரை 'நல்லூர்' என்றே அழைக்கலாயினர். நல்லூர் என்ற பெயரில், சிவபெருமான், திருநாவுக்கரசருக்குத் திருவடி தீட்சை அளித்த ஊர் ஒன்று கும்பகோணம் தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள்கோயில் அருகில் உள்ளது. வேறு சில மாவட்டங்களிலும் நல்லூர் என்ற பெயரில் சிற்றூர்கள் சில உள்ளன என்பர். இவற்றிடையே வேறுபாடு தோன்ற மக்கள் இவ்வூரைப் 'பொய்கை நல்லூர்' என அடைமொழி சேர்த்து வழங்கலாயினர். பூக்கள் நிறைந்த குளங்களுக்குப் பொய்கை என்பது பெயர். இவ்வூரில் இத்தகு பொய்கைகள் 121 உள்ளன. இதற்குச் சான்றாக இவ்வூர் திரௌபதி அம்மன் கோயில் அருகில் உள்ள குளத்துக்கு நூத்திருகுளம் என்ற பெயர் வழங்கி வருகிறது. நூற்றி இருபத்தொன்றாவது குளம் என்பதே நூற்றிரு குளம் என மருவி வழங்குகிறது. இவ்வூரின் அருகில் பொய்கைநல்லூர் என்ற சிற்றூர் உள்ளதால் இவ்வூரை 'வடக்குப் பொய்கை நல்லூர்' என அழைத்துள்ளனர். இவ்வூருக்குப் பொய்கை நல்லூர் என்ற பெயர் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலேயே அமைந்திருந்தது என்பது முற்குறித்த திருநாவுக்கரசர் தேவாரத்தால் அறிய வருகிறது.

www.saivamonline.com

## வடக்குப் பொய்கைநல்லூர் ஆலயங்கள்

கோரக்கச் சித்தர் ஜீவசமாதி கூடிய அருள்மிகு கோரக்கநாதர் ஆசிரமம் இவ்வடக்குப் பொய்கை நல்லூரின் நடுவிடத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சித்தர் ஆசிரமத்தின் தெற்குத் திசையில் நல்லூர் நாதர் ஆலயமும், வடக்குத் திசையில் நந்திநாதேசுவரர் ஆலயமும் அமைந்துள்ளன. நல்லூர்நாதர் ஆலயத்தின் ஒரு பகுதியாகத் திருமால், லக்ஷ்மி தேவியுடன் சௌந்தரராஜப் பெருமாளாக எழுந்தருளியுள்ளார். நந்திநாதர் ஆலயத்தின் எதிரில் கீழ்த்திசையில், நாகை-வேளாங்கண்ணிச் சாலைக்கு அப்பால் நந்தி தீர்த்தத்தின் அருகில் வருணவிநாயகர் ஆலயம் காணப்படுகிறது. நந்திநாதர் ஆலயத்தின் வடதிசையில், மேற்குறித்த சாலையின் மேற்பால் கலிங்க மாகாளி என்ற பெயரில் பிடாரி அம்மன் கோயிலும், அதனை அடுத்துப் பிடாரி குளம் என்ற தீர்த்தமும் அமைந்துள்ளன. அடுத்துச் சாலையை ஒட்டிய பகுதியில், வடக்குத் தெருவில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் 'வள்ளலார் ஞான சபை' காணப்படுகிறது. அதனை அடுத்து இவ்வூர் வாயிலில் திரௌபதி அம்மன் திருக்கோயில் காட்சி தருகிறது. சித்தர் ஆலயத்தின் தென்திசையில் நல்லமுத்து மாரியம்மன் திருக்கோயிலும், அதன் எதிரில் கீழ்த்திசையில் ஐயனார் கோயிலும், நல்லூர் நாதர் ஆசிரமத்தின் தென்கிழக்குத் திசையில், சாலை ஓரமாக, வீரன்குடிக் காட்டுப் பகுதியில் பாலச்சந்திர விநாயகர் திருக்கோயிலும் அமைந்துள்ளன. வேறு, சிறு கோயில்களும் உள்ளன. இவை யாவும் வடக்குப் பொய்கைநல்லூர் மக்களின் வளம் நிறைந்த வாழ்விற்கும், பக்திக்கனிவிற்கும் சான்றாகத் திகழ்கின்றன.

## சித்தர் ஆசிரம அமைப்பு

வளம் நிறைந்த, வடக்குப் பொய்கை நல்லூரில் அருள்மிகு கோரக்கச் சித்தர் ஜீவசமாதி கூடிய, சித்தர் ஆசிரமம், ஊரின் நடுநாயகமாக அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதியோடு கூடிய இவ்வாசிரமத்தின் கருவறை ஸ்தூபி, சிதம்பரம் நடராஜப் பெருமானின் பொற்சபை அமைப்பில், உயர்த்தி அழகுற, சுதை வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. முன் பகுதியில் அழகிய பெரிய அர்த்த மண்டபம் ஒன்றும், கோயிலைச் சுற்றி அன்பர்கள் வலம் வர, மதிற்சுவரோடு கூடிய உள் திருச்சுற்றும் அமைக்கப்பட்டுள்ளன. சித்தர் ஆசிரமத் திருச் சுற்றில் நந்த வனமும் கிடைத்தற்கரிய சிற்றகத்தி முதலிய மூலிகை வகைகளும் சிறந்துள்ளன. உள் நுழைவாயிலை அடுத்து மக்கள் தங்கி இளைப்பாற வசதியாக இருபுறங்களிலும் தாழ்வாரங்கள்

www.saivamonline.com



ஆசிரம வளாகத்தில் பதினென் சித்தர்கள் அழகோவியங்கள்

www.saivamonline.com

அமைக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் தங்குவதற்கு வசதியான ஓடு வேயப்பெற்ற பெரிய இரு திண்ணைகளும் அமைந்துள்ளன. ஆசிரமத்தின் வடபக்கம் அமைந்துள்ள தியான மண்டபத்தின் பின்பகுதியில் சிறப்புமிகு நந்தவனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## உமையம்மை, சித்தர் ஓவியங்கள்

கருவறையை அடுத்தத் திருச்சுற்றுச் சுவர்களில் பதினெண் சித்தர்களின் வண்ணமிகு படங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பெரிய நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நந்தவனமும், திருமடைப்பள்ளியும் அமைந்துள்ளன. மகா மண்டபச் சுவர்களின் மேல் பகுதியில் கோரக்கர் அருளிய சந்திர ரேகை - 200 என்ற நூலிலிருந்து சிறந்த பாடல்கள் பல தேர்ந்தெடுக்கப் பெற்று, அழகுற எழுதப் பெற்றுள்ளன. உள்வாயிலின் மேல் பகுதியில், கையில் கரும்பேந்திய கோலத்தில், வாலையாகிய உமையம்மை அமர்ந்த திருக்கோலத்தில் காணப்படும் ஓவியம் ஒன்று தீட்டப்பெற்றுள்ளது. அம்மையின் வல-இடப் புறங்களில் தனித்தனியே இரண்டு சித்தர்களின் அமர்ந்த திருக்கோலங்கள் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளன. இவை போகர் மற்றும் கோரக்கரின் ஓவியங்களாகலாம். இவ்வோவியங்களின் கீழே, 'ஓம் அருள்மிகு கோரக்கநாதர் அருளிச் செய்த சந்திரரேகை' என்று பெரிய எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. அதன் கீழே,

**'சதாநந்தி பார்வதிஓம் சதுட்கோ ணத்தாய்**
**சகலவுயிர் நிறைந்தோங்கும் சாமளரூபி**
**இதாஇதங்கள் இலங்கிவளர் இதிகாசஞ் சொல்**
**இகபரத்தி லூடாடும் சூலி வீரி**
**பதாதிபத பாஸ்கரி பஞ்சாட்சர தேவி**
**பரிபுரை பங்கசவேணி கபாலி மாலி**
**கதாகிரண கசானனி நற்சந்திர ரேகை**
**கருத்துடனே கழறவுமை அருட்டாள் காப்பே'**

என்ற சந்திரரேகையின் முதற்பாடல் நான்கு வரிகளில் எழுதப் பெற்றுள்ளது.

## சித்தர் ஆலயத்தில் அம்மை அப்பர் திருவடிகள்

கோரக்கச் சித்தர் ஆசிரமக் கருவறையில், அழகிய நீள் சதுர வடிவில், செங்கற்களால் கட்டப் பெற்ற சமாதி மேடை ஒன்று அமைக்கப்

www.saivamonline.com

பட்டுள்ளது. இம்மேடைக்குக் கீழ் அமைந்திருந்த நிலவறையில்தான் போகர், கோரக்கரை ஜீவசமாதி கூட்டினார். ஜீவசமாதி மேடையின் மேல் முன் பகுதியில் கருங்கற்களால் செய்யப் பெற்ற பாதரட்சையுடன் கூடிய, அளவில் சற்றுப் பெரிய இரண்டு திருவடிக் கமலங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றை அடுத்துப் பின் பகுதியில் அரை அடி தூரத்தில் சிறிய இரண்டு திருவடிக்கமலங்கள் இடம் பெற்றுள்ளன. இத்திருவடிகள் இலிங்கத் திருமேனிகளாகக் கருதப் பெற்று, கோமுகியுடன் கூடிய ஆவுடையார் அமைப்பின் மேல் இடம்பெறச் செய்யப் பெற்றுள்ளன. முன்னர் உள்ள திருவடிகளின் கீழாக இருபத்து நான்கு உருத்திராக்க மணிமாலை ஒன்றின் இடையில் ஆறு இதழ் கொண்ட மலர் ஒன்று இடம் பெற்றிருப்பதான சுதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சமாதி மேடை மேல் அமைக்கப் பெற்றுள்ள பெரிய திருவடிகள் சிவபெருமானின் திருவடிகளாகவும், சிறிய திருவடிகள் உமையம்மையின் திருவடிகளாகவும் கருதப் பெற்று, இவற்றிற்கே அபிடேக ஆராதனைகள் யாவும் நிகழ்த்தப்படுகின்றன.

## திருவடி அமைத்து வழிபடும் மரபு

ஞானிகள், அருளாளர்கள், ஆசாரியப் பெருமக்கள் மறைந்த பின்னர், அவர்கள் திருமேனிகளை அடக்கம் செய்து, அடக்கம் செய்யப் பெற்ற இடத்தின்மேல், சிவலிங்கப் பிரதிட்டை செய்வது தமிழ்நாட்டில் இன்றும் சைவர்களிடையே தொடர்ந்து வரும் மரபாகும். திருக்கயிலாய பரம்பரையில் வந்த சைவசித்தாந்த ஆதீனங்களில் ஒன்றாகிய தருமபுர ஆதீனத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்வதே மரபாக இருந்து வருகிறது. எனினும் இதே பரம்பரையில் வந்த திருவாவடுதுறை ஆதீனத்தில் சமாதி மேடையின் மேல் இரண்டு திருவடிகளைப் பதித்துப் பூசிக்கும் மரபு பின்பற்றப்பட்டு வருகிறது. சிவபரம்பொருளின் திருவடிகளில் கலந்த இவ்வருளார்களின் சிரத்தின் மேல் சிவபெருமானின் திருவடிகள் நின்று நிலவுவதாகக் கருதும் மரபு பற்றிய வழக்காறாக இம்முறை இருத்தல் கூடும். அம்மை, அப்பர் இருவரது திருவடிகளையும் அமைக்கும் முறை கோரக்கர் ஆசிரமத்திலேயே காணப்படுகிறது. சித்தர் ஆலயக்கருவறையின் வல-இடச்சுவர்களின் மேற்பகுதியில் ஒன்பது அங்குலச் சதுரத்தில் இரு சுவாசத் துவாரங்கள் காணப்படுகின்றன. அவற்றின் உள்ளே கீழ்நோக்கிச் சிறிய படிக்கட்டுக்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

www.saivamonline.com

## சிவநெறி வழுவாத செட்டியார்

கோரக்கர் ஆலயத்தில் காணப்படும் சமாதி மேடை, மற்றும் அதன் மேல் காணப்படும் அம்மை அப்பர் திருவடிகள் பற்றிய வரலாறு மேலே கூறப்பட்டது. இதற்கு மாறாக, வடக்குப் பொய்கை நல்லூர் மக்களிடையே வேறு ஒரு சுவையான வரலாறு நெடுங்காலமாக வழங்கி வருகிறது. சோழ நாட்டு வேளாளர்கள் சோழிய வெள்ளாளர் என அழைக்கப் பெறுவர். இவர்களுள் பெருவணிகம் நிகழ்த்தியவர்களுக்குச் 'செட்டி' என்ற பட்டமும் உண்டு என்பது தமிழ் நூல்களுள் குறிக்கப்பட்டுள்ளது. வடக்குப் பொய்கைநல்லூரில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சிவநெறி வழுவாது, கடல் கடந்து, கீழை நாடுகளுக்குச் சென்று பெருவணிகம் செய்து வந்த செட்டியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். தம் குலத்து உதித்த கற்பிற் சிறந்த பெண் ஒருத்தியை மணந்து, இல்லறமாகிய நல்லறத்தை நடத்தி வந்த இவ்வணிகர், இவ்வூர்க் கடற்கரையில் வணிக நிலையம் ஒன்று அமைத்துக் கொண்டு கடல் வணிகத்தைச் சிறப்பாக நிகழ்த்தி வந்தார். சொந்தத்தில் இவருக்குப் பாய்மரக் கப்பல்கள் பல இருந்தன.

## சிவனடியார் பசி தீர்த்தல்

இவ்வணிகரின் துணைவியார், நாள்தோறும் உணவு சமைத்துப் பாத்திரத்தில் தாமே எடுத்துக் கொண்டு போய்க் கடற்கரை அலுவலகத்தில் தம் கணவருக்கு அன்போடு உணவு படைத்து வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். ஒரு நாள், அம்மையார் தம் கணவருக்கு உணவு கொண்டு செல்லும்போது சிவனடியார் ஒருவர் எதிர்ப்பட்டார். உடல் தளர்ந்து, வாடிய முகத்தோடு எதிர்ப்பட்ட அடியார், இவ்வம்மையாரை நோக்கித் தம் பசி தீர உணவிடுமாறு வேண்டி நின்றார். மனமிரங்கிய அம்மையாரும், சிறிதும் தாமதியாது, அடியார் பசித்துயர் தீர்ப்பதே பேரறம் என்ற நினைவோடு, கொண்டு வந்த இலையை அவ்விடத்திலேயே விரித்துத் தம் கணவருக்குக் கொண்டு சென்ற உணவைச் சிவனடியாருக்குப் படைத்தார். உண்டு பசித்துயர் தீர்த்த அடியார் அவ்வம்மையாருக்கு ஆசிகள் பல கூறிப் புறப்பட ஆயத்தமானார்.

## சிவபிரானின் சித்தாடல்

அம்மையார் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் உணவு கொண்டு வர இல்லம் நோக்கி நடக்கத் தலைப்பட்டார். சிவனடியார் அவரைத் தடுத்து 'இப்பாத்திரங்களையும், இலையையும் எடுத்துக்

www.saivamonline.com

கொண்டு உன் கணவர் இருப்பிடம் செல்! அவனுக்கு உணவு படை' என்று கூறி அகன்றார். அம்மையாரும் அடியவர் சொல் வழியே கணவர் இருப்பிடம் சேர்ந்து, கணவர் முன்னே இலையை விரித்துப் பாத்திரங்களைத் திறந்தார். என்னே வியப்பு! அவைகளில் உணவு குறைவற நிரம்பியிருந்தது! அம்மையார் தம் வியப்பை வெளிக்காட்டாது கணவருக்கு உணவைப் படைத்தார். உண்ட கணவர் சிவப்பிரசாதமாக வந்த அவ்வுணவு, என்றுமில்லாத சுவையாக இருப்பதை அறிந்து தம் துணைவியாரிடம் உண்மை கூறுமாறு வினவினார். அம்மையார் நடந்ததனை, நடந்தபடி கணவனாருக்கு எடுத்துரைத்தார்.

## பரணி நாளில் விளைந்த அற்புதம்

துணைவி உரைத்தன கேட்டு வியந்த வணிகர், தம் மனைவியையும் அழைத்துக் கொண்டு, சிவனடியாருக்கு உணவளித்த இடத்திற்கு விரைந்தார். அங்கே சிவனடியாரைக் காணவில்லை. மணல்வெளியில் இரண்டு திருவடிகளின் சுவடுகள் மட்டுமே காணப் பெற்றன. அருகில் உணவளித்த வணிகர் தம், துணைவியாரின் இரண்டு அடிச்சுவடுகளும் காணப் பெற்றன. சிவனடியாராக எழுந்தருளித்தம் துணைவி யாரிடம்உணவு பெற்று உண்டும், மீண்டும் பாத்திரத்தில் உணவு வரச் செய்தும் திருவிளையாடல் நிகழ்த்தியருளியவர் சிவபெருமானே என உணர்ந்து மெய் சிலிர்த்தார் வணிகர். சிவனடியார்த் திருக்கோலத்தில் சிவபெருமானைக் காணும் பேறு பெற்ற தம் துணைவியாரின் தவத்தை எண்ணி மகிழ்ந்தார். தமக்கு அக்காட்சிக் கிட்டவில்லையே எனச் சிந்தை நொந்தார். இறைவன் இவ்வாறு சிவனடியார் திருக்கோலத்தில் எழுந்தருளிச் செட்டிக்குலப் பெண்ணிடம் திருவமுது பெற்று உண்டது ஓர் ஐப்பசித் திங்கள் பரணி நாளாகும்.

## செட்டியார் கட்டிய கோயில்

கடல் வணிகம் செய்து வந்த சிவலிங்கச் செட்டியார், திருவடிகளின் சுவடுகள் பதிந்திருந்த இடத்திலே ஒரு மேடை அமைத்து வழிபாடு தொடங்கினார். மக்கள் இவ்வருளற்புதம் கண்டு அதிசயமுற்றனர். திருவடிச் சுவடுகள் பதிந்திருந்த மேடையை மையமாக அமைத்துச் செட்டியார் ஒரு ஆலயத்தைக் கட்டி முடித்து நாள்தோறும் நித்திய பூசை களுக்கு உரிய நிவந்தங்களையும் ஏற்படுத்தினார். வடக்குப் பொய்கை நல்லூர் மக்கள் நாள்தோறும், சிறிது சோற்றைக் கொண்டு வந்து, திருவடிகள் முன் வைத்து நைவேத்தியம் செய்து, அடியவர்களுக்கு

www.saivamonline.com

அளித்த பின்னரே தாம் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டனர். நாளடைவில் சிவனடியார் ஒருவர் நாள்தோறும் தம் தோளில் அன்னக் காவடி ஒன்றை ஏந்தி மக்கள் இல்லந் தோறும் சென்று, அவர்கள் விரும்பி இடும் புதிய உணவைப் பெற்று வந்து சிவபெருமான் திருவடிகளுக்குப் படைத்து, அங்கே வந்து கூடும் ஏழை எளியவர்களுக்கு வழங்குவதைப் பழக்கமாகக் கொண்டார். வடக்குப் பொய்கை நல்லூர் மக்களும் அன்னக் காவடிக்கு உணவிட்ட பின்னரே உண்பர். உணவு படைக்கப் பெற்றமைக்கு அறிவிப்பாகத் திருக்கோயிலில் நகரா முழக்கப்பட்டு, சங்கொலி எழுப்பப் பெறும். அவ்வொலி கேட்ட பிறகே மக்கள் உண்பர். ஆண்டுதோறும் ஐப்பசிப் பரணி நாளில் பெருவிழாவும் எடுத்து அன்னதானத்தைச் சிறப்பாகச் செய்து வந்தனர்.

## கனவிடைத் தோன்றிய கண்ணுதற்கடவுள்

சில ஆண்டுகள் கடந்தன. ஒருமுறை வணிக நிமித்தம் மலேயா சென்ற செட்டியார் ஐப்பசிப் பரணி வருவதை மறந்து போயினர். ஆண்டுப் பெருவிழாவின் முதல் நாளன்றுதான், நாளை ஐப்பசிப் பரணி என்பது அவர் நினைவுக்கு வந்தது. சிந்தை நொந்து, நாளைக்குள் வடக்குப் பொய்கை நல்லூர் எங்ஙனம் செல்வேன்! ஐப்பசிப் பரணி விழா தடைப்பட்டு விட்டதே என்று கலங்கிக் கண்ணீர் உகுத்தார். கவலையில் கண்ணயர்ந்த செட்டியாரின் கனவில் சிவபெருமான் தோன்றி, 'அன்பனே! கவலை வேண்டாம்! உன் அன்பை அறிவோம்! நீ கண் விழிக்கும் போது வடக்குப் பொய்கைநல்லூர் கடற்கரையில் உன் கப்பல் நிற்கும்! கரை சேர்ந்து வழக்கம் போல் ஐப்பசிப் பரணி விழாவை நடத்துக! ஆனால், நடந்தனவற்றை உன் மனைவி உள்பட எவரிடமும் கூறாதே! கூறினால் உன் ஆவி பிரியும்' என்று கூறி மறைந்தார்.

## சிவனருள் நினைந்து சிரிப்பு

திடுக்கிட்டுக் கண் விழித்த செட்டியார் தம் கப்பல் கீழைக் கடற்கரைத் துறையில், தம் அலுவலகம் அருகே நிற்பதைக் கண்டு, மெய் சிலிர்த்தார். கரையேறித் தம் இல்லம் சேர்ந்து, மிகச் சிறப்பாக ஐப்பசிப் பரணிப் பெருவிழாவை அன்னதானப் பெருவிழாவாக நடத்தி மகிழ்ந்தார். விழா சீரும் சிறப்புமாக நடந்தேறிய பின், ஒரு நாள் இல்லத்தில் அமர்ந்திருந்த செட்டியார் சிவபெருமானின் கருணைத் திறத்தை நினைந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்துத் தாமே சிரித்தார். அதனைக் கண்டு திடுக்கிட்ட துணைவியார், அவர் சிரிப்புக்கு என்ன காரணம் என்று வினவினார். செட்டியார் வேறு காரணம் கூறியபோது நம்ப மறுத்த அம்மையார்

www.saivamonline.com

உண்மையை மறைக்காது தம்மிடம் கூறுமாறு வற்புறுத்தினார். செட்டியார் உண்மை கூறினால் என் ஆவி பிரியும் என்று கூறியும், அதனை உடன்படாத அவ்வம்மையார் கணவன் தம்மை அந்நியராகக் கருதி மறைப்பதாகக் கூறி வருந்தினார்.

## அம்மை அப்பர் திருக்காட்சி

இறைவன் தம் திருவிளையாடலைத் தம் துணைவி வழி நிகழ்த்தத் தொடங்கியமையைச் சிந்தித்த செட்டியார், இடுகாட்டில் சிதை அடுக்கி அதன் மேல் படுத்தவாறு உண்மை கூற முற்பட்டபோது, துணைவியாரும் அவ்வாறே தமக்கும் ஒரு சிதை அடுக்கி அதன் மேல் படுத்தவாறு சிரிப்பின் காரணத்தைக் கேட்கத் துணிந்தார். இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலைச் செட்டியார் தம் துணைவிக்கு எடுத்துரைத்த வுடனேயே அவர் ஆவி பிரிந்தது. கணவர் ஆவி பிரிந்தமை அறிந்த அம்மையாரும் உயிர் நீத்தார். இறைவன் உமையம்மையாரோடு எழுந்தருளி வந்து இவ்விருவருக்கும் திருக்காட்சி நல்கித் தம் திருவடிகளில் இவர்களை இணைத்துக் கொண்டான். செட்டியார் கட்டிய திருக்கோயிலே தற்காலத்தில் சித்தர் ஆசிரமமாகத் திகழ்கின்றது என்றும், கருவறையில் காணப்படும் திருவடிகள் சிவபெருமானின் திருவடிச் சுவடுகளே என்றும், செட்டியார் துணைவியிடம் இறைவன் சோறு பெற்று உண்ட நாளே ஐப்பசிப் பரணி விழா நிகழும் நாள் என்றும் இவ்வூர் மக்களிடையே நெடுங்காலமாக ஒரு நம்பிக்கை நிலவி வருகிறது. கால காலமாகச் செவிவழிச் செய்தியாக வழங்கி வரும் இக்கதைக்கு வேறு இலக்கிய ஆதாரங்கள் கிடைத்திலது.

## ஐதிகத் திருவிழா

மேற்குறித்த செட்டியாரும், அவர் தம் துணைவியாரும் சிவனருள் பெற்ற செவிவழிச் செய்தியோடு தொடர்புடைய சில அடையாளங்களும், சில நிகழ்வுகளும் வடக்குப் பொய்கைநல்லூரில் இன்றும் உள்ளன. தற்போது சித்தர் ஆசிரமமாகக் கருதி வழிபடப் பெற்று வரும் சித்தர் ஆசிரமத்தில் ஆண்டு தோறும் ஐப்பசிப் பரணி விழாவன்று இரவு அருள்மிகு நந்திநாதேசுவரர் உள்ளிட்ட பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி வந்து செட்டியார் தம்பதிகளுக்குக் காட்சி கொடுக்கும் ஐதிக விழா நடத்தப் பெற்று வருகிறது. இக்காட்சிக் கொடுக்கும் நிகழ்ச்சி அதிகாலை 4 மணி அளவில் நடைபெற்று வருகிறது. பரணி விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக இது அமையும். இந்நிகழ்ச்சி சில ஆண்டுகளுக்கு முன்வரை நடந்து கொண்டிருந்தது. பெரிய, பனை ஓலைச் சப்பரத்தில்

www.saivamonline.com

(தெருவடைச்சான்) ரிஷப வாகனத்தில் அம்மை அப்பர் எழுந்தருளி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

## முனிவர் ஆலை

மேலும் மிகப்பெரிய ஓர் ஆலமரத்தின் நிழலில் தான் அம்மையாருக்கு இறைவன் திருக்காட்சிச் சித்தித்தது என்பதற்கு ஆதாரம் கூறுவதுபோல், ஒரு நிகழ்ச்சி ஆண்டுதோறும் ஐப்பசிப்பரணி நாளில் சித்தர் ஆசிரமத்தில் நிகழ்த்தப் பெற்று வருகிறது. கோரக்கச்சித்தர் ஆசிரமத்தின் எதிர்ப்புறத்தை இன்றும் இவ்வூர் மக்கள் முனிவர் ஆலை என்று வழங்கி வருகின்றனர். இவ்வழக்கு, முனிவர் பலர் தங்கி யோகம் செய்த பெரிய ஆலமரச் சோலை இங்கே இருந்ததை நினைவூட்டுகின்றது. ஐப்பசிப் பரணி நாளன்று சித்தர் ஆசிரமச் சந்நிதி எதிரில் ஒரு குழி அமைக்கப்பெறுகிறது. யாக குண்டம் போல் அமைக்கப்பெறும் அக்குழியில் விறகுகளை இட்டுத் தீ மூட்டுகிறார்கள். ஒரு நாள் முழுவதும் இத்தீ எரிந்து கொண்டேயிருக்கும். இதனை இவ்வூர் மக்கள் 'தூனி' என்கின்றனர். இதன் எதிரில் ஆண்டுதோறும் யாரேனும் ஒரு துறவி கையில் தண்டம் ஊன்றியவாறு அமர்கிறார். மக்கள் தூனி முன் அமர்ந்துள்ள அவருக்குக் காணிக்கைச் செலுத்தி, வணங்கித் திருநீறு பெற்றுச் செல்கிறார்கள். இவ்வைதீகக் காட்சி செட்டியார் - அவர் துணைவி இருவரும் இறந்த பிறகு, சிதைக்குத் தீ மூட்டப்பெற்றமையையும், அக்காலை இறைவன் திருக்காட்சி வழங்கியதையும் குறிப்பதாக இருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

## குரங்குச் சேரி

இன்னொரு சான்றும் உண்டு. தம் கணவர் சிவரகசியத்தைக் கூறமாட்டேன்; கூறினால் ஆவி பிரியும் என்று எடுத்துக் கூறியும் கேளாது, குரங்குப் பிடியாய்ச் சிரித்த காரணத்தைக் கூறியேயாக வேண்டுமென்று செட்டியாரின் துணைவி பிடிவாதம் செய்ததாகவும், துணைவியின் வற்புறுத்தலுக்காகச் செட்டியார் உண்மை கூறியதாகவும், இதனால் அவர் ஆவி பிரிய நேர்ந்ததாகவும், அது கண்டு அவர் துணைவியும் உயிர் நீத்ததாகவும், பிடிவாதமாகக் கணவர் இறப்புக்கு அவர் துணைவியே காரணமாக இருந்ததாகவும், அதனால் குரங்குப்பிடியாக அம்மையார் பிடிவாதம் பிடித்து இறந்த இடத்திற்கு இன்றும் 'குரங்குச்சேரி ஆலமரச் சுடுகாடு' என்ற பெயர் நிலவி வருவதாகவும் உள்ளூர் மக்கள் கூறி வருகிறார்கள்.

www.saivamonline.com

## 1008 மாற்றுப் பசும்பொன்

இவ்விரு வகையான கதை நிகழ்ச்சிகளுக்கும் வேறாகச் சித்தர் ஆலயத்தில் அம்மை அப்பர் திருவடிகள் காணப்படுவதற்கு வேறு ஒரு கதையும் வழங்கி வருகிறது. சித்தர்களில் தலையாய சித்தர் யார் என்பதை அறிய சிவபெருமானும் உமையம்மையும் வடக்குப் பொய்கை நல்லூருக்கு எழுந்தருளி ஒரு முறை வந்தனர். சித்தர்கள் பலரும் அம்மையப்பரை வணங்கி நின்றனர். இறைவன் வழங்கிய செப்புக்காசு களைப் பிற சித்தர்கள் எல்லாம் தம் சித்துவன்மையால் மாற்றுயர்ந்த பொன்னாக மாற்றிக் காட்டினர். இறுதியில் ஆலமரத்தில் பரணி ஒன்று அமைத்து யோகம் செய்து வந்த கோரக்கர் இறைவன் அளித்த செப்புக்காசி னை 1008 மாற்றுத் தங்கமாக மாற்றிக் காட்டினர். அது பேரொளி வீசியது. கோரக்கரே சித்தர் தலைவர் என்று மகிழ்ந்து இறைவன் அருள் செய்தார். நாள்தோறும் ஒவ்வோர் சித்தராக ஆண்டு முழுவதும் சித்தர் பலர் இங்கு வந்து கோரக்கரை வழிபட்டுச் செல்வதாக மரபு உள்ளது. கோரக்கருக்கு அருள் செய்ய எழுந்தருளிய காலத்து வந்த அம்மை - அப்பர் திருவடிகளே சமாதி மேடை மேல் காணப்படுவன என்றும் கூறப்படுகிறது.

## சமயத்துறை, பண்பாடு

திருநாகைக் காரோணத் தல புராணம் கூறும் செய்திகள், கோரக்கச் சித்தர் தம் நூல்களில் குறித்திருக்கும் அகச்சான்றுகள் ஆகியனவற்றை ஆராயும்போது இத்திருக்கோயில் கோரக்கச் சித்தரின் சமாதி ஆசிரமமே என்பதும், சமாதி பீடத்தின் மேல் காணப்படும் திருவடிகள் அம்மை அப்பர் திருவடிகளே என்பதும் உறுதியாகின்றன. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தலங்களிலும் இவ்வாறான அருளற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளமை சிவ புராணங்களாலும், தல புராணங்களாலும் நன்கு புலனாகின்றன. செவிவழிச் செய்திகளே பல வரலாறுகள் உருவாகத் துணையாக அமைந்துள்ளன. மக்கள் நம்பிக்கைகளே சமய வாழ்வின் அடித்தளம். எனவே, எதனையும் கற்பனை என்று ஒதுக்காமல், மக்கள் நம்பிக்கை என ஏற்றுப் போற்றுவதே சமயத்துறையில் மேற்கொள்ளத் தக்க பண்பாடாகும்.

## சித்தர் ஆசிரமநாள் வழிபாடு

வடக்குப் பொய்கைநல்லூர் அருள்மிகு கோரக்கச் சித்தர் ஆசிரமத்தில், நல்லொழுக்கமும், நற்பண்புகளும் நிறைந்த துறவு நெஞ்சுடைய தூயோரே பூசை நிகழ்த்தும் பொறுப்பேற்றுப் பூசனை நிகழ்த்தி

www.saivamonline.com

வருகிறார்கள். தலைமைப் பூசகருக்குத் துணையாக வேறு சிலரும் ஆலயத்திலேயே தங்கி உதவி வருகின்றனர். நாள்தோறும் மூன்று கால பூசைகள் இவ்வாலயத்தில் நிகழ்த்தப் பெற்று வருகின்றன. காலை 8.00 மணி அளவிலும், நண்பகல் 1.00 மணி அளவிலும், இரவு 8.30 மணி அளவிலும் முக்காலப் பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன. நாள்தோறும் காலையில் அம்மையப்பர் திருவடிகளுக்கு அபிடேகம் செய்விக்கப் பெற்று, மூன்று காலமும் ஆராதனைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. குருவாரமாகிய வியாழக்கிழமை தோறும் காலையில் பால்காவடி எடுக்கப் பெற்று, திருவடிகளுக்குப் பாலாபிடேகம் நிகழ்த்தப்படுகிறது.


## தியான மண்டபம் - உள்ளொளி உணர்வு மையம்

நாளும் நாளும் வளர்ந்து வரும் வடக்குப் பொய்கை நல்லூர் அருள்மிகு. கோரக்கச் சித்தர் ஆசிரமத்திற்கு இடதுபக்கம் மிகப் பெரிய வளாகத்தில் பேரழகுமிக்க, நேர்த்தியான புதிய கட்டுமான எழிலோடு கூடிய தியான மண்டபம் ஒன்று, நூற்றுக்கணக்கான கோரக்கரின் அன்பர்களின் நன்கொடையால் பெரும் பொருட்செலவில் கட்டி முடிக்கப்பட்டு கோயில் வளாகத்திற்குப் புதிய சோபையைத் தருகிறது.

நாம் வணங்கும் இறைனை, அல்லது ஞான குருவை, அமைதி சூழ்ந்த இடம் ஒன்றில் அவரவர் வசதிக்கேற்ற ஆசனத்தில் உடலை நிறுத்திக் கண்களை மூடி, வழிபடு ரூபத்தை நெஞ்சில் எழுந்தருளச் செய்து, முன்னோர் அல்லது ஆசாரியர் வாயிலாக அறியப்பட்ட மகாமந்திரத்தை, வாய்விட்டு உரக்கக் கூறாது அகமுகமாகத் திருவடிகளில், 108 அல்லது 1008 முறை சாத்துவதையே தியானம் என்கிறோம். இது ஓர் அரிய கலை. தியானம் மட்டும் பழக்கத்தால் கைகூடினால் உள்ளொளி சிறக்கும். ஞானம் நிறையும். இறைக் காட்சி விரியும். தவத்தின் உயர் கூறுகளுள் ஒன்று தியானம். ஒவ்வொரு இறை மூர்த்தத்தையும் வழிபடுவதற்கு என்று முன்னோர் தியான சுலோகங்களை அருளிச் செய்துள்ளனர். 'உள்ளக்கிழியில் உரு எழுதி, வழிபடும் தியானக் கூறுகளை நால்வர் பெருமக்களும், சிறப்பாகத் திருமூல நாயனாரும் பெரிதும் விளக்கிச் சென்றுள்ளனர். நாள் வழிபாட்டிலும், நிறைவாகக் கொடி மரத்துக்கு முன் வீழ்ந்து நிலம் தோய வணங்கி எழுந்து, ஆலயத்தின் ஏதேனும் ஒரு பகுதியில், ஆரவாரம் இல்லாத இடத்தில் அமர்ந்து பெரியவர்கள் தியானிப்பதை நாம் காண்கிறோம். தியானம் அகமுக வழிபாட்டில் மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

கோரக்கரைப் போன்ற சித்தர்களும், மகா ஞானிகளும்

www.saivamonline.com



சிவனடியார் கூட்டத்துள் சித்தரும் கலந்திருப்பாரோ?



உள்ளொளி உணர்வு மையம் (தியானமண்டபம்) அடிக்கல் நாட்டுவிழா.
திருப்பனந்தாள் காசித் திருமடத்து அதிபர், அறங்காவலர் ப.உ.சண்முகம்,
அமைச்சர் ஆர். ஜீவானந்தம் மற்றும்
சித்த மூர்த்திகளின் அடியவர்கள். 24-11-2010

www.saivamonline.com

தியானத்தால்தான் இறைக் காட்சிக் கண்டனர். இறைவனை அல்லது இறைவனாகவே கருதத்தக்க குருநாதனை மனக்கோயிலுக்குள் கொண்டு வருவதற்குத் தியானம் மிகவும் வேண்டத்தக்கது. சாதாரண நாள்களிலும், வியாழக்கிழமைகளிலும், பௌர்ணமி தினங்களிலும், ஐப்பசிப் பரணியிலும் வடக்குப் பொய்கை நல்லூர் அருள்மிகு. கோரக்கரை வழிபட ஆயிரம் ஆயிரம் பக்தர்களும், சித்தர்களும், ஞானிகளும் வருகின்றனர். ஆரவாரம்மிக்க ஆசிரம வளாகம் தியானத்திற்கு உகந்ததாக இல்லை என்பதை உணர்ந்த ஆசிரம அறங்காவலர்கள், கோரக்கரின் திருவுளம் அறிந்து, அவர் உத்தரவிட்டதின் பேரில், அருள்மிகு கோரக்கச் சித்தர் ஆசிரமத்தின் அருகில் 24-11-2010 புதன் கிழமை காலை திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனம் 26-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியுடன், திருப்பனந்தாள் காசித்திருமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருக்கரங்களால் உள்ளொளி உணர்வு மையத்திற்கு ஆசிரம நிர்வாக அறங்காவலர்கள் அடிக்கல் நாட்டச் செய்தனர். சென்னை சிவகுரு.மதுரவள்ளியம்மாள் அவர்களும், வடக்குப் பொய்கை நல்லூர் மூத்த குடிமக்களும் சுவாமிகளோடு இணைந்து கல் எடுத்துத் தம் திருக்கரங்களால் வைத்துத் தியான மண்டபக் கட்டுமானத்தைத் தொடங்கி வைத்தனர்.

தமிழகத்தின் புகழ் பெற்ற ஸ்தபதிகள், கட்டுமானப் பொறியாளர்கள், கட்டடக் கலை வடிவமைப்பாளர்கள் பலரும் வடக்குப் பொய்கை நல்லூருக்குத் தருவிக்கப்பெற்றனர். கோரக்கர்பால் பத்திமை பூண்ட அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற 22 மாதங்களுக்குள் உள்ளொளி உணர்வு மையம் பேரழகோடு எழுந்து நின்று 30-09-2012 அன்று காலை குடமுழுக்குக் கண்டது. ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் அமர்ந்து தியானிக்க ஏதுவாக மண்டபம் மிகப் பெரிதாக அமைக்கப் பெற்றது. பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்கும் அழகிய எழிலார்ந்த கட்டுமானம் 16 எழிலார்ந்த நவீன சிற்பக்கலை மிளிரும் தூண்களின் மீது, மண்டபமும், மேலே வௌவால் நெற்றி மண்டப அமைப்பில் மேற்கூரையும் அமைக்கப்பட்டுள்ளன. முன்பக்கம் மேலும் இரு தூண்கள் நாட்டப் பெற்று வரவேற்புப் பலகணி அமைக்கப் பெற்றுள்ளது. உணர்வு மையம் முழுவதும் சலவைக் கற்களாலும், கிரானைட் கற்களாலும் இழைக்கப்பட்டுள்ளது.

உள்ளொளி உணர்வு மையத்தின் உள்ளே கிழக்கு நோக்கி அமர்ந்த

www.saivamonline.com

நிலையில் பேரழகு மிக்க கம்பீரத் தோற்றத்துடன் கோரக்க மூர்த்திகளின் சிலா விக்கிரகமும் எழுந்தருளச் செய்யப் பெற்றது. தியானம் முடித்துக் கண் திறப்பார்க்குச் சித்த மூர்த்திகளின் தரிசனம் வாய்க்க இது வாய்ப்பாக அமைந்தது. நல்ல வெளிச்சம், காற்றோட்டம் கிடைக்குமாறு கட்டுமானம் அமைந்துள்ளது. இரவு நேரத்தை ஒளி வெள்ளமாக்கும் மின்னொளி விளக்குகளும் அற்புதமாக அமைக்கப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும், ஏன் உலக அளவிலும் கூட எந்த ஒரு சித்த மூர்த்திகளுக்கும் இவ்வாறான தியான மண்டபம் அமைந்தில என்பது குறிப்பிடத்தக்கது. எல்லாம் கோரக்க மூர்த்திகளின் அருளாசிகளால் அமைந்தன என்பதே உண்மை. கோரக்கர் தம்முடைய சந்திரரேகை என்ற அருள் நூலின் 199 ஆவது பாடலில் இவ்வாறான ஒரு மண்டபம் இவ்வூரில் அமையும் என்று குறித்திருப்பதை அறியும் போது நம் மெய் சிலிர்க்கிறது.

உள்ளொளி உணர்வு மையத்தின் பின்புறம் பரந்த நிலப்பரப்பில் கோரக்கர் ஆலய நித்திய பூசைக்குப் பயன்படும் மிகப் பெரிய நந்தவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவை எல்லாம் பூத்துக் குலுங்கி மணம் பரப்பும் வசீகரத்தை உணர்வு மையத்தின் உள்ளே வருபவர்களால் உணர முடியும். மலர் தரும் செடி கொடி, மரங்களோடு, சித்தர் கோயில் வளாகம் என்பதற்கு ஏற்ப ஏராளமான மருத்துவக் குணம் கொண்ட மூலிகைச் செடி கொடிகள் கொண்ட தோட்டமும் அமைக்கப் பெற்றுள்ளது. வங்கக் கடலிலிருந்து வரும் கொண்டல் காற்றோடு, மலர்களின் மணமும், மூலிகைகளின் நலமும் இணைய கோரக்கருடைய கருணை நம்மைப் புதிய உலகத்துக்குக் கொண்டு செல்வதை உணர முடிகிறது. இத்தகைய எழிலார்ந்த தியான மண்டபம் 30.09.2012 ஞாயிற்றுக் கிழமை காலை கோரக்கரின் அருளாசியோடு, இசைஞானி இளையராஜா குத்து விளக்கு ஏற்ற, தருமபுர ஆதீனம்; குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகா சந்நிதானங்கள் மற்றும் காசிமடத்துச் சுவாமிகள் ஆகியோர் திருக்கரங்களால் திறந்து வைக்கப் பெற்றது.

உள்ளொளி உணர்வு மையத்தை வடிவமைத்து ஏறத்தாழ 120 இலட்சம் செலவில் பலரையும் ஒருங்கிணைத்து, எழிலாகக் கட்டி வழங்கிய பெருமைக்கும் சித்தரின் ஆசிக்கும் உரியவர், கோரக்கர் பெருமான் தாள் மலர்களில் உண்மை அன்பு பூண்டு வாழ்ந்து வருபவரும், தற்போதைய ஆசிரம நிர்வாக அறங்காவலரும், வடக்குப் பொய்கை நல்லூரில் பிறந்து வாழும் பேறு பெற்றவரும், மூத்த அரிமா சங்கப் புரவலருமாகிய திரு.ப.உ.சண்முகம் அவர்கள் ஆவார்கள். கோரக்கர் தம் சந்திர ரேகையின் 199-ஆம் பாடலில்,

www.saivamonline.com


**ஆகுமந்த நாளதனிற் போக நாதர்**
**அகிலபர தேசவெளி விட்டு நீங்கி**
**லாகுறவே நமதுபுவி வருவ தாக**
**வாக்களித்துச் சென்றிட்டா ரந்தாள் தன்னில்**
**பாகுபெற எனதுரிய சமாதிக் கூடம்**
**பளபளத்துச் சோதிலிங்கம் தானாய்த் தோன்றி**
**நாகுபண சலபடதி நவநீ தங்கள்**
**நாட்டமுற்று மனுக்கள் வசமே யோங்கும்.**

*என்று இந்த நாளில் இது அமையும் என்று திருவுள்ளத்தில் கருதியபோதே, இந்தப் பளபளக்கும் கூடம் யாரால் அமையும் என்பதையும் சேர்த்தே சிந்தித்திருப்பார் என்பது உறுதி. அவர் சிந்தை நிறைந்த திரு.ப.உ.சண்முகம் அவர்களுடன், ஏனைய ஆசிரம அறங்காவலர்களாகிய திருவாளர்கள் பழ.மாணிக்க வாசகம், அரிமா. எஸ்.சித்திரவேலு, வி.லெட்சுமணன், பொன்.சொ.மணிவண்ணன் ஆகியோரும் கைகோர்த்துக் கொண்டு உள்ளொளி உணர்வு மையத்தை உருவாக்கி உலகத்துக்கு உபகரித்ததோடு, கோரக்கர் பெருமானின் முழு ஆசிகளையும் பெற்றவர்களாகிறார்கள். நன்கொடையாளர்களையும், சோழிய வேளாண் பெருமக்கள் உள்ளிட்ட உள்ளூர்க்காரர்களும், கோரக்கர் திருவடிகளில் அன்பு பூண்ட அறங்காவலர்களோடு இணைந்து சீரிய முறையில் செயற்பட்டு உள்ளொளி உணர்வு மைய உருவாக்கத்தை நிறைவேற்றிய அன்பர்களும் கோரக்கரின் அருளுக்குப் பாத்திரர் ஆகும் பேறு பெற்றனர். தியான மண்டபம் காலத்தால் அழிக்க ஒண்ணா அற்புத கலைவளர் மாளிகை. அகமுகவழிபாட்டுக்கென அமைந்த அபூர்வ தியான இமயம்.*

## நாள்தோறும் அன்னதானம்

*ஒவ்வொரு நாளும் சித்தர் ஆலயத்திற்கு யாத்திரிகர்கள், துறவிகள், திக்கற்றவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் வந்து வழிபாடு நிகழ்த்தி இரவு சித்தர் ஆலயத்திலேயே தங்குகின்றனர். இவ்வாலயத்தில் நாள்தோறும் இரவில் தங்குவோர் எத்தனை பேராயினும் அத்தனை பேருக்கும் உணவளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பலருக்கும் நாள்தோறும் உணவளிக்கக் கோயிலுக்கென்று சொத்துக்கள் ஏதும் இல்லை. திக்கற்றோர்க்குத் தங்குமிடமும், பசித்தார்க்குச் சோறும், நோயுற்றார்க்கு மருந்தும் நல்கி வாழ்விப்பதே சைவ சமய நெறி. இதுவே சித்தர்கள் போற்றிய சீரிய நெறியுமாகும். சித்தர்கள் பலருள்ளும் கோரக்கச்*

www.saivamonline.com





அற்றார் அழிபசி தீர்க்கும் அன்னக்காவடி அறம்

www.saivamonline.com

சித்தர் இந்நெறியில் தலைநின்ற அருட்பெருஞ் சான்றோராவர். அவர் ஜீவசமாதி கூடியுள்ள ஆலயத்தில் பசித்த வயிற்றோடு படுத்துறங்கியவர் எவரும் இலர்.

## அன்னக்காவடி தருமம் தாயே!

நாள்தோறும், இரவில் அடியவர்களுக்கு அன்னம் பாலிக்கக் கோரக்கச் சித்தர் ஆலயத்தில் சிறப்பான ஒரு நெறி பல நூறு ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வாசிரமத்தின் தலைமைப் பூசாரியோ, அன்றி அவரின் உதவியாளர்களில் ஒருவரோ மாலை 7.00 மணி அளவில் தம் தோளில் ஓர் அன்னக்காவடியை ஏந்தி இவ்வூரின் வடக்கு மற்றும் தெற்கு வீதிகளில் வாழ்ந்து வரும் சோழிய வெள்ளாளப் பிள்ளைமார்களின் இல்லங்களுக்குச் செல்வார். காவடியின் இருபக்கங்களிலும் இரண்டு பெரிய பானைகள் உரியில் வைக்கப் பெற்றிருக்கும். அன்னக்காவடி தம் இல்லத்தின் வாயிலில் வந்து நின்றவுடன், புதிதாக இரவில் சமைத்த சோற்றினை ஒரு தட்டில் எடுத்து வந்து அவ்வில்லத்துப் பெண்கள் அன்னக்காவடிப் பானையில் இடுகின்றனர். 'அன்னக்காவடி தருமம் தாயே' என்று கூறி வரும், இவ்வன்னக்காவடிக்கு அங்கு வாழ்ந்து வரும் அனைத்துச் சோழிய வெள்ளாளர் குடும்பங்களிலும் அன்னம் பாலிக்கப்படுகிறது.

## கோயில் நிர்வாகமும்; விரிவாக்கமும்

நாகை மாவட்டம் வடக்குப் பொய்கைநல்லூர் அருள்மிகு கோரக்கச் சித்தர் ஆசிரமம், ஆசிரமம் தோற்றம் கொண்ட காலம் முதலாகவே இவ்வூரில் வாழ்ந்து வரும் சோழிய வேளாளப் பிள்ளைமார்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தேவார மூவர் வைப்புத்தலங்களுள் ஒன்று வடக்குப் பொய்கை நல்லூர். பொய்கை என்பது மலர்கள் நிறைந்த நல்ல தண்ணீர்க் குளத்தைக் குறிக்கும். இன்றும் இவ்வூரில் ஏராளமான நன்னீர்க் குளங்கள் உள்ளன. உழவுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட இவ்வூர் வேளாளர்கள் சோழ நாட்டுப் பகுதியில் வாழ்ந்தமை காரணமாகச் சோழ நாட்டு வேளாளர்கள் என்றும், சோழிய வேளாளர்கள் என்றும் அழைக்கப் பெற்றனர். தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் வாழ்ந்து வரும் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த ஒரு பேரினத்தவர் இவ்வேளாளர்கள். சித்தர் தலைவராகக் கருதத்தக்க சீர்திருத்தவாதியாகிய கோரக்கர், தாம் ஜீவ சமாதி கூட வடக்குப் பொய்கை நல்லூரைத் தேர்ந்தெடுத்தமை ஒன்றே இவர்கள் பெருமைக்குப்

www.saivamonline.com

போதுமான சான்றாகும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோழிய வேளாளப் பெருமக்கள் வாழ்ந்து வரும் இச்சிற்றூரிலிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கீழை மேலை நாடுகளுக்குச் சென்று வணிகம் மேற்கொண்டு தங்கள் குலப்பெருமையைக் காப்பதோடு சொந்த மண்ணுக்கும் புகழ் சேர்க்கிறார்கள்.

வடக்குப் பொய்கைநல்லூர் சோழிய வெள்ளாளப் பிள்ளைமார்களால் தேர்ந்தெடுக்கப்பெறும் அறங்காவலர்களால் ஆசிரம நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 25 ஆண்டுகளில் ஆசிரமம் படிப்படியே அறங்காவலர்களால் தேவைகளுக்கு ஏற்ப விரிவாக்கம் செய்து மாற்றியமைக்கப் பெற்றது. வளர்ச்சித் திட்டங்கள் ஆசிரமத்திற்கு வரும் அன்பர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலும் மேலும் மேற்கொள்ளப் பெற்றன. 25 ஆண்டுகளுக்கு முன் மிகச் சிறிதாக இருந்த ஆசிரமம் இன்று பன்மடங்கு வளர்ச்சிப் பெற்று எழிலார்ந்த கோலம் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது.

திரு.ப.உ.சண்முகம் அவர்களை ஆசிரம நிர்வாக அறங்காவலராகக் கொண்ட ஐவர் அறங்காவலர் குழு 2010-இல் தேர்வு செய்யப் பெற்றது. புதிய நிர்வாகிகள் ஆசிரமத்தைச் சுற்றித் தனியாருக்குச் சொந்தமாக இருந்த பல பகுதிகளை அவர்களோடு பேசி, இசைய வைத்து, உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கிக் கையகப்படுத்தினர். பௌர்ணமியிலும், பிற நாள்களிலும் வரும் கோரக்கரின் பக்தர்கள் இரவில் கோயில் வளாகத்திலேயே தங்கி, விடியலில் வழிபட்டுப் புறப்படத் தொடங்கினர். அக்காலை அவர்கள் தங்குவதற்கு உரிய கட்டடங்கள் பல அனைத்து நவீன வசதிகளோடும் கட்டப்பட்டன. மிகக் குறைந்த வாடகை மட்டுமே மக்களிடம் பெறப்படுகின்றன. ஆசிரமமும் நவீனகட்டுமானஎழிலோடு விரிவாக்கம் செய்யப்பட்டது. ஆசிரமத்துக்கும், பூசைக்கும் தேவையான அனைத்து உபகரணங்களும் வாங்கி வைக்கப்பெற்றன. ஆசிரமத்தைச் சுற்றித் தூய்மை வளாகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆசிரம எழிலுக்கு மேலும் எழில் சேர்ப்பதாக அதன் அருகிலேயே கட்டப்பட்ட உள்ளொளி உணர்வு மையமும் அமைந்தது. சிக்கல் சிங்கார வேலர், நாகபர் தர்க்கா, வேளாங்கண்ணிமாதா எனச் சுற்றுலாத் தலவரிசையில் தற்போது வடக்குப் பொய்கை நல்லூர் அருள்மிகு.கோரக்கச் சித்தர் ஆசிரமமும் இணைக்கப்பட்டுவிட்டது.

கோரக்கர் அருள் வரலாற்றை முதன் முதல் பேராசிரியர் டாக்டர். இரா.செல்வக்கணபதி அவர்களைக் கொண்டு 1986 இவ்வூர் ஆசிரம நிர்வாகிகள் வெளியிட்டனர். புதிய அறங்காவலர்கள் பேராசிரியர்

www.saivamonline.com

அவர்களைக் கொண்டே புதிய வரலாற்று நூல் ஒன்றை எழுதச் செய்து, கூடுதல் தகவல்கள் பலவற்றை இணைத்து, கோரக்கர் அருளிய நூல்களில் சிறந்ததாகக் கருதப்படும் சந்திரரேகை மற்றும் தனித் தொகுப்பு ஆகிய நூல் பாடல்கள் சிலவற்றையும் இணைத்து, வண்ணப் படங்களுடன் அற்புதமான நூல் ஒன்றைத் தயாரித்து அச்சிட்டு உள்ளொளி உணர்வு மையத்தின் குடமுழுக்கு நாளில் வெளியிட்டு வரலாற்றுக்கு ஒளியூட்டினர். ஆசிரமத்தின் கடந்த 25 ஆண்டுக் கால வளர்ச்சி, கோரக்கர் பெருமானின் சித்தாடல்கள், அதனால் மக்கள் பெற்ற பேறுகள் யாவற்றையும் பேராசிரியர் அவர்கள் அற்புதமாக இந்நூலினுள் பதிவு செய்துள்ளார்கள்.

## இரவுப் பூசையும் அன்னம்பாலிப்பும்


பெண்கள் தாம் அன்னமிட இயலாத நிலையில் இருந்தால் அதனைக் குறிப்பால் தெரிவிப்பர். அன்னக்காவடி வருவதற்குள் குழந்தைகளுக்கு உணவிட வேண்டியிருந்தால் கூட அன்னக்காவடிக்கு என்று முதலில் சிறிது சோற்றைத் தனியே எடுத்து வைத்துவிட்டுப் பின்னரே குழந்தைகளுக்கு இடுகின்றனர். சுத்தான்னம் மட்டுமே அன்னக்காவடியில் இடப்பெறுகிறது. பழைய சோறு, குழம்பு, கறி முதலியன ஏற்கப் பெறுதல் இல்லை. அன்னக் காவடி ஆசிரமம் சென்றடைந்தபின் இரவு பூசை நடைபெறுகிறது. அக்காலை நகரா ஒலிக்கப்படுகிறது. இவ்வொலிகேட்ட பிறகே இவ்வூர் மக்கள் தம் இல்லங்களில் இரவு உணவு உண்ணுகின்றனர். ஆசிரம உண்டியல் வருவாய், மற்றும் காணிக்கை வருவாய் இவற்றின் துணையால் ஏதேனும் ஒரு குழம்பு ஆசிரமத்திலேயே தயாரிக்கப்படுகிறது. இதற்குத் தேவையான அரிசி, எண்ணெய், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஆசிரம அன்பர்கள் ஏராளமாக வழங்கி வருகிறார்கள். எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேருக்கும் அன்னதானம் தடையின்றிச் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.


## யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

சித்தர் கணத்தின் தலைவர்களுள் ஒருவராகிய திருமூலர், தம் திருமந்திரத்தில்.

**'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தாமே.'**

www.saivamonline.com





அன்னம் பாலிக்கும் ஆசிரம வளாகம்

www.saivamonline.com

என்று குறித்த, சைவசமயம் சார்ந்த அறநெறிக் கோட்பாடும், 'ஈத்துவக்கும் இன்பம்' என்று கூறிய திருவள்ளுவர் நெறியும், ''பசித்தோர் முகம் பார்' என்ற அருளாளர் வாக்கும், 'வீடுதோறிரந்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக்கண்டு உளம் துடித்தேன்'. என்ற வள்ளலாரின் நெஞ்சக்குமுறலுக்கு மருத்தும், வடக்குப் பொய்கை நல்லூரில் அன்னக்காவடி எடுப்பதன் மூலம் நிறைவேறி வருவது நெஞ்சை நிறைவிப்பதாகும். நாள்தோறும் ஊர் மக்கள், ஒழுங்கு தவறாது சோறளித்து, பசித்தோர் துயர்களைந்து வருவது உலகவர் அறிந்து பின்பற்ற வேண்டிய ஒப்பற்ற செயலாகும். தமிழ்நாட்டின் எங்கோ, ஒரு மூலையில் உலக மக்களை எல்லாம் வாழ வைப்பதற்கு ஏற்ற ஒப்பற்ற நெறி ஒன்று காணப்பட்டுள்ளது என்ற உண்மையை உலகுக்கு எடுத்துரைக்க வேண்டுவது அனைவருக்கும் உரிய கடமையாகும்.

## ஐப்பசிப் பரணிப் பெருவிழா

கோரக்கச் சித்தர் ஆசிரமத்தில் நாள்வழிபாடு மட்டுமின்றி, மாதந்தோறும் பௌர்ணமி நாளில் சிறப்பு வழிபாடும், அன்னம் பாலிப்பும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பௌர்ணமி நாளில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் இங்கே வந்து தரிசித்து, இரவு ஆலயத்திலேயே தங்கி நினைத்த வரம் பெற்றுத் திரும்புகின்றனர். இவையன்றி ஆண்டுதோறும் ஐப்பசித் திங்கள் பரணி நாளாகிய பௌர்ணமி நாளில் கோரக்கர் ஆசிரமத்தில் பரணிப் பெருவிழா மிகச் சிறப்பாக நிகழ்த்தப் பெற்று வருகிறது. சிறப்பான அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. வடக்குப் பொய்கை நல்லூர் வாழ் மக்கள், சி றப்பாகச் சோழிய வெள்ளாளப் பிள்ளைமார்கள் தத்தம் இல்லங்களில் அறுசுவை உணவு சமைத்து வருவோருக்கெல்லாம் அன்னம் பாலித்து மகிழ்கிறார்கள். இந்திய நாடெங்கிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் ஐப்பசிப் பரணி நாளில் இங்கே வந்து கூடி வழிபட்டு விருந்துண்டு செ ல்கின்றனர்.

## ஐப்பசிப் பரணி நாள் சிறப்பு

ஐப்பசித் திங்கள் பரணி நாள் வடக்குப் பொய்கை நல்லூர் வரலாற்றோடு பல்வேறு வகைகளில் தொடர்பு கொண்டுள்ளது. இந்த நாள் சிவபெருமான் இங்கு வாழும் சித்தர்களுக்குத் திருக்காட்சி நல்கி, அவர்களோடு உரையாடி மகிழும் நாள் என்று கூறப்படுகிறது. போகரும் கோரக்கரும் இத்தலத்திற்கு முதன் முதலில் வந்ததும் ஒரு ஐப்பசிப் பரணி நாளிலேயேயாகும். கோரக்கச் சித்தர் இத்தலத்தில் ஜீவசமாதி

www.saivamonline.com

கூடிய நாள் ஓர் ஐப்பசிப் பரணியே என்பது முன்னரே அகச்சான்றுகளுடன் கூறப்பட்டது. சிவபெருமான், சிவனடியாராகத் தோன்றிச் செட்டியாரின் துணைவி அளித்த உணவை உண்டதும், இவ்விருவரையும் இறைவன் கயிலைக்கு அழைத்ததும் ஐப்பசிப் பரணி நாளில்தான் என்று கூறப்படுகிறது. இத்தகு ஐப்பசிப் பரணிப் பெருவிழா ஆண்டு தோறும் மிகச் சிறப்பாகச் சமய, இலக்கிய, கலைவிழாவாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. தலைசிறந்த தமிழ் அறிஞர்களும், இசை வாணர்களும், அருளாளர்களும் இத்தலத்திற்கு ஆண்டு தோறும் வந்து அஞ்சலித்துச் செல்கின்றனர்.

## சித்தர் தந்த பெருவாழ்வு

கோரக்கர் சித்தர் மறைந்துவிடவில்லை. ஜீவசமாதி கொண்டுள்ளார். சித்தர்களுக்கு மூப்போ, இறப்போ இல்லை என்பது மக்கள் நம்பிக்கை. கோரக்கர் இன்றும் பல்வேறு வடிவங்களில் இவ்வூரில் நடமாடி வருகிறார் என்றே மக்கள் நம்புகின்றனர். சிவனருளும், சித்தர் வாழ்வும் நிறைந்த வடக்குப் பொய்கை நல்லூரில் வறுமை இல்லை. பசித்துயர் என்ற பேச்சே இல்லை. கடற்கரைச் சிற்றூராக விளங்கினும் புயல், வெள்ளங்கள் முதலிய இயற்கையின் சீற்றத்திற்கு இவ்வூர் ஆட்பட்டதே இல்லை. உழவும், தொழிலும், வணிகமும் மேற்கொண்டு மக்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கீழை நாடுகளில் கடல் கடந்து சென்று வணிகம் செய்து பெரும் பொருளீட்டிப் பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றனர். கோரக்கச் சித்தரைத் தங்கள் குல தெய்வம் போல் கருதி, நெஞ்சார வழிபட்டு வளமோடும், நலமோடும் நிறைவாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

## வள்ளலார் திருக்கோயில்

வடக்குப் பொய்கை நல்லூரைச் சேர்ந்த பெருவணிகர் அமரர் சி.ச. அண்ணாமலைப்பிள்ளை அறக்கட்டளையினர் சித்தாச்சிரமத்திற்கு தெற்கே 2 கி.மீ. தொலைவில் சாலை ஓரத்தில் கிழக்கு நோக்கி தேனினும் இனிய திருவருட்பா அருளிச் செய்த வடலூர் இராமலிங்க சுவாமிகளுக்கு 'திரு அருட்பிரகாச வள்ளலார் திருக்கோயில்' ஒன்றை மிகப்பெரும் பொருட்செலவில் கட்டி முடித்து 31.05.2012 அன்று கடவுள் மங்கலம் செய்து உலகுக்கு உபகரித்துள்ளனர். இவ்வூரைச் சேர்ந்த சோழிய வேளாண் மரபில் வந்த திரு. வெ.சே. அருணாசலம் அவர்களின் பெருமுயற்சியில் அமைந்த வள்ளலார் திருக்கோயில் வடக்குப் பொய்கை நல்லூருக்கும், சோழிய வேளாண் குலப் பெருமக்களுக்கும் மேலும் பெருமை தருவதாக அமைந்துள்ளது.

www.saivamonline.com

## வழிபடுவோர் பெறும் பேறுகள்

அருள்மிகு கோரக்கச் சித்தர் ஆசிரமத்தை எந்த நாள்களிலும் சென்று வழிபடலாம். ஒவ்வொரு நாளும் மூன்று கால பூசைகள் நடைபெறுகின்றன. குரு வாரம் எனப்படும் வியாழக் கிழமை (கோரக்கர் பிறந்த நாள் என்பர்) அன்று வழிபடுவது பெருஞ்சிறப்பு. பௌர்ணமி அன்று வழிபடுதல் ஒரு மாதம் வழிபட்ட பயனையும், ஐப்பசிப்பரணி வழிபாடு ஓராண்டு வழிபட்ட பயனையும் தரவல்லன. கோயில் நடை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும். பக்தர்கள் அபிடேகத் திரவியங்களையும், அன்னதானத்திற்கான அரிசி, பருப்பு, மளிகைப் பொருட்கள், காய்கறிகள் முதலியவற்றோடு, பணக் காணிக்கையும் செலுத்தி வருகின்றனர். கடந்த 25 ஆண்டுகளில் ஆசிரமத்துக்கு வந்து வழிபடுவோர் தொகை 100 மடங்கு அதிகரித்திருக் கிறது. தொடர்ந்து 13 பௌர்ணமிகள் வழிபட்டால் நினைத்த காரியம் யாவற்றையும் கோரக்கர் பெருமான் முற்றாக நிறைவேற்றித் தருகிறார்.

கோரக்கச் சித்தர் தண்ணருளால் இளம் பெண்களுக்குத் திருமணம் கூடி வருகிறது.

திருமணமாகிப் பல்லாண்டுகள் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்குப் பிள்ளைப் பேறு வாய்க்கிறது.

புற்றுநோய் முதலிய அனைத்துக் கொடிய நோய்களிலிருந்து நீங்கி நலம் பெற்றவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள்.

மனவளர்ச்சிக் குன்றியோர் வந்து சென்றால் மனநலம் பெறுகிறார்கள்.

களவு போன பொருள்கள் திரும்பக் கிடைக்கின்றன. வஞ்சகமாகப் பிறர் ஏமாற்றிய உடைமைகள் மீண்டும் வந்து அடைகின்றன.

இரவு வழங்கப்படும் அன்னக்காவடி கோயில் பிரசாதம் எல்லா நோய்களுக்கும் மருந்தாகிறது.

தடைப்பட்ட குழந்தைகளின் கல்வி வளர்ச்சிச் சிறந்து ஓங்குகின்றது.

ககன மார்க்கப் பயணம் மேற்கொண்ட சித்தரை வணங்கிப் புறப்பட்டால், தொலை தூர நாடுகளுக்கான பயணங்கள் சிறப்பதோடு, செல்வ வளமும் கூடுகிறது.

வியாழக் கிழமைகளில் காலை முதல் உபவாசம் இருந்து இரவு வழிபட்டு, பிரசாதம் உண்டு, கோயில் வளாகத்தில் தங்கி உறங்கி, விடியல் நீராடி வழிபட்டுத் திரும்ப மனக்கவலைகள் முற்றாக அகலுகின்றன.

www.saivamonline.com

சித்தரின் திருவுருவப் படத்தை வீடுகளில் வைத்துப் பூசிப்பதும், பயண நேரங்களில் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு பயணிப்பதும் நன்மை தருவன.

இயல், இசை, நாடகக் கலை வல்லுநர்கள் வழிபட்டுப் புதிய வாய்ப்புகளைப் பெற்று உயர்கிறார்கள்.

சிவாலயங்களில் மட்டுமே காணப்படும் சித்தர் ஆசிரம வளாகத்தில் வட திருச்சுற்றில் வளர்ந்துள்ள நாகலிங்க மரத்தை மும்முறை வலம் வந்தால் சிவனருளும், குருவருளும் ஒரு சேர வாய்க்கின்றன.

கருவறை சிவன் உமை, சித்தர் திருவடிகளுக்குப் பாலாபிஷேகம் செய்து வழிபடுவது குடும்பப் பிரச்னைகளை நீக்குவதோடு, வெளியில் சொல்ல முடியாத கவலைகளையும் அகற்றத் துணையாகிறது.

நூற்றுக்கணக்கான துறவியர்கள் உலக நாடுகள் முழுவதிலிருந்தும் வந்து கோரக்க நாதரை வழிபட்டு ஞான விரிவு பெறுகிறார்கள்.

ஐப்பசிப் பரணி இரவில் துறவியர் கூட்டத்தில் கலந்து தாமும் அவருள் ஒருவராகத் தக்க ஞானியர்க்குக் கோரக்கர் திருக்காட்சி நல்கியுள்ளார். இன்றும் நல்கி வருகிறார்.

சித்த மூர்த்திகளுக்கு உலகெங்கும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் உள்ளது குறிக்கத் தக்கது.

## கோரக்கர் திருவடி போற்றி வாழ்வோம்

உலக நலம் கருதிய ஓர் உயர் ஞானி கோரக்கர். அவர் சிவனருள் பெற்ற செல்வர்! உமையம்மை திருவடிகளைப் போற்றி உன்னத நிலை பெற்றவர்! சித்தர்! சித்தர் தலைவர்! அளப்பரிய ஆற்றல் பெற்ற அருளாளர்! காயகல்பம் கண்டு அழியா உடல் பெற்ற அன்பினர்! சித்த மருத்துவத் துறையின் சூழ்ச்சிகளை முறியடித்த சீர்திருத்தச் செம்மல்! பிணிக்கு மருந்து கண்ட மருத்துவர்! சிவயோகி! சிவஞானி! மூடநம்பிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த புரட்சியாளர்! எட்டிடங்களில் சமாதி கூடிய ஏந்தல்! இந்திய நாடெங்கும் புகழ்க் கொடி நாட்டிய ஈடற்ற பெருமையாளர்! வடக்குப் பொய்கை நல்லூரில் கோயில் கொண்டு, வற்றாத அன்போடு வரம் பல அளித்து வாழ்விக்கும் வள்ளல்! கோரக்கர் திருவடி போற்றிக் குன்றென உயர்ந்து வாழ்வோம். வற்றாத வளம்பல பெற்று நீடு இனிது வாழ்வோம்!

www.saivamonline.com

## 5. சந்திரரேகை

புகன்றிடுவேன் போகரவர் பெருமை தன்னைப்
பூவுலகில் யாவர்களும் பொருந்தி மேவ
அகம் மகிழப் போகநாதர் பழனி தன்னில்
அடங்கிடுமுன் பாகத்தான் வரலாறு முற்றும்
இகம் அறியச் செனனசா கரமுஞ் செப்பி
எனையழைத்து உரகை எனும் பதிக்கே கென்றார்
தகைமையுறச் சித்தரையான் அடக்கம் செய்து
தட்டாமல் உரைகையுற்றுப் பார்த்திட் டேனே. 22

பார்த்திருந்த சித்தர்களைப் பார்க்க வைத்தே
பக்குவமாய்ப் போகரவர் தயங்கி டாமல்
சீர்நிறையென் போலவரை ஏய்த்துப் போட்டுச்
சிதறாமல் உரகையினில் என்னைக் கண்டார்
போர்விளங்கப் புதுமையுடன் எனைய ழைத்துப்
பொய்கைநல் லூரென்றிடப் பூங்கா சென்றார்
நேர்மையுடன் எனக்கடக்கம் நிலைமை காட்டி
நெடியகடல் தாண்டிமறு தேசம் போனார். 23

ஆகுமந்த நாளதனிற் போக நாதர்
அகிலபர தேசவெளி விட்டு நீங்கி
லாகுறவே நமதுபுவி வருவ தாக
வாக்களித்துச் சென்றிட்டா ரந்நாள் தன்னில
பாகுபெற எனதுரிய சமாதிக் கூடம்
பளபளத்துச் சோதிலிங்கம் தானாய்த் தோன்றி
நாகுபண சலபடதி நவநீ தங்கள்
நாட்டமுற்று மனுக்கள் வசமே யோங்கும். 199

www.saivamonline.com

## 6. தனி நூல் தொகுப்பு

### (மூலம் - உரை)

சித்தர்கள்என் னூல்வாங்கிச் சென்ற பின்பு
சிதறாமல் சந்திரரேகை இருநூற தாகும்
வித்தகமாய் ரவிமேகலை எழுபத்தைந்து
விகற்பமிலா நமனாசத் திறவுகோல் நூறும்
பத்தியுடன் நாதபேதம் இருபத் தைந்து
புகலரிய கனகபிந்து எண்பத் தைந்து
நத்திவரும் கரிசல் இருநூற் றொன்று
நவில்ஞானம் ஆயிரத்து நூற்று ஒன்றே 1

கருத்துரை

*சித்தர்கள் என் நூல்களைப் பெற்றுச் சென்றார்கள் என்றபடி தொகை வருமாறு: சந்திரரேகை - 200, ரவி மேகலை - 75, நவநாதத் திறவுகோல் - 100, நாதபோதம் - 205, கனகவிந்து - 85, கரிசல் - 200, கோரக்கர் ஞானம் - 1101. சிதறாமல் = விலகாமல், வித்தகம் = அறிவு, விகல்பமிலா = வேறுபடாத - புகலரிய = சொல்ல இயலாத, நத்தி வரும் = விருப்பம் வரும், நவில் = சொல்லும்.*

ஒன்றாகும் சீவரத்தினம் தொண்ணூற் றைந்து
ஓதரிய மூலிமர்மம் எண்ணூ றாகும்
நன்றெனமுச் சோதிநாதம் எண்பத் தாறு
நயவாத காண்டமோ ரிருநூ றாகும்
கன்மகாண்ட நிகண்டுமுந் நூறு செந்தூரம்
கனமதி முத்தாரம் தொண்ணூற் றொன்று
பின்னுமுப்புக் காண்டநிகண் டதுமுந் நூறு
மேதினியில் சித்தர்வாதம் அறுபத் தாறு 2

www.saivamonline.com

## கருத்துரை

*கோரக்கர் இயற்றிய நூல்களின் பாடல் தொகை ஜீவ வர்க்கம் - 95, மூலி மர்மம் - 800, முச்சோதி நாதம் - 86, வாதகாண்ட நிகண்டு - 200, கன்ம காண்ட நிகண்டு செந்தூரம் பற்றிய - 300, கனகமதி முத்தாரம் - 91, முப்பூ காண்ட நிகண்டு - 300, சித்தர் வாதம் - 66. நயம் = நல்லது, கனகம் = பொன் மேதினி = உலகம், நிகண்டு = அகராதி நூல்.*

**ஆறுதலாய் அம்சதீபம் அறுபத்தேழு**
**ஆயிரத்து நூறுமெய்ஞ் ஞானமாகும்**
**சீறுரிய சித்தர்மறைப் புண்மை நூறு**
**செகசாலம் சித்தர்சம் வாதம் நூறு**
**கூறுதலாய்க் கூடுவிட்டுக் கூடு பாய்தல்**
**கொள்கையுடன் இருநூறும் ஆகும் ஆகும்**
**மாறுதலாய் மறைப்புச் சூட்சம் ஐம்பத் தைந்து**
**மந்திரலீலை மூன்றுநூற் றைந்து மாகும்** 3

## கருத்துரை

*கோரக்கர் இயற்றிய நூல்களின் பாடல் தொகை. அம்ச தீபம் - 67, மெய்ஞ்ஞானம் = 1100, சித்தர் மறைப்பு உண்மை = 100, சித்த சம்வாதம் = 100, கூடுவிட்டுக் கூடு பாய்தல் = 200, மறைப்புச்சூட்சம்= 55, மந்திர லீலை = 305. ஜெகஜாலம் = உலகை வசமாக்கும், சம்வாதம் = நல்ல விவாதம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல் = இருக்கும் உடலை விட்டு வேறு உடலுக்கு மாறுதல், மரை = தாமரை, லீலை = செய்கை.*

**ஆகிடஇந் நூல்களைச் சித்தன் யானும்**
**அறிந்தமட்டும் காவிரியின் நதிபாங் குற்று**
**மோகிதமாய்ச் சோழநாட்டின் கொள்ளி டப்பால்**
**முத்தரநதி தீரம்பரூர்ப் பட்டிச் சிற்றூர்**
**ஏகிநிறை சமாதியுற்றேன் அதுமுன் னாக**
**இயற்றுமிந் நூல்வழுத்த லினிஉற் றேனால்**
**பாகிதமாய்ப் பாடியபின் பலதே சம்போய்**
**பரிவாய்முன் னுற்றபொய்கை யூரில் வந்தேன்** 4

## கருத்துரை

*நான் எழுதிய நூல்கள் யாவற்றையும் சித்தனாகிய நான் எனக்குத் தெரிந்த வரையில் காவிரிக் கரையில் அமர்ந்தும், மணி முத்தாறு கரையில்*

www.saivamonline.com

*அமர்ந்தும் எழுதினேன். பரூர் பட்டி வழியாகச் சிற்றூர் சென்று நிர்க்குண சமாதியில் அமர்ந்தேன். பல நாடுகளும் போய் முன்பே அன்புடன் தவம் செய்த பொய்கை நல்லூருக்குத் திரும்பி வந்தேன். முத்தா நதி = திருக்கோயிலூர் வழியே ஓடும் மணிமுத்தாறு, சித்தூர் = ஆந்திராவில் உள்ளது. மோகிதம் = விருப்பம், பாகிதம் = பக்குவம், முன்பே பொய்கையூரில் தவம் இருந்து பிறகு இங்கே மீண்டு வந்தார் என்பதாம்.*

**வந்தவுடன் சடையப்பக் கவுண்டன் என்னை**
**வாகுடனே அனுசரித்து வாழ்த்தி நின்றான்**
**அந்தமுடன் பரிவிருத்தி நானூற் றெட்டு**
**ஐப்பசிநேர் தசமிதிதி பரணி திங்கள்**
**சிந்தையுறச் சமாதிநிலை யான டைந்து**
**சிதறாமல் சீருலகில் வாழ்ந்து சித்தாய்க்**
**கந்தமணம் வீசிடவும் காட்சி யாகக்**
**காசினியில் சாவுஇவனுக் கில்லை யாமே** 5

## கருத்துரை

*பொய்கை நல்லூர் வந்தபோது என்னை முறையாக அனுசரித்து வாழ்த்தி வரவேற்றவர் பெயர் சடையப்ப கவுண்டன் என்பதாம். பருவர்த்தியுடன் ஆண்டு 408 ஐப்பசி திங்கள் தசமி திதியில் சமாதி நிலையில் அமர்ந்தேன். எதுவும் குறையாமல் உலகில் சித்தனாக வாழ்ந்தேன். என் மேல் சுகந்த வாசனை வீசும்படி பலருக்கும் காட்சி தந்தேன். எனக்கு உலகில் சாவு இல்லை என அறிக. காசினி = உலகம், கந்தமணம் = சுகந்த வாசனை, வாகு = முறைப் படி.*

**ஆமே கேளிது நிலையுற்ற வாணி புக்கி**
**ஆன பதிபொய்கை பூங்கா சொன்னேன்**
**தேமேவு பரிவிருத்தி ஆயி ரத்துத்**
**திகழ்நூற் றிருபது ஆற தாண்டில்**
**பாமேவு சித்தர்களும் வெளியாய் வந்து**
**பட்சமுடன் மனுக்களையும் ஆள்வார் மண்ணில்**
**பூ மேவும் பொக்கிஷங்கள் பூர ணிக்கும்**
**பூரணியாள் பதமறியச் சொன்னேன் சித்தே** 6

www.saivamonline.com

## கருத்துரை

*இச்சமாதி நிலைத்து இங்கே இருக்கும். ஆயிரத்து நூற்று இருபத்தாறாம் ஆண்டு மீண்டும் உலகில் வெளிப்பட்டேன். உலகில் உள்ள சித்தர்கள் 18 பேரும் இங்கே வெளிப்பட்டார்கள். அப்படி வந்தவர்கள் இங்கு காணும் மனிதர் பலரையும் அருளால் வாழ வைப்பார்கள். அதனால் பல செல்வங்கள் கிடைக்கும். பூரணியாகிய பராசக்தி பாதம் அறியுமாறு சத்தியம் உரைத்தேன். சித்தனாகிய நான் 1126-இல் 408 ஐக் கழித்தால் அவர் 718 ஆண்டுகள் கழித்து அவனி (உலகம்)க்கு வந்தார். அதாவது சமாதியில் இருந்து வெளிப்பட்டார் என்று அறிய வேண்டும் - பூரணி என்பது பராசக்தி.*

**சித்தர்பதி னெண்மரோதும் நூல்கட் கெல்லாம்**
**சிதறாமல் அவையடக்கம் கொண்டு பாய்ச்சி**
**உத்தமமாய் நமனாசத் திறவு கோலில்**
**உரைத்திட்டேன் வெளியாகச் சூட்சா சூட்சம்**
**நத்தியந்த நமனாசத் திறவு கோல்பார்**
**நாதாந்த வேதாந்தம் ஞான சித்து**
**முத்திபதி வாமபோம் சித்தர் உண்மை**
**முத்தியுமை தெரிசனமும் தெளிவாய்ச் சொன்னேன்** 7

## கருத்துரை

*நவநாதத் திறவுகோல் என்ற நூலில் பதினெட்டுச் சித்த நூல்கள் யாவுக்கும் ஒன்று விடாமல் பொதுவாக அவையடக்கம் சேர்த்து, சித்தர்களின் சூக்குமமாகிய கருத்துகளை வெளிப்படுத்தினேன். அந்த நம நாசத் திறவுகோல் நூலைப் பாருங்கள். அதில் நாதாந்தம், வேதாந்தம், ஞானம், சித்துகள், முத்தி, உமையம்மை தரிசனம் ஆகியவற்றை அறியலாம் என்று சொன்னேன். நவநாதர் என்று ஒரு பிரிவினர் சித்தர்களில் உண்டு. நத்தி = விரும்பி.*

**சொல்லிவைத்த தெதற்காகத் தானென் றாக்கால்**
**சூதாகச் சித்தர் கள்முன் பாடி வைத்த**
**நல்லதொரு நூல்களதின் முடிவைக் காட்டி**
**நானிலத்தில் கெடிகாரப் பறைய டித்து**

www.saivamonline.com

**வல்லவியாம் வாலைத்தாய் அருளி னாலே**
**வாட்டமிலா நமனாசத் திறவு கோலால்**
**வெல்லமதி சித்தர்களின் ஒளிப்பை நேராய்**
**விவரித்தேன் நமனாசத் திறவு கோலில்** 8

## கருத்துரை

இப்படி நான் சொல்லி வைத்தது எதற்கு என்றால் சித்தர்கள் பல கருத்துகளைப் பிறர்க்கு தெரியாமல் மறைத்துப் பாடியுள்ளனர். அவற்றின் முடிவை விளக்கி, கெட்டியாக உலகில் அதைப் பறைசாற்றி, வல்லபியான வாலைக்குமரி எனும் தாயின் அருளால் யாரும் வருந்தாதபடி நவநாதத் திறவுகோலில் சித்தர்களின் அறிவில் ஒளிந்திருப்பதை நேராக விவரித்தேன்.


கெடி - கெட்டி, சூதாக - மறைவாக, வல்லபி - எல்லாம் வல்லவள்.

**திறவுகோல் கொண்டரனும் உமையும் போற்றித்**
**தீர்க்கவரம் தந்திட்டார் கண்டேன்என் போல்வார்**
**மறம்பூண்டு மறித்தென்னை வாத மிட்டார்**
**மதியோடு கலந்துமதி யாக நின்றேன்.**
**புறம்பாகி ஏகிநின்றார் சித்த னார்கள்**
**புவியிறங்கிப் பொய்கைநல்லூர் அடங்கி நின்றேன்**
**வரம்பெற்ற இவ்வொன்பதும் தனித் தொகுப்பு**
**வழங்குமுன் தனில்வழுத்த வில்லை முற்றே** 9

## கருத்துரை


திறவுகோல் எனும் அந்த நூலை நான் செய்ததும் சிவனும் உமையம்மையும் என்னைப் போற்றி நீடு வாழ வரம் தந்தார்கள். சித்தர்கள் தங்கள் கொள்கை மேல் பற்றுக் கொண்டு என்னை வழிமறித்து என்னுடன் வாதம் செய்தார்கள். அவர்கள் அறிவில் என் அறிவையும் ஒன்றாக்கி யோகத்தால் சேர்த்ததும், என்னை விடுத்துப் புறம் சென்றார்கள். பிறகு இந்தப் பூமியில் இறங்கி இப்பொய்கை நல்லூருக்கு இறங்கி வந்தேன். வரம் பெற்ற இச்செய்தி இந்த ஒன்பது பாடல்களில் மட்டுமே உள்ளது. இத்தனித் தொகுப்பு தவிர வேறு நூலில் நான் சொல்லவில்லை. அரன் = சிவன், மதம் = கொள்கை.

www.saivamonline.com





www.saivamonline.com




www.saivamonline.com